# அபத்தம்

ஆடி 2023 7



## அங்கீகாரம் என்னும் Abstract Thing

# அங்கீகாரம் என்னும் absract thing

அபத்தம் சித்திரை மாத இதழில் நீலாவணை இந்திரா எழுதிய 'மணப்பும் மட்டக்களப்புக் குசினியும்' என்ற கட்டுரையின் தலையங்கத்தில், குசினி என்பதற்குப் பதிலாக சமையல் என்று மாற்றியிருந்தேன்.

ஆங்கிலத்தில் Kwuh-zeen என்ற உச்சரிப்புக் கொண்ட, Cuisine என்ற பிரெஞ்சு வார்த்தை, போர்த்துக்கேய மொழியிலிருந்து தமிழிற்கு வந்து சேர்ந்தது. அதனால், யாழ்ப்பாணிகள் சமையலறையைக் குசினி என்றே அழைப்பர். சமையல் முறை என்ற அர்த்தம் கொண்ட அந்த வார்த்தை தமிழ்நாட்டு வாசகர்களுக்குப் புரியுமோ என்ற எண்ணத்தில், சமையல் என்று மாற்றியிருந்தேன். (ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது!)

தனது பேஸ்புக் பதிவில், அக்கட்டுரை வந்த அபத்தம் பக்கங்களைப் பகிர்ந்த இந்திரா, இந்த வார்த்தை மாற்றப்பட்டது பற்றிக் குறிப்பிட்டிருந்தார்.

அதற்கான பின்னூட்டத்தில், எனக்கான காரணத்தைச் சொல்லியிருந்தேன்.

தமிழ்நாட்டில் 'தமிழ் ஈழ cum புலன் பெயர்' எழுத்தாளராக பிரபலமாக அறியப்பட்ட சயந்தன் (கதிர்) 'தமிழ்நாட்டு அங்கீகாரத்தைப் பெறுவதற்காகப் பொதுவாக யாழ்ப்பாணிகள் தானே இந்த வேலையைச் செய்வார்களா? நீங்களுமா... அபத்தம்!' என்று அதற்குப்பின்னூட்டம் இட்டிருந்தார்.

அதற்கு நானும் 'விளங்காதபடியால் தான் எங்களை அங்கீகரிக்காமல் இருக்கினம் போல, இல்லாட்டி அடுத்த முறை இலக்கிய விழாவுக்கு டிக்கட் அனுப்புவினம், விகடனில பேட்டி எடுப்பினம் எண்டு ஒரு நப்பாசை தான். ஏன் பிழைப்பில மண் விழப் போகுது எண்டு கனபேர் பயப்படுகினம் போல?' என்று பதில் கொடுத்திருந்தேன்.

வழமை போல, புலிகளின் பாரம்பரியப்படி அவரும் 'நிண்டு அடிபடாமல்', வெற்றிகரமாகப் பின்வாங்கி, தலைக்கறுப்புக் காட்டாமல் தலைமறைவாகி விட்டார்.

(எனக்குப் பின்னூட்டம் விடுகிற புலி ஆதரவாளர்கள் எல்லாரும் இப்படித் தான்! கரந்துறை தாக்குதல் தான்!)

தமிழ் இலக்கியவாதிகள் எல்லாம் தங்களுக்கு எழுத்தால், 'ஒரு சில்லறைச் சல்லிக்காசும் கிடைக்காது' என்பதை முடிவாகத் தெரிந்து கொண்டதாலோ என்னவோ, சரி போய்த் தொலையட்டும், அங்கீகாரமாவது கிடைக்கட்டுமே! என்ற பெருந்தன்மை உடையவர்களாகத் தான் இருக்கிறார்கள்.

ஒரு கவிதை எழுதினாலும், எழுதிய ஏதோ ஒன்று பிரசுரமானாலும், தனது உலக மகா காவியத்திற்காக உலக இலக்கியர் ரேஞ்சில் தனக்கு அங்கீகாரம் கிடைக்க வேண்டும் என்ற

**ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்**

ஏக்கத்தோடு இருப்பது போலத் தான் எல்லா இலக்கியவாதிகளும் இருக்கிறார்கள்.

இவர்கள் எல்லாருடைய இலட்சியமுமே, இவர்களுடைய ஆதர்ச புருஷர்களான ஆசான், சாரு, மனுஷ்யபுத்திரன் போன்று தாங்களும் பெரும் புகழ் பெற்று அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற ஆதங்கமும் எதிர்பார்ப்புமாகத் தான் இருக்கிறது.

ஆனால் இதில் உள்ள, வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கும் முரண் நகை என்னவென்றால், இவர்கள் 'போலச் செய்ய' முயன்று, 'போலாக வேண்டும்' என்று கனவு காண்கிற அவர்கள் மூவருமே, தங்களை யாருமே பொருட்படுத்தவில்லை என்று புலம்புகிறவர்கள் தான்.

ஆசானைக் கேட்டால், தன்னுடைய 'வரலாற்று நிகழ்வைப்' பற்றி எந்த ஊடகமும் கண்டு கொள்ளவில்லையே என்று புலம்புவார்.

சாரு பற்றிச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. நாயி(யா)லும் கேவலமான பிச்சைக்காரப் பிழைப்பு. பில்ஸ்டின் சொசைட்டியில் வந்து பிறந்த துர்ப்பாக்கியத்தைச் சொல்லி ஒப்பாரி வைத்து, அதே சொசைட்டியிடம் 'தர்மம் தாங்க சாமி...'!

மனுஷ் எழுதுகின்ற கவிதைகள் ஒவ்வொன்றும் ஒரு சதம் பெறுமதியானதாக இருந்திருந்தால், இன்றைக்கு அவர் கோடீஸ்வரர் ஆகியிருக்கக் கூடும். தன்னுடைய கடன் கணக்கை முகநூலில் பகிரங்கப்படுத்தும் அளவில் தான் அவரது புகழ்.

சர்வதேசப் புகழும், விருதுகளும் கிடைக்கக் கூடிய அளவுக்கு தாங்கள் இலக்கியம் படைத்தும், 'ஒருத்தனுமே கணக்கெடுக்கிறான் இல்லை!' என்று, தங்களைத் தாங்களே புகழ்ந்து கொண்டே புலம்புவது என்பதில் மட்டும் இவர்கள் கருத்து ஒருமித்தவர்களாக இருக்கிறார்கள்.

எஸ்.ராமகிருஷ்ணன்?

'நல்லவங்களைக் கடவுள் சோதிப்பார். கை விட மாட்டார்' தான்.

**“நீங்கள் பொதுவெளியில் பிரபலம் என்று கருதுகின்ற எந்த இலக்கியவாதியைக் கேட்டாலும், தன்னை அங்கீகரிக்கவில்லையே? என்ற கோபத்தோடு இருக்கிறவராகத் தான் இருப்பார்.**

**தமிழ் நாட்டில் பிறந்த தால் தான் எனக்கு இந்த நிலை, அமெரிக்காவிலோ, ஆப்கானிஸ்தானிலோ, சிலியிலோ சிம்பாவேயிலோ பிறந்திருந்தால் நான் இருக்க வேண்டிய நிலை வேறு என்று கவுண்டமணி கணக்கில் புலம்புகிறவர்களாகத் தான் இருக்கிறார்கள்.”**



facebook: George RC

கனவு (இல்லம்) நனவாகி, மெய்ப்பட்டு விட்டது.

அங்கீகாரமும் சில்லறையும்... ஓ... சிகையும்!

எதையும் சொல்லாமல், எவரையும் பகைக்காமல் இருந்தால்...

குறையொன்றுமில்லை. மறை மூர்த்தி கண்ணா!

நீங்கள் பொதுவெளியில் பிரபலம் என்று கருதுகின்ற எந்த இலக்கியவாதியைக் கேட்டாலும், தன்னை அங்கீகரிக்கவில்லையே? என்ற கோபத்தோடு இருக்கிறவராகத் தான் இருப்பார்.

தமிழ் நாட்டில் பிறந்த தால் தான் எனக்கு இந்த நிலை, அமெரிக்காவிலோ, ஆப்கானிஸ்தானிலோ, சிலியிலோ சிம்பாவேயிலோ பிறந்திருந்தால் நான் இருக்க வேண்டிய நிலை வேறு என்று கவுண்டமணி கணக்கில் புலம்புகிறவர்களாகத் தான் இருக்கிறார்கள்.

போதாக்குறைக்கு இருநூறு புத்தகம் கூட விற்க மாட்டேன் என்கிறது என்று வெட்கத்தை விட்டே சொல்லிக் கொள்வார்கள்.

இவர்களைப் பார்த்துத் தான் பிரமிப்படைந்து, இவர்களைப் போலவே தாங்களும் பிரபலமாகி அங்கீகாரம் பெற வேண்டும் என்ற கனவோடு, இதே இவர்களின் கடைக்கண் பார்வை கிடைத்தால், தாய்க் கலத்தோடு போய்ச் சேரும் துணைக் கலங்களாக ஒட்டிக் கொண்டு, தாங்களும் ஈடேறலாம் என்ற கனவோடு, தவம் இருக்கும் ஒரு இலக்கியத் தலைமுறையே இருக்கிறது.

இதற்காக, எஜமானனின் மொக்கை ஜோக்குகளுக்கு வலிந்து சிரிக்கிற அடிமைகள் போல, தினசரி குருபூஜை செய்யும் தலைமைச் சீடர்கள் தனி!

சுண்டெலிகள் தாங்கள் போகக் காணேலை, இந்த விளக்குமாறுகளையும் சுமந்து தொலைக்க வேண்டி இருக்கிறது!

இப்படி, இவர்கள் அங்கீகாரம் என்று சொல்லும், கருதும் அந்த elusive entity தான் என்ன?

சினிமாவில் ஏதாவது ஒரு காட்சியில் வந்தாலும் பிரபலமாகி, கஜ, ரத, துரக பதாதிகளோடு விஜய் டிவி விருது விழாவுக்கு வரும் நடிகர்களைப் போல, பாதுகாப்பு வேலிக்கு அப்பால் நின்று, PDF please இலக்கிய ஆர்வலர்கள், 'தலைவா!' என்று தங்களை அழைக்க வேண்டும் என்பதா?

கவிதா ரசிகைகள் துள்ளிக் குதித்துக் கூச்சல் போட்டு, மார்பைத் திறந்து காட்ட வேண்டும் என்பதா?

நடிகைகளிடம் மைக்குகளை நீட்டி, 'அட்ஜஸ்ட் பண்ணிக்கிறது பற்றி என்ன நினைக்கிறீங்க?' என்பது போல, எல்லா இலக்கிய சஞ்சிகைகளும் தங்களைப் பேட்டி கண்டு, அட்டைப்படத்தில் போட வேண்டும் என்ற எதிர்பார்ப்பா?

மேடையிலே உட்கார வைத்து, வரிசைப் பிரகாரம் அழைத்து, 'இங்கே உட்கார்ந்திருக்கக் கூடிய மாபெரும் இலக்கியவாதி, கவிஞர், விமர்சகர், சிந்தனாவாதி நண்டு முருகன் அவர்களே!' என்று மொய் எழுதுகிற மாதிரி கட்டியம் கூறி 'பராக், பராக்' சொல்ல வேண்டும் என்பதா?

எவராவது தொகுத்து வருகின்ற எந்த 'தமிழில் சிறந்த …' பட்டியலிலும் தங்கள் பெயரும் இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பா?

யார் எவர் என்றே தெரியாதவர்கள் தரும் விருதுகள், பொன்னாடைகளால் கிடைக்கும் அற்ப சந்தோசங்களா?

அல்லது கனவு இல்லம்?

அல்லது குறைந்த பட்சம், சீமானுக்கோ, யூடியூபர்களுக்கோ கிடைக்கும் ராஜமரியாதையில் கொஞ்சமாவது?

பரபரப்பை ஏற்படுத்தி, பேஸ்புக்கில் ஒருவாரம் தூள் கிளப்ப வேண்டும் என்றால், அதற்கு ஆசான், சாரு தான் முன்மாதிரி!

சரி, நடைமுறைச் சாத்தியங்களை மனதில் கொண்டு பார்ப்பது என்றாலும், எத்தனை பேரைத் தான் அங்கீகரிக்க முடியும்?

முழு இனமுமே உத்தியோகபூர்வ கவிஞர்களாகவும், உத்தியோகப் பற்றற்ற விமர்சகர்களாகவும் இருக்கும்போது, எல்லாரையும் அங்கீகரிப்பது என்பது பெரும் logistic nightmare.

'தமிழில் சிறந்த பத்தாயிரம் கவிஞர்கள்' பட்டியலிட்டாலேயே விடுபட்டவர்கள் 'இந்தப் படை போதுமா?' போராட்டம் செய்வார்கள். அந்தக் கவிதை நூல் வெளிவந்தாலும், பத்தாயிரம் பிரதிகள் விற்க முடியாதபடிக்கு, அந்தப் பத்தாயிரம் கவிஞர்களும் pdf please இலக்கிய ஆர்வலர்களாகி விடுவார்கள்.

சரி, அங்கீகாரம் என்பது மக்களால் பேசப்பட வேண்டும், கொண்டாடப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்புத் தான் என்றால்…

எந்த மக்களால்…?

தங்களுடைய படைப்புகளை சாமானிய மக்களுக்கு ஆனதாக இவர்கள் படைப்பதும் இல்லை.

சாமானியர்கள் படிப்பதை இவர்கள் இலக்கியமாக அங்கீகரிப்பதும் இல்லை.

தங்களை பெரும் சிந்தனையாளர்களாகவும், மேலானவர்களாகவும் நினைத்துக் கொண்டு, இவர்கள் அந்த 'காமன் மேன்' 'லும்பன்' மக்களை ஒரு பொருட்டாகவேனும் மதிப்பதும் இல்லை.

அந்த மக்களுக்குப் புரியக் கூடிய மொழியில் எழுதுவதைக் கூட இழுக்கு என்று நினைத்து, பின்நவீனத்துவ மொழிக்குள் திளைப்பவர்கள் இவர்கள்.

அப்படியாயின், இவர்கள் எதிர்பார்க்கின்ற, ஆனால் கிடைக்காமல் போவதால் புலம்புகிற அந்த அங்கீகாரம் என்பது தான் என்ன?

எனக்குத் தெரிந்து இங்கே ஆங்கில எழுத்தாளர்கள் எவரும் தனக்கு அங்கீகாரம் கிடைக்க வேண்டும், அங்கீகரிக்கப்படவில்லை, தமிழ் நாட்டில் பிறந்திருந்தால் என் கதையே வேறு என்று புலம்பியதை நான் கண்டதில்லை.

தனக்கு நோபல் பரிசு கிடைக்கவில்லை என்று ஒவ்வொரு வருடமும் சல்மான் ருஷ்டி புலம்புவது பற்றி அவரது முன்னாள் மனைவி பத்மா லக்ஸ்மி ஏதோ சொன்ன ஞாபகம்.

தங்களுக்குக் கிடைக்கவில்லையே என்று பொறாமையோடு 'ஒரு விருதின் மரணம்' எழுதுகிறவர்கள் இங்கே மிகக் குறைவு. பின்னர் வெட்கமில்லாமல் அந்த விருதுப் பிணத்தை போய் வாங்கினாலும், சொன்னதை மறுபிரசுரம் செய்து மானத்தை வாங்க ஊடகங்கள் உண்டு.

போட்டியில் யாராவது வெற்றி பெறும்போது, பெயர்பிரேரிக்கப்பட்ட மற்றவர்களும் எழுந்து நின்று கை தட்டி வாழ்த்துவார்கள். அது பொதுவெளியில் காட்டப்படும் பொதுப் பண்பாகத் தான் இருக்கிறது.

விருதுகள் சரியான வர்களுக்குக் கொடுக்கப்படவில்லை என்று கருதுகிறவர்கள் பெரும்பாலும் விமர்சகர்களாகத்தான் இருப்பார்கள்.

இங்கே அவர்கள் தனி இனம். நம்ம ஊர் போல 'இலக்கியவாதி cum கவிஞர் cum விமர்சகர் cum கலகக்காரன்' என்று ஒரே கூரையின் கீழ் பல யாவாரம் நடத்தும் கூத்துக்கள் எல்லாம் இங்கே கிடையாது.

தனக்குக் கிடைக்கவில்லை என்று எந்த எழுத்தாளராவது கோபப் பட்டாலோ, முறைப்பட்டாலோ, பரிசு அறிவிக்கப்படும்போது முகம் சுளித்தாலோ அதுவே செய்தியாகி விடும்.

இங்கே அங்கீகாரம் என்பது இலக்கியவாதிகள் கோரி வற்புறுத்திக் கொள்ளும் அளவுக்கு பெரிய விடயமாகக் கருதப்பட்டதாக நான் அறியவில்லை.

அதற்கு முக்கியமான காரணங்களும் உண்டு.

இங்கே எந்த கலை, இலக்கிய முயற்சியாயினும், அதனால் பெரும் பணம் சம்பாதிக்கச் சந்தர்ப்பங்கள் உண்டு. எனவே, படத் தயாரிப்பு நிறுவனங்கள் முதல் புத்தக வெளியீட்டு நிறுவனங்கள் வரைக்கும், அதற்கான ஊடகப் பரப்புரைக்காகப் பெரும் பணம் செலவழிக்கின்றன.

அவர்களே publicists போன்ற பொதுத் தொடர்பாளர்களைச் சம்பளத்திற்கு அமர்த்தி, சகல ஊடகங்களிலும் இதைப் பற்றிய செய்திகளை வெளிவரச்செய்வதுடன், இந்தப் படைப்பாளிகளை பேட்டி காண்பதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள் கிறார்கள். பல தடவைகளில் தங்கள் செலவிலேயே promotional tour இல் எழுத்தாளர்களை நாடெங்கும் அனுப்பி, புத்தக விற்பனை நிலையங்களில் வாசிப்பு, கையெழுத்திடல் என்றெல்லாம் அதை promote பண்ணுகிறார்கள்.

அவ்வாறு பெரிய பிரசுர நிறுவனங்கள் மூலமாக வெளியிட முடியாமல் போனால், சுய

**எழுத்தாளர்களுக்கு பிரசுர நிலையங்களிடம் இருந்து பணத்தைக் காண்பது என்பது அபூர்வமானதாக இருக்கும் அளவுக்கு பதிப்பாளர்கள் நேர்மையாளர்களாக இருக்கிறார்கள்.**

**அந்தப் பிரசுர கர்த்தாக்களையும், அச்சகர்களையும் வாழ வைக்கவென்றே, தாலிக்கொடியை அடகு வைத்து கவிதைத் தொகுதி வெளியிடும் உணர்ச்சிக் கவிஞர்கள் இருக்கிறார்கள்.**

**வெளியீட்டு விழா பணச்சடங்கு நடத்தி, முதல் பிரதி மொய் வைத்துப் பணத்தை மீட்டால் அன்றி, இலக்கியம் படைத்தல் என்பது வெறும் labor of love தான்.**

**இதனால் தான், சரி, பணம் கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை, பேசப்பட்டால் போதும் என்ற மன நிலைக்கு வந்து விடுகிறார்கள் போல.**

பிரசுரமாகவே வெளியிட்டு வினியோகிக்க சகல வசதிகளும் உள்ளன.

அடுத்தது, இலக்கியம் இங்கே genre களாகப் பிரிக்கப்பட்டு இருக்கிறது. இலக்கியத்தில் அதன் பங்கு பற்றி அடுத்த இதழில் தனியாக எழுதுவேன்.

எல்லாவற்றுக்கும் மேலாக, money talks.

பிரபல எழுத்தாளர்கள் என்றால், எழுதுவதற்கு முன்பே முற்பணக் கொடுப்பனவு கிடைக்கிறது. முறைப்படி றோயல்டி கிடைக்கிறது. விற்பனையைக் கணக்கிடச் சரியான பொறிமுறைகள் உண்டு.

முழு இனமாகவே பணம் கொடுக்காமல், PDF Please என்று வாசிக்கும் எண்ணம் கொண்ட இலக்கிய ஆர்வலர்கள் நிறைந்திருக்கும் தமிழ் கூறு நல்லுலகு மாதிரி இல்லாமல், பணம் கொடுத்து வாங்கி, எழுத்துக் காப்புரிமையை மதிக்கும் வாசகர்கள் போதியளவு இருக்கிறார்கள். அதனால், படைப்பாளிகளுக்கு புத்தக விற்பனையில் பணம் வருகிறது.

எனவே, இந்த அங்கீகாரம் பற்றிப் புலம்பிக் கொள்ளாமல் அவர்கள் எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.

மற்ற பிரபல எழுத்தாளர்களின் படைப்புகள் பற்றி எழுத நேர்ந்தாலோ, கருத்துச் சொல்ல நேர்ந்தாலோ, நாகரீகத்தோடும் பண்போடும் அதைச் செய்கிறார்கள். பொறாமை, காழ்ப்புணர்வோடு அதை அணுகுவதில்லை.

மற்றது, விருது வழங்கல்களில் கூட, பெரும் பிரசுர நிறுவனங்களின் தலையீடும் புரமோஷன்களும் இருந்தாலும், சிறுபிரசுர நிறுவனங்கள் கூட, பொதுவெளியில் பிரபலமில்லாத ஆனால் தரம் வாய்ந்த படைப்புகள் கூடப் பரிசுகளைப் பெறக் கூடிய சூழல்கள் ஆங்காங்கே இருக்கின்றன.

தமிழ்ச் சூழலில் அதெல்லாம் இல்லை.

எழுத்தாளர்களுக்கு பிரசுர நிலையங்களிடம் இருந்து பணத்தைக் காண்பது என்பது அபூர்வமானதாக இருக்கும் அளவுக்கு பதிப்பாளர்கள் நேர்மையாளர்களாக இருக்கிறார்கள்.

அந்தப் பிரசுர கர்த்தாக்களையும், அச்சகர்களையும் வாழ வைக்கவென்றே, தாலிக்கொடியை அடகு வைத்து கவிதைத் தொகுதி வெளியிடும் உணர்ச்சிக் கவிஞர்கள் இருக்கிறார்கள்.

வெளியீட்டு விழா பணச்சடங்கு நடத்தி, முதல் பிரதி மொய் வைத்துப் பணத்தை மீட்டால் அன்றி, இலக்கியம் படைத்தல் என்பது வெறும் labor of love தான்.

இதனால் தான், சரி, பணம் கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை, பேசப்பட்டால் போதும் என்ற மன நிலைக்கு வந்து விடுகிறார்கள் போல.

தமிழ்ச் சூழலில் பொதுமக்களோ, பிரசுர கர்த்தாக்களோ கணக்கெடுக்காமல் விட்டால் என்ன?

தங்களை அங்கீகரிக்கவில்லை என்று மனம் குமுறும் இந்த இலக்கியவாதிகள், தாங்கள் பரஸ்பரம் திறமையுள்ளோரை அங்கீகரிக்கிறார்களா? பாராட்டியிருக்கிறார்கள்?

இது பெரும் கேள்வி.

தமிழ்ச்சூழலில் உள்ள மனநிலைகள் பற்றிய புரிதலுடன் தான் இதை அணுக முடியும்.

தமிழ் மனதில் ஆழ வேரூன்றியிருக்கும் சுயசாதிப் பற்றும் பெருமையும், அதைப் போன்ற மதங்கள் (உருவ வழிபாடுகள் கற்களோடு மட்டும் முடிவதில்லை. பிரபலங்கள் மீதானவையும் தான்.) தொடக்கம் முகாம்கள் வரை, கொள்கைகள் முதல் கட்சிகள் வரை மீதான பற்றுகளும், அந்தப் பற்றுகள் அவற்றைச் சாராத மற்றவர்கள் மீது ஏற்படுத்தும் கொலை வெறியும், இந்த இனத்திற்கே உரித்தான பொறாமை உணர்வும் பற்றி கருத்தில் கொள்ளாமல், இந்த அங்கீகாரம் குறித்து நாங்கள் விளங்கிக் கொள்ள முடியாது.

இன்னொருவர் பற்றிய எந்த மதிப்பீடும் இந்த வடிகட்டிகளின் ஊடாகத் தான் உருவாகின்றன.

எல்லோரும் கருத்தொரு மிக்கின்ற திறமை என்ற ஒன்றை மட்டும் வைத்துக் கொண்டு, தமிழ்ச் சூழலில் எதையும் பிடுங்க முடியாது என்பது எல்லாருக்கும் தெரியும்.

ஒருவரை ஏற்றுக் கொள்வதற்கு எடுக்கும் சிரமம் நிராகரிப்பதற்கு இருப்பதில்லை. யாழ்ப்பாணி அரசியலில் முரண்படும் எவரையும் துரோகி என்பது எவ்வளவு சுலபமானதோ, அதே மாதிரித்தான் இதுவும்.

ஏடாகூடமாக எதையாவது கேட்டால், பார்ப்பனீயத்தில் பழியைப் போட்டு, சங்கி என்று முத்திரை குத்தி அப்பால் போகக் கூடிய வசதி தமிழ்நாட்டில் உண்டு.

எப்படி சுயசாதிச் சிந்தனை வெறிநிலையில் வைத்திருக்கிறதோ,

அதே நிலையில் இந்துத்துவ பார்ப்பனீயர்கள் மற்றவர்கள் கொண்டிருக்கும் வெறுப்பு போலவே, அதை எதிர்க்கின்ற இடதுசாரிகள், திராவிட பெரியாரியர்கள், அம்பேத்காரியர்களுக்கு தங்களுக்கு இடையிலான வெறுப்பும் வெறிநிலையில் தான் இருக்கிறது. இந்த வெறுப்பை மீறி, உண்மையான திறமையை மதிப்பது என்பது சாத்தியமில்லாத ஒன்று.

நான் சொல்வது போல, தமிழ்நாட்டில் உள்ள ஒரிஜினல் பார்ப்பனிய, சூத்திர சங்கிகளை விட, பச்சை, சிவப்பு, நீல, கருப்பு சங்கிகளின் எண்ணிக்கை அதிகம். ஒருவரை முத்திரை குத்தி 'சாதியாக்கி' பின்னால், அவரை வெறுப்பதும், நிராகரிப்பதும் இலகுவாகி விடுகிறது.

என்னை 'புலி எதிர்ப்பு' என்பது போல!

எனவே, கருத்தை எதிர்கொள்வது என்பது, கருத்துக் கூறுகின்றவரின் பின்னணியை மட்டுமே வைத்துக் கொண்டு அவர் பற்றிய எல்லாவற்றையும் முற்றுமுழுதாக நிராகரிப்பதாகி விடுகிறது.

புலன் பெயர்ந்த இலக்கியத்தில் தாயகம் செய்த பங்களிப்பை, தங்களுடைய பிழைப்புக்கு பங்கம் ஆகும் என்பதைத் தெரிந்து கொண்டு 'அது வெறும் புலி எதிர்ப்பு' என்ற முத்திரை குத்தலோடு இருட்டடிப்பு செய்த நிலைமையை கண்டு கடந்து தான் வந்திருக்கிறேன்.

இப்படிச் செய்தவர்கள் எல்லாம் புலிகளின் மானிட விரோத நடவடிக்கைகளை கண்டும் காணாமல், போராட்டத்தில் 'இதெல்லாம் சகஜம்' என்று தமிழ்த்தேசியத்தில் மூழ்கி முத்தெடுத்தவர்களும், முன்னர் எதிர்த்துப் பின்னர் தமிழ்த்தேசியத்தோடு முரண்டு பிடித்தால் பிழைப்புக்கு ஆகாது என்று பல்டி அடித்தவர்களும் தான்.

இந்த கருத்தியல் பின்னணியில் நிராகரிப்பு இருக்கிறது போதாதென்று, இழுத்து விழுத்துகின்ற இந்த தமிழ் நண்டு முருகன்களின் பொறாமை உணர்வு வேறு.

தமிழ் இலக்கியவாதிகள் யாரைப் பற்றி புகழ்கிறார்கள்?

தங்கள் சாதியைச் சார்ந்தோர், முகாமைச் சார்ந்தோர் என்று எல்லாம் பார்த்து நிராகரிப்பதோடு இவர்களின் வடிகட்டல்கள் முடிவதில்லை.

தங்களுக்கு ஜால்ரா போட்டுக் குருபூஜை செய்கிறவர்கள், தங்களை விடத் திறமை குறைந்தவர்கள் என்று முழுமையாக நம்புகிறவர்கள், தங்களை முன்னுரை எழுதித் தரச் சொல்லி 'அங்கீகரிப்போர்', இனிமேல் போட்டிக்கு வர மாட்டார்கள் என்பதால் இறந்து போன இலக்கியவாதிகள் தவிர்ந்து, இவர்கள் யாரையும் மனம் நிறைந்து பாராட்டுவதில்லை.

அராத்துவுக்கு சாரு 'உலகத்தில் நிகர் இல்லாத எழுத்தாளராக' இருப்பதும், சாருவுக்கு அராத்து #up and coming இலக்கியவாதியாக' இருப்பதும் இந்த அடிப்படையில் தான்.

ஆசானுக்கு சீடகோடிகள். பட்டியல் நீளம். அதில் அவருக்கு கடிதம் எழுதும் ஃபேக் ஐடிகள் என அவரது பல்வேறு அவதாரங்கள் வேறு. அவர்களைப் பாராட்டுதலில் தொடங்கி, தன்னுடைய மேதாவித்தனத்தைப் புகழ்வதில் முடிப்பார்.

தங்களுக்குப் போட்டிக் காரர்கள் என்று நினைக்கும், தங்கள் துறையில் இருக்கும் எவர் பற்றியும் இவர்கள் மனம் நிறைந்து எழுதுவதில்லை.

சிறுகதை எழுதுகிறவருக்கு கவிஞரைப் புகழ்வதில் பிரச்சனை இருப்பதில்லை.

அவருடைய ரவுடிப் பேட்டைக்கு கவிஞர் போட்டிக்கு வரப் போவதில்லை.

தங்களுடைய அங்கீகாரத்தில் பங்கு போட போட்டி போடுகிறவர்கள் மீது பொறாமை உணர்வு எங்கும் காணக் கூடியதே.

அதிலும் இதில் யாராவது மொழி பெயர்ப்புக் கண்டால், புக்கர் பரிசு அவர்களுக்குக் கிடைத்து விடுமோ என்ற அச்சம் உடனேயே இவர்களைத் தொற்றிக் கொண்டு விடுகிறது.

ஆசான், சாரு, மனுஷ் என்ற இலக்கிய உலகின் Holy Trinity க்குள் நடந்த பரஸ்பர மல வீச்சு, பெருமாள் முருகன் மீதான ஆசான், சாருவின் காழ்ப்புணர்வு எல்லாவற்றையும் இந்த இலக்கிய உலகம் கண்டு தான் வந்திருக்கிறது.

இவர்கள் எல்லாரையும் விட, இந்த இலக்கியப் பெருந்தகைகள் வெறுப்பும் கலக்கமும் அடைவது தங்களது இருப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கக் கூடும் என்று நினைப்பவர்கள். தங்களைப் பற்றி தாங்களே சொல்லும் கதை சொல்லல்களுக்கு இடையூறாக இருப்பார்கள் என்று நினைப்பவர்கள்.

தங்களை விடத் திறமைசாலிகள் என்று தெரிந்து கொண்டு அச்சப்படுகிறவர்களை, நிராகரிப்பது மட்டுமன்றி, அவதூறுகள் செய்வதிலும் இவர்கள் தயக்கம் காட்டுவதில்லை.

அதிக தூரம் போகமல் ஆசானுக்கு உள்ளேயே நீங்கள் ஆதாரங்களையும் உதாரணங்களையும் தேடத் தொடங்கலாம்.

இந்த இலக்கியப் பெருந்தகைகளில் எத்தனை பேர், புதிதாகக் களத்தில் தோன்றி, எழுதி பொதுவெளியில் பாராட்டப்பட்டுப் பேசப்படுகிறவர்களை, மன நிறைவோடு வரவேற்றிருக்கிறார்கள்?

தொடர்ச்சியான எழுத்தினால் பண்படக் கூடியவர்கள் என்று கருதிய எத்தனை பேரை உற்சாகப்படுத்தியிருக்கிறார்கள்?

'புதிசா ஒருத்தி வந்திருக்கிறாள்டா, வாசிச்சுப் பாருங்கடா!' என்று முன்பின் தெரியாத எத்தனை பேரைப் பற்றி பெருமிதத்தோடு பகிர்ந்திருக்கிறார்கள்?

சாதரணமாக எதையும் பகிர்ந்து கொள்ளும் பேஸ்புக் பயனாளிகளுக்கு இருக்கும் பெருந்தன்மை கூட இவர்களுக்கு இருப்பதில்லை.

உண்மையான திறமை சாலிகள் குறித்து இவர்கள் பெரும் அச்சம் கொள்கிறார்கள். தங்கள் திறமை குறித்த தன்னம்பிக்கை இல்லாததால், அவர்களின் தொடர்ச்சியால் தங்கள்

இருத்தலுக்கு பங்கம் வரும் என்று பயப்படுகிறார்கள். இதனால் அவர்களுடைய திறமையை இவர்கள் அங்கீகரிக்க விரும்புவதில்லை என்பது மட்டுமல்லாமல், அவதூறுகள் மூலம் அவர்களை சலிப்படையச் செய்யவே முனைவார்கள்.

தங்களுடைய அவிழ்த்து விடும் கதை சொல்லல்களுக்குப் பங்கம் வந்து, உண்மைகள் அம்பலமாகி விடும் என்ற பயம் இவர்களுக்கு உண்டு.

பேஸ்புக்கில் தங்களுக்கு லைக்குகள் லட்சக்கணக்கில் விழுவதில்லையே என்று புலம்பும் எத்தனை பிரபலங்கள் தாங்கள் வாசித்தவற்றுக்கு லைக் போட்டிருப்பார்கள்?

வாசித்து முடிய பெரும் சஞ்சலத்தை ஏற்படுத்தும் எழுத்துக்களைக் கூட பொறாமையோடு, இரவு நேரங்களில் சுடலைகளைக் கடந்து போவது மாதிரி, விசில் அடித்தபடியே கடந்து போவதாகத் தானே இவர்கள் இருக்கிறார்கள்.

நீங்கள் இலக்கியவாதியாக இருந்தால், நீங்கள் அங்கீகாரம் பெறக் கூடாது என்று நினைப்பவர்களில் முக்கியமானவர்கள் உங்களுக்கு நெருக்கமான நண்பர்களாகவும் உங்களை நன்றாகத் தெரிந்தவர்களுமாகத் தான் இருப்பார்கள்.

இவன் பெரிய ஆளாகி விடுவானோ என்ற அச்சம் இவர்களைச் சூழ்ந்து கொள்ளும் அளவுக்கு பொறாமை மிக்கவர்களாக இருப்பார்கள்.

இதே பேர்வழிகள் ஏதோ வழியில் நீங்கள் பிரபலமாகி விட்டால், உங்களைத் தங்களுக்கு நெருக்கமாகத் தெரியும் என்று அடையாளம் காட்டவும் பின்நிற்பதில்லை.

இதை நான் நேரடியாகவே கண்டு உணர்ந்திருக்கிறேன்.

புலன் பெயர்ந்த இலக்கிய முயற்சிகள் என்று பட்டியல் போடுவோர்கள், ஒரே இதழ் வெளிவந்து தற்கொலைத் தாக்குதல் நடத்திய சஞ்சிகைகளின் பெயரைக் கூடத் தேடிப்பிடித்துப் பட்டியல் படுத்தும்போது கூட, ஐந்து வருடங்கள் வாராந்தம் வெளிவந்த தாயகம் இதழைப் பற்றி மூச்சே விடுவதில்லை.

தமிழ்நாட்டின் அங்கீகாரம் என்பது 'ஈழம்' மற்றும் புலன் பெயர்ந்த எழுத்தாளர்களின் கனவாக இருந்து வருகிறது. அதைக் குறுக்கு வழிகளால் விருது, விஸ்கி, விமானச்சீட்டுக் கொடுத்துப் பெற்றவர்கள், ஏன் தங்களைத் தலித்தாக்கிப் பெற்றவர்கள் கூட உண்டு.

புலன் பெயர் இலக்கியச் சூழலில் இருந்தபடியே தமிழ்நாட்டில் பேசப்பட வேண்டும் என்ற அங்கலாய்ப்பில் திரிவோர் கூட, என்னையும் தாயகம் பற்றியும் தெரிந்து கொண்ட போதும், அந்தப் பங்களிப்புப் பற்றி எங்கேயும் சொன்னதில்லை.

ஏன் தற்போது கூட, அபத்தம் வெளிவந்த போது கூட, அபத்த இதழ்கள் பற்றிய பேஸ்புக் அறிவிப்புகளுக்குக் கூட லைக் போடாமல், விசில் அடித்தபடியே கடந்து கொண்டு தான் இருக்கிறார்கள்.

எதையோ எழுதி அதை அபத்தம் என்பதால் 'அபத்தத்திற்கு' அங்கீகாரம் கிடைத்து விடும் என்று 'வெங்காயம்' என்று எழுதியவர்களும் உண்டு.

தங்களால் முடியாமல் போன, தாங்கள் முயற்சித்துத் தோற்றுப் போன வரலாறுகளுக்கு இடையில், அபத்தத்திற்கு 'இலக்கிய அங்கீகாரம்' கிடைத்து விடுமோ என்ற பயமும் பொறாமையும் தவிர, வேறு எதுவாக இருக்கும்?

அபத்தம் முதலாவது இதழ் வந்தவுடனேயே, வெலவெலத்து கதிகலங்கிப் போய், தமிழ்நாட்டு இலக்கியவிழாவில் என்னைப் பற்றி உளறியதை நீங்களும் பார்த்துத் தானே இருப்பீர்கள்?

நான் தாயகத்தில் ஆசிரியராக இருந்த போது, முடிந்தவரைக்கும் எழுதி அனுப்புகின்ற எல்லாரையும் உற்சாகப்படுத்த வேண்டும் என்பதற்காக, பிரசுரிக்க முயற்சி செய்வேன். கணனி இல்லாத காலத்தில் கையால் எழுதி, தபாலில் அனுப்புகின்ற ஒருவரின் எழுத்தின் தரத்தை விட, ஆர்வம் எனக்கு முக்கியமானது.

முடிந்தவரைக்கும் அதை வாசிக்கக் கூடிய அளவுக்குச் செம்மைப்படுத்தி பிரசுரித்து உற்சாகப்படுத்தியிருக்கிறேன்.

இப்போது அபத்தத்தை வெளியிடும்போதும், நான் பேஸ்புக்கில் ஆர்வத்துடன் வாசிக்கும் பலரை 'நீங்கள் அபத்தத்தில் எழுத வேண்டும் என்று விரும்புகிறேன். தயக்கம் இல்லாமல் எதைப் பற்றியும் எழுதுங்கள்' என்று உட்பெட்டிக்குள்ளும், நேரேயும் கேட்டிருக்கிறேன்.

இதில் எழுத்தாளர்கள் மட்டுமில்லாமல், ஓவியர்கள், புகைப்படப் பிடிப்பாளர்களும் அடக்கம்.

இவர்களில் பலர் வெளியே பிரசுரம் காணாமல், வெறும் சமூக வலைத்தளங்களில் எழுதிக் கொண்டிருக்கிறவர்கள்.

எனக்கு, இது தான் உண்மையான, திறமைக்கான அங்கீகாரம்.

இவர்கள் வெளியே தெரியப்பட, பேசப்பட வேண்டியவர்கள், தங்களுடைய திறமைக்காக அங்கீகரிக்கப்பட வேண்டியவர்கள், அதைப் பரவலாக்க வேண்டியது எனது கடமை, பொறுப்பு என்று நினைத்துத் தான் அதைச் செய்கிறேன்.

எங்கள் சமூகம் அறிய வேண்டிய உண்மைகளை சொல்லக் கூடியவர்களைக் கேட்டிருக்கிறேன், பல வரலாறுகள் பலருடைய ஆயுளோடு மறைந்து போகக் கூடிய சூழ்நிலையில், அயோக்கியர்களின் கதைகளே வரலாறாகக் கூடாது என்பதற்காக, இவர்கள் அதைப் பதிவாக்க வேண்டும் என்பதற்காகக் கேட்டிருக்கிறேன்.

(இதனால் தான், எனக்கு நன்கு தெரிந்த அயோக்கியர்கள் பக்கம் இந்த முறை நான் தலைவைத்துப் படுக்கவில்லை.)

இவர்களுடைய திறமை மீது பொறாமை ஏற்பட முடியாதபடிக்கு எனக்குத் திறமையும் தன்னம்பிக்கையும் இருக்கின்றன. அவர்கள் பெயர் பெற்று விடுவார்களே என்ற பொறாமை உணர்வு எதுவும் எனக்கு இல்லை.

இதனால் தான், அபத்தம் வெளியாகும்போது, பிரபலங்களின் படைப்புகளில் hitching a wagon செய்ய நான் நினைத்ததில்லை.

எந்த அளவீடுகளின்படியும், நான் இலக்கியவாதி இல்லை.

தங்களைப் பலரும் சொல்லிக் கொள்வது போல சமூகச் செயற்பாட்டாளர், ஆர்வலர் என்பது கூட இல்லை.

ஆகவே, என்னை யாரும் இலக்கியவாதியாக அங்கீகரிக்க வேண்டும் என்று நினைத்ததும் இல்லை.

விளம்பரப் பணம் கொடுத்தோ, உறவினர்கள், நண்பர்களாக இருப்பதாலோ இலக்கியவாதிகள் ஆனவர்கள், தாயகத்தில் எழுதியவர்கள் எல்லாம் இயல் விருதுக்கு அழைப்புக் கிடைத்து ஆஜராவது போல, எனக்கு ஒரு போதும் அழைப்புத் தரப்பட்டதுமில்லை.

கிடைக்காதது பற்றி அலட்டிக் கொள்வதுமில்லை. Black Tie affair இல், முத்தரின் coat tail இல் தொங்கிக் கொண்டு ஈடேற நினைக்கும் அளவிலும் எனக்குத் தேவை இல்லை.

அங்கீகாரம் என்பது எனக்கு முக்கியமானதாக இருந்திருந்தால், இதுவரை காலமும் எழுதியவற்றை, அரசியல் முதல் இலக்கியம் வரை, உலக சினிமா முதல் விஞ்ஞானம் வரை, satire முதல் சிறுகதை வரை, (கவிதை உட்பட! ஆம். அந்தப் பாவத்தையும் செய்திருக்கிறேன்.) புத்தகங்களாக்கி, யாராவது இலக்கிய தாய்க்கலத்தோடு ஒட்டிக் கொண்டு உச்சங்களை அடைந்திருப்பேன்.

தாயகம் நிறுத்தியிருந்த காலத்தில் தமிழ்நாட்டில் வார இதழ்களிலோ, சிறுசஞ்சிகைகளிலோ நான் எழுதியிருக்க முடியும்.

அதற்காகச் சமரசங்களைச் செய்ய வேண்டியிருந்திருக்கும். தமிழ்த்தேசியத்தைப் பகைத்துக் கொள்ளாமல் இருக்க புலியைக் கடிக்காமல் இருந்திருக்க வேண்டும்.

அப்படியான அங்கீகாரமும் புகழும் எனக்குத் தேவை இல்லை.

என்னுடைய எழுத்து என்னைப் பற்றியதல்ல.

எனக்கு அங்கீகாரம் கிடைப்பது பற்றியதல்ல.

அது நான் வாழும் சமூகம் பற்றியது. சமூக உணர்வு சார்ந்தது. அதில் பலம் குன்றிய, அயோக்கியர்களால் ஏமாற்றப்படுவோருக்கும், கொலைகாரர்களால் அடக்கப்படுவோருக்கும் கிடைக்க வேண்டிய சமூக நீதி பற்றியது.

அது என் இயல்பு.

நான் வேலை செய்த இடத்தில் வேலைநீக்கம் செய்யப்படும் அச்சுறுத்தல் இருந்தும் தொழிற்சங்கம் அமைக்கத் தலைமை தாங்கி மூன்று தடவைகள் போராட்டம் நடத்தியிருந்தேன். ஒரு இளம் குடும்பத்தையும் வைத்துக் கொண்டு, வேலை இல்லாமல் போனால் என்ன செய்வேனோ என்ற எண்ணம் வராதபடிக்கு எனக்கு தன்னம்பிக்கை இருந்தது.

சமூக நீதிக்கான எழுத்து, பிழைப்பு நடத்தும் அயோக்கியர்களுக்கும் துப்பாக்கி ஏந்திய கொலைகாரர்களுக்கும் உவப்பானதாக இருப்பதுமில்லை.

அங்கீகாரம் என்பது மட்டும் எனது நோக்கமாக இருந்திருந்தால், பங்கர் காலடி மண்ணைப் போற்றிப் பாடிக் கொண்டிருந்திருப்பேன். புலிகளே அதைச் சுமந்து சென்று விற்றிருப்பார்கள். மாமனிதர், நாட்டுப் பற்றாளர் என்றெல்லாம் யாழ்ப்பாணிகளின் அவையத்து முந்தியிருந்திருப்பேன்.

கொலைப் பயமுறுத்தல்கள், பத்திரிகைத் தடைகள் எல்லாவற்றுக்கும் மத்தியில் தான் என் எழுத்து இருந்தது. 'அமெரிக்காவில் பிறந்திருந்தால்' என்றெல்லாம் புலம்பாமல், இங்கேயே பேசப்படக் கூடிய ஒருவனாக என்னால் எழுதியிருக்க முடியும்.

ஒரு சல்லிக்காசுக்குப் பெறுமதியில்லாத அங்கீகாரத்தை வைத்துக் கொண்டு நான் என்ன தான் பண்ண முடியும்?

என்னை ஒரு பெரிய எழுத்தாளன் என்று நாலு பேர் சொல்வதால் கிடைக்கக் கூடிய ego boost ஒரு துண்டு றொட்டி வாங்கக் கூடப் பயன்படாது.

இருந்தாலும், நண்பர் நோயல் நடேசன் தமிழ்நாட்டில் இருந்து வரும் இணையத் தளம் ஒன்றின் பொறுப்பாளரின் தொடர்பு விபரங்களைத் தந்து, அதில் எழுதலாம் என்று தெரிவித்திருந்தார். அது தீவிர அரசியல் சம்பந்தப்பட்டதாக இல்லாவிடினும், நான் இங்கே சென்ற ஆமிஷ் இனத்தினரின் நிகழ்வு ஒன்று பற்றி எழுதி அனுப்பியிருந்தேன். அது பிரசுரமானது.

பின்னர் இலக்கியம் சம்பந்தப்பட்ட கட்டுரை ஒன்றை எழுதி, அநதப் பொறுப்பாளர் சம்பந்தப்பட்ட பிரபல மாத இதழ் ஒன்றில் பிரசுரிக்கலாமா, பாருங்கள் என்று தெரிவித்திருந்தேன்.

இந்த இதழ் தயாரித்து முடிந்தது, அடுத்த இதழில் வரும் என்று சொன்னவர் அதன் பின்னர் எனது எந்தச் செய்திகளுக்கும் பதில் சொல்லாமல் தவிர்த்துக் கொண்டார். குறைந்த பட்சம் பிரசுரிக்க முடியாது என்று சொல்லியிருக்கலாம்.

அதன் பின்னர் தான் தெரிந்தது, அவர் புலன் பெயர்ந்த இலக்கியகாரர்களுக்கு வேண்டப்பட்டவர். எழுதப்பட்ட விடயம் அதில் ஒருவர் பற்றியது. இன்னொருவர் தமிழ்நாடு சென்ற போது அவரோடு தங்கி தங்கள் நெருக்கத்தைக் காட்ட பேஸ்புக்கில் படம் போட்டவர். எனவே, யார் 'கல்லுக் குத்தியிருப்பார்கள்?' என்பது புரிந்தது.

இப்படி, ஒவ்வொரு தமிழ்நாட்டுச் சஞ்சிகைகளுக்கும் என சில புலன் பெயர் favorite கள் உள்ளார்கள். அவர்கள் தங்கள் பிழைப்புக்கும் கதை சொல்லலுக்கும் பங்கம் வரக்கூடியதாக இன்னொரு புதுமுகம் அதற்குள் வருவதை விரும்ப மாட்டார்கள். தமிழருக்கே உரித்தான 'அள்ளி வைப்பு' செய்து கொண்டே இருப்பார்கள்.

சஞ்சிகைகளும் இந்த பேவரிட்டுக்களை பிய்த்து வாங்கும் எழுத்துக்களைப் பிரசுரிக்க மாட்டார்கள். முன்பின் தெரியாத ஒருவருக்காக யாரையும் பகைத்துக் கொண்டு பிழைப்பைப் பழுதாக்கும் முயற்சிக்கு அவர்கள் தயாரில்லை.

இதனால் தான் அபத்தத்தை ஆரம்பிக்கும் எண்ணம்

தொடங்கியது.

அதை ஆரம்பித்ததும் கூட எனக்கு அங்கீகாரம் கிடைக்க வேண்டும் என்பதற்காக அல்ல.

இலக்கியம் என்ற பெயரில் நடத்தப்படும் அயோக்கியத்தனங்கள் பற்றியும், தமிழ்நாட்டில் இந்தக் கதை சொல்லிகள் சொல்லும் கதைகள் பற்றியும் தான் எழுத வேண்டும் என்ற எண்ணத்தில் தான் அதை ஆரம்பித்தேன்.

காரணம், நாங்கள் அதைச் சொல்லா விட்டால், இந்த அயோக்கியர்கள் அடித்தும் அவிழ்த்தும் விடும் கதைகள் வரலாறாகி விடுவதற்கு உடந்தையாக இருந்த வரலாற்றுக் குற்றம் எங்கள் மீதானதாக இருக்கும் என்பதால் மட்டுமே.

நானே அயோக்கியர்கள் என்று நம்புகிற, சொல்லுகிற அதே கூட்டம் என்னை அங்கீகரிக்க வேண்டும் என்றெல்லாம் எதிர்பார்ப்பது பெரும் முரண் நகையாக இருக்கும் அன்றோ!?

வடிவேலுக் கோமாளிகளை வாயிற் காப்போராக வைத்துக் கொண்ட இலக்கிய walled garden கள், அழைப்பிதழ் கொடுக்கப்பட்டோரை அனுமதிக்கும் elite club களாக தங்களை நினைந்து பூரித்துக் கொள்வதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை.

அவர்கள் கொடுக்கும் விறகாகக் கூடப் பயன்படுத்த முடியாத விருதுகளை எனக்குத் தருவதில் பெருமையடையும் அளவிலும் நான் இல்லை.

எழுதுகின்றவர்களுக்கு சமூக உணர்வு இருக்க வேண்டும், சமூக நீதிக்காக அவர்கள் போராடுவதற்கான கடமை இருக்கிறது, தங்களுக்கு இயற்கை தந்ததோ, தாங்கள் வளர்த்துக் கொண்டதோ அந்தக் கொடைகளை தாங்கள் வாழுகின்ற சமூகத்தின் நலன்களுக்கும் முன்னேற்றத்திற்கும் பயன்படுத்த வேண்டும்.

எல்லாராலும் அது முடிவதுமில்லை. எல்லாருக்கும் அது கட்டாயமானதுமில்லை.

மற்றவர்கள் தங்கள் படைப்புகளால் மொழியையும் அதன் இலக்கியங்களையும் செழுமைப்படுத்தலாம்.

அங்கீகாரம் என்பது அனாவசியமாக இடைத்தரர்களைக் கோரி நிற்கும் ஒன்று. இந்த வாயிற்காப்போர்கள் தங்கள் பிழைப்பில் மண் விழுவதை விரும்புவதில்லை. சாமிகளின் பார்வை பக்தர்களின் மீது படாமல் மறைக்கும் நந்திகள் இவர்கள்.

இன்றைய யுகம் வாசித்தலை புதிய தளத்தில் கொண்டு வந்திருக்கிறது. அச்சு வாசிப்புக் குறைந்து பத்திரிகைகளே குற்றுயிராக சேடம் இழுத்துக் கொண்டிருக்கின்றன. கவனத்தைச் சிதறடித்து கணப் பொழுதில் கூடு விட்டுக் கூடு பாய வைக்கும் வலைத்தள யுகத்தில், வாசிப்பின் attention span குறுகிக் கொண்டே போகிறது.

பதிப்பாளர்கள், சஞ்சிகையாளர்கள், இலக்கிய மேதகுக்கள், விமர்சகர்கள் எவருடைய தயவும் இன்றி, நேரடியாகவே வாசகர்களுடன் ஊடாடக் கூடிய வகையில் இணையம் வந்து சேர்ந்திருக்கிறது. சுயபிரசுரப் புத்தகங்களாகவோ, வலைப்பதிவுகளாகவோ எந்த இடைத்தரகர்களும் இன்றி வாசகர்களை சென்றடைய முடியும்,

எல்லோருக்கும் சிலாவி அடிக்காமல், niche எனப்படும் குறுகிய பரப்புகளுக்கள்ளேயே சந்தைப்படுத்துவதால் தான் வெற்றியடைய முடியும் என்பதை சந்தைப்படுத்தல் துறையினர் எப்போதோ கண்டுகொண்டு விட்டார்கள்.

எழுத்தும் அவ்வாறான நிலையில் தான் இருக்கிறது. தனக்கான வாசகர்களைத் தெரிந்து, வரையறுத்து அவர்களுக்காக மட்டும் எழுதுவதே வெற்றி தருவதாக இருக்கும்.

அங்கீகாரம் தேடுதல் என்பது சுயநலன் சார்ந்தது. போதைப் புகை தருகின்ற தற்காலிக மயக்கத்தை தற்பெருமைக்குத் தருவது.

தமிழ்ச் சமூகத்தில் அங்கீகாரம் என்பது திறமை சார்ந்ததாக இல்லை என்பது எல்லாருக்கும் தெரிந்த நிலையில், அவ்வாறான ஒரு பொய்மையை வேண்டிய நிற்பது பெரும் அபத்தம்.

விருதுகள் கொடுக்கப்படுவது எந்த எதிர்பார்ப்புடன் என்பதும், அதன் நோக்கங்கள் திறமையை அங்கீகரிப்பது அல்ல என்பதும் எல்லாருக்கும் தெரியும். பணம் தந்தால் விருது தருவோம் என்று பச்சையாகவே சொல்லும் அமைப்புகள் உண்டு.

போற்றிப் பாடிப் பரிசில் பெற்ற கூத்து இம்முறை இயல்விருது விழாவில் நடந்தது தானே!?

மேடையில் ஏற்றும்போது, துண்டு போர்த்தும் பாரம்பரியச் சடங்கை விட, விருது ஒன்றும் பெறுமதியானதும் இல்லை.

புத்தகங்கள் பற்றி பெட்டிச் செய்தி போட, சஞ்சிகைகளில் பணம் அறவிடப்படும் கதைகள் உண்டு.

வார இதழ்களில் பேட்டி வெளிவர வைப்பதோ, அட்டைப்படத்தில் தரிசனம் தருவதோ சரியான தொடர்புகள், அன்பளிப்புகள் மூலமாகத் தான் சாத்தியமாகின்றன என்பதும் பலருக்கும் தெரியும்.

விலை கொடுத்து வாங்கும் பெருமைகளில் பெருமிதம் கொள்வது 'டாக்டர்கள்' மட்டும் இல்லை. இலக்கியவாதிகளும் தான்.

கோயில்களில் எங்களை நுழைய விட வேண்டும் என்று போராட்டம் நடத்தி அதில் நுழைய அனுமதிக்கப்படுவதை வெற்றியாகவும் அங்கீகாரமாகவும் கருதுவது முட்டாள்தனம்.

அதன் மூலம் அவர்களின் மூடநம்பிக்கைகள், அளவுகோல் வரைமுறைகளை நாங்களும் ஏற்றுக் கொள்வதுடன், அவர்கள் மேன்மையானவர்கள் தான் என்பதை நாங்கள் அங்கீகரிப்பதாகவும் முடிந்து விடும்.

அந்த மூடத்தனங்கள் எதுவும் இல்லாமல், எங்களுக்கான கோயில்களை நாங்களே கட்டிக் கொள்ளலாம்.

அங்கே உருவங்களைப் பிரதிஷ்டை செய்து குருபூஜை செய்யும் பூசாரிகளாகவோ, வரம் வேண்டித் தவம் இருக்கும் பக்தர்களாகவோ இல்லாமல்...

நாங்களே கடவுள்களாகவும் இருக்கலாம்!

அபத்தம்

ஆடி 2023




எழுதிய, எழுதப்பட்ட ஆளுமைகள் குறித்து மேலும் அறிந்து கொள்ளவும், அவர்களை நேரடியாகத் தொடர்பு கொள்ளவும் அவர்களின் பேஸ்புக் அடையாளங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

எழுத விரும்புவோர் Read the fine print ஐ வாசிக்க..

ஆக்கங்களுக்கு ஆக்கியோர்களே பொறுப்பு. ஆயினும் அதைப் பிரசுரிப்பதற்கான பொறுப்புகளில் இருந்து அபத்தம் விலக மாட்டாது.


email: apaththam@gmail.com
www.thayagam/apaththam
www.facebook.com/apaththam

ஆசிரியர், வடிவமைப்பு
ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்
Editor/Design
George R. Ckrhushchev


# பிரிக்க முடியாதது?

## யாழ்ப்பாணியும் அரசியலும்

அரசியலில் இருந்து யாழ்ப்பாணியைப் பிரிக்கலாம். யாழ்ப்பாணியிடம் இருந்து அரசியலைப் பிரிக்கவே முடியாது.

ஏனென்றால், யாழ்ப்பாணி களுக்கு அரசியல் இரத்தத்தில் ஊறிய மாதிரித் தான்.

அல்லது யாழ்ப்பாணிகளின் அரசியல் யாழ்ப்பாணிகளை இரத்தத்தில் ஊறப் போட்டது.

இரத்தத் திலகத்தில் தொடங்கி இறுதித் துளி இரத்தம் இருக்கும் வரையில்!

கிட்டத்தட்ட யாழ்ப்பாணிகள் எல்லோருமே அரசியல் ஆய்வாளர்கள் தான். இலங்கையின் இனப்பிரச்சனை மட்டுமன்றி, உலகத்தில் உள்ள சகல பிரச்சனைகளுக்கும் தீர்வு தெரிந்தவர்கள்.

சிலருக்கு ஒலிவாங்கி கிடைத்தபடியால், புல நாய் வாலர்கள் ஆகி விட்டார்கள். அவ்வளவு தான்.

எனவே, யாழ்ப்பாணியான எனக்கும் இது தவிர்க்க முடியாததாகி விட்டது.

அபத்தம் இதழைத் தொடங்கும் போது, இது யாழ்ப்பாணிகளுக்கு ஆனதல்ல, யாழ்ப்பாணி அரசியல் இதில் எழுதுவது இல்லை என்ற முடிவோடு தான் இருந்தேன்.

மரம் சிவனே என்று சூலத்தோடு உட்கார்ந்திருந்தாலும், சோளகம், கொண்டல், வாடை என்று வாட்டி எடுக்கும் முனைப்போடு தான் காற்றும் ஓய்வில்லாமல் இருக்கிறது.

பருவ காலம் தவறாமல்!

ஐம்பது வருடத்திற்கு முந்திய, இன்று வரைக்கும் யாருக்குமே எது என்று தெரியாத சிதம்பர ரகசிய தீர்வுப் பொதிக்காக, இன்றைக்கும் ஜெனிவாவுக்கு காவடி எடுக்கின்ற யாழ்ப்பாணிகள் எழுதுவதற்குக் குறைவில்லாதபடிக்கு எதையாவது தந்து கொண்டே இருக்கிறார்கள்.

இதற்குள் ஆனந்தசங்கரியின் பிறந்த நாள் விழா, துரையப்பாவிற்கு சிலை எடுப்பு முயற்சி என்று, யாழ்ப்பாணிக்குத் தடி ஓட்டிக் கொண்டிருக்கவும் யாழ்ப்பாணத்திற்குள்ளேயே ஆங்காங்கே ஆட்கள் இருக்கிறார்கள்.

துரோகி என்ற ஒற்றைச் சொல்லை வைத்தே அரசியல் செய்கிற யாழ்ப்பாணிக்கு உறைக்கிற மாதிரிச் சொன்னாலும், எருமை மாட்டில் மழை பெய்த மாதிரித் தான்.

யுத்தம் முடிந்த பின்னால், இனிமேல் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றிய எனது கருத்துக்களை, ‘அழிந்தும் அழிய மறுக்கும் யாழ்ப்பாணம்’ என்ற கட்டுரையில் முழுமையாக எழுதியிருந்தேன்.

ஆனால் யுத்தம் முடிந்து இத்தனை வருடங்களின் பின்பும், ‘அண்ணை அடிச்சுப் பறிப்பார்’ என்ற ஏகபிரதிநிதித்துவத் தலைமை போய், ‘அண்ணைமார் அடிச்சுப் பறிப்பினம்!’ என்று ஏகப்பட்ட பிரதிநிதித்துவ தலைமைகளை யாழ்ப்பாணிகள் நம்பிக் கொண்டு தான் இருக்கிறார்கள்.

கூட்டமைப்பு ஈழம் பெற்றுத் தராது என்று, அடிபட்டுக் கொண்டு பிரிந்தாலும் யாழ்ப்பாணிக்கு ஈழம் கிடைச்ச கொண்டாட்டம் தான்.

பிறகு அதே அவர்கள் ஒன்று சேர்ந்து கூட்டணி அமைக்கும் போதும் யாழ்ப்பாணிக்கு ஈழம் கிடைச்ச கொண்டாட்டம் தான்.

எனவே, இவர்களுக்கு அறிவுபூர்வமாக எதையாவது சொல்லி, சிந்திக்க வைக்கலாம் என்பதெல்லாம் அனாவசிய வேலை என்பது எந்த முட்டாளுக்கும் தெரியும் என்னும் போது எனக்கும்

தெரிந்ததில் என்ன ஆச்சரியம்?

இருந்தாலும், இந்த சமூகம் பற்றிய ஆழமான சில பார்வைகளை பதிவு செய்ய வேண்டும் என்று நீண்ட காலமாகவே எண்ணம் இருந்தது. பேஸ்புக்கில் 'இந்த வாரப் பலன்' மாதிரி மறந்து போகாதபடிக்கு, அதற்கு ஒரு நிரந்தரத் தன்மை வேண்டி, எங்காவது பிரசுரிக்கலாம் என்றால், 'தமிழ்த் தேசிய ஊடகங்கள்' எதுவும் அதைப் பிரசுரிக்கும் அளவில் இல்லை.

அவையும் அடிச்சுப் பறிக்கிற அண்ணைமாரின் விளம்பரங்கள், அவர்களின் இடித்துரைப்புகள், ஆவேசங்கள், காட்டங்களை எல்லாம் வரலாறாக்கி, யாழ்ப்பாணிகள் கேட்க விரும்பும் பொய்களைச் சொல்லிக் குஷிப்படுத்துவதில் முண்டியடித்து மிதிபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இதற்குள் யாழ்ப்பாணி களுக்கு சிந்திப்பதற்கு வழிகாட்ட எல்லாம் அவ ர்களுக்கு எங்கே நேரம் இருக்கிறது?

ஆக, இந்த எல்லாம் தெரிந்த அறிவாளிகளுக்கு தர்க்கரீதியான நியாயங்கள் பயன்படப் போவதில்லை.

உலகத்தின் சகல பிரச்சனைகளுக்கும் தீர்வு தெரிந்த, உலகத்தின் மூலை முடுக்குகள் எல்லாம் போய் குடியேறிய, இந்த படிச்ச யாழ்ப்பாணிகள் ஏன் ஒரே ஒரு அண்ணைக்கு மட்டும், உலக நடப்பு பற்றிய புத்திமதியைச் சொல்லி தீர்வைக் கண்டிருக்க முடியாதோ என்று நீங்கள் கேட்கலாம்.

அவர்கள் 'அண்ணையின்ரை கையில தான் எல்லாம் இருக்கே!?' என்று வாயைப் பொத்திக் கொண்டு இருந்தது தான் காரணமாக இருக்கும்.

அண்ணையும் கடைசி வரைக்கும், வெள்ளைக் கொடியோடு போகும் வரைக்கும், கையில இருந்ததை வைக்கவும் இல்லை.

யாழ்ப்பாணிகள் தான் அண்ணை கையளிச்ச போராட்டத்தைக் கையில எடுத்தாப்பிறகு, அதை மௌனிக்க வைச்சிருக்கினம்.

தலைவர் வேண்டிய நேரத்தில் திரும்ப வருவார் மாதிரி, யாழ்ப்பாணிகளும் வேண்டிய நேரத்தில் அதைக் கையில் எடுப்பார்கள்.

அப்ப, காடு கலங்கும்!

அதுவரைக்கும், 47 நாடுகள் சேர்ந்து சதி செய்யாவிட்டால், அண்ணை அடிச்சுப் பறிச்சிருப்பார் என்று இன்னொரு நாற்பது வருடத்திற்கு யாழ்ப்பாணியின் அரசியல் போகும்.

யாழ்ப்பாணி கேட்கிறானோ இல்லையோ, கேட்கச் செவியுள்ளவன் கேட்கக்கடவான் என்று சில விடயங்களைச் சொல்லியாக வேண்டியிருக்கிறது.

நான் சொல்லாவிட்டால், இதை யாரும் சொல்லப் போவதுமில்லை.

அப்படிச் சொல்லாவிட்டால், யாழ்ப்பாணி இன்றைக்கும் சொல்லிக் கொண்டிருக்கிற கதை தான் வரலாறாக முடிந்து விடும்.

இந்த விடயங்கள் எல்லாம் இன்றைய யாழ்ப்பாணிக்காக அல்ல.

யுத்தத்தைக் கண்ட தலைமுறை அதை தான் அழியும் வரைக்கும் வைத்துப் பிழைப்பு நடத்திக் கொண்டுதான் போகும்.

யுத்தம் முடிந்த பின்னால் பிறந்த குழந்தைகள் இப்போது பதின்ம வயதினராக இருப்பார்கள். அவர்களது தலைக்குள் இன்றைய தலைமுறை புகுத்தும் நஞ்சும் ஒரு சில தலைமுறைகளோடு செயல் திறன் இழந்து போயிருக்கும்.

புலன் பெயர்ந்த நாடுகளில் ஒரு தலைமுறையோடு அதுவும் போய் விடும்.

அதன் பின்னால் வரும் தலைமுறைகளின் பிரச்சனையும் தேவையும் இன்னொரு அரசியலை வேண்டி நிற்கும் அளவுக்கு, சனத்தொகை மாற்றம் உட்பட்ட பல மாற்றங்கள் வந்து சேர்ந்திருக்கும்.

அந்த ஒரு காலத்தில் சரித்திரத்தைத் தோண்டிப் பார்க்கிறவர்களுக்கு யாரோ ஒருத்தன் இதையெல்லாம் சொல்லிப் போட்டுப் போயிருக்கிறான் தானே!? என்ற எண்ணத்தை ஏற்படுத்தும் அளவுக்காவது இருக்க வேண்டும் என்பதே என் எண்ணம்.

தாயகம் இணைய இதழில் ஏடு இட்டோர் இயலாக எழுதும் எண்ணம் இருந்தாலும், அபத்தம் இதழில் அதை எழுதுவது தான் தற்போதைக்குப் பொருத்தமாக இருக்கும்.

இது யாழ்ப்பாணிகளுக்கு மட்டும் அல்லாது, புலிகளின் 'புனிதப் போராடத்தை' தமிழ்நாட்டுச் சினிமா நாயகனைப் பார்த்த வாய் பிளந்த பிரமிப்போடு பார்க்கும் தமிழ்நாட்டுத் தேசியர்களுக்குமாக...

***

இந்த சஞ்சிகையைக் கொண்டு வருவதில் செலவிடப்படும் உழைப்புப் பற்றியும், அதில் கரிசனை கொண்ட நண்பர்கள் சஞ்சிகையை இலவசமாகப் படிக்காமல், அதற்கான பெறுமதியைச் செலுத்த வேண்டும் என்றும் கருதி, மாதாந்தம் தங்களால் முடிந்த தொகையை அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். இந்த மாதமும் சிலர் அதில் சேர்ந்திருக்கிறார்கள்.

இந்த இதழ் உங்கள் சிந்தனையைச் செழுமைப்படுத்தவும், அறிவை வளர்க்கவும் ஏதோ விதத்தில் பயன்படுகிறது, அதற்கான பெறுதியை உணர்ந்து, அதற்குச் செலவிடப்படும் உழைப்புக்கான தொகையைச் செலுத்த வேண்டும் என்று கருதினால், ஒரு முறையாகவோ, மாதாந்தமோ நீங்கள் உங்களால் முடிந்த, விரும்பிய தொகையை அனுப்பலாம்.

PayPal மூலமாக, apaththam@gmail.com என்ற மின்னோலை விலாசத்திற்கு நீங்கள் விரும்பிய தொகையை அனுப்பலாம். Google Pay, Patreon போன்றவை மூலம் அனுப்புவது உங்களுக்கு சுலபமானது எனில் அதைத் தெரியப்படுத்துங்கள். அதற்கான வழிமுறைகளைச் செய்ய முடியும்.

அனுப்ப விருப்பம் தான், ஆனால் முடியவில்லை என்று கருதினால் கூட, எந்த தயக்கமும் இல்லாமல் தொடர்ந்தும் இலவசமாகவே வாசியுங்கள். உங்கள் நண்பர்களுக்கு அறிமுகப்படுத்துங்கள். எழுதுங்கள். தெரிந்தவர்களை எழுதுமாறு ஊக்குவியுங்கள்.

எப்படியோ, நாங்கள் எல்லோருமே இதனால் பயன்பெறுகிறவர்கள் தான்.



# கண்காட்சியில் காவற் தெய்வங்கள்

வாசிப்புப் போலவே கலைகளுக்கான ஆர்வமும் கற்கை நெறிகளும் மருகி வருகின்ற இக்கால கட்டத்தில் ஓவியங்கள், சிற்பக்கலைகள் சார்ந்து தனது திறமையை வெளிக்காட்டி வரும் வாசுகனின் படைப்புக்கள் வித்தியாசம் ஆனவையாகவே தென்படுகின்றன.

சில வருடங்களின் முன் 'விழிகளுக்கு விருப்பமான சித்திரங்கள்' என்னும் கட்டுரையில் ஆனி 2019 இல் கனடாவிலிருந்து வெளி வரும் 'தாயகம்' இணைய இதழில் க. கலாமோகனும், அதன் பின்னர் ஆடி 2020 இல் 'பெயரும் இல்லை முகமும் இல்லை : No Face. No Name# - Migration and Identity - 'கலம் : யாழ்ப்பாணம்' இணையவெளியில் பண்பாடுகளின் சந்திப்பு : 'என்னைச் சுதந்திரமாக இருக்க விடு' என்ற தலைப்பில் கவிஞர் விஜயேந்திரனும் வாசுகனின் ஓவியக் கலை பற்றி பதிவு செய்திருக்கிறார்கள். அவருடைய அண்மைக் கால செயற்பாடுகள் குறித்து நாம் அறிந்து கொள்வது நம்மவர்களின் கலை குறித்த ஆர்வத்தை, அவர்கள் திறமையை வெளிக் கொணர்வது மட்டுமல்ல, புலம் பெயர் தேசங்களில் வாழும்

# பூங்கோதை





தமிழர்கள் தாம் வாழுகின்ற நாட்டினரோடு தம் திறமைகளைப் பகிர்ந்து கொள்வதென்பதும், அந்நாட்டினரும் இவர்களின் திறமைகளை வெளிப்படையாக திறந்த மனதோடு அங்கீகரிப்பதென்பதும் நாம் எல்லோருமே பெருமைப் பட வேண்டியதொன்றாகின்றது.

இங்கு மேலே குறிப்பிட்டிருக்கும் இரண்டு கட்டுரைகளின் இணைப்புகள் (links) இக்கட்டுரையின் முடிவில்க் குறிப்பிடப்பட்டுள்ளன.

இனி, வாசகனின் தற்போதைய கள நிலவரத்தைப் பார்ப்போம். பிரான்ஸின் தலை நகரில் கடந்த 01 சித்திரை மாதத்தில் இருந்து எதிர்வரும் 22 ஆடி மாதம் வரை வாசுகனின் ஓவியங்களோடு அவரது சிற்பங்களும் கண்காட்சியில் இடம் பிடித்திருக்கின்றன.

'கோவிட் : உள்ளிருப்புக்காலத்தில் படைப்பாளிகளின் எதிர்வினை' என்ற தலைப்பில் பிரான்ஸ் கலைஞர்கள் உட்பட 25 சர்வதேச ஓவியர்கள், கலைஞர்களின் படைப்புகள் பார்வைக்காக தெரிவு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இவற்றில் வாசுகனின் படைப்புகளும் அடக்கம்.

இவற்றில் இரண்டு ஓவியங்களும் ஐந்து சிலைகளும் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன. இதில்

உள்ள ஓவியங்களில் ஒன்று கோவிட் பெருந்தொற்றின் பின்னர் வீடடைந்து இருந்த காலப்பகுதியின் உணர்வுகளை சித்தரிக்கும் வகையில் Positive - பொசிட்டிவ் எனும் தலைப்பில் அக்கிரிலிக் வர்ணத்தில் + கோப்பித்தூள் + இஞ்சித் தூள் மேலும் ஒட்டு ஓவியம் இள நீல வர்ணத்தைப் பின்னணியில் கொண்டிருக்கிறது.

அதோடு தொடர்புடையதாக இன்னொரு ஓவியம் இதே கால கட்டத்தில் மக்களின் மத நம்பிக்கையைப் பிரதிபலிப்பதாக 'காவல் தெய்வம்' எனும் தலைப்பில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஓவியத்தில் பல தேசங்களிலிலிருந்தும் சேகரிக்கப்பட்ட தாவரத்தும்புகள் + மரத்துண்டுகள் + மண்சார் வர்ணத்தூள்கள் மேலும் பொருட்களின் ஒட்டு வடிவத்தைக் காணக்கூடியதாக இருக்கிறது.

இவருடைய சிற்பங்கள் எதைக் குறித்து நிற்கின்றன என்று பார்த்தால், இவை 'நெல்வயற் காவல் தெய்வங்களைக்' குறித்து நிற்கின்றன. இது குறித்த வாசுகனின் வாசிப்பும் : மனித நகர்வின் விவசாயம், இந்திய கண்டத்தில் சடங்குகளை முன்னிறுத்தி உருவாக்கப்படும் கலைவடிவங்கள் (உ+ம் கோலம்) போன்றவற்றைப் பிரதிபலிக்கின்றன.

பிரான்ஸில் சமகாலத்தில் பிரதான



உணவாகியுள்ள அன்னத்தின் எதிர்விளைவுகள், அவருடைய சிறுவயதில் பெரும் கமத்தொழில் புரிந்த அவர் தாத்தாவுடன் கிராமிய வாழ்வியலில் அவர் பெற்ற அனுபவம் போன்றவை இச்சிலை வடிப்பின் கருப்பொருளாய் அமைந்திருக்கின்றன. விவசாயம், முக்கியமாக நெல்வயல் சார்ந்த விடயங்களில் மக்களுக்கு இருந்த நம்பிக்கைகள், அவர்கள் வாழ்வியல் சார்ந்த விடயங்களில் பஞ்ச பூதங்களின் தாக்கங்கள் குறித்தே இவர் சிலைகள் முனைப்பாகப் பேசுகின்றன.



பிரான்ஸில் சமகாலத்தில் பிரதான உணவாகியுள்ள அன்னத்தின் எதிர்விளைவுகள், அவருடைய சிறுவயதில் பெரும் கமத்தொழில் புரிந்த அவர் தாத்தாவுடன் கிராமிய வாழ்வியலில் அவர் பெற்ற அனுபவம் போன்றவை இச்சிலை வடிப்பின் கருப்பொருளாய் அமைந்திருக்கின்றன. விவசாயம், முக்கியமாக நெல்வயல் சார்ந்த விடயங்களில் மக்களுக்கு இருந்த நம்பிக்கைகள், அவர்கள் வாழ்வியல் சார்ந்த விடயங்களில் பஞ்ச பூதங்களின் தாக்கங்கள் குறித்தே இவர் சிலைகள் முனைப்பாகப் பேசுகின்றன.









உதாரணமாக இலங்கை விவசாயத்தில், நெற்கள் துளிர் தந்து, தம்மை வளர்த்து அறுவடை செய்வதற்கு 120 நாட்கள் எடுப்பதை பிரதிபலிக்கும் முகமாக , வாசுகன் 120 சிலைகள் மூலம் அவற்றை அடையாளப்படுத்தியிருக்கிறார். இவை பஞ்ச பூதங்களை உள்நிறுத்தி வெண் களி மண்ணில், கரி (நெருப்பின் படிமமாக), முட்டைக் கோது, கடற்சிப்பி, சோகி, வைக்கல் போன்றவற்றைக் கலந்து பிசைந்து, உருட்டி, சுரண்டி, வரைந்து வடிவமைத்த சிறு சிற்பங்கள் அவை.

ஆங்கிலத்தில் இப்படி தானாகவே காயும் களி மண்ணை Air drying clay என்பார்கள். இங்குள்ள பாடசாலைகளில் கலைகளுக்காக, அதிகமாகப் பயன்படுத்தப்படும் களிமண் வகையைச் சார்ந்தவை. இப்படியாக வடிவமைக்கப்பட்ட 120 சிலைகளில் ஐந்து சிலைகளை மட்டும், கலைஞர்களின் விருப்பு வெறுப்பு எவ்வாறு அமைகின்றது என்பதை அறிவதற்காகவும் அவர்களின் கருத்துக்களை சேகரிப்பதற்காகவும் வாசுகன் இந்தக் கண்காட்சியில் காட்சிப்படுத்தி இருக்கிறார்.

வரும் காலத்தில் ‘நெல்வயற் காவல் தெய்வங்கள்’ என்ற தலைப்பில் பிரத்தியேகமாக ஓவிய காண்பியம் ஒன்றை ஒழுங்கு படுத்த உள்ளார்.

வாசுகன் யாழ்ப்பாணம் : அளவெட்டி கிராமத்தில் பிறந்து



மகாஜனக் கல்லூரியில் கல்வி பயின்று இந்திய இராணுவம் நம் தேசம் விட்டு வெளியேறிய தருணத்தில். மீண்டும் போர் ஆரம்பித்த போது, தொடர்ந்து தன் கல்வியை கொழும்பு இந்துக் கல்லூரியிலும், அதன் பின்னர் கிரேக்க நாடான சைப்ரஸில் கொடேல் முகாமைத்துவ உயர்கல்வியையும் முடித்துக் கொண்டார்.

அதன் தொடர்ச்சியாக வேல்ஸ் நாட்டைச் சேர்ந்த ஓவியர் கிளின் ஹுயூஸ் அவர்களின் ஊக்கத்தோடும், அவரின் வழிகாட்டலிலும், கைமாக்கிளி தனியார் ஓவிய பள்ளியில் ஓவியக்கல்வியையும் பயின்றார்.

அகதியாக 2001 பிரான்ஸில் தஞ்சம் கோரி தொடர் நிராகரிப்புக்கு அப்பால், 2009 வில்தனோஸ் பல்கலைக்கழகத்தில் ஓவிய பயிற்சி : ஆவணப்பட தயாரிப்பு பயிற்சியும், 2015 பாரிஸில் சுடுமண், பீங்கான் பட்டறையில் 2 வருட அனுபவத்தோடு நகர வாழ்வியலில் தேடல் பயிற்சி, தொடர் ஓவிய கண்காட்சிகளை பாரிஸ் உட்பட மேலும் சில நாடுகளிலும் நடத்திவருகிறார்.

இவரது படைப்புகளின் கருப்பொருளாக தேசம் கடந்த பண்பாடு, விழுமியங்கள், எம் வாழ்வியலின் அடையாளங்கள், தாவரம், விலங்குகள், விவசாயம், இயற்கை உணவு, தொல்லியல் என்பன விளங்குகின்றன.

## இணைப்புக்கள்


கட்டுரை எழுத்தாளர் கலா மோகன் https://www.vasuhan.com/article2019kalamogan

கட்டுரை கவிஞர் விஜயேந்திரன் : https://www/vasuhan/com/kalam2020

ஓவியர் கிளின் ஹுயூஸ் பற்றி : https://www.vasuhan.com/glyn-hughes

வாசுகன் : தமிழ் உயிரெழுத்துடன் முகம் வரைந்த நிகழ்த்துக் கலை காணொளி: https://www/youtube/com/watch?v=rIfJP44GgSQ

# திருகோணமலையும் எனதான கதை



சொந்த நாட்டை விட்டு மக்கள் புலம்பெயர்வதற்கு நிச்சயமாக முக்கிய காரணங்கள் இருக்கின்றன என்று நான் இன்னமும் நம்புகிறேன்.

நாங்கள் வசித்த கிராமம் இலங்கை இராணுவத்தால் சுற்றி வளைக்கப்பட்ட காலமது. மோட்டார் சைக்கிள்கள் பரபரப்பாக ஓடுகின்றன, சீனியப்பா விறகு வண்டிலுடன் வந்து கொண்டிருக்கிறார். அவர் அதிகாலையில் காட்டிற்குச் சென்றால் காலை ஒன்பது பத்து மணியளவில் வீடு வந்து சேர்வார். அவரது வண்டிலையும் முந்திக் கொண்டு தோழர்கள் இருவர் எங்கள் குச்சொழுங்கையைக் கடந்து வயல் வெளியை நோக்கிச் சைக்கிளில் செல்லும்போது ‘மாறுங்கோ’ என்று கத்தியபடி விரைகின்றனர். எதிர்பார்த்த ஒன்றுதான். ஆனால், பகல் பத்து மணிக்கு சுற்றிவளைப்பார்கள் என்பது எதிர்பார்க்காதது. நான் வீட்டில் இருந்தவர்களையும் பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு பின்வளவால் ஓட ஆயத்தம் செய்கிறேன்.

தங்கம்

என்னுடைய அம்மா எல்லா விடயங்களிலும் மிகவும் தைரியசாலி ஆனால், அவருக்கு இலங்கை இராணுவம் என்றால் புளுத்த பயம். இராணுவம் வருகிறது என்றால் அவர் செய்யும் ஒரேயொரு வேலை தனது அடையாள அட்டையையும் தனது ஆவணங்கள் அடங்கிய பையையும் எடுத்துக் கொண்டுவந்து நடுமுற்றத்தில் நிற்பார். இராணுவம் வந்து சோதனை நடத்தி, அவர்களது வாகனங்கள் எங்கள் ஒழுங்கையை விட்டு நகரும் வரை அவர் அந்த இடத்தை விட்டு அசையவே மாட்டார். இந்த ‘தியானநிலையை’ அவர் அடைந்து விட்டார் என்றால் அதிலிருந்து விடுபட சில மணிநேரங்கள் எடுக்கும், அம்மாவை அப்படியே விட்டுவிட்டு நாங்கள் ஓட முடியாது.

நான் மாமிமார்கள் இருவரையும் அவர்களது கைக்குழந்தைகளுடன் தயாராக வைத்திருந்த சாப்பாட்டுக் கூடைகளுடன் பின்வளவு வேலிக்கம்பியை உயர்த்தி வெளியே செல்ல உதவுகிறேன்.

இரண்டோ, மூன்றோ வயதான மாமியின் மகளை கம்பியை உயர்த்தி வெளியே விட அக்குழந்தையோ ‘மாமி மாமி’ என்று அலறுகிறது. அவரது அலறைக் கேட்ட அம்மா கையிலிருந்த எல்லாவற்றையும் உதறிவிட்டு அவரை நோக்கி ஓடி வருகிறார். எல்லோரும் ஓடுகிறோம்.

அருவிவெட்டு முடிந்து பயிர்களின் அடிப்பகுதி காய்ந்து போயிருந்த வயல்வெளி, எங்களால் வேகமாக ஓட முடியவில்லை, ஆனால் ஹெலியோ எங்கள் தலைக்கு மேலால் பறக்கத் தொடங்கிவிட்டது. அருகில் இருக்கும் ஒரு எல்லைக் கிராமத்தை நோக்கியதாக எங்கள் ஓட்டம் இருக்கிறது.

அது இன்னொரு சிறுபான்மை சமூகத்திற்குரிய கிராமம், எங்களை ஒரு சிறிய ஆறு பிரித்திருந்தது. அங்கு இப்படியான கெடுபிடிகள் இல்லை, மாமியின் குழந்தை எனது கையில், ‘அக்கா இறுக்கிப் பிடிச்சுக் கொள்ளுங்கோ, ஆமிக்காரன் வாறன்’ என்று அவர் என் கழுத்தைக் கட்டிப்பிடித்தபடி அழுகிறார். (அந்தக் குழந்தை யாழ்ப்பாணத்தில் வளர்ந்து பொங்குதமிழுக்கு ஆஸ்தான பாடகியாகியது பெரும் துயரம்)

மாமி தனது கைக்குழந்தையுடன் ஆற்றைக் கடந்து சென்று விட்டார், அவரது பார்வை முழுவதும் என்னுடன் இருக்கும் தன் குழந்தையின் மேல் இருக்கிறது. அந்தப் பார்வை எனக்கு இன்னமும் நினைவில் இருக்கிறது. எனக்கு அருகே அம்மா ஓடி வருகிறார்,

'பிள்ளைய என்னட்ட தா' , என்று அலறுகிறார். நான் கவனம் தப்பி தூக்கி வந்து குழந்தையுடன் ஆற்றுக்கரையில் இருக்கும் சதுப்பு நிலத்தில் விழுந்து விடுகிறேன்,

'அங்கால தள்ளிப் போங்கோ' என்று அம்மாவை நோக்கி கத்துகிறேன். ஹெலி எங்களை விட்டு விலகிப் போய் விடுகிறது. குழந்தையைத் தூக்கிக்கொண்டு அம்மாவையும் இழுத்தபடி ஆற்றைக் கடந்து அக்கரைக்குச் செல்கிறோம். திறந்த வெளியில் எங்கள் வாழ்க்கை தொடர்கிறது. தொடர்ந்து அங்கிருப்பது பாதுகாப்பில்லை என்று நாங்கள் யாழ்ப்பாணத்தை நோக்கி பயணப்படுகிறோம்.

சட்டியிலிருந்து அடுப்புக்குள் விழுந்தால் இப்படித்தான் இருக்கும் போல, அங்கே விடுதலைப்புலிகள் சக இயக்கங்களை படுகொலை செய்து கொண்டிருக்கிறார்கள். என்னைச் சொந்தக்கார்கள் எவரும் தங்கள் வீடுகளில் சேர்க்க மறுத்து விடுகிறார்கள். இறுதியாக அம்மாவின் சொந்தமொன்று எனக்கு அடைக்கலம் தருகிறது. அதுவும் இருபாலையில், நாங்கள் இருந்த வீட்டிலிருந்து சற்று தொலைவில் கொலைகள் படுமோசமாக நடந்து கொண்டிருக்கின்றன.

காலை ஐந்து மணிக்கு முன் காலைக்கடன்கள் எல்லாவற்றையும் முடித்துவிட வேண்டும், கடும் இருட்டு வரும் வரை வெளியே வரக் கூடாது. அந்த வீட்டில் மொத்தமாக இரண்டு அறைகள், நான்கு ஆசிரியர்கள், கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் பயிற்சி பெறுபவர்கள், அவர்கள் யாருடனும் நான் அறிமுகமாகவில்லை, மாமியின் கட்டிலுக்கும் உடுப்பு பெட்டிகளுக்குமான இடைவெளியில் நான் பாயை விரித்துப் படுத்துக் கொள்வேன். இரவில் கூட யன்னல்கள் திறக்கப்படுவதில்லை. குசினிக்குள் செல்வதில்லை, ஏனென்றால் அங்கு யன்னல்கள் திறந்திருக்கும், தற்செயலாக யாராவது பார்த்து விட்டால் பிரச்சனை வரலாம்.

இவ்வாறான ஒரு காலத்தைக் கடந்து நான் புலம்பெயர்ந்திருந்தேன். வந்த நாட்டில் தமிழர்களுடன் அறிமுகமாகும் போது 'நீங்கள் ஊரில எவடம்?' என்ற கேள்விகளுக்கு நான் தாராளமாக திருகோணமலை என்று சொல்லி வைத்தேன்.

**காலையில் எழுந்து கடற்கரையை நோக்கி நடைபயில்வது எனக்கு மிகவும் பிடித்தமானது. இந்த நடைமுறை யாரோ வேலை வெட்டியில்லாத தமிழர்களுக்கு, அவர்களின் 'ஆராய்ச்சிக்கு' உதவியாக இருந்திருக்க வேண்டும், எனது பின்புலத்தை உறுதிப்படுத்திக் கொள்வதில் அவ்வளவு அக்கறை இருந்தது அவர்களுக்கு.**

இப்படித்தான் இரண்டு வருடங்கள் பாடசாலைக்குச் சென்ற நகரம் என்னுடையதாகியது. நான் திருகோணமலை என்று கூறியதும் இரண்டு கைகளையும் முன்னோக்கி வீசி சிரிப்பதற்கு பின்னால் ஒரு கருத்தமைவு இருக்கிறது என்பது பல ஆண்டுகளுக்கு பின்னர் எனது நண்பர்களால் எனக்கு அறிவூட்டப்பட்டது.

புலம்பெயர்ந்த பின்னர்தான் திருகோணமலையில் நாங்கள் வாடகைக்கு இருந்த இடம் குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களை பெரும்பான்மையாக கொண்ட இடம் என்பதையும் இரண்டாயிரம் ஆண்டிற்குப் பின்புதான் தெரிந்து கொண்டேன்.

போராட்டத்திற்கு போக வெளிக்கிட்டவைக்கு உதெல்லாம் தெரியாதோ என்று கேட்க கூடாது பாருங்கோ. என்னைப் போல பிறந்த ஊர், முன்னர் படித்த பாடசாலை, பின்னர் குப்பை கொட்டிய ரியூட்டரி, இன்ன பிறவற்றுடன் நெருக்கமாக பிணைக்கப்படாதவர்கள், உயிரைக் கொடுத்து ஊருக்காக வாதிடாதவர் எனப் பலர் இருப்பார்கள் என்றே நான் நினைக்கிறேன்.

நான் வசித்த கிராமங்களில் எனக்கு பெரியஅன்ரி, சின்ன அன்ரி, சித்தி, சித்தப்பா, மாமா, பெரியப்பா எல்லோருமே அந்த கிராமத்தில் வசித்தவர்கள்தான், அவர்கள் அம்மாவுக்கோ அப்பாவுக்கோ அண்ணாவோ தம்பியோ அல்ல.

நான் தற்போது வசிக்கும் நாட்டில் கோடைகாலம் ஆரம்பித்தால் எனக்கு குதூகலம் வந்துவிடும், காலையில் எழுந்து கடற்கரையை நோக்கி நடைபயில்வது எனக்கு மிகவும் பிடித்தமானது. இந்த நடைமுறை யாரோ வேலை வெட்டியில்லாத தமிழர்களுக்கு, அவர்களின் 'ஆராய்ச்சிக்கு' உதவியாக இருந்திருக்க வேண்டும், எனது பின்புலத்தை உறுதிப்படுத்திக் கொள்வதில் அவ்வளவு அக்கறை இருந்தது அவர்களுக்கு.

'என்ன அடிக்கடி கடற்கரை பக்கம் போறீயள், பழைய ஞாபகம் வந்திற்றோ?'

நான் சிரித்துக் கொண்டு வணக்கம் சொல்லி விட்டு நகர்கிறேன். வழக்கத்திற்கு மாறாக இன்று இரு விடயங்கள் நிகழ்ந்து விடுகின்றன. ஒன்று எப்போதும் காதுக்குள் இசைக்கும் இசை இண்டைக்கெண்டு இசைக்க மறுத்துவிட்டது, மற்றது அவர்கள் எனக்கு பின்னால் நடந்து கொண்டிருந்ததால் அவர்களின் உரையாடல் என் காதுகளில் வந்து மோதுவது தவிர்க்க இயலாமல் போகிறது.

'ஊரில, தாய், தேப்பன் கடற்தொழில் செய்திருப்பினம், தவனம் வந்திட்டுப் போல!'

'அப்படியே, அப்படியெண்டா உவ?'

'திருகோணமலையாக்கள்'.

'சீ, ஆ, நான் நினைச்சன், உந்த பிள்ள'

'நானும் முதல் அப்படித்தான் நினைச்சனான், ஏனெண்டால் கதைக்கிற தமிழ் மட்டக்களப்புத்தமிழ் இல்ல, சுத்த யாழ்ப்பாணத்து தமிழ் எல்லே பொடிச்சி கதைக்குது'

'சும்மா சொல்லக்கூடாது, அவங்களும் இப்ப நல்லா வந்திட்டாங்கள்'.

ஏன் எங்கட சனத்துக்கு மட்டும் பகுத்தறிவு இப்பிடி பின்பக்கத்தால பிச்சுக்கொண்டு போகுது? அ



# ‘கூலித்தமிழ்‘ என்ற அடையாளத்தை ‘மலையகத் தமிழ்‘ ஆக மாற்றிய மலையக இலக்கியச் செல்நெறி

‘இலங்கைத்தமிழ் வழக்கில் இன்று மலையகம் என்பது இலங்கையின் மலைப்பிரதேசங்களில் உள்ள பெருந் தோட்டங்களிலும் அவற்றைச் சார்ந்த நகரங்களிலும் வாழும் இந்திய வம்சாவளி தமிழரைக் குறிப்பதாகும். மலையகப் பகுதிகளைச் சாராத பகுதிகளிலுள்ள பெருந்தோட்டங்களில் அதாவது மேல், தென் மாகாணங்களைச் சார்ந்த றப்பர் பெருந்தொட்டங்களில் வாழ்பவர்களையும் மலைசார் பகுதிகளில் இருந்து சென்று வடகிழக்கு பகுதியின் விவசாய பிரதேசங்களிலும் (கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களில்) கொழும்பிலும் வாழ்பவர்களையும் கூட மலையகத்தமிழர் என்ற தொடர் கொண்டே சுட்டும் மரபு இன்று வழக்கில் உள்ளது’ என்கிறார் பேராசியரியர் கார்த்திகேசு சிவத்தம்பி. (இலங்கை மலையகத்தமிழரின் பண்பாடும் கருத்துநிலையும் : தொகுதி 1 (1993: உதயம் வெளியீடு) ஆய்வு முன்னுரை பக்.11:).

‘மலையகம் என்ற சொல் இன்று பரந்துபட்ட அர்த்தத்தில் வழக்கில் இருக்கிறது. இலங்கை வாழ் இந்திய வம்சாவளித் தமிழரை இலங்கையின் எந்தப் பகுதியில் வாழ்ந்து வந்தாலும் மலையகத் தமிழர் என்று குறிப்பிடும் வழக்கம் இன்று ஏற்பட்டுள்ளது. பூகோள எல்லைகளை மீறிய விதத்தில் உணர்வுபூர்வமாக ஒரு சமுதாய மக்களை இனம் காட்டும் முறையே இது’ (மலையகம் வளர்த்த தமிழ், துரைவி:1997) என பதிவு செய்கின்றார் மலையக ஆய்வு எழுத்தாளர் சாரல் நாடான்.

எனவே ‘மலையகம்‘ என்பது புவியியல் எல்லைகளைக் கடந்த ஓர் இனக்குழுமத்தின் ‘உணர்வு’ என்பதாக புரிந்து கொள்வதே அவசியமானதாகும்.

**மல்லியப்புசந்தி திலகர்**

இப்போது உச்சரிக்கப்படுகின்ற ‘மலையகம்‘ எனும் சொல்லாடல் இலகுவாக உருவான ஒன்று அல்ல. அதன் உருவாக்கத்தில் கலை, இலக்கிய, சமூக, பண்பாட்டு, அரசியல் இயக்கங்களின் வகிபாகம் கலந்துள்ளது. அதில் இலக்கியத்தின் வகிபாகம் எவ்வாறானதாக இருக்கிறது என்பதே இந்த உரையின் நோக்கமாகும்.

மலையகத்த்தில் ‘கூலித்தமிழ்‘ என்ற ஒன்று இருந்தது என்பதற்கான ஆதாரங்கள் ஆங்கில நூல் வடிவத்திலும் அதனை ஆய்வுக்குட்படுத்திய ஆய்வாளர் மு.நித்தியானந்தனின் நூலின் தலைப்பிலும் உறுதி செய்யப்பட்டுள்ளது. இன்று திறன் கைபேசிகளில் குறுஞ்செய்தி அனுப்புவதற்காக பயன்படுத்தப்படும் ‘தங்லிஷ்‘ முறையை முதலில் தமிழுக்குத் தந்தது மலையகத்தில் உருவான ‘கூலித்தமிழே‘ எனலாம். பின்னாளில் அதுவே பிளாண்டேசன் தமிழ் என்றும் நீட்சிபெற்றது.

ஆனாலும் அவற்றை எல்லாம் முறியடித்து 'மலையகத் தமிழ்' என்ற ஒன்றை வரையறைச் செய்தது மலையகத் தமிழ் இலக்கியமே ஆகும்.

இந்தியாவில் இருந்து வருகை தந்த மக்கள் தாம் தோளில் உழைப்பையும் மனதில் கலையையும் சுமந்து வந்ததற்கான ஆதாரமாக வாய்மொழிப் பாடல்களும், காதைகளும் மலையகத் தமிழ் இலக்கியத்துக்கு ஆதார சுருதியாக அமைவன.

அதனால்தான் கவிஞர் ரவீந்திரநாத் தாகூரைப் பின்பற்றி ஆங்கிலத்தில் எழுதிவந்த மக்கள் கவிமணி சி. வி.வேலுப்பிள்ளை, ஓவியரும் கவிஞருமான ஜோர்ஜ் கீற் றின் வழிகாட்டலில் தனது மக்களைப் பற்றிய இலக்கியத்தை எழுத ஆரம்பித்ததும் 'மலையக நாட்டார்' பாடல்களைத் தொகுக்கும் பணியைச் செய்தார். 'மாமன் மகளே' எனும் தலைப்பில் தான் சேகரித்த மக்கள் பாடல்களுக்கு 'மலைநாட்டு மக்கள் பாடல்கள்' என விளக்கமளிக்கலானார்.

1820 முதல் 1920 வரை முற்று முழுதாக நூறாண்டு காலம் அடிமை நிலையில் வைக்கப்பட்ட ஒரு மக்கள் கூட்டத்தை 'அமைப்பாக்கம்' செய்ய கோ. நடேசய்யர் தம்பதியர் கையில் எடுத்த ஆயுதமாகவும் கலை, இலக்கியமே அமைந்தது. சிறுகதை, நாவல், பத்திரிகை, பதிப்பு என நடேசய்யர் தனது எல்லைகளை விரிவாக்க திருமதி. மீனாட்சியம்மை தனது கவிதைகள் பாடல்கள் ஊடாக தனது பரப்புரை பணிகளை முன்னெடுத்துள்ளார்.

இந்த மக்கள்

சிந்தும் வேர்வை

ரெத்தக்காசு தானே அடா

இரவு பகல் உறக்கமின்றி

ஏய்த்துப் பறிக்கலாமா..?

என கேள்வி எழுப்பிய மீனாட்சியம்மை, அடுத்த வரிகளில்..

சிங்கள மந்திரிகள் செய்திடும் சூழ்ச்சி

சேதியில்லாமல் வேறில்லை காட்சி

என 1940 களிலேயே சிங்களப் பேரினவாதத்துக்கு எதிரான குரலாக முழங்கி இருப்பது தெளிவாகிறது. எழுத்தில் வெளியான தனது அச்சுப் பிரசுரங்களை தோட்ட முதலாளிகளான வெள்ளையர்கள் வாங்கி தீயில் எரித்து விடுவதை அறிந்த நடேசய்யர், அவ்வாறு அழிக்க முடியாத நாடகக் கலையை தெரிவு செய்து மக்கள் களத்தில் அரசியல் நாடகங்களை அரங்கேற்றி வந்த வரலாறும் பதிவாகிறது 'இலங்கைத் தேயிலைத் தோட்ட, இந்தியத் தொழிலாளர் அந்தரப்பிழைப்பு' நாடகநூல் அச்சிலும் வெளிவந்து இருப்பது பெரும் ஆதாரமாகும்.

இன்று மலையகம் 200 என பதாகை ஏந்தி விழா எடுப்பதைப் போல அல்லாமல் மலையகம்



100 காலப்பகுதியில் தமது களப்பணிகளால் மலையகத்தை உருவாக்கிய பெருமை நடேசய்யர் தம்பதிகளையே சாரும். 1923-1933 காலப்பகுதியில் அவர்கள் மலையகம் 100 இனை எவ்வாறெல்லாம் முன் நகர்த்தியுள்ளார்கள் என்பதை வரலாற்றை வாசிப்பதன் ஊடாக இன்றைய தலைமுறையினர் புரிந்து கொள்ள வேண்டும்.

அவர்களை அடுத்து சுதந்திர இலங்கையை ஊடறுத்து வந்த கே. கணேஷ், சி.வி. வேலுப்பிள்ளை ஆகிய இரண்டு ஆளுமைகளும் மலையகத்தில் நவீன இலக்கிய வடிவங்களை உருவாக்கியதில் முதன்மையானவர்கள். இருவரது கல்விப் புலமையும், ஆங்கிலமும் மலையக இலக்கியத்துக்கு இருவேறு வகையில் சிறப்புச் சேர்க்கின்றன.

கே. கணேஷ் ஆங்கில இலக்கியங்களை தமிழாக்கம் செய்வதன் ஊடாக மலையகத்துக்கும் இலங்கையின் முற்போக்கு இலக்கியத்துக்கும் பங்களிப்புச் செய்ய, சி.வி. வேலுப்பிள்ளை அவர்களோ மலையகத் தமிழர் வாழ்வியலை ஆங்கிலத்தில் எழுதி வெளி உலகுக்கு கொண்டு சென்ற பெருமைக்கு உரியவராகிறார்.


சி.வி யின் ‘இலங்கைத் தேயிலைத் தோட்டத்திலே‘ எனும் கவிதைக் காவியத்துக்கு நிகரான படைப்பு இன்னும் அங்கே எழவில்லை.

1948 ஆம் ஆண்டு இந்த மக்களின் குடியுரிமைப் பறிக்கப்பட்டதன் பின்னர் 1980 களில் அது மீளவும் கிடைக்கப் பெறும் வரை இலங்கையில் ‘நாட்டுரிமைக்கான‘ போராட்டத்தை நடாத்தியவர்கள் மலையகத் தமிழர்கள் என்கின்ற பதிவை மலையக இலக்கியம் முழுமையாகத் தருகிறது.

இந்த இடைக்காலத்தில் எழுதப்பட்ட கவிதைகள், கட்டுரைகள், நாவல்கள், சிறுகதைகள் என எல்லாவற்றிலும் இலங்கையே எமது நாடு, எம்மிடம் பறிக்கப்பட்ட பிரஜாவுரிமையை திரும்பக் கொடு எனும் கோஷங்களை முன்வைக்காத படைப்புகளே இல்லை எனலாம். தோட்டம் தோட்டமாகப் பாடித் திரிந்த முச்சந்தி பாடல்களில் எல்லாம் இவை எதிரொலிக்கின்ற. பத்திரிகையாளர் க.ப.சிவம் சேகரித்த பெ.முத்துலிங்கத்தின் தொகுப்பில் வெளியான ‘பரதேசம் போன தமிழர்களின் பரிதாபப் பாடல்கள்‘ இதற்கு பெரும் ஆதாரமாகும்.

சின்னச் சின்னச் சின்ன பாட்டுப் புத்தகங்களாக அச்சிட்டு வெளியிட அந்தப் பாவலர்களே எடுத்திருக்கும் முயற்சிகள் பெரும் பாராட்டுக்கு உரியன. இந்தக் காலத்தில் மலையகப் பண்பாட்டு உருவாக்கத்திற்கு பங்களிப்புச் செய்த ஏ.இளஞ்செழியன், இரா.சிவலிங்கம் , செந்தூரன், வி.டி.தர்மலிங்கம் போன்ற அமைப்பாக்கவாதிகளின பங்களிப்புகளும் இலக்கிய பதிவுகளாகியுள்ளன.

இடதுசாரி அரசியல் தொழிற்சங்க பங்களிப்புகளும் கூட எஸ். நடேசன்



1948 ஆம் ஆண்டு இந்த மக்களின் குடியுரிமைப் பறிக்கப்பட்டதன் பின்னர் 1980 களில் அது மீளவும் கிடைக்கப் பெறும் வரை இலங்கையில் ‘நாட்டுரிமைக்கான‘ போராட்டத்தை நடாத்தியவர்கள் மலையகத் தமிழர்கள் என்கின்ற பதிவை மலையக இலக்கியம் முழுமையாகத் தருகிறது.

எழுதிய ஆங்கில நூலில் பதிவு பெற்றுள்ளன. 1960 களில் வெளிவந்த 'குறிஞ்சிப்பூ' போன்ற கவிதைத் தொகுப்புகள் இலக்கியம் வழியாக மலையகம் உருப் பெற்றதற்கான சான்றுகளாகின்றன. 'நாமிருக்கும் நாடே', 'மலைகளின் மக்கள்' போன்ற சிறுகதை தலைப்புகள் மேலும் வலுசேர்ப்பன. காங்கிரஸ், மாவலி, ஜனநாயக தொழிலாளி, புதிய பாதை போன்ற தொழிற்சங்க பத்திரிகைகளும் கூட மலையக உருவாக்கத்தின் தொழிற்சங்க பங்களிப்புகளை பதிவு செய்யும் இலக்கிய முயற்சிகள் எனலாம்.

எண்பதுகளில் பி. ஏ. காதரின் 'இருபதாம் நூற்றாண்டின் நவீன அடிமைத்தனம்' அதுவரையான மலையக வரலாற்றை மீளாய்வு செய்வதாக அமைந்தது. தீர்த்தக்கரை, நந்தலாலா போன்றன உருவாக்கிய அரசியல், பண்பாட்டு திசைகள் இன்னுமொரு கட்டத்துக்கு நகர்ந்தன.

மலையக இலக்கியம் சமகால அரசியல் குரலாகவும் ஒலித்துவந்துள்ளமை இன்னுமொரு சிறப்பம்சமாகும். கோ. நடேசய்யர், சி.வி.வேலுப்பிள்ளை, வி.கே. வெள்ளையன், த.அய்யாத்துரை, மு. சிவலிங்கம், மல்லியப்புசந்தி திலகர் இந்த வரிசை இன்னும் பலரை உள்வாங்க வல்லது. இவர்கள் இலக்கியவாதிகளாகவும் மக்கள் பிரதிநிதிகளாக சபைகளிலும் அங்கம் வகித்த சிறப்பு பெறுகிறார்கள். வி.கே. வெள்ளையன், சி.வி.வேலுப்பிள்ளை ஆகியோர் தொடர்ச்சியாக மலையக மக்களின் பிரச்சினைகள் குறித்து எழுதிய ஆங்கில கட்டுரைகள் ஏற்படுத்திய தாக்கமே பத்திரிகையாளரான டொனவன் மொல்ரிச் Bitter Berry Bondage எனும் விஞ்ஞான பூர்வ ஆய்வு நூலை எழுதத் தூண்டியுள்ளது. அந்த நூல் மலையகத்தின் முதலாம் நூற்றாண்டின் பக்கத்தைப் பதிவு செய்கிறது.

ஆனாலும் 1990 களுக்குப் பின்னான மலையக இலக்கிய முனைப்புகள் பெரிதும் மலையக கருத்துருவாக்க முனைப்பைவிட அதன் அரசியலை விமர்சிப்பதையே அதிகம் எடுத்துக்கொண்டுள்ளது எனலாம். இது குறித்து மலையகம் 200 இல் அக்கறை காட்டும் இன்றைய தலைமுறையினர் சிந்தித்தல் அவசியமாகும்.

அன்று மலையகம் 100 இல் மலையகத் தமிழ்ச் சமூகம் 'அமைப்பாக்கம்' பெற்றிருக்காவிட்டால் இன்று மலையகம் 200 இருந்திருக்காது என்பதே உண்மையாகும். அந்த காலப்பகுதியில் முழு இலங்கை மக்களுக்குமாக வழங்கப்பட்ட சர்வஜன வாக்குரிமையில் மலையகத் தமிழ் மக்களையும் பங்கேற்க செய்த நடேசய்யர் தம்பதிகள் முன்னெடுத்த அமைப்பாக்கச் சிந்தனையே அடிப்படையானது. அன்று அவர்கள் மலையகம் 100 என விளம்பரப் பதாகை வைக்கவில்லை. ஆனால் அவர்களது பங்களிப்புகளில் எந்தக் குறைவும் இல்லை. அதே போல மலையகம் 200 இல் முன்வைக்கப்படும் எந்த முயற்சியும் மலையகம் 300 எவ்வாறு அமைய வேண்டும் என்ற இலக்கு நோக்கியதாக இருத்தல் வேண்டும்.

அரசியல் ரீதியாக 'மலையகம்' இன்னும் நிலைபடுத்தப்படவில்லை. 'இந்தியத் தமிழர்' என இலங்கைக்கு அந்நியமாகவே ஓர் அடையாளப்படுத்தல் அரசியலில் தொடர்கிறது. உருவாக்கப்பட்ட மலைநாட்டு புதிய கிராமங்கள் என்ற அமைச்சையும் கூட மீண்டும் தாரைவார்த்துவிட்டு 'தோட்டம்' என்ற நிலையிலேயே நிற்கிறது.


பண்பாட்டு அடிப்படையில் இன்னும் இந்தியத் தமிழரா? மலையகத் தமிழரா? என விவாதம் நடத்திக் கொண்டிருக்கிறது. இந்த மலையக அடையாளம் ஏன்? எதற்கு? யாருக்கு? எனும் புரிதல் இன்னும் பண்பாட்டு அடிப்படையில் உணரப்படவில்லை. மலையகத் தமிழர் என்பது அடையாளப் பிரச்சினையா? இறைமைப் பிரச்சினையா? என அரசியல் ஆய்வாளர் சி. அ. யோதிலிங்கம் ஒரு கேள்வியை முன்வைத்துள்ளார். மலையகம் தனது அடையாளத்தை இன்னும் சரியாக உறுதி செய்து கொள்ளாததால் அனுபவிக்கும் இறைமைப் பிரச்சினையே அங்கு உள்ளது. இலங்கை மீதான இறைமை இல்லாமையே மலையக அடையாளத்தை வேண்டி நிற்பதற்கான காரணமாகும்.

அத்தகைய ஒரு அடையாளத்தை இதுவரை முழுமையாகத் தந்து இருப்பது மலையக இலக்கியம் மாத்திரமே. ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் ஒரு பகுதியாக எங்கும் இந்தியத் தமிழர் இலக்கியமோ, இந்தியா வம்சவளி தமிழ் இலக்கியமோ, பெருந்தோட்ட தமிழ் இலக்கியமோ இல்லை. மாறாக மலையகத் தமிழ் இலக்கியமே உள்ளது. எனவே மலையக இலக்கியத்தில் தான் மலையக அடையாளம் நூறு சதவீதம் உறுதி செய்யப்படுவதாக உள்ளதை உறுதியாக கூற முடியும்.

நூறு ஆண்டுகளுக்கு முன் பிரித்தானிய ஆட்சியில் தோட்ட முதலாளிகள் தம்மை அடக்கி ஒடுக்க 'கூலித்தமிழ்' என்ற ஒன்றை உருவாக்கியதை முறியடித்து, தனது இரண்டாம் நூற்றாண்டில் 'மலையகத் தமிழ்' என அதனை மாற்றிக் கட்டமைத்த பெருமை மலையக இலக்கியத்துக்கே உரிய வகிபாகமாகும்.

மலையகக் கவிஞர் சு.முரளிதரன் குறிப்பிட்ட மலையக 'மௌனத்தின் வயது 160' என்பது மலையகம் 200 இல் இலேசாக கலைபடுவது போல தெரிகிறது. இன்று மலையகம் 200 இல் பேசப்படும். மலையகத்திற்கான அரசியல், சமூக, பொருளாதார, கலை, இலக்கிய முனைப்புகள் எவ்வாறு முன்னகர்த்தப்படுகிறது என்பதில்தான் மலையகம் 300 இன் வெற்றி தங்கி இருக்கிறது.

(மலையகம் 200 அடைவினை சிறப்பித்து கொழும்புத் தமிழ்ச்சங்கம் கடந்த வெள்ளிக் கிழமை மாலை 'இலக்கியக் களம்' நிகழ்ச்சியில் 'மலையக அடையாள உருவாக்கத்தில் மலையக இலக்கியத்தின் வகிபாகம் எனும் தலைப்பில் எழுத்தாளரும் பதிப்பாளருமான மல்லியப்புசந்தி திலகர் ஆற்றிய உரையின் கட்டுரை வடிவம்)




# மல்லாவி கடைவீதி

மாங்குளத்திலிருந்து மேற்குத் திசையாய் வெள்ளாங்குளம் மன்னார் செல்லும் பாதையில் ஏறத்தாள 10 மைல் தொலைவில் இருக்கிறது மல்லாவிக் கிராமம். குடியேற்றம் தொடங்கப்பட்ட காலத்தில் அதற்கான ஒரு போக்குவரத்துப் பாதை என்று ஒன்று இருக்கவில்லை. மரங்கள் மட்டும் வெட்டப்பட்ட தகரைப் பத்தைகள் அடங்கிய ஒரு அடர்ந்த காட்டுத் தெருவே ஆரம்பத்தில் இருந்ததாகப் பலர் சொல்வார்கள். அங்கே விவசாயத்திற்காகக் குடியேறியவர்களின் டிராக்ரர்கள் மற்றும் லொறிகளிலேயே அதிகமாக மக்கள் பயணம் செய்தார்கள். மற்றப்படி ஆரம்பகாலத்தில் மாங்குளத்திலிருந்து கால் நடையாகவே பலர் செல்ல வேண்டியிருந்தது.

பிற்காலத்தில் மெல்லமெல்ல பாதைகள் உருவாகி பயணத்திற்குரிய வாகனங்கள் ஓடி அந்தக் குடியேற்றக் கிராமம் சிலகாலத்தில் சிறு நகரமாகியது. அந்தச் சிறிய நகரத்தினை அடையாளம் காட்டி நின்றது மல்லாவிக் கடை வீதி.

அந்தக் கடை வீதியில் துணுக்காய் வரை ஆங்காங்கே சில வீதிக் கரைக் கடைகள் இருந்தாலும் அந்தக் காலத்தில் பர பரப்பான ஒரு சிறு நகரமாக மல்லாவிச் சந்தி இருந்தது. மல்லாவி துணுக்காய் முதன்மை வீதியின் இருமருங்கும் கடைகள் இருந்தன. பிரதான வீதியின் கிழக்குப் பாகத்திலேயே அதிகம் கடைகள் இருந்தன. மேற்குப் பாகத்தில் மருத்துவமனை, அரச விடுதிகளுடன் சிறு காட்டுப் பகுதியும் இருந்தது.

மல்லாவிச் சந்தியின் ஆரம்பம் வீதிக்குக் கிழக்காகச் சந்தைக் கட்டடம், மண்னெண்ணைச் செற், மில், பேக்கரி, சலூன், செக்கு, மற்றும் பல்வேறு பலசரக்குக் கடைகள் சாப்பாட்டுக் கடைகள் என ஒரு சிறிய நகரத்திற்குரிய அனைத்து வசதிகளுடனும் ஒரு காலத்தில் விளங்கியது மல்லாவி. இந்த மல்லாவிக் கடை வீதியை மேலும் அழகுபடுத்தி அங்கே வரும் போகும் மக்களுக்குரிய பெரும் தேவைகளைப் பூர்த்தி

**அ.விஜயன்**

செய்திருந்தவை என இரண்டு மரங்களைக் குறிப்பிடலாம். பெரும் விருட்சமாய் இருந்த இனிப்புப் புளிமரத்தையும் ஒரு குடையாய் நிழல் தரும் ஆத்தி மரத்தையும் மல்லாவியின் ஆரம்பகால மக்கள் மறக்க மாட்டார்கள். அவை மல்லாவி நகரத்தின் முக்கிய அங்கமாக இருந்தன. இந்த மரங்கள் கட்டடங்களை விட மிகவும் பெறுமதியானவையாகவும் இருந்தன. ஒரு சிறு மழைத்துளியில் கூட நனைந்த விடாதபடியும், மரத்தின் இலைகளைத் தாண்டிச் சூரிய ஒளி வந்து விளாதபடி அகல விரிந்து வளர்ந்த மரங்கள் அவை. லக்ஸபானா மின்சார விநியோகத்தின் போது அவை அடியோடு அழிக்கப்பட்டன. மக்கள் ஒன்றுகூடும் இடங்களாகவும் பஸ் தரிப்பு நிலையமாகவும் நிழற்குடையாகவும் பங்களிப்புச் செய்த இந்த மரங்கள் அழிக்கப்பட்டது மிக வேதனையான செயல்.

நான் மிக நீண்டகாலமாக மல்லாவிக் கடை வீதியில் புழங்கியவன் என்ற வகையில் பல்வேறுபட்ட சம்பவங்களைக் கண்டிருக்கிறேன். துக்கத்தையும் சந்தோசத்தையும்

அனுபவித்திருக்கிறேன்.

அந்தக் காலத்தில் பல்வேறு நோய்களுக்குக் கைமருந்து செய்வதிலேயே மக்கள் ஆர்வம் காட்டினார்கள். அதற்குத் தேவையான மருந்து வகைகளைத் 'தாடி மாஸ்ரர்' என அனைவரும் அழைக்கும் ஒருவரது கடையில் வாங்குவது வழக்கம். அவரது கடையில் சகலவிதமான மூலிகை மருந்துகளையும் கலப்படமின்றிப் பெற்றுக் கொள்ள முடியும். இதுபோல சாராயம் தொடக்கம் சகல பொருள்களையும் வாங்கும் வசதி மல்லாவிக் கடைகளில் இருந்தது. இந்த ஒவ்வொரு கடைகளுக்கும் ஒவ்வொரு விதமான தனித்துவமும் இருந்தது. தனிநபர்கள் பற்றியும் சம்பவங்கள் பற்றியும் இத்தொடரில் எழுதும்போது அவற்றை வாசகர்கள் தரிசிக்க முடியும்.

மல்லாவிச் சந்தியின் கொள்வனவு நகரமாக மாங்குளம் இருந்தது. நிர்வாக நகரமாக அல்லது அரசியல் நகரமாகக் கிளிநொச்சி

மல்லாவிக் கடைகள் சிலவற்றில் எரியும் பெட்ர மாக்ஸ்வெளிச்சத்தில் கடைக்கு வெளியில் ஆங்கில எழுத்தில் வி போல ஒளி கடையிலிருந்து வீதி வரை விரிந்து செல்வதை இருட்டில் நின்று பார்த்தால் அழகாக இருக்கும். அந்தக் காலம் மல்லாவி மக்கள் வெளிச்சத்துக்காக ஏங்கிய நாட்கள் என்றே கூறலாம்.

இருந்தது. 1978 செப்ரெம்பர் மாதத்திலேயே முல்லைத்தீவு மாவட்டம் உருவாக்கப்பட்டது. அதன் பின்னர் மல்லாவி முல்லைத்தீவு மாவட்டத்தின் கீழ் நிர்வகிக்கப்பட்டது.

ஒரு சிறு தொகைப் பணத்தைச் சேமிக்க விரும்பினால் தபாற்கந்தோர் சேமிப்புப் புத்தகத்தில் நாங்கள் கொடுக்கும் பணத்தொகைக்கான முத்திரையை ஒட்டித் தருவார்கள். அந்தப் பணத்தை மீளப்பெறும்போது அந்த முத்திரையில் சீல் குத்தி ரத்துச் செய்து தருவார்கள். இது பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்ட ஒரு சேமிப்புத் திட்டமாகும். அப்போது மல்லாவியில் வங்கிகள் இருக்கவில்லை. அப்போது அங்கு வாழ்ந்த அம்மாக்கள் இத்தகைய சேமிப்பு முறையில் தங்களால் இயன்ற அளவுக்குச் சேமிப்பை மேற்கொண்டார்கள் என்பதையும் பெருமையாகக் குறிப்பிடலாம்.




ஒரு ஏக்கர் திட்டத்தில் வாழ்ந்த மக்களுக்கான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஒரு ஏக்கர் திட்டம் முடியும் எல்லையில் நாலாம் யூனிற்றின் ஆரம்பத்தில் இருந்தது. அந்தச் சங்கக் கடை பற்றிய பல சுவாரசியமான செய்திகளை இனிவரும் நாள்களில் எழுதுவேன்.

தற்போதைய மல்லாவி முன்பு எத்தகைய சிறிய கடைத் தொகுதியில் இருந்து எழுச்சியடைந்தது என்பது பலருக்கும் தெரிந்திராத சங்கதி. மின்சாரமில்லாத அந்த நாள்களில் பெட்ரமாக்ஸ் வெளிச்சத்திலும் (பொதுவாகப் பெற்றோல் மார்க்ஸ் என்றே அழைப்பார்கள்) அரிக்கன் லாம்பு வெளிச்சத்திலும் இரவைக் கடந்த நாட்கள் அவை. இரவில் ஒரு ரோர்ச் லைற்றை வானத்தை நோக்கி அடித்தால் அந்த ஒளி செல்லும் வழியில் புகையாகத் தெரியும். காரணம் எல்லா வீடுகளிலும் விறகு அடுப்புகளில் சமைப்பதால் வளி மண்டலத்தில் புகை மண்டலம் எப்போதும் கலந்திருந்ததே. மின்சார வெளிச்சம் இல்லாத சூழலில் இரவு, இருட்டு என்பது கடும் இருட்டாகவே இருக்கும்.

மல்லாவிக் கடைகள் சிலவற்றில் எரியும் பெட்ர மாக்ஸ்வெளிச்சத்தில் கடைக்கு வெளியில் ஆங்கில எழுத்தில் வி போல ஒளி கடையிலிருந்து வீதி வரை விரிந்து செல்வதை இருட்டில் நின்று பார்த்தால் அழகாக இருக்கும். அந்தக் காலம் மல்லாவி மக்கள் வெளிச்சத்துக்காக ஏங்கிய நாட்கள் என்றே கூறலாம். அ




# நிஜங்களை எதிர்கொள்ளத் தூண்டும் நினைவு

எனக்கு விஜிதாவைத் தெரியும். பட்டுப்பாவாடையுடன், தோள்வரை அலையென நெளியும் கூந்தலுடன் சுறுசுறுவென ஓடித்திரியும் சிறுமி விஜித்தாவை கோவில் திருவிழாக் காலங்களில் கண்டிருக்கிறேன்..

மரணத்துக்கு மிக அருகே சென்று விட்டு வந்த ஒருவரின் நோய்க்கால அனுபவங்களின் பதிவான இந்த நூலைக் கையில் எடுத்ததும், தன் வாழ்தலுக்கான போராட்ட அனுபவத்தை எழுத்தாளர் திரு.. சஞ்சயனின் எழுத்தின் வழி வெளிக் கொண்டு வந்திருப்பவர் அதே விஜிதா தான் என ஊகித்த போது ‘அவருக்கா’ என மனம் துணுக்குற்றது.

என் மனக் கண்ணில் ஒரு கணம் அந்த துறுதுறு விஜி பட்டுப் பாவாடை சரசரக்க கோவில் வீதியில் ஓடினார் .

காலம் மிகச் சிறந்த பந்தயவாதி. அது, தான் விளையாடிப் பார்ப்பதற்காக தனக்கு ஈடுகொடுத்துப் போராடக் கூடிய ஓர்மங் கொண்ட, சுய தைரியம் மிக்க மனிதர்களையே அநேகமாகத் தேர்ந்தெடுக்கிறது, அப்போது தான் பந்தயம் சுவாரசியமாக அமையும் என அது கணித்து வைத்திருக்கிறது போலும் என பலவேளைகளில் நான் எண்ணுவதுண்டு.

அப்படித்தான் அது விஜிதாவையும் தேர்ந்தெடுத்திருக்கின்றது என்ற உணர்வை அவரது நோய்க்கால அனுபவங்களை வாசிக்கும் போது ஒவ்வொரு பகுதியிலும், நோய்க்கும் அவருக்குமான போராட்டங்கள் மூலம் உணர முடிந்தது..

காலத்துக்கு இன்னோர் சிறப்புப் பண்பும் உண்டு மிக நொய்மையான மனிதர்களுடன் மோதி அவர்களுக்குள் இருக்கும் மனத்திடத்தை அவர்களுக்கே அடையாளம் காட்டி, மிக உறுதியானவர்களாக மாற்றி மிகுதி வாழ்க்கைக்குத் தரும் என்பதையும் நாம் மறந்து விடலாகாது. .இங்கு காலம் என்பதால் கணிக்கப்படுவது நோய்களும், சம்பவங்களும் மனிதர்களும் என்று கூடக் கொள்ளலாம்.

**மாலினி**

வாழ்வில் ஏற்படும் கொடிய நோய்கள் போன்ற அவலங்களே கிடைத்த பிறவியின் அருமையை உணர்த்துகின்றன. வாழ்வதற்காகப் போராடவும், கிடைக்கும் ஒவ்வொரு மணித் துளிகளிலும் வாழ்ந்து விடவேண்டும் என்ற உந்தலையும் இவையே கொடுக்கின்றன.

விஜிதாவின் இந்த நோய்க்காலப் பயணத்திலும் அந்த உந்தல் மிகத் தீவிரமாக இருப்பதை உணரலாம். அந்தத் தீவிரமே, நோய்க்கும் அவருக்குமான பந்தயத்தில் அவரை வெற்றி பெற வைத்ததென்று தோன்றுகிறது.

இனி.......

‘தினம் ஒவ்வொன்றும் பெரும் கனவு’ பற்றி நான் ஏன் பிரத்தியேகமாகப் பேச விரும்புகிறேன் என்றால், அது ஒரு பாடம்.

என்ன தான் இல்லையில்லையென மேம்போக்கு வீம்புக்குப் பேசினாலும் அடிப்படையில் வெளிப்படையற்ற அமசடக்கமான சமூகத்தைச் சேர்ந்தவர்கள் தான் நாம். நோய்கள் பற்றிக் கூட பொதுவெளியில் வெளிப்படையாகப் பேசுவதில்லை.

**தனிப்பட்ட அவலத்துக்கு ஆளாகும் காலப்பகுதியே மனித வாழ்வின் முக்கிய காலப்பகுதி என்பேன். அது நோயாகவும் வேறு எதுவாகவும் இருக்கலாம். ஆனால், அந்த அவலத்துக்கு நாம் எப்படி முகம் கொடுக்கிறோம். அக்காலத்தில் சுற்றமும் சூழலும் நம் நிலையை எவ்விதம் புரிந்து கொள்கின்றன,. நம்மை தமக்குள் உள்வாங்குகின்றன அல்லது வெளித்தள்ளுகின்றன என்பதைப் பொறுத்தே அவலகாலத்தில் இருந்து மீண்ட மனிதர்களின் எஞ்சியுள்ள வாழ்வின் சுற்றத்துக்கும் சூழலுக்கும் முகங்கொடுக்கும் மனநிலை அமைகிறது.**

எம்மைப் பொறுத்தவரை அது ஒரு குற்றம், அது ஒரு கூச்சம். அது ஒரு இரகசியம்.

அதிலும் பெண்ணுடல் பற்றி, பெண்ணுக்கே உரியதான பிரத்தியேக உடலுறுப்புகள் பற்றிப் பொதுவெளியில் பேசுவதே பெரும் பாவம், ஒழுக்கக்கேடு என்ற மனோநிலையில் இருந்து நாம் இன்னும் முற்றாக வெளிவராத நிலையில், தன் நோய் பற்றி, மார்பகம், கருப்பை உட்பட அது பாதித்த உறுப்புகள் பற்றி அதன் சிகிச்சைகள் பற்றி, வாழ்வா சாவா என்ற போராட்டத்தில் தான் வாழ்க்கைக்கு மீண்டது பற்றி வெளிப்படையாகப் பொதுவெளியில், சஞ்சயனின் எழுத்து மூலம் விஜிதா பேசியிருப்பது ஒருவிதமான கட்டுடைப்பும் வரவேற்புக்குமுரியது.

முன்னுரையில்,

'வாழ்வின் சுவாரசியமே மறுகணத்தில் பரிசளிப்பதற்கு அது எதை வைத்திருக்கின்றது என்பதை எவராலும் கணிக்க முடியமலிருப்பதே ' என்ற யதார்த்தமான முதல் வாக்கியத்திதிலேயே அது எம்மை இலகுவாக தன்னை நோக்கி இழுத்துக் கொள்கிறது.

பின், நோய் தன் வருகையை அறிகுறிகள் மூலம் அறிவித்த விதம், எம்மில் பலரைப் போலும் அவரும் அதை சாதாரண தலைவலி தான் என இலகுவாக எடுத்துக் கொண்டமை, பின் அதன் தீவிரத் தன்மையும் வேறு சில அறிகுறிகளும் சேர்த்து கொண்டு, அவருக்கு வைத்தியர் மூலம் நோய், அவருடலில் தன் தீவிர இருப்பை உணர்த்திய போதான அதிர்வு, அவரது வாழ்வின் இயல்பு நிலை சட்டெனத் தடுமாறி அவரது திட்டமிடல்கள் அனைத்தும் ஸ்தம்பித்துப் போன நிலையில், நோயோடு போராடிய, காலப்பகுதியை, அதிலிருந்து மீண்ட மனஉணர்வுகளையும், உடல் அதிர்வுகளையும் உரைத்து நிற்கிறது இந்நூல்.

தனிப்பட்ட அவலத்துக்கு ஆளாகும் காலப்பகுதியே மனித வாழ்வின் முக்கிய காலப்பகுதி என்பேன். அது நோயாகவும் வேறு எதுவாகவும் இருக்கலாம். ஆனால், அந்த அவலத்துக்கு நாம் எப்படி முகம் கொடுக்கிறோம். அக்காலத்தில் சுற்றமும் சூழலும் நம் நிலையை எவ்விதம் புரிந்து கொள்கின்றன,. நம்மை தமக்குள் உள்வாங்குகின்றன அல்லது வெளித்தள்ளுகின்றன என்பதைப் பொறுத்தே அவலகாலத்தில் இருந்து மீண்ட மனிதர்களின் எஞ்சியுள்ள வாழ்வின் சுற்றத்துக்கும் சூழலுக்கும் முகங்கொடுக்கும் மனநிலை அமைகிறது.

நோய் மூர்க்கத்தோடு அவரைத் தாக்கிய போதும், பரிசோதனைகள் அறுவைச் சிகிச்சைகள் கீமோ சிகிச்சைகள் என அவரது உடலைத் துவட்டிப் போட்ட போதும், அதிர்ஷ்டவசமாக, விஜிதா தன்னைச் சூழ நல்லுறவுகளையும், தன்னைத் தாங்கிப் பிடிக்கும், நம்பிக்கை கொடுக்கும் ஆதரவுள்ள மனிதர்களையும் கொண்டிருந்திருக்கிறார். ஒரு வகையில் பார்த்தால் சிகிச்சையில் வைத்தியர்கள் வகித்த அதே பங்கு அவரது மனம் நம்பிக்கையிழந்து விடாது தாங்கிப் பிடித்தவர்களுக்கும் உண்டு.

அனேகமாக, உடல்நோயிலிருந்து மீண்ட பின் மனஅழுத்தத்தில் விழுவோர் பலர்.. அக்காலத்தில் தான் நாம் மனிதர்களை அறியலாம். நம்பிய பலர் , அந்தரத்தில் விட்டுவிட்டு ஓடி ஒளியும் காலப்பகுதி அது..

அதுவுமே நோய் தாக்கியவருக்கு அதிக நீண்ட கால மன உடைவைக் கொடுக்கும். இருப்பின் மீது வெறுப்பை ஏற்படுத்தும். ஆனால் அப்படியோர் அவலம் நேராமல் தங்களுடையவரை அப்படியே மீட்டெடுத்திருப்பதை வாசித்த இடத்தில் கண்கலங்குவதைக் கட்டுப்படுத்த முடியவில்லை. மனிதம் பற்றிப் பலரும் கற்றுக் கொள்ள வேண்டிய வாழ்வின் பாடம் அது. .

இருப்புக்கும், இல்லாதிருப்புக்கும்

எந்நேரத்திலும் எதிர்வு கூறக் கூடிய நோய் பற்றிய பயம். என்னவர்களை, முக்கியமாகப் பிள்ளைகளை அப்படியே போட்டு விட்டுப் போய்விடப் போகிறேன், எனக்குப் பின் என்னைப் போல அவர்கள் தேவைகளைக் கவனிக்க யாரிருக்கக் கூடும் என்ற பல பெற்றோர்களுக்கும் உள்ளதான ஆற்றாமை, இவ்வளவு குறுகியதா என்வாழ்வு என்பதான ஏக்கம், எதிர்காலம் பற்றித் திட்டமிட்டிருந்தவை கண்முன்னே சரியும் போதும் ஏதும் செய்ய முடியாமல் பார்த்திருக்கும் இயலாமை இப்படி எண்ணற்ற உணர்வுகள் நோயை விட அதிகமாக நோய்க்காலத்தில் மனதைப் பாதிக்கக் கூடியவை.

அதுவரை கேட்டறியாத புதிய வகைப் பரிசோதனைகளுக்கும், சிகிச்சைகளுக்கும் உடலைக் கொடுத்து விட்டு, நாளாந்தம் மரணத்தோடு கண்விழிப்பதும், ஒரு நாள் வாழக் கிடைப்பதும், ஒரு நாளைக் கடப்பதும், உடல் நிலையில் துளி முன்னேற்றத்தை வைத்தியர் அறிவிக்கும் போதும் பெருகும் உணர்ச்சிகளும் நூலில் உயிரோடு பதிவிடப் பட்டிருக்கின்றன. அந்த இடத்தில் நாமிருந்தால்..... என்ற பதட்டம் வருகிறது.

இந்தப் பதட்டம், பயத்திலிருந்து முடிந்தவரை நம்மைப் பாதுகாத்துக் கொள்ள இவை பற்றிய குறைந்தளவான அறிவாவது இருக்கவேண்டும். ஆனால் நோய்கள் பற்றி அறியும் எமக்கு அது அனுபவத்தில் எப்படியிருக்கும் என்பது தெரியாது. தெரிந்தால் இன்னும் அதிக பாதுகாப்புணர்வு ஏற்படலாம்.

நோய்க்கால அனுபவம் பற்றிய நேரடி வாக்குமூலங்களைக் கொண்ட நூல்கள் வேற்றுமொழிகளில் நிறையவே வந்திருக்கக் காணுகிறேன் எனினும் மனதைத் திறந்து பேசிவிடாத பண்பாட்டுச் சூழலைக் கொண்ட எமக்குள்ளிருந்து புற்றுநோய்க்கான சுயவாக்குமூலம் எதுவும் இதுவரை நூலாக என் கண்ணில் பட்டதில்லை.

இந்த நூலை நமக்கு முக்கியமான ஒன்றாக நான் ஏன் கருதுகிறேன் என்பதைச் சொல்வதற்கு இந்த நூலுக்கு வெளியே என் அனுபவம் ஒன்றைச் சொல்லல் பொருத்தமாக இருக்கும் என நம்புகிறேன்.

நான் வெளிநாட்டுக்கு வந்த ஆரம்ப காலத்தில் ஊரையும் உறவுகளையும் பிரிந்து பேதலித்து நின்ற வெறுமையைத் தீர்த்தவர் அந்தப் பெண். ஐம்பதுகளின் ஆரம்ப வயதிலிருந்தார் . எந்தவொரு விடயத்தையும் வெளிப்படையாக என்னிடம் பேசி விடக் கூடியவர். ஒருநாள்

'நான் பிள்ளை இப்ப தொடரா pad பாவிக்கிறேன் 'என்றார்.

'ஏனன்றி டாக்ரரிடம் போய்க் காட்டி என்னவென்று கேளுங்கோ' என்றேன்.

'இல்லைப் பிள்ளை இந்த வயதில் இதெல்லாம் சாதாரணம் தான் எனக்கு மாத ஒழுக்கு நிற்கப் போகுது போல'! என்றார்.

'எதற்கும் போய் ஒரு முறை விசாரியுங்கோ ஒன்றுமில்லை என்றால், அயன் டேப்லட் என்றாலும் எழுதித் தருவார். இப்படித் தொடராகப் போனால் ரத்தச் சோகை வந்திடும் ' என்றேன்.

'எனக்கு பெண்ணுடலுக்குரிய வைத்தியரிடம் போக ஒரு மாதிரி சங்கோஜமாக இருக்கும் பிள்ளை. பிள்ளைப் பேறு என்றால் வேறு வழியில்லை என்று போகலாம். இது அப்பிடி ஒன்றுமில்லைத் தானே. ஊரிலை எல்லாம் இப்படிப் போய் காட்டிக் கொண்டோ இருக்கிறோம்' என்றார்.

அவரை அதிகம் வற்புறுத்தும் திடமான மனநிலையில் அப்போது நானும் இருக்கவில்லை. கூடவே புற்றுநோய் பற்றிய தெளிந்த அறிவும் நான் கொண்டிருக்கவில்லை.

சாதாரணமாக ஆரம்பித்த இரத்தப் போக்கு காலப் போக்கில் கட்டுக்கடங்காமல் போகத்தொடங்கிய போது வைத்தியரிடம் செல்லும்நிலைவந்தது கர்ப்பப்பையில் புற்று என்றார்கள்.. நாலாவது ஸ்டேஜ் என்றார்கள். அவசரமாக கர்ப்பப்பையை வெட்டி அகற்றினார்கள். நீண்ட சிகிச்சைக் காலத்துக்குப் பின் அவர் சாதாரணமாக உலவத் தொடங்கினார்.

அதன் பின்னும் தொடராக தங்கள் கண்காணிப்பிலும் சிகிச்சையிலும் இருக்கவேண்டும் என்ற மருத்துவர்களின் எச்சரிக்கையை உதாசீனம் செய்தார்.

நோய் மாறி விட்டது என்ற நம்பிக்கையில் அவர் வைத்திய அறிவுரைகள் அனைத்தையும் மறந்தே போனார். புற்றுப் படர்ந்திருந்த கர்ப்பப்பையுடன் புற்று அனைத்தும் வெளியேற்றப் பட்டு விட்டது என்று தீவிரமாக நம்பினார்.

ஆறுமாதங்கள் கழித்து தோள்மூட்டில் வலி ஆரம்பித்தது. அதற்கும் அவரிடம் காரணமிருந்தது. படுக்கும்

**இருப்புக்கும், இல்லாதிருப்புக்கும் எந்நேரத்திலும் எதிர்வு கூறக் கூடிய நோய் பற்றிய பயம். என்னவர்களை, முக்கியமாகப் பிள்ளைகளை அப்படியே போட்டு விட்டுப் போய்விடப் போகிறேன், எனக்குப் பின் என்னைப் போல அவர்கள் தேவைகளைக் கவனிக்க யாரிருக்கக் கூடும் என்ற பல பெற்றோர்களுக்கும் உள்ளதான ஆற்றாமை, இவ்வளவு குறுகியதா என்வாழ்வு என்பதான ஏக்கம், எதிர்காலம் பற்றித் திட்டமிட்டிருந்தவை கண்முன்னே சரியும் போதும் ஏதும் செய்ய முடியாமல் பார்த்திருக்கும் இயலாமை இப்படி எண்ணற்ற உணர்வுகள் நோயை விட அதிகமாக நோய்க்காலத்தில் மனதைப் பாதிக்கக் கூடியவை.**

போது கையை மடித்துத் தலைக்கு வைத்துப் படுப்பதே வழக்கம் என்றார்.. சாதாரண பெய்ன் கில்லர் மாத்திரைகளும் நோவுக்கான களிம்புகளையும் பூசிக் கொண்டார்.. தேநீருக்கு சீனி போட்டுக் கரண்டியால் துளாவ முடியாத நிலையில் தோள்மூட்டு வலி அழுத்திய போது வைத்தியரிடம் போன போது, சிகிச்சைகள் மூலம் காப்பாற்றும் நிலையைக் கடந்து விட்டிருந்தார்.

கர்ப்பப்பையுடன் அகற்றப் பட்டு விட்டதாக அவர் நம்பிய புற்று மார்புக்கும் பரவி அதிலிருந்து உள்ளக அங்கங்கள் அனைத்துக்கும் பரவி விட்டிருந்தது. என அறிந்த நிலையில் தான் 'ஐயோ இப்படி ஆகும் என்றால் தொடராக நான் வைத்திய ஆலோசனையில் இருந்திருப்பேனே. இவங்கள் இப்படித்தான் காசு பிடுங்கவும் தாங்கள் படிக்கவும் எங்கள் உடலைப் பாவிப்பான்கள் என்று சனம் சொன்னதை நம்பினேனே' எனக் கதறினார். காலம் கடந்த கதறல்களைக் கடவுளாலும் நிறுத்த முடிவதில்லை என்பது தான் வாழ்க்கை உணர்த்தும் பாடம்.

இப்படியாக, அனுபவங்களே அடுத்தவர்களுக்குப் பாடமாகின்றன.

அவை நாம் எந்த இடங்களில் அசட்டையாக இருந்தோம், எதனால் ஆரம்பத்திலேயே கண்டறிய முடியாமல் போயிற்று. கண்டறிந்த பின் சிகிச்சையும், சிகிச்சைக்குப் பின்பான நோய் பற்றிய அவதானங்கள் மருத்துவ ஆலோசனைகள் எவ்வளவு முக்கியம் என்பதையும் வெளிப்படுத்தி நிற்கிறது இந்நூல் .

தற்காலத்தில் புற்றுநோய் என்பது ஆரம்பத்திலேயே கண்டறியப்பட்டால் சிகிச்சை மூலம் உயிரைக் காப்பாற்றி விடுவது இலகு என்ற நிலைக்கு பரிசோதனைகளும், சிகிச்சைகளும் அறிவுறுத்தல்களுமாக மருத்துவம் வளர்ந்து விட்ட போதிலும் நாம் எதனால் மூன்றாம் நான்காம் நிலையில் அதனைக் கண்டு கொண்டு வாழ்வா சாவா எனப் போராட நேர்கிறது.

எம்மவர் பலரிடம் இங்கு பரவலாக உள்ள இன்னோர் விடயம், மகப்பேற்றுக் காலத்தில் மட்டுமே நாம் பெண்ணுடல் தொடர்பான பிரத்தியேக மருத்துவரை அணுகுகின்றோம். பிள்ளை பெற்று முடிந்ததா அவர் அதன் பின் எமக்கு அன்னியமாகி விடுகிறார். வருடத்தில் ஒரு முறையாவது வைத்தியரிடம் முழுப் பரிசோதனை செய்து கொள்வது அவசியம் என்று எத்தனை அறிவுறுத்தல்கள் இருக்கும் போதும் நாம் அனேகமாக இவ்வகையான பரிசோதனைகளை சங்கோஜப்பட்டுத் தவிர்த்துக் கொள்கிறோம்.

எனக்கு வராது என்ற அசட்டையான நம்பிக்கைகளில் இருந்து நாம் ஏன் எம் சிந்தனையை மாற்றி நமக்கும் வரலாம் என்ற பாதுகாப்புணர்வுடன் அவதானமாக இருக்க வேண்டும் என்பது போன்ற எம் அடிப்படை நடைமுறைகளை விஜிதாவின் அனுபவம் தெளிவாக இங்கே எடுத்தியம்பியிருக்கிறது..

அடுத்து இன்னோர் முக்கிய விடயம் என்னவெனில், புற்றுநோயை முடிந்தவரை தடுத்து விடும் நோக்கில் இன்றைய காலப்பகுதியில் அதற்கான தடுப்பூசிகள் ஏற்றப்படுகின்றன. முக்கியமாக கருப்பைக்கழுத்துப் புற்று நோய்க்கெதிரான, தடுப்பூசிகளை பதின்நான்கு வயதிலிருந்து பிள்ளைகளுக்கு ஏற்றப் பரிந்துரை செய்யப் படுகிறது. ஐரோப்பிய நாடுகளில் போலியோ, மஞ்சட்காமாலை போன்றவற்றின் தடுப்பூசி போல அவை கட்டாயப்படுத்தப் பட்டனவாக இருக்கின்றன.

எனினும் எம்மவர்கள் பலர் அது பற்றித் தெளிவான தேடலைக் கொண்டிருக்க விரும்பாமல் எம் பிள்ளைகளுக்கு இவை தேவையில்லை. வெள்ளைக்காரப் பிள்ளைகளுக்கே அவசியமானது என்ற குறுகிய சிந்தனையோடும் ஆண்குழந்தைகளுக்கு இது அவசியமே அற்றது என்ற தீர்மானத்திலும் இருப்பதால் நாம் எம்மையறியாமல் எம் குழந்தைகளுக்குத் தீங்கிழைத்துக் கொண்டிருக்கிறோம்.

**அனுபவங்களே அடுத்தவர்களுக்குப் பாடமாகின்றன.**

**அவை நாம் எந்த இடங்களில் அசட்டையாக இருந்தோம், எதனால் ஆரம்பத்திலேயே கண்டறிய முடியாமல் போயிற்று. கண்டறிந்த பின் சிகிச்சையும், சிகிச்சைக்குப் பின்பான நோய் பற்றிய அவதானங்கள் மருத்துவ ஆலோசனைகள் எவ்வளவு முக்கியம் என்பதையும் வெளிப்படுத்தி நிற்கிறது**

**இந்நூல்.**

அதன் அவசியம் என்ன, எதிர்காலச் சமூகத்துக்கு ஏன் அது முக்கியமாகின்றது என்ற விபரங்களை வைத்தியரின் தரவாகத் தாங்கி நிற்கிறது இந்நூல். இதிலுள்ள வைத்தியத் தரவுகளின் அடிப்படையில் ஒரு வைத்தியரை அணுகி எம் சந்தேகங்களைத் தீர்க்கவும் வினையாற்றவும் ஏற்றதான தூண்டலை அதுபற்றிய விழிப்பு நிலையற்ற மயக்கத்தில் இருக்கும் பலருக்கும் இந்நூல் ஏற்படுத்தக் கூடும் என நம்புகின்றேன்..

அடுத்து, புனைவுகளின்றி வாழ்வை அதன் போக்கிலேயே, உணர்வுகள் பிசகாமல் எழுத்தில் வடிக்கக் கூடிய ஒருவரைத் தேர்ந்தெடுத்து தன் கதையை எழுதக் கொடுத்தமையால், கொடுநோய்க்கால வாழ்வின் இரத்தமும் சதையுமான உணர்வுக் கொந்தளிப்பை, அவலத்தைக் கண்களில் காண வழிசெய்திருக்கிறது. தினம் ஒவ்வொன்றும் பெருங்கனவு.

இறுதியாக,

இந்த அனுபவப் பகிர்வுக்கு உரியவர் இன்னும் நீண்ட ஆயுளையும் நிறைந்த வாழ்வையும் பெற வாழ்த்தும் அதே வேளை, நானா நீயா என்ற மோதல் கொண்ட இலக்கிய உலகில் தன்மொழி பேசும் மனிதர்க்கான ஒரு விழிப்புணர்வு இலக்கியத்தை எழுதிய திரு சஞ்சயன் அவர்களுக்கும் மனம் நிறைந்த வாழ்த்துகள். அ




# கவிதைக்குப் பொய் அழகு

## நன்றியுடனான மீள் பதிவிடலும் மீளவும் மீளவும் எழும் அதன் மீதான கேள்விகளும்!

### வ.ஐ.ச. ஜெயபாலன் அவர்களுடனான நேர்காணல் (1999)

*மானமும் அறிவும் மனிதர்க்கு அழகு என்ற தந்தை பெரியாரது சிறப்பு வாசகத்துடன் சுப. வீரபாண்டியன் அவர்களைச் சிறப்பாசிரியராகக் கொண்டு 1990களின் பிற்காலத்தில் தமிழகத்திலிருந்து வெளிவந்து கொண்டிருந்தது 'நந்தன்' என்ற ஒரு சிற்றிதழ். உலகத் தமிழர்களை ஒருங்கிணைக்கும் ஒரு ஏடு என்று அது தன்னைச் சொல்லிக் கொண்டது. இலங்கையின் யுத்தகாலத்தில் அதிலும் அதிகமாக புலிகளது கருத்தியலை உலகெங்கும் பரப்பும் நோக்கில் அதிகமான உள்ளடக்கம் இருந்ததால் அது உலகத் தமிழர்களை ஒருங்கிணைக்கும் ஏடு என அடையாளம் காட்டப்பட்டது. அதனை விடவும் புலிகளின் பணமே அந்த இதழின் வருகைக்கு முக்கிய பங்காற்றியது என்ற ஊகமும் எங்களிடம் அப்போது இருந்தது. (அதற்கான ஆதாரத்தைக் கொண்டு வா என்று கேட்கக் கூடாது. அதற்கு புலிகளின் உலக வியாபார மற்றும் ஊடகச் செயற்பாடுகளை நீங்கள் விலாவாரியாகப் பார்க்க வேண்டும். அப்பொழுதுதான் அதனை விளங்கிக் கொள்ள முடியும்.) அதனாலேயே அதிகமாக அந்த இதழ் விடுதலைப்புலிகளின் மீது அளவு கடந்த பேராசையுடன் செயற்பட்டது என்பதாக விளங்கிக் கொண்டோம்.*

*அவர்களுடைய அளவு கடந்த பேராசை என்பது பெரியாரின் இன்னொரு வடிவமாகப் பிரபாகரனைக் கொண்டு வந்து அடையாளம் காட்டும் மதிகெட்ட நிலைக்குத் தள்ளியது. இதனையெல்லாம் தன்சிறப்புப் பொறுப்பில் வெளிக்காட்டி நின்றவர் முழத்திற்கு முன்நூறு தடவை தனக்குப் பெரியாரே வழிகாட்டி என்று பேசிவரும் சுபவீரபாண்டியன் அவர்கள். இதனை அவரது அறியாமை என்றும் தீர விசாரியாமை என்றும் சொல்லி நாம் இலகுவாகக் கடந்து போய்விட முடியுமா? அப்படிக் கடந்து போனால் அது நியாயமாகுமா?*

*அந்த இதழின் 12வது பக்கத்தில் 'இராவணப் பெரியார் பிரபாகரன்' என்று கனடாவிலிருந்து ஆரேருழவர் என்ற புனைபெயரில் இங்கிருந்த புலிமுகவர் ஒருவர் ஒரு குறிப்பொன்றை எழுதியிருந்ததைப் பெருமையுடன் பிரசுரித்திருக்கிறார்கள் அவர்கள்.*

*தந்தை பெரியார் தமிழகத்தில் மூட்டிய நெருப்பை இன்று கனடா மேடைகளில் கொழுந்து விட்டு எரியச் செய்துள்ளனர் உலகத்தமிழர் இயக்கக் கலை பண்பாட்டுக்கழகத்தினர் என்று சொல்லி தாம் மேடையேற்றிய 'விழித்தெழுவோம்' என்ற நாடகம் குறித்துச் சொல்லுகின்றனர். விடுதலைப் புலிகள் தமிழீழ மண்ணை மீட்கப் போராடும் அதே வேளை தமிழினத்தில் தேங்கிக்*

**கற்சுறா**

கிடக்கும் மூடப் பழக்கங்கள் ஏற்றத் தாழ்வுகள். தமிழர் வரலாற்றில் ஆரியர் ஏற்படுத்திய கறை போன்றவற்றையெல்லாம் துடைத்தொழிக்கும் சமுதாயப் போராட்டத்தையும் முன்னெடுத்து வருகின்றனர்' எனச் சொல்லுகிறது அந்தக் கட்டுரை.

இந்தக் கட்டுரை ஈழத்துச் சூழலிற்கு முழுக்க முழுக்க அபத்தமான கட்டுரை. இதனை ஒரு முற்போக்கான சிந்தனை கொண்ட கட்டுரை என்பதாகப் பிரசுரித்த நந்தனது அரசியல் பற்றிச் சொல்வதற்காகவே இதனைத் தெரிவித்தேன். ஆனால் இந்தக் கட்டுரை பற்றி எழுதுவதல்ல எனது நோக்கம்.


இந்த இதழில் ஒரு முக்கியமான நேர்காணல் வெளிவந்திருந்தது.

அந்த நேர்காணல் நாமெல்லாம் 'ஈழத்துக் கவிஞர்' என்று பெருமை பேசும் வ.ஐ.ச. ஜெயபாலன் அவர்களுடனான நேர்காணல். இது குறித்து ஒரு சிறிய எதிர் வினையை இந்த நந்தன் இதழ் வெளிவந்த(1999) காலத்திலேயே 'எக்ஸில்' இதழில் எழுதியிருந்தேன். ஆனால் அந்த நேர்காணல் முழுவதுமாக எக்ஸிலில் அப்பொழுது பதிவு செய்யப்படவில்லை. இன்றைய காலத்தில் அதன் அவசியம் கருதி இங்கே முழுவதுமாகப் பிரசுரிக்கிறேன்.

ஏனெனில் தம்மைச் சமூகத்தின் மீதான கரிசனை கொண்டவர்கள் என்றும், எழுத்தாளர்கள் என்றும் கருத்தியலாளர்கள் என்றும் கவிஞர்கள் என்றும் அரங்க நிறுவனர்கள் என்றும் இன்னும் பல்வேறு பெயர்களில் நமது சூழலில் இயங்கிக் கொண்டிருக்கும் இவரைப் போன்ற, நம்மத்தியில் வாழ்ந்த பலவகைப்பட்ட கலைஞர்கள் எப்படியெல்லாம் நாக்கு உளறப் பேசுகிறார்கள் என்பதனைக் குறித்து எல்லோரும் அறிந்து கொள்ளவே இதனை முழுமையாகப் பதிவு செய்கிறேன்.

இனி வருங்காலங்களில் என்னிடமிருந்தும் இவை அழிந்து போகக் கூடும். உண்மையில் நமது இனத்தினை நமது சமூகத்தினை அதன் அறிவுப் புலத்தை எதிர்காலச் சந்ததியை அதன் சிந்தனையை : வளர்ச்சியை அரச இராணுவங்கள் கொண்டலைந்த ஆயுதங்களும் அதனை எதிர்த்து நின்ற ஆயுதங்களும் மட்டும் அழித்து விடவில்லை. நம்மிடம் சேர்ந்து வாழ்ந்த பல்வேறு பக்கத்தினர்களுக்கு அதன் பொறுப்பு உள்ளது. அதனைச் சுட்டிக்காட்டவே இந்தப் பதிவுகள். ஆயுதங்கள் நமது கவிஞர்களிடம் இருக்கவில்லை என்று மட்டும் நீங்கள் முடிவு செய்து விடாதீர்கள். அவர்களும் வைத்திருந்தார்கள். அவர்களிடமிருந்த ஆயுதங்கள் ஆயுததாரிகள் வைத்திருந்த ஆயுதங்களைவிடவும் அதிகொடிய நஞ்சுடனான ஆயுதங்களாக அவை இருந்தன. அது அறிவைக் கொலை செய்தது.

இனி அந்த நேர்காணலை வாசியுங்கள். தயவு செய்து வரிக்கு வரி இருக்கும் அபத்தக் கருத்துக்களைத் தனியே பிரித்தெடுத்து வாசியுங்கள். அதன் உள்ளார்ந்த அர்த்தங்கள் எவ்வளவு மோசமானவை எனத் தெரியவரும்.



கேள்வி: புலம்பெயர்ந்த தமிழர்களின் இலக்கிய வகை அறிமுகத்திற்குப் பிறகு ஈழத்து இலக்கியப் போக்கு எப்படி உள்ளது?

ஜெயபாலன்: இன்றைய தேசிய எழுச்சி தொடர்பாக பல்வேறு பார்வைகள் இலக்கியத்தில் தலை காட்டுகிறது. மற்றது நவீனத்துவத்தைக் கடந்து: இதை நான் பின்நவீனத்துவம் என்று குறிப்பிடவில்லை: நவீனத்துவம் ஏற்க மறுத்த எங்களின் வேர்களில் இருந்து மறுபடியும் வீரியத்தைப் பெறுகிற போக்கு வளர்ந்து வருகிறது. மலையக மக்களிடத்தும் நிறைய மாறுதல்கள் நடைபெற்று வருகிறது.

கடந்த ஐம்பது வருடத்தை எடுத்தோமெனில் ஈழத்து இலக்கியப் போக்கு என்பது யாழ்ப்பாணத்து வெள்ளாள ஆண் ஆதிக்க இலக்கியப் போக்காகவே இருந்திருக்கிறது. விமர்சனம் என்பது அது கைலாசபதியாக இருந்தாலென்ன சிவத்தம்பியாக இருந்தாலென்ன அது யாழ்ப்பாணத்து விமர்சனப் போக்காகத்தான் இருந்தது.

ஆனால் போராட்டங்களுக்குப் பிறகு இன்றைக்குத் தமிழ் பேசுகிற முஸ்லீம்களுக்கு மத்தியில் தேயிலைத் தோட்டத்தை மையமாகக் கொண்ட மலையகத் தமிழ் மக்கள் மத்தியில், யாழ்ப்பாணத்துக்கு வெளியில் உள்ள மட்டக்களப்பு, வன்னி, அம்பாறை போன்ற கிழக்கு மாகாணத் தமிழர் முஸ்லீம்கள் மத்தியில் ஆண் பெண்களிடத்து நிறைய விழிப்புணர்ச்சியும் கலாச்சார எழுச்சியையும் ஏற்படுத்தியிருக்கிறது. உண்மையான ஈழத்து இலக்கியம் இப்போதுதான் பரிணமிக்க ஆரம்பித்திருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

இதன் அன்னிய கலாச்சார புலம் சார்ந்த நீட்சியாகவும் புதிய வளர்ச்சியாகவுமே புலம்பெயர்ந்த தமிழர்களின் இலக்கிய வளர்ச்சியையும் நான் பார்க்கிறேன்.

கேள்வி: தமிழர்களுக்கும் முஸ்லீம்களுக்குமான ஒற்றுமை முயற்சிகள் எப்படி இருக்கிறது?

ஜெயபாலன்: இதில் முன்னணிப் பாத்திரம் வகிப்பது கலைஞர்கள்தான். நீண்ட பட்டியலாகக் கூடிய ஈழத்துத் தமிழ் முஸ்லீம் எழுத்தளர்களின் குரல்கள் தமிழர்களுக்கும் முஸ்லீம் களுக்குமிடையான ஐக்கியத்திற்கு ஆரம்பக் குரல்களாக ஒலித்தது. இன்றைக்கு அரசியல் தலைவர்களது குரல்களையும் நாங்கள் கேட்கிறோம்.

நதிகள் பள்ளங்களில் விழுகிறதுண்டு. ஆனால் நதிகள் பள்ளங்களுக்குள் மூடப்பட்டுப் போகிறதில்லை. எங்களுடைய வரலாற்று நதியும் தடைகளைத் தாண்டும். தமிழர்கள் முஸ்லீம்களுக்கிடையேயான உறவும் ஒரு ஆயிரம் வருடங்களாக இணைந்து ஓடிய பெரு நதி. ஆரோக்கியமான திசையை நோக்கி அது மீண்டும் நகரத் தொடங்கியிருக்கிறது. இதை எவ்வித சந்தேகமும் இல்லாமல் கூறமுடியும்.

ஈழம் தமிழர்களுடைய முஸ்லீம்களுடைய தாய்மண். ஈழத்துடைய வெற்றியும் வாழ்வும் வளமும் தமிழர்களுடைய முஸ்லீம்களுடைய வெற்றியாகவும் வாழ்வாகவும் வளமாகவும் என்றைக்கும் இருக்கும். இதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

கேள்வி: இங்கிருக்கின்ற இந்து அமைப்புக்கள் புலிகளை இந்துக்களாகவே பார்க்கிறார்கள். அதைப்பற்றி...

ஜெயபாலன்: விடுதலைப் புலிகளுக்கும் முஸ்லீம்களுக்கும் ஏற்பட்ட பிரச்சனையை முஸ்லீம்கள் கூடச் சமயப்பிரச்சனையாகப் பார்க்கவில்லை. இரு தமிழ் பேசுகிற இனங்களுக்கிடையேயான பிரச்சனையாகத்தான் அவர்களும் அதைப் பார்க்கிறார்கள். இந்திய அரசியலைப் பொறுத்தளவில் பாதிக்கப்பட்ட தமிழர்கள் பரந்துபட்ட ஆதரவைத் தேடுபவர்களாகத்தான் இருக்கிறோம்.

இலங்கை அரசின் இன ஒடுக்குதலில் ஒரு மதவாதத் தன்மை இருக்கிறது. இந்த ஒடுக்கு முறையில் சிங்கள பௌத்த பிக்குகள் முன்னணியில் இருக்கிறார்கள் என்று தெரியும். மூவாயிரம் நாலாயிரம் இந்துக் கோயில்கள் இடிக்கப்பட்டும் இராணுவ முகாம்களாக மாற்றப்பட்டும் இருப்பது உங்களுக்குத் தெரியும். இது தொடர்பாக இந்தியாவில் உள்ள இந்து அமைப்புக்கள் கோபப்பட்டால் அது நியாயம் இல்லை என்று கூறமாட்டேன்.

ஏனென்றால் இது தமிழர்களுக்கு எதிரான போராட்டமாக மட்டுமல்லாமல் தமிழர்களை இந்துக்களாகப் பார்த்துப் போராடுகிற ஒரு தன்மையும் இருப்பதை நான் நன்குணர்வேன்.

ஆனாலும் ஒரு காலத்திலும் தமிழர்கள் ஒரு மதவாதத்தின் அடிப்படையில் முடிவெடுக்கமாட்டார்கள் என்பதில் எனக்கு அசைக்கமுடியாத நம்பிக்கை இருக்கிறது.

இந்தியாவில் உள்ள மதப் போராட்டம் ஈழத்தமிழர்களிடத்தில் இல்லை. ஈழத்தில் பிராமணர்கள் கோயில் பூசாரிகள் மட்டுந்தான். பெரிய அரசியல் சக்தியாக எல்லாம் இல்லை. சாதாரணமாக ஈழப் போரட்ட அரசியலின் சகல பக்கங்களிலும் அவர்களும் பங்கு கொண்டிருக்கிறார்கள். இங்கேயுள்ள பிராமணர்களது பிற்போக்கு அணியும் திராவிட அணியும் இங்கே உள்ளது போல் ஈழத்திலும் நிலைமை இருப்பதாக நினைத்து சில தவறுகளைச் செய்கிறார்கள்.

இங்குள்ள சோ.ஞானக்கூத்தன் போன்றவர்கள் ஈழத்திலும் பிராமண எதிர்ப்பு இருப்பதாக நினைத்துக் கொண்டு எங்களுக்கு எதிரான நிலைப்பாடு எடுத்திருக்கிறார்கள்.

ஞானக்கூத்தன் தலித்துக்களைச் சேரி நாய்களாகவும் ஈழத்தவர்களைத் திருடர்களாகவும் ஒரு கவிதையில் காட்டுகிறார். தமிழ்நாட்டில் இருக்கிற பிராமண எதிர்ப்பு அரசியல் போக்கு எங்களிடத்திலும் இருப்பதாக அவர்கள் கருதுகின்றவை தவறான எண்ணத்திலிருந்து வந்ததுதான்.

இதேபோல சில தீவிர திராவிட அணியினரும் இங்கேயுள்ள அரசியலை எங்கள் மேல் ஏற்றிப் பார்க்கிறார்கள். இங்கேயுள்ள முற்போக்குக் கருத்துள்ள பிராமணர்கள் எங்களுக்கு ஆதரவாக எழுதுகிற போது அதை ஈழப் போராட்டத்திற்கு ஆதரவாகப் பயன்படுத்திக் கொள்ளும் நிலையில் ஈழத்தமிழர்கள் இருக்கிறார்கள். இதைத் தயவு செய்து எல்லா அணியினரும் புரிந்து கொள்வது மிக முக்கியம்.

இங்கேயுள்ள முஸ்லீம் போராட்டங்களோ அல்லது இங்குள்ள பல போராட்டங்களோ எங்கள் மத்தியில் இல்லை. இதைப் புரிந்து கொள்ள வேண்டும் என்று தாழ்மையாகக் கேட்டுக் கொள்கிறேன்.

கேள்வி: இந்து மகா சமுத்திரத்தில் சேது சமுத்திரத் திட்டம் வருவதால் நிகழும் மாற்றம் குறித்து உங்களின் கருத்து?

ஜெயபாலன்: இது வரலாற்றை மாற்றப் போகிற திட்டமாகும். நான் முக்கியமாகக் கருதுவது, இங்குள்ள தென்மாவட்டங்களில் இருக்கின்ற தலித்துக்கள் நிலத்திலிரந்து விடுபடாமல் இருப்பதற்கான காரணம், தமிழகத்தின் அபிவிருத்திகள் எந்த விதத்திலும் தென்மாவட்டத்தில் பரவவில்லை என்பதேயாகும். தலித்துக்கள் மனிதர்களாக மதிக்கப்படுகிற நிமிர்ந்திருக்கிற கிளர்ச்சிப் போக்குகள் அதிகமாக இருக்கிற கிராமங்களைப் பார்த்தோமென்றால் அங்குள்ள தலித்துக்கள் அன்னிய தேசத்தில் மற்றும் அயல் மாவட்டங்களில் பெற்ற வேலை வாய்ப்புக்கள் மூலம் நிலத்திலிருந்து

**விடுதலைப் புலிகளுக்கும் முஸ்லீம்களுக்கும் ஏற்பட்ட பிரச்சனையை முஸ்லீம்கள் கூடச் சமயப்பிரச்சனையாகப் பார்க்கவில்லை. இரு தமிழ் பேசுகிற இனங்களுக்கிடையேயான பிரச்சனையாகத்தான் அவர்களும் அதைப் பார்க்கிறார்கள். இந்திய அரசியலைப் பொறுத்தளவில் பாதிக்கப்பட்ட தமிழர்கள் பரந்து பட்ட ஆதரவைத் தேடுபவர்களாகத்தான் இருக்கிறோம்.**

**இலங்கை அரசின் இன ஒடுக்குதலில் ஒரு மதவாதத் தன்மை இருக்கிறது. இந்த ஒடுக்கு முறையில் சிங்கள பௌத்த பிக்குகள் முன்னணியில் இருக்கிறார்கள் என்று தெரியும். மூவாயிரம் நாலாயிரம் இந்துக் கோயில்கள் இடிக்கப்பட்டும் இராணுவ முகாம்களாக மாற்றப்பட்டும் இருப்பது உங்களுக்குத் தெரியும். இது தொடர்பாக இந்தியாவில் உள்ள இந்து அமைப்புக்கள் கோபப்பட்டால் அது நியாயம் இல்லை என்று கூறமாட்டேன்.**

விடுதலை பெற்றிருப்பது ஒரு காரணமாக இருப்பதை நாங்கள் பார்க்கலாம். கொடியன்குளம் இதற்கு நல்லுதாரணம்.

நான் கோட்பாட்டு ரீதியாக ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். நிலத்திலிருந்து விடுபட்டு தொழிலாளி வர்க்கமாக வாழக்கூடிய முன்னேறிய சாதிகள் மத்தியில் மட்டுந்தான் தங்களுடைய சாதிகளின் ஆதிக்கப் போக்குக்கு எதிரான ஒரு, அமைப்புரீதியான நிலைப்பாடு எடுக்கக் கூடிய போக்குகள் வளர்ந்திருப்பதாக நான் கருதுகிறேன்.

இந்த நிலையில் சேது சமுத்திரத் திட்டம் தலித்துக்களையும் முன்னேறிய சாதிகளைச் சேர்ந்த நிலமற்ற ஏழைகளையும் நிலத்திலிருந்து விடுவிப்பதில் ஒரு கணிசமான பங்கைச் செய்யும் இது தென்மாவட்டங்களை அசைக்கப் போகிறதென்பது உண்மை.

*கேள்வி: ஈழப் போராட்டத்தில் இது எந்த வகையில் தாக்கத்தை ஏற்படுத்தும்?*

இந்தியாவின் நலன்களை இந்திய எடுத்துக் கொள்ளும் போது, சிங்கள ஆதிக்க அரசு மேலதிகமான பொருளாதார பலத்தை இழக்கிற போது தமிழர்களுடனும் முஸ்லீம்களுடனும் மலையகத் தமிழர்களுடனும் இறங்கி வரவேண்டிய நிலை வரும் என்று நினைக்கிறேன்.

*கேள்வி: ஈழப் போராட்டத்தின் வளர்ச்சி எப்படியுள்ளது?*

ஜெயபாலன்: இலங்கை வரலாற்றில் சிங்கள அரசு சக்திகள், தமிழர்களின் அரசு சக்திகள், இந்திய அரசு (தமிழகம் உட்பட) சக்திகள் ஆகியவை தீர்மானிக்கின்ற சக்திகளாக இரண்டாயிரம் வருடங்களாக இருந்திருக்கிறது. எதிர்வரும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகும் இந்த நிலை பெரிதாக மாறப் போவதில்லை.

சிங்கள ஆட்சியாளர்களைப் பொறுத்தளவில் தமிழர்களுக்குத் தற்காலிகமாக இந்தியாவுடன் முரண்பாடுகள் இருந்தாலும் என்றைக்கும் இந்தியாவோடுதான் போவார்கள் என்ற கருத்தை வைத்திருக்கிறார்கள். அதனால் தான் சிங்கள ஆளும் வர்க்கத்தினர் சீனாவுடனும் பாகிஸ்தானுடனும் மிகவும் நேசமாக இருக்கிறார்கள். இந்தப் போராட்டத்தில் ஆரம்பத்திலிருந்தே பெரிய அளவில் சிங்கள அரசுக்கு ஆயுத உதவி செய்தது பாகிஸ்தானும் சீனாவும்தான்.

விடுதலைப் புலிகளுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான முரண்பாடுகளை சிங்கள அரசு தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறதே தவிர சிங்கள அரசு இந்தியாவை நண்பனாக ஒருபோதும் பார்க்கவில்லை. அப்படி இருந்திருந்தால் தமிழக மீனவர்களை சிங்கள அரசு ஒருபோதும் நாய்களைப் போல் சுட்டுத் தள்ளாது. தமிழக மீனவர்களை அச்சுறுத்தி எதிர்காலத்தில் அவர்களை தங்களது கையாட்களாக மாற்றுகிற நோக்கம் சிங்கள அரசுக்கு இருப்பதாக நம்மில் பலருக்குச் சந்தேகம் உள்ளது.

இன்னொரு பாரதூரமான விடயம் இராமேஸ்வரம் மீனவர்கள் இந்தியர்களா? அவர்கள் இந்தியர்களெனில் அவர்களைப் பாதுகாப்பதற்கு இந்தியப்படைகள் எங்கே? அவர்கள் இந்தியர்கள் இல்லை எனில் வேறெந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்று என்னைச் சந்தித்த சில ஈழத்து மீனவர்கள் கேட்டார்கள்.

இதற்கு இந்திய அரசு என்றைக்கு இருந்தாலும் பதில் கூறியே ஆக வேண்டும். இந்த விடயம் புறக்கணிக்கக் கூடிய விடயமல்ல. ஏனென்றால் கடல் சார்ந்துதான் இந்தியாவைச் சீர் குலைக்க முடியும் என்று எதிரிகள் கருதிக் கொண்டிருக்கும் வேளையில் கடல் சார்ந்நத மக்கள் பாதுகாப்புத் தொடர்பாக மிகவும் கேந்திர முக்கியமானவர்களாக ஆகிறார்கள்.

சிங்கள அரசு வல்வெட்டித் துறையில்மீனவர்களைத் தொடர்ந்து கொடுமைப்படுத்திய நிகழ்வு ஈழத்தமிழர்களது போராட்ட வரலாற்றில் முக்கியமான மாற்றத்தை ஏற்படுத்தியது. தமிழகத்தைச் சேர்ந்த பத்திரிகைகள் இராமேஸ்வரம் மீனவர்களைக் கொல்வதை இருட்டடிப்புச் செய்கின்றன என்று ஈழத்தில் கூறுகிறார்கள். இது ஏனென்று எங்களுக்கு விளங்கவில்லை.

*கேள்வி: இல்லையே பத்திரிகைகள் இச்செய்திகளைப் போடுகின்றனவே. அதோடு எதிர்க்கவும் செய்கின்றனவே. இந்திய அரசுதான் இதைக் கண்டு கொள்ளவில்லையே தவிர இதழ்கள் அப்படிச் செய்யவில்லையே?*

ஜெயபாலன்॰ இல்லை பெயர் சொல்ல விரும்பவில்லை. இரண்டு மூன்று பத்திரிகைகளைச் சேர்ந்தவர்கள் கொழும்பிற்கு வந்திருந்தபோது, மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதை நியாயப்படுத்திப் பேசினதாகச் சொன்னார்கள்.

கடல்சார்ந்நத இந்த மீனவ ஜாதியினர் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்தவர்கள். இவர்கள் பிற்காலத்தில் மிக முக்கியமான சக்திகளாக வரக்கூடும். இந்தியா இவர்களைக் காப்பாற்றத் தவறுமேயானால் இவர்கள் எதிரிகளின் கைகளில் சிக்கிக் கொள்வார்கள். இந்த விடயத்தை இந்திய அரசியல் மற்றும் சமூக விஞ்ஞானிகள் ஏன் கண்டு கொள்ளவில்லை என்று எனக்குப் புரியவில்லை.

உங்களின் பார்வையில் இங்குள்ள சாதிய மற்றும் பிற போராட்டங்கள் குறித்து கருத்து என்ன?

எனது 16 வயதில் யாழ்ப்பாணத்தை உலுக்கிய சாதியக் கொடுமைகளுக்கு எதிரான போராட்டங்களால் ஈர்க்கப்பட்டு எனது வெள்ளாள நிலவுடமை வீட்டிலிருந்து ஓடிப்போனவன்தான் நான். டானியல் அண்ணா, இக்பால், டொமினிக் ஜீவா, சண்முகதாசன் காத்திகேசு மாஸ்டர், எஸ்ரி.என் நாகரட்ணம், எம்சி. சுப்பிரமணியம் என்கிற சாதியப் போராட்டத்தின் பல்வேறு அணிகளைச் சேர்ந்த தோழர்களால் ஊட்டி வளர்க்கப்பட்டவன் நான். சாதிய ஒடுக்குதல்களுக்கு எதிரான போராட்டங்கள் காலத்தின் தேவை. ஒருவன் பள்ளனாகவோ தேவனாகவோ பறையனாகவோ வன்னியனாகவோ பிறந்தது அவனது தவறல்ல. அவன் மரபுசார்ந்நத சாதி ஆதிக்க மனோபாவத்தைநிராகரிக்க மறுத்தால் மட்டுமே, சாதி ஒடுக்குதலின் காலாகவும் கருவியாகவும் மாறினால் மட்டுமே தவறு செய்கிறான். எனவே இதைச் சாதிகளுக்கிடையிலான மோதலாக ஆக்குவது பாதகமானது. சாதி ஆதிக்க சக்திகளுக்கு எதிரான தலித்துக்களையும் ஆதிக்க சாதிகளைச் சேர்ந்த முற்போக்காளர்களையும் இணைக்கிற ஒரு போராட்டமாக இதனை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

பிராமணிய ஆதிக்கத்தக்கு எதிரான போராட்டம் இட ஒதுக்கீடு போன்ற கடந்த காலத்தின் பெரியார் சேனையின் போராட்டம் பிராமணர் அல்லாதார் மத்தியில் எழுச்சிக்கும் மேம்பாட்டுக்கும் வழிவகுத்துள்ளது. இதனால் பிராமணர் மத்தியிலுள்ள உள்வாரியான ஆதிக்கங்களுக்கு எதிராகவும் சாதகமாகவும் போர்க் கொடிகள் உயருகின்றன. இன்றைய நிலையில் பிராமணரல்லாத சகலரையும் முஸ்லீம்களையும் பிராமணர் அல்லாதார் மத்தியிலுள்ள ஆதிக் சமூக பொருளாதார கலாச்சார சக்திகளை தகர்க்கும் வகையில் அணிதிரட்டும் வரலாற்றுப் பணி முன்நிலைப்பட்டுள்ளது. இதற்குத் தக்கதாகப் பெரியரியத்தை வளர்த்தெடுத்து இயக்கப்படுத்தும் முயற்சி இன்னமும் வெற்றிபெறவில்லை. பலர் பிராமணர் அல்லாதவர்களின் மத்தியிலான சாதீய முரண்பாடுகளால் தமிழகம் எரிகிறபோது பழைய பிடில்களையே வாசித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்நிலைமையைப் பெரியாரிய வாதிகள் மாற்றிட வேண்டும்.

கேள்வி॰ இங்கு பகை முரண்களே தலைதூக்கி இருக்கின்றனவே?

ஜெயபாலன்॰ இது ஒரு புதிய வரலாற்றின் ஆரம்பம் மட்டுமே. ஒரு சுவாரஸ்யமான விடயம் மோதல்களின் மத்தியிலும் டாக்டர் கிருஸ்ணசாமி அவர்களாகட்டும் திரு. திருமாவளவன் அவர்கள் ஆகட்டும் டாகட்டர் ராமதாஸ் அவர்களாகட்டும். டாக்டர் சேதுராமன் என்பவர்களிடம் தங்கள் தங்கள் சாதிகளின் மத்தியிலுள்ள சமூக பொருளாதார கலா ஆதிக்கப் போக்குகளுக்கு எதிராகவும் போராடும்படி கோரிக்கை விட ஆசைப்படுகிறேன். டாக்டர் கிருஸ்ணசாமி அவர்களும் திரு. திருமாவளவன் அவர்களும் ஆதிக்க சாதிகளைச் சேர்ந்த முற்போக்கறிவையும் ஏழைகளையும் தங்களது போராட்டத்தில் இணைத்துக் கொள்வதன் மூலம் புதிய தமிழக வரலாற்றின் நாயகர்களாக மேம்படவேண்டும் என்க கோருகிறேன். இத்தகைய ஒரு புதிய திசைக்கு இவர்களை இட்டுவருகிற புது யுகத்தின் படையாக பெரியாரிஸ்டுகளும் மார்க்கஸியவாதிகளும் இணைந்து தங்களை மேம்படுத்திக் கொள்வார்கள் என்பது மட்டுமே புதிய நூற்றாண்டின் வாசலில் நிற்கிற தமிழகத்திற்கிருக்கிற ஒரே நம்பிக்கையாகும்

(சந்திப்பு யாழ். அ.பெரியார்)

அ

இந்த யாழ் அ.பெரியார் என்பவர் யார் என்பதனை எங்களுக்கு கவிஞர் ஜெயபாலன் அவர்கள்தான் இன்று அடையாளம் காட்ட வேண்டும்.

இந்த நேர்காணலில் கவிஞர் ஜெபாலன் அவர்களது சிந்தனையின் அரசியல், அவரது இலங்கை இந்தியக் கடல் மற்றும் மீனவர்கள் படுகொலை பற்றிய அறியாமை, அவரது உள்ளார்ந்த எண்ணப்பாடு, அவர் மூடி மறைக்க நினைக்கும் கதைகள், அதன் எதிர்த் தாக்கமாய் உருவாகிய சூழல், அவரது உணர்ச்சி வசப்பட்ட கதையாடல்கள் மற்றும் இந்த நேர்காணல் குறித்து நான் என்ன எக்ஸிலில் எழுதினேன் என்று அடுத்த இதழில் விபரமாக எழுதுகிறேன்.

ஆனால் இத்தனை நாட்கள் கழிந்த பின்னாலும் இந்த நேர்காணலை வாசிக்கும் நீங்கள் இதன் மீதான உங்கள் கருத்துக்களையும் பொது வெளியில் வெளிப்படையாகப் பகிரக் கேட்கிறேன். அது ஆதரவாக இருந்தாலும் எதிராக இருந்தாலும் எழுதுங்கள். அதுவே சிறப்பு. அடுத்த இதழில் சந்திப்போம்.

**கற்சுறா**



# ரணில் அடித்த ஆப்பில் ரணிலையே அமர வைப்பது எப்படி?

விசித்திரமான இலங்கை அரசியற் களத்தில் காலங்காலமாக பல வாக்குறுதிகள் அரசியல்வாதிகளால் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த வாக்குறுதிகள் எவ்வாறான சந்தர்ப்பங்களில் பெரும்பாலும் வழங்கப்படுகின்றன என்றுப் பார்த்தால் ஏதாவதொரு தேர்தல் பிரச்சார நேரத்திலோ அல்லது கட்சி சார்ந்த மாநாடு, சம்மேளனம் போன்ற நிகழ்ச்சித் திட்டத்திலோ அல்லது அரசியல்வாதியினதோ, கட்சியினதோ, ஆட்சியாளர் களினதோ இருப்பு கேள்விக்குறிக்கு உள்ளாகும் போதோ இவை அள்ளி வீசப்படுகின்றன. அந்தவகையில், தமிழ் மக்களுக்கும் இதுவரையில் ஏராளமான வாக்குறுதிகள் தமிழ் அரசியல்வாதிகளினாலும் ஆட்சி அமைப்பவர்களினாலும் வழங்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. இவை அம்மக்களின் வாக்குகளை வேட்டையாடுவதற்கும் சர்வதேசத்திற்கு கண்ணாமூச்சி ஆட்டத்தை காண்பிப்பதற்கும் போடும் வேடமாகவே இருந்துவருகிறது. ஆனால், இவ்வாறு வழங்கப்படுகின்ற வாக்குறுதிகளில் நிறைவேற்றப்பட்டுள்ளவையின் எண்ணிக்கை மிக சொற்பமாகவே இருக்கிறது. இவ்வாறிருக்க, இந்த அரசியல்வாதிகள் மீண்டும் மீண்டும் அரங்கேற்றும் ஏமாற்று நாடகங்களை தமிழ்ச் சனம் புரிந்து கொள்ளாதிருப்பதை என்னவென்று சொல்வது? எப்படியாவது நமது உரிமைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு விடாதா என்ற எதிர்பார்ப்பின் நிமித்தமாக அவர்கள் ஏமாறுகிறார்கள் என்று வைத்துக்கொள்ளலாமா? அதனால்த்தானோ என்னவோ சளிக்காமல் ஒரே வாக்குறுதிகள் கூட பல வருடங்களுக்கும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன. அவை பொதுவாக இளவம் காத்த கிளியின் கதைதான்.

இன்றைய அரசியற் களத்தைப் பொறுத்தவரையில் மூச்சுக்கு முன்னூறு தடவை வாக்குறுதி வழங்கும் ஒரு நபராக ரணில் விக்ரமசிங்க இருக்கிறார். நாட்டு மக்களுக்கு ஏகப்பட்ட வாக்குறுதிகளை அள்ளிவீசிவிட்டு தற்போது முட்படுக்கையில் படுத்திருக்கிறார். மகிந்த ராஜபக்ஸ கும்பலின் பாதுகாப்பு கவசமாக தொழிற்படுகின்ற ரணில் விக்ரமசிங்க நாட்டின் ஆட்சி முறையை மாற்றியமைக்க கொந்தளித்துக் கொண்டிருக்கும் மக்களை சாந்தப்படுத்துவதற்காகவே அண்மைக் காலங்களில் வாக்குறுதிகளை அள்ளி வீசியிருந்தார். இவை எதிர்கால ஜனாதிபதி தேர்தலை குறிவைத்ததாகவும் இருக்கிறது. அந்தவகையில், தமிழ் மக்களின் வாக்குகளுக்கும் அவர் குறிவைத்திருக்கிறார்.

**சதீஸ் செல்வராஜ்**

தற்போது அவர் 2048 இல் நாட்டை மீட்டெடுப்பதாக கூறியுள்ளார். அதுவும் IMF இன் நெறிப்படுத்தலின் கீழ்! உலக வரலாற்றிலேயே

**1981 யாழ். மாவட்டத் தேர்தலின் போது சிறில் மெத்திவ், காமினி திசாநாயக்க மற்றும் பெஸ்டஸ் பெரேரா ஆகியோருடன் அமைச்சர்களுடன் இளைஞர் விவகார மற்றும் தொழில் அமைச்சர் ரணில் விக்ரமசிங்கவும் யாழ்ப்பாணத்தில் இருந்தது உறுதியாகியிருக்கிறது. அவர்கள் யாழ்ப்பாணத்தில் கிங்ஸ் வாடிவீட்டில் தங்கியிருக்கிறார்கள். 1981 ஜூன் 10 ஆம் திகதி மாலை 3.00 ஒன்றுகூடிய பாராளுமன்றத்தின் ஹன்ஸாட் அறிக்கையில் இது பதிவாகியிருக்கிறது.**

IMF இன் நெறிப்படுத்தலின்கீழ் இதுவரையில் எந்தவொரு நாடும் முன்னேற்றம் அடையவில்லை என்பது வெள்ளிடை மலை.

சிலர் தாய்வானையும் தென்கொரியாவையும் அடையாளங் காட்ட ஓடோடி வரலாம். அந்த நாடுகளுக்கு அமெரிக்கா பணத்தினை அள்ளிக் கொட்டியதற்கு காரணம் அவ்விரு நாடுகளுக்கும் அண்மையில் அமெரிக்காவின் வர்க்க அரசியலுக்கு எதிரான அரசியல் போக்குடைய சீனாவும் வடகொரியாவும் அதிகாரத்தில் இருப்பதே காரணம் ஆகும். ஒருவேளை இந்தியா கம்யூனிச நாடாகினால் அமெரிக்காவின் தயவில் இலங்கை வளர்ச்சியடைந்து விடும். அதுவரையில் இலங்கைப் போன்ற நாடுகள் என்றுமே வளர்ச்சியடைந்து வரும் பட்டியலில்தான் இருக்கும். அதாவது, உற்பத்தி நாடுகளாகவல்லாது வெறும் சந்தைகளாக மட்டும். வளர்ச்சியடைந்து வரும் நாடுகள் என்பதே ஒரு மாயைதான்.

ஆக, IMF, உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் 2048 இல் இலங்கையை அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றப்போவதாக ரணில் வழங்கிய வாக்குறுதியை நாட்டு மக்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளப் போகிறார்களா? அல்லது அதைப்பற்றி சிந்திக்கப் போகிறார்களா? என்றுப் பார்த்தாலும் இன்றைய இலங்கையைப் பொருத்தவரையில் சிந்திக்கும் சமூகமே பெருபான்மை பெற்றிருக்கிறது.

IMF இடமிருந்து முதற்கட்ட கடனை ரணில் விக்ரமசிங்க பெற்றுக் கொண்டபோது சிங்கம் போல கர்ஜிக்க முயற்சி செய்தார். ஆனால், இறுதியில் மியாவ் என்ற ஒலியே எழுந்திருக்கிறது. தற்போது அவர் பெற்றக் கடனை திருப்பிச் செலுத்தும் காலத்தை நீடிப்பதற்கும், செலுத்தவேண்டிய தொகையை ஏதேனும் ஒருவகையில் குறைப்பதற்கும் பரிசீலித்து வருகிறார். ஏற்கெனவே, நாட்டில் கட்டம் கட்டமாக அதிகரித்து வந்த பொருளாதார நெருக்கடி ஒருகட்டத்தில் உப்பி வெடித்தது. தற்போது, இலங்கையின் பொருளாதாரம் சுருக்கப்பட்டுக் கொள்ளப்பட்டுவிட்டதாலும், பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்துள்ளதாலும், மக்களின் கைகளில் பணம் இல்லாத காரணத்தினாலும் கொடுக்கல் வாங்கல் குறைவடைந்திருக்கின்றன. முதலாவது காலாண்டில் நாட்டின் பொருளாதாரம் 11.8 சதவீதத்திற்கு சுருக்கப்பட்டது. டொலரின் பெறுமதி நிலையாக இல்லாது ஏறுவதும் இறங்குவதுமாக இருப்பதால் வர்த்தகர்கள் சந்தையின் மீதும் நம்பிக்கையை இழந்துள்ளனர். ஆனால், உற்பத்தி பொருளாதாரம் தொடர்பில் அக்கறை காட்டாது கடன்வாங்குவதில் மாத்திரம் ரணில் விக்ரமசிங்க முனைப்பு காட்டுவதால் மீண்டுமொரு பெரும் பொருளாதார நெருக்கடி வெடிக்க வாய்ப்புகள் அதிகமாகவே இருக்கிறது. தற்போதும் கூட பங்களாதேஷிடம் வாங்கிய கடனை திருப்பிச் செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளமையால் கொழும்புத் துறைமுகத்தின் ஒரு பகுதியை வழங்குவதற்கு பேச்சுவார்த்தையும் இடம்பெற்று வருவதாக தகவல்கள் கசிந்துள்ளன.

ஆக, ரணிலும் வாயால் வடை சுடுபவர் என்பது நிரூபணமாகி வருகிறது. மக்களின் ஆதனங்களை விற்பதற்கும் தனியார் மயப்படுத்துவதற்குமே அவர் முனைப்புக் காட்டுகிறார். அதேவேளை மக்களை எப்படியெல்லாம் ஏமாற்றலாம் பிரிக்கலாம் என்றும் சிந்தித்து வருகிறார்.

அதனால், அவர் தமிழ் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் பற்றியும் கொஞ்சம் பார்ப்போம். அதற்கு முன்பாக, அவர் தமிழ் மக்களுக்கு ஏற்படுத்திய பெரும் இழப்பான யாழ். நூலக எரிப்பில் இருந்து கதையை ஆரம்பிப்போம்.

1981 யாழ். மாவட்டத் தேர்தலின் போது சிறில் மெத்திவ், காமினி திசாநாயக்க மற்றும் பெஸ்டஸ் பெரேரா ஆகியோருடன் அமைச்சர்களுடன் இளைஞர் விவகார மற்றும் தொழில் அமைச்சர் ரணில் விக்ரமசிங்கவும் யாழ்ப்பாணத்தில் இருந்தது உறுதியாகியிருக்கிறது. அவர்கள் யாழ்ப்பாணத்தில் கிங்ஸ் வாடிவீட்டில் தங்கியிருக்கிறார்கள். 1981 ஜூன் 10 ஆம் திகதி மாலை 3.00 ஒன்றுகூடிய பாராளுமன்றத்தின் ஹன்ஸாட் அறிக்கையில் இது பதிவாகியிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் தேர்தலை எப்படியாவது வெற்றிபெறுவதை இயக்குவதற்காக அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தன இந்த நால்வரையும் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைத்தார். இவர்கள் இதற்காக குருநாகலில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட குண்டர்களை புகையிரத்தில் நிறைத்து யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுசென்றார்கள். இதற்கு மேலதிகமாக 39 பஸ் வண்டிகளை நிறைத்து பொலிஸாரையும் எடுத்துச் சென்றார்கள். அவர்கள் 1981 மே 31 இல் யாழ்ப்பாண நூலகத்தை தீவைத்துக் கொளுத்தினார்கள். கள்ள வாக்குளைப் போட்டும் கூட மாவட்டத் தேர்தலில் அவர்கள் தோல்வியைக் கண்டனர். அந்தப் பின்னணியில்தான் ஜூலை கலவரமும் நிறைவேற்றப்பட்டது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தனவை தேர்தலில் தோற்கடித்த தமிழர்களைப் பழிவாங்கும் நோக்கிலும் தமது எதிரிகளை ஒழித்துக் கட்டும் நோக்கிலும் கறுப்பு ஜூலை ஐக்கிய தேசியக் கட்சியின் குண்டர்களால் நிர்மாணிக்கப்பட்டது.

கறுப்பு ஜூலை தொடர்பில் ரணில் விக்ரமசிங்க கடந்த ஆட்சியின்போது பாராளுமன்றத்தில் மன்னிப்பும் கேட்டிருந்தமை குறிப்பிடதக்கது. ஆனால், அதுவரையில் ஜே.வி.பி. தான் கறுப்பு ஜூலை கலவரத்தை மேற்கொண்டது என்ற பொய்க் குற்றச்சாட்டு பரப்பப்பட்டு வந்தது. தீப்பிளம்புகளுக்கு மேல் சாம்பல் துகள்களால் வரையப்பட்ட துயர சித்திரத்திற்கு இம்மாத்ததுடன் 40 வருடங்களாகின்றது.

2002 ஆம் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் 47 ஆவது மாநாட்டில் அன்றைய கட்சியின் தலைவரும் பிரதமருமான ரணில் விக்ரமசிங்க '1983 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இனரீதியான யுத்தத்தை தமது அரசாங்கம் முடிவுகட்டும்.' என்று கூறியிருந்ததும் நினைவுக்கு வருகிறது. 'எல்லா இன மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வினைப் பெற்றுத் தந்து சமாதானத்தைப் பேணுவேன்.' என்றும் அவர் அப்போது கூறியிருந்தார். அவரது அன்றைய கூற்றின்படி தீர்வுகள் வழங்கப்பட்டிருக்கிறதா? யுத்தம் தொடர்ந்தது. யுத்தம் தொடங்கியதில் இருந்து நகர்ந்து வரையில் :லங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் பெரும் பங்கு அதில் இருக்கிறது.

அதேபோல, தற்போது தமிழர்களுக்கு அதிகாரப்பகிர்வினை வழங்குவதாகக் கூறும் ரணில் விக்ரமசிங்க சந்திரிக்காவின் ஆட்சியின் போது அதற்கு எதிரான போக்கினை கடைப்பிடித்திருந்தார். அதாவது சந்திரிக்கா பண்டாரநாயக்கவினால் கொண்டுவரப்பட்ட புதிய அரசியலமைப்பினை கிழித்தெறியச் செய்விக்கப்பட்டார். புதிய அரசியலமைப்பின் நோக்கம் அதிகாரப்பகிர்வு சம்பந்தப்பட்டதாய் இருந்தது. அதாவது ஒற்றையாட்சிக்குப் பதிலாக பிராந்தியங்களின் ஒன்றியம் என்று ஆட்சிமுறை மாற்றப்படவிருந்த்து. அப்போது எதிர்கட்சியாகவிருந்த ரணில் விக்ரமசிங்கவின் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியின் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராகவிருந்த D.M.பண்டாரநாயக்க அந்தப் புதிய அரசியலமைப்புச் சட்டத்தைக் கிழித்து தீயிட்டுக் கொளுத்தினார். அதேவேளை, அந்த அரசியலமைப்புச் சட்டமும் ஒரேநாளில் கொண்டுவர முயன்றவொன்று என்பதும் குறிப்பிடதக்கது. நிதானமாக நாம் இவ்விரண்டு தரப்பினதும் தகிடதத்தத்தினை புரிந்துகொண்டாக வேண்டும்.

மைத்திரி:ரணில் தலைமையிலான நல்லாட்சியின் போதும் (2015 முதல் 2019 காலப்பகுதியில்) புதிய அரசியலமைப்புச் சட்டம் தொடர்பாக கதைக்கப்பட்டது. இதன்போது 82 தடவைகள் அரசியலமைப்புத் தொடர்பான குழு கூட்டப்பட்டது. ஆனால், ஐக்கிய தேசியக் கட்சி அவர்களது முன்மொழிவுகளை சமர்ப்பிக்கவில்லை. இந்தப் புதிய அரசியலமைப்புச் சட்டத்தில் பொலீஸ் அதிகாரம், 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பான விடயங்களும் கவனத்திற் கொள்ளப்பட்டன. ஆனால், ரணில் விக்ரமசிங்க தமிழர் பக்கம் வந்து அதிகாரத்தை தருவதாக கூறிவிட்டு மறுபக்கம் சென்று அதனைச் சுருட்டிக்கொண்டார்.

தற்போது மீளவும் அதே கதையாடலையே அவர் ஆரம்பித்திருக்கிறார். ஜனாதிபதியாகிய தொடக்க காலத்தில் 13 ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றப் போவதாக அறிவித்தார்.

**தற்போது தமிழர்களுக்கு அதிகாரப்பகிர்வினை வழங்குவதாகக் கூறும் ரணில் விக்ரமசிங்க சந்திரிக்காவின் ஆட்சியின் போது அதற்கு எதிரான போக்கினை கடைப்பிடித்திருந்தார்.**

மாகாணங்களுக்கு அதிகாரத்தை தருவதாகச் சொன்னார். ஆனால், எல்லா தேர்தல்களும் பிற் போடப்பட்டுள்ளதுடன், மாகாணத்தின் அதிகாரமும் ரணில் விக்ரமசிங்கவினால் நியமிக்கப்பட்ட ஆளுநர்களிடம் கையளிக்கப் பட்டுள்ளது. வடக்கிற்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் ரணில் விக்ரமசிங்க செல்லும்போது தமிழர்களுக்கான தீர்வினை வழங்கப்போவதாக தெரிவிப்பதுடன், சிங்கள மக்கள் மத்தியில் செல்லும் போது அதற்கு முரணான கருத்தையே தெரிவித்து வருகிறார். முன்பு பெரும் வீரனைப்போல வீரவசனம் பேசிவிட்டு தற்போது தன்னால் மட்டும் தமிழ் மக்களுக்கான உரிமைகளை வழங்கமுடியாது என்று நழுவ பார்க்கிறார். இது முற்றிலும் மக்களுக்கு தண்ணீர் காட்டும் நடவடிக்கையாகும். மக்கள் ரணிலுக்கு தண்ணீர் காட்டுவதுதான் இனி பாக்கியாக இருக்கிறது.

பொருளாதார நெருக்கடிக்கும் சிறுபான்மை மக்களின் உரிமைகள் சம்பந்தப்பட்ட விடயங்களுக்கும் தீர்வு தரமுடியாத ரணில் விக்ரமசிங்க அடுத்தக்கட்டமாக பிரிவினை வாதத்தை வளர்த்தெடுப்பற்கு முயற்சிக்கிறார். அதற்கு கள்ள அரசியற் கோஸ்டிகளும் துணைநிற்கின்றன. பல்வேறு திட்டங்கள் வகுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவர்களது இறுதிகட்ட துருப்புச் சீட்டே அதுதான். அதுமட்டும்தான் அவர்களின் இருப்பை இதுவரையில் பாதுகாத்திருக்கிறது. அதனை ஆடுகளத்தில் பயன்படுத்தவே சந்தர்ப்பத்தை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆக, ரணிலை நம்பி ஏமாந்து அவர் பக்கத்தில் அமர்ந்துகொள்வதாக எண்ணி அவர் அடித்து வைத்திருக்கிற ஆப்பில் அமர்ந்துகொள்ள வேண்டாம்.

ஆக, இனவாத, மதவாத அரசியலை ஒட்டுமொத்தமாக புறக்கணிப்பதன் மூலமாகவும் ரணில் ராஜபக்ஸ திருட்டு அரசாங்கத்தை விரட்டித்து மக்களுக்கான ஆட்சியை நிறுவுவதன் மூலமாகவுமே ரணில் தயார்படுத்தி வைத்துள்ள ஆப்பில் அவரையே அழகாக அமரச்செய்யலாம். அ



# உள்வீட்டுத் 'தீ'

டானியல் ஜெயந்தன் எழுதிய வயல்மாதா நூலுக்கு விளைந்த எதிர்வினைத் தீயை, யாழ்நூலகத்திற்கு வைக்கப்பட்ட இனவாதத் தீயுடன் உதாரணம் காட்டி இதற்கு நியாயம் கேட்கிறார்கள். பெருமாள் முருகனது நூலின் மீதான எதிர்ப்பினைக் காட்டி இதற்கு நீதி கோருகிறார்கள். சங்கிகள்: மங்கிகள் கொழுத்தும் நெருப்பை உதாரணம் காட்டி நீதி கோருகிறார்கள். இவை எல்லாவற்றுடனும் பொருத்தி அணுகிப் பார்க்கக் கூடிய சம்பவமாகவா இது உள்ளது? இதுவரையும் அதனை (வெளியிலிருந்து) அறிந்து கொண்டதில் இல்லை என்கிறேன் நான். இல்லை என நான் சொல்வது தவறு என அதற்கான நியாயத்தோடு இதனை மறுப்பதுடன், இதற்கான நியாயம் இதுவென யாரும் சொல்வாராகில் அதனைக் கருத்திற்கெடுக்கவும் தயாராகவுள்ளேன்.

வயல்மாதா என்ற சிறுகதையை நாவந்துறையில் வாழாத ஒருவர் வாசிக்கும் போது சிறுகதையாக அது இருப்பதாகவும் வாசிப்பிற்கு இடைஞ்சல் அற்று இருப்பதாகவும் கருதப்படும் சாத்தியம் அதிகமாகவேயுண்டு என்கிறார்கள் சிலர்.

(இந்த இடத்தில் நீங்கள் அகரமுதல்வனின் 'சாகாள்' கதையையும் கருத்திற்கு எடுக்கக் கோருகிறேன்.) அல்லது தமிழ் நாட்டிலிருக்கும் ஒருவரால் வாசிக்கப்படும் போது அது சிறந்த சிறுகதையாகவே உள்வாங்கப்படக் கூடும். இதுமட்டும் அந்த எழுத்தின் சாத்தியத்தை முன்நிறுத்தவும் அந்த நூல் எரிப்பினை எதிர்த்துக் கண்டனக் குரல் எழுப்பவும் போதுமானதாக இருக்குமா? இல்லை. இல்லவேயில்லை.

**கற்சுறா**

வயல்மாதா என்ற நூலின் வருகைக்கு என முதலிலேயே பணம் கொடுத்து உதவி செய்து, அந்த நூல் வெளிவந்ததும் நூல் வெளியீட்டில் கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பித்து புத்தகம் வாங்கிச் சென்றவர்களே அதிலுள்ள எழுத்து தம்மை அவமானப்படுத்துகிறது எனவும் தம்மைத் தரம் தாழ்த்துகிறது எனவும் தமது ஊரைக் கேவலப்படுத்துகிறது எனவும் முரண்பட்டு அந்த நூலுக்கு அடையாள எரிப்புச் செய்திருக்கிறார்கள். மீதி நூலை மீளப்பெறும்படி அறிவுறுத்துகிறார்கள் என அறிய முடிகிறது. ஊரில் இப்பொழுது வாழ்ந்து வரும் ஒரு குடும்பத்தின் வாழ்வை அது நேரடியாக எழுதியிருக்கிறது எனக் குற்றம் சொல்கிறார்கள் அவர்கள். ஆனால் இந்த எதிர்ப்பினை உலகக் கருத்துச் சுதந்திரச் சிக்கலாக வெளிக்காட்டுகிறார்கள் அதனோடு சம்பந்தப்பட்டவர்கள். அதனை வெளிக் கொண்டு வந்தவர்கள். இது

**சமூகத்தின் மீதும் சமூகம் கட்டமைத்திருக்கும் கருத்துக்கள் மீதும் ( இதனை ஒரு ஊர் என்று கருதினாலும் பயன்) கோபம் கொள்பவர் அந்த சமூகத்தின் நடைமுறைக்குள் வாழ முற்படும் வேளையில் மிகப்பெரிய சங்கடத்தை எதிர்கொள்ள வேண்டும்.**

**அது கட்டி வைத்திருக்கும் சாதியும், சமயமும் இன்னபிற அதிகாரங்களையும் கேள்விக்குட்படுத்திக் கொண்டு யாரும் அதற்குள் நிலை கொள்ளல் முடியாது. சமூகத்தின் அத்தனை சீர் கெட்ட தனங்களையும் முதுகில் சுமந்து நிற்கும் முக்கிய எருமைகளாக இருப்பவை அதனை அடையாளம் காட்டும் அத்தனை நிறுவனங்களும். அது கோயில்களாக இருந்தாலென்ன கோயில் சார்ந்த சபைகளாக இருந்தாலென்ன பழையமாணவர் சங்கங்களாக இருந்தாலென்ன அதனோடு தொடர்புபட்ட விளையாட்டுக் கழகங்களாக இருந்தாலென்ன, ஏன் ஊரின் பெரியவர் எனக் காட்டும் ஒருவரது அறக்கட்டளை நிறுவனமாக இருந்தாலென்ன, அல்லது ஊரில் பெயரில் ஒன்று கூட ஏற்படுத்தப்பட்ட நிறுவனமாக இருந்தாலென்ன, எதில் யார் அங்கம் வகித்தாலும் அதன் சீர் கெட்ட கட்டுப்பாடுகளுடனேயே அவர் செயற்பட வேண்டும்.**

மிகப் பெரிய அபத்த நிலை.

சமூகத்தின் மீதும் சமூகம் கட்டமைத்திருக்கும் கருத்துக்கள் மீதும் ( இதனை ஒரு ஊர் என்று கருதினாலும் பயன்) கோபம் கொள்பவர் அந்த சமூகத்தின் நடைமுறைக்குள் வாழ முற்படும் வேளையில் மிகப்பெரிய சங்கடத்தை எதிர்கொள்ள வேண்டும். அது கட்டி வைத்திருக்கும் சாதியும், சமயமும் இன்னபிற அதிகாரங்களையும் கேள்விக்குட்படுத்திக் கொண்டு யாரும் அதற்குள் நிலை கொள்ளல் முடியாது. சமூகத்தின் அத்தனை சீர் கெட்ட தனங்களையும் முதுகில் சுமந்து நிற்கும் முக்கிய எருமைகளாக இருப்பவை அதனை அடையாளம் காட்டும் அத்தனை நிறுவனங்களும். அது கோயில்களாக இருந்தாலென்ன கோயில் சார்ந்த சபைகளாக இருந்தாலென்ன பழையமாணவர் சங்கங்களாக இருந்தாலென்ன அதனோடு தொடர்புபட்ட விளையாட்டுக் கழகங்களாக இருந்தாலென்ன, ஏன் ஊரின் பெரியவர் எனக் காட்டும் ஒருவரது அறக்கட்டளை நிறுவனமாக இருந்தாலென்ன, அல்லது ஊரில் பெயரில் ஒன்று கூட ஏற்படுத்தப்பட்ட நிறுவனமாக இருந்தாலென்ன, எதில் யார் அங்கம் வகித்தாலும் அதன் சீர் கெட்ட கட்டுப்பாடுகளுடனேயே அவர் செயற்பட வேண்டும்.

ஒரு ஊர் தனது பெருமை என்று, தான் கட்டிவைத்த சாதியையும் சமயத்தையும் அடையாளம் காட்டுவதால் அதன் அதிகாரக் கட்டமைப்பிலேயே அதன் பின்னிருக்கும் அத்தனை செயற்பாடுகளும் இயங்கிக் கொண்டிருக்கும். ஊரின் அடையாளத்துடன் செயற்படும் ஒருவர் இதற்கு முரணாகச் செயற்படமுடியாது. அப்படிச் செயற்பட முனைந்த சம்பவம் தான் வயல்மாதாச் சம்பவம்.

சீரமைப்பு என்று சொல்லப்பட்ட கருத்துக்களை மனதிற்குள் மட்டும் புறக்கணித்துக் கொண்டு ஊரோடு சேர்ந்திருக்கவும், சேர்ந்தியங்கவும் முடியாது. இன்னொரு வளமாகச் சொன்னால் தனது சமூகத்திற்கும் தனது குடும்பத்திற்கும் தனது தேசத்திற்கும் துரோகம் (அவர்களது வழக்கில்) இழைத்தபடிதான் ஒரு எழுத்தாளர் என்பவர் தொடர்ந்து இயங்கக் கூடியவராக இருக்க வேண்டும். ஆனால் இதுவரையான டானியல் ஜெயந்தன் அவர்களது வடிவம் அதுவல்ல.

கட்டமைக்கப்பட்ட அநீதியான மதிப்பீடுகளை உண்மையில் ஒரு எழுத்தாளரால் தன்வாழ்நாளில் எழுதத் தொடங்க முன்பே அவதானித்துவிட முடியும் என்றே நான் கருதுகிறேன். அதன் மீதான் கோபத்தில் எழுதும் எழுத்துக்கள் தவிர்க்க இயலாதவை. சமூகத்தின் அத்தனை சாக்கடைத் தனத்தையும் , அது மதமாக இருந்தாலென்ன சாதியாக இருந்தாலென்ன அல்லது ஊர்ப்பெருமையாக இருந்தாலென்ன அல்லது தேசிய எழுச்சி விளையாட்டாக இருந்தாலென்ன: அவற்றைக் கேலி செய்துவரும் தொடர்ச்சியில் எழும் எழுத்தினை எப்பொழுதும் பிரித்து அடையாளம் காட்டிவிடமுடியும்.

ஆனால் வயல்மாதாவின் பிரச்சனை நான் இதுவரை அறிந்த அளவில் அதுவல்ல. அதன் எழுத்தாளர் அந்த ஊரின் சகல அடையாளங்களிலும் தன்னை ஒருமித்தவர். ஊரின் மதத்துடனும் அது அடையாளம் காட்டும் ஊருடனும் ஊரின் அடையாளமிட்ட விளையாட்டுக் கழகங்களுடனும் ஊரின் ஒன்றியத்துடனும் இணங்கி வாழ்பவர். அதனோடு இணைந்து அதனைத் தொடர்ந்தும் அடையாளம் காட்டி நிற்பவர். அதன் அக்கறையிலேயே அந்த ஊர் சார்ந்தவர்கள் இந்த நூல் வெளியீட்டிற்காக உழைத்திருக்கிறார்கள். பணம் கொடுத்து இருக்கிறார்கள். வெளியீட்டை முன்நின்று நடத்தியிருக்கிறார்கள்.

இந்த நூலின் வருகையையும் தமது ஊர்ச் சடங்காகவே பார்த்திருக்கிறார்கள். இவரும் அந்த ஊரின், மதத்தின் உதவியை நாடியே அனைத்து உதவிகளையும் பெற்றிருப்பதாகவே அறியமுடிகிறது. (இதுவரை அறியப்பட்டகதை) அதனால்தான் தாங்கள் ஏமாற்றப்பட்டிருக்கிறோம் நமது சமூகத்தின் நபர்களை இது கேலி செய்கிறது என்று அவர்கள் சொல்வதும். அதன் உச்சமாக எரித்து சாம்பலாக்குவதும் நடந்தேறியிருக்கிறது.

ஆனால் இந்த நூலை ஆதரித்து நிற்கும் நண்பர் சோபாசக்தியோ, 'படைப்பாளி சமூகத்தில் நடக்கும் உண்மைகளை எழுதுவது

இயல்பானதும் கடமையுமாகும். நம்முடைய முன்னோடிகளான கே.டானியல், என்.கே. ரகுநாதன் போன்றவர்களெல்லாம் அதைச் செய்திருக்கிறார்கள்' என்று இந்த நாசத்திற்கு டானியலையும் ரகுநாதனையும் துணைக்கழைக்கிறார்.

இது ஒரு அதிசிறந்த முட்டாளின் அயோக்கியத்தனம். ரகுநாதனும் டானியலும் கொண்டிருந்த கருத்தியலுக்கும் அவர்கள் எதிர் கொண்டு இயங்கிவந்த கருத்தியலுக்கும் இயைவாகக் கதைகளை எழுதினார்கள். நாளும் பொழுதும் அவர்கள் கொண்டிருந்த கருத்தியலுக்கு எதிரானவர்களைக் கதையில் கொண்டுவந்து அடையாளம் காட்டினார்கள். எந்த அதிகாரத்துக்கு எதிராய் முரண்பட்டு நின்றார்களோ அவர்களின் விம்பங்களைக் கதை மாந்தர்கள் ஆக்கினார்கள். ஆனாலும் அப்படி எழுதப்பட்ட அந்தக் கதைகளுக்குள் இருக்கும் கதை மாந்தர்கள் குறித்து இன்று வரை உரையாடலும் உடன்பாடும் முரண்பாடும் நடை பெற்றுக்கொண்டுதான் இருக்கிறது.

ஒரு கட்டத்தில் டானியலுக்கு எதிராக ரகுநாதன் அவர்கள் 'பஜகோவிந்தம்' என்ற சிறுகதையை எழுதினார் எனச் சொல்லப்படுகிறது. இந்தக் கதையை எழுத முதல் அவர்கள் கட்சிக்குள் அதன் கருத்துக்கள் பற்றி நடைபெற்ற விவாதங்கள் குறித்து ந.ரவீந்திரன் சொல்லியிருக்கிறார். அதனைச் சோபா படிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். ரகுநாதன் அவர்கள் அந்தக் கதையை தனது சொந்தப் பெயரில் எழுதாது புனைபெயரில் எழுதியது குறித்தும் நீண்ட பெரும் உரையாடல் அப்பொழுதே நடைபெற்று இருக்கிறது. அவர்கள் தாம் எதிர்த்தெழுந்த கருத்துக்களைக் கதையாக்கினார்கள். உண்மையில் அவர்கள் எதிர்த்து நின்ற ஆதிக்கக் கொம்பன்களுக்கு அதனை எரித்துச் சாம்பலாக்குவது என்பது இயலாத ஒரு செயலல்ல. மலம் அள்ளி எறிந்து எதிர்த்தவர்கள், கிணற்றுக்குள் நஞ்சிட்ட பெயர்வழிகள், துப்பாக்கிச் குண்டடித்து சாகச் செய்த அயோக்கியர்கள், வயல்மாதாவைக் கொழுத்தியது போல் கொழுத்தாது விட்டதற்கு வேறு ஏதாவது விசேடமான காரணம் இருக்கும். அதனால் அவை கொழுத்தப்படவில்லை. வயல்மாதாக் கதையினதும் கதையாசிரியரினதும் நிலை அப்படியல்ல. ஊரோடு ஒத்தோடி ஊரோடு சேர்ந்தோடி ஊராய் அடையாளப்படுத்திக் கொண்டு இருப்பவர் ஒருவரை அதுவரை நம்பியிருந்தவர்கள் ஏமாந்த கோபத்தில் எரித்த விளையாட்டு அது. இது அவர்களது ஊர்க் குடும்பப் பிரச்சனை.

இதற்கு, 'படைப்பாளியின் கருத்துச் சுதந்திரத்திற்கு எல்லையே இல்லை என்றும் 'ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம், உண்மையை எழுதுங்கள், உண்மையாய் எழுதுங்கள்' என யோகர் சுவாமி சொன்னார் என்று இதற்குச் சர்வதேச கருத்துச் சதந்திரக் கோரிக்கை விடுகிறார் சோபா. இதன் பின்னால் இருப்பது அவருக்கும் தமிழகக் 'கருப்புப் பிரதிகள்' பதிப்பக நிறுவனத்தின் 'அலுவல்' சார்ந்த விடயங்கள் என்றுதான் நான் நோக்க வேண்டியிருக்கிறது. இப்பொழுது உடனடியாக இந்த நூலை நீங்கள் ஒன்லைனில் பெற்றுக் கொள்ளக் கூடியதாக அவர்கள் பண்ணிவிட்டிருக்கிறார்கள். எதை வைத்தும் வியாபாரம் பண்ணக் கூடிய கூட்டம் தமிழ் நாட்டுப் பதிப்பக் கூட்டம் என்பதை இன்னொரு முறை நாங்கள் புரிந்து கொள்ள வைத்திருக்கிறார்கள் அவர்கள். இந்தத் தமிழகப் பதிப்பகங்களின் காசு அரசியல் மற்றும் அதன் பின்னால் இருக்கும் பல்வேறு விடயங்கள் எழுதப்பட வேண்டும். இனிவரும் காலங்களில் அவற்றைச் சாத்தியப்படுத்தலாம் என்றே நினைக்கிறேன்.

> **வயல்மாதாக் கதையினதும் கதையாசிரியரினதும் நிலை அப்படியல்ல. ஊரோடு ஒத்தோடி ஊரோடு சேர்ந்தோடி ஊராய் அடையாளப்படுத்திக் கொண்டு இருப்பவர் ஒருவரை அதுவரை நம்பியிருந்தவர்கள் ஏமாந்த கோபத்தில் எரித்த விளையாட்டு அது. இது அவர்களது ஊர்க் குடும்பப் பிரச்சனை.**

நம்மிடம் கதைஞர்களாகவும் கலைஞர்களாகவும் இருக்கும் பேர்வழிகள் தாம் எழுதும் பலகதைகளில் தமது ஊர்களில் தமது குடும்பங்களால் பழிவாங்க நினைத்த நபர்களின் பெயர்களைத்தான் அதிகமாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்று இன்றுவரை சிலர் சொல்லிவரும் கதைகளையும் ஒற்றைச் சொல்லில் அவை அவதூறு எனக் கடந்து போகமுடியாத சூழல் இன்று தோன்றியிருக்கிறது. அதனை உண்மை எனக் கண்டுகொள்ள நாம் அந்தக்கதைகளுடன் திரிந்து அவர்களின் ஊர்களை அணுகவேண்டிய அபத்தம் உருவாகிவிடுகிறது. இந்த வயல்மாதாச் சிக்கலுடன் நம்மவர்கள் எழுதும் பல்வேறு கதைகள் மீளப் பரிசீலிக்கப்படவேண்டிய தேவை ஒன்று வந்திருக்கிறது என நினைக்கிறேன்.

இந்த நெருப்பு உள்வீட்டு நெருப்பு. இப்பொழுதுதான் டானியல் ஜெயந்தனை வீட்டை விட்டுத் துரத்தியிருக்கிறார்கள். தமது ஊர்க்குடும்பத்தின் அத்தனை பொறுப்புக்களில் இருந்தும் நீக்கியிருக்கிறார்கள். அவர் இனிமேல் எழுதப் போகும் கதைகளுக்கு யாராவது நெருப்பு வைத்தால் அப்போது பார்த்துக் கொள்ளலாம். அதற்குப் பொங்கி எழுவோம். இப்பொழுது, அவரது பையிலிருந்த தீயை எடுத்து அவரின் நண்பர்கள் அவரது புத்தகத்திற்கு வைத்திருக்கிறார்கள். இது உள்வீட்டுத் 'தீ' இதற்குள் வீணாகக் கிடந்து எண்ணையை ஊற்றாதீர்கள்.

இதற்குள் சோபாசகத்திதான் மிகவும் சிறந்த நகைச்சுவை வேடம் போடுகிறார். அவர் தொடர்ந்தும் இப்படியான சித்து வேலைப்பாடுகளில் நுழைந்தாடுபவர்.

ஆனால் இனிப் போதும். அ




### ரொரண்டோ தமிழ்ப் பாடசாலைகளில்...

# கனடாவிலும் தொடரும் தமிழாசிரியர்களின் உளவியல் துன்புறுத்தல்கள்

**அதீதா**

ரொரண்டோ மாநகர கல்விச் சபையின் கீழ் பல்வேறுபட்ட இனங்களின் தாய்மொழிக் கல்வியை கனடிய அரசு ஊக்குவித்து வருகிறது. அவ்வகையில் தமிழ் மாணவர்கள் தமது தமிழ்க் கல்வியினைக் கற்கும் பொருட்டு தமிழ் பாடசாலைகள் அங்கீகரிக்கப்பட்டு இயங்கிவருகின்றன. வார நாட்களில் மாலை வேளைகளிலும் வார இறுதி நாட்களில் காலை அல்லது மாலை வேளைகளிலும் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

இலங்கையில் ஆசிரியர் தொழிலை மேற்கொண்டவர்களே அதிகமாக அதில் பணிபுரிகிறார்கள். இங்கு பிறந்து வளரும் மாணவர்கள் தாம் வழமையாகக் கல்விகற்கும் பாடசாலைகளில் ஒரு விதமான அணுகுமுறையையும் தமிழ்ப் பாடசாலைகளில் அதற்கெதிரான அணுகுமுறையையும் எதிர்கொள்ள நேரிடும் போது மிகவும் மனச்சிக்கலுக்கு உள்ளாகிறார்கள். அதிகமான குழந்தைகள் தமிழ்ப் பாடசாலையை மனதளவில் விரும்பாததற்கு இது முக்கிய காரணமாக இருக்கிறது.

எனது பிள்ளைகள் மூவருக்கும் தமிழ் மொழியிலேயே அதிக ஈடுபாடு இருந்ததால் தமிழ்ப் பாடலையின் பெறுபேறுகளைப் பெறுவதற்காகச் சென்று வந்தார்கள். அவர்கள் இருவரும் பாலர் வகுப்பிலிருந்து 8ம்வகுப்புவரை அங்கு கல்வி கற்று. பின்பு தமிழ் அக்கடமியிலும் உயர்தரக் கல்வியை கற்று விசேட சித்தியடைந்தார்கள். முதலிருவருக்கும் கிடைத்த அனுபவங்கள் பெரிது என்றாலும் அவற்றை அவர்கள் எதிர்கொண்டு கடந்து வந்தார்கள். ஆனால் மூன்றாவதாகச் செல்லும் எனது மகள் தமிழ்க் கல்வி முடிந்ததும் வீட்டிற்கு வந்தபின் படும் மனவுளைச்சலே என்னை இதனை எழுத வைக்கிறது.

ஒரு குறிப்பிட்ட தொகைப் பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்லாவிட்டால் ஒரு ஆசிரியர் வேலை இழக்கும் நிலை ஏற்படும். அந்த நிலை வரும்போது, ஒவ்வொரு மாணவர்களையும் தேடி அவர்களின் வீட்டிற்கு தொலைபேசி மூலம் அல்லது தெரிந்தவர்களிடம் பிள்ளைகளை வரும்படி சொல்லிவிடுவார்கள். “ஐயோ எனக்கு குறிப்பிட்ட மாணவர்கள் வகுப்பில் இல்லாவிட்டால் எனது வேலை போய்விடும். உங்கள் பிள்ளைகள் படிக்காவிட்டாலும் பரவாயில்லை சும்மா அனுப்பிவிடுங்கோ. எனது வகுப்பில் குறிப்பிட்ட மாணவர்கள் படிக்கிறார்கள் என்று தலைமை அலுவலகத்திற்கு தெரியப்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் எனது வேலை பறிபோய்விடும்‘ என்றும், ‘மாணவர்களுக்காக நீங்கள் கட்டும் அந்தச் சிறிய தொகைப் பணத்தையும் நானே கட்டுகிறேன், உங்கள் பிள்ளைகளை அனுப்பிவிடுங்கோ‘ என்றும் கேட்டுத்திரியும் பல தமிழ் ஆசிரியர்கள் இருக்கிறார்கள். என்னுடன் கதைத்த ஒரு சில ஆசிரியர்களின் பாடசாலைக்கு என் சுற்றாடலிலிருந்து பல மாணவர்களைப் பெற்றோருடன் பேசி இணைத்துக் கொடுத்துள்ளேன்.

ஆனாலும் அதில் பல மாணவர்கள் தமிழ்ப்பாடசாலைக்குச் செல்வதை மனதளவில் விரும்புவதில்லை. தமது வழமையான பாடசாலை அசிரியர்களதும் தமிழ்ப் பாடசாலை ஆசிரியர்களதும் நடைமுறைகளால் அவர்கள் மிகப்பெரிய இடைவெளியைப் பார்க்கிறார்கள். தமிழ்ப் பாடசாலையில் ஆசிரியர்களின் பேச்சுவழக்கு நடைமுறை மாணவர்களை வழிநடத்தும் விதம் என்பன அவர்களுக்குத் தாய்மொழி மீதான வெறுப்பு உருவாகக் காரணமாகிறது. இந்த விடயம் பலகாலமாக நடந்து

வருபவை. எனினும் அதுகுறித்துச் சம்பந்தப்பட்டவர்கள் யாருமே கவலை அடைவதில்லை.

பெற்றோர்களும் தமது பிள்ளைகளின் மனவுளைச்சல்கள் குறித்து அந்தப் பாடசாலை ஆசிரியர்களுடனோ அல்லது ஆசிரியர்களின் மேலிடத்துடனோ தொடர்பு கொண்டு எந்தப் புகார்களையும் செய்வதில்லை. வழமையாக அவர்களுக்கு இருக்கும் ஆசிரியர்கள் மீதான போலி மதிப்பு அல்லது விலகும் தன்மை அவர்களது பிள்ளைகளைச் சீரழிக்கிறது எனவும் அவர்கள் யோசிப்பதில்லை. அதற்கு மாறாக, அந்த ஆசிரியர்களின் அடாவடித்தனம் தொடர்வதற்கு வழிவகுக்கும் என்பதையும் யோசிப்பதில்லை.

இது ஒரு மிகப் பெரிய பிரச்சனை. அண்மையில் எனது பிள்ளை தமிழ்ப் பாடசாலை ஆசிரியர் ஒருவாரால் கேலிக்கும் கிண்டலுக்கும் ஆளாக்கப்பட்டிருக்கிற சம்பவம் ஒன்று நிகழ்ந்திருக்கிறது. அந்த ஆசிரியர் தொடர்ச்சியாக தமிழ் மாணவர்கள் மீது நிகழ்த்தும் அவமதிப்புக்கள் குறித்து நான் அறிந்த வண்ணம் இருந்தாலும், மற்றய ஆசிரியர்களுடன் உரையாடித் தெரியப்படுத்தி இருக்கிறேன்.

அவர்கள் அந்தக் குறிப்பிட்ட ஆசிரியர் குறித்து தாம் எதுவும் செய்ய முடியாத நிலையிலிருப்பதனையும் தெரிவித்திருக்கிறார்கள். இன்று எனது பிள்ளைக்கு நடந்த அவமதிப்பினை நான் அந்தப்பாடசாலையுடன் தொடர்புபட்ட பல்வேறு பிரிவிற்குத் தெரியப்படுத்தி இருக்கிறேன். இந்த ரொரண்டோ தமிழ்க் கல்வி கற்பிக்கும் முறையுடன் சம்பந்தப்பட்ட பலர் பொதுச் செயற்பாட்டில் தமிழ்ச் சூழலுக்குள் இயங்கிக் கொண்டு இருக்கிறார்கள் என்ற அடிப்படையில் அவர்களுக்கு இதனைத் தெரியப்படுத்தவும், அவர்கள் இதுகுறித்து உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற அடிப்படையிலுமே இங்கே இதனை எழுதுகிறேன்.

அ

# சாந்தியண்ணா



*மனவெளி செல்வன்*

சாந்தி எனவும் சாந்திநாதன் எனவும் பலராலும் அறியப்பட்ட அரங்க கலைஞர் நாகமுத்து சாந்திநாதன் அவர்களுடன் 30 வருட கால நட்பு உண்டு . என்னை விட வயதில் மிக மூத்தவராக இருந்தாலும் தன்னுடைய நண்பன் ஸ்தானத்திலேயே என்னை வைத்திருந்தார். நான் அவரை எனது ஒரு மூத்த சகோதரன் ஸ்தானத்திலே வைத்திருந்தேன் என்பது வேறு விடயம்.

ரொறன்ரோவில் தனியே நாடகத்துக்கென ஒரு அமைப்பின் அவசியத்தை எங்கள் நண்பர்கள் பலரும் 90 களின் ஆரம்பத்தில் உணர்ந்திருந்து போலவே நானும், சாந்தியண்ணாவும் உணர்ந்திருந்தோம். அதன் விளைவ தான் மனவெளி கலையாற்றுக்குழு. இக்குழு ஆரம்பிக்கப்பட்டு இன்று 27 வருடங்களாகின்றது. இதன் வளர்ச்சியில் சாந்தியண்ணாவுக்கும். பெரும்பங்கு உள்ளது.

சாந்தியண்ணா மிகுந்த நகைச்சுவை உணர்வு மிக்க வர். வாழ்வின் தான் கண்ட அனுபவங்களை, ரசித்த நகைச்சுவை களை அழகாகச் சொல்வதில் ஆள் விண்ணர். ஒரே நகைச்சுவையை அவர் பல தடவைகள் சொல்லி யிருக்கிறார்.அத்தனை தடவைகளும் புதிதாக கேட்பது போலக் கேட்டு ரசித்திருக்கின்றோம்.

இவரது நட்பு வட்டமும், உறவு வட்டமும் மிகப் பெரியவை. எல்லோராலும் பெரியதொரு நட்பு வட்டத்தைத் தக்க வைப்பதென்பது முடியாத காரியம் . இவரால் அது முடிந்திருக்கிறது. நண்பர்களிடத்தில் இவர் காட்டிய விசுவாசம் தான் அதற்கான காரணம். நண்பர்களிடத்தில் மட்டுமல்ல, தான் சார்ந்த அமைப்புக்களிலும் கூட மிகவும் விசுவாசமாக இருந்தார். எந்தக் கட்டத்திலும் தனது நண்பர்களையோ , தான் சார்ந்த அமைப்புக்களையோ விட்டுக் கொடுக்கமாட்டார். பல தருணங்களில் இதனை நான் அவதானித்துள்ளேன்.

எங்காவது ஒரு சபையில் சாந்தியண்ணாவின் பிரசன்னம் இருந்தால் முதலில் அந்தச் சபையில் வந்து அமைதியாக இருப்பார். அங்கு நடப்பவற்றை மிகவும் உன்னிப்பாக அவதானித்து மெல்ல, மெல்லமாக தனது நகைச்சுவைகளை அவிழ்த்து விடுவார். இவ்வாறு ஒரு குறுகிய நேரத்துக்குள் அந்தச் சபை முழுவதும் வியாபித்திருப்பார்.

விருந்தோம்பல் என்பது இவரது ரத்தத்தில் ஊறியதொன்று. இவரது தாயாரிடம் அது இருந்தது . பின்னர் இவரது இணையர் உஷாக்காவிடமும் இந்த விருந்தோம்பும் பண்பு இருந்தது. சாந்தியண்ணா வீட்டுக்குச் சென்ற யாராவது சாப்பிடாமல் திரும்பியிருப்பார்களா என்றால் இல்லையென்றே சொல்வேன்.

கலைஞர்கள் எல்லோரையும் மனம் திறந்து பாராட்டுவார். சாந்தியண்ணா பற்றி ஒரு வரியில் சொல்லுங்கள் என்று யாரிடமாவது கேட்டால் அவர்கள் எல்லோரும் சொல்லும் பதில் அவருடைய மனம் திறந்து பாராட்டும் பண்பாகத் தான் இருக்கும்.

தன் வாழ்வை மிகவும் கவனமாகத் திட்டமிட்டு வாழ்ந்தார். சிறந்ததொரு நிர்வாகியாகவும், கலைகளின் நல்ல ரசிகனாகவும் வாழ்ந்து எம்மிடமிருந்து விடை பெற்றார். கூடவே மனோதிடம் என்றால் என்னவென்பதையும் கற்றுத் தந்து சென்றார். அவரது நினைவுகள் என்றும் அழியாது.



# என்னான்’ என்னும் இந்த உலகத்து நானும்

# ‘நான் என்’ என்னும் அந்த உலகத்து நானும்.

முன் சிறு குறு குறிப்பு:
எழுத்தாளர் ஜெயமோகன், முதன்முறையாக இந்தியாவை விட்டு வெளிக்கிட்டு, அ.முத்துலிங்கத்தின் ‘புண்யா பணத்தில்’ கனடா வந்தபோது, அவருக்கு Montréal ஐ காட்டியபின், நானும் மைக்கேலும் அவரை அழைத்துக்கொண்டு, Toronto போனோம்.
2001 December.
விவகாரம்:
Scarborough. Ontario இல் வைத்து, இலக்கியம் பேசும்போது, என்னிடம் விளைந்த, இரண்டு கதை concepts பற்றி சொன்னேன்.

1. இந்த உலகத்தைப்போல அச்சொட்டாக. அச்சொட்டாக, கிஞ்சித்தேனும், கிஞ்சித்தேனும் ஒரு குறுணி .ஒரு குறுணி, வித்தியாஸமுமற்ற விதத்துக்கு, absolutely iota to iota similar.- பிரபஞ்சத்தின் இன்னோர் மூலையில், எம்முலகைப் போல் இன்னார் உலகம் இருப்பதாயும் இந்த லோகத்து “நான்:சிறீசு அங்கு போக, ஒரே நேரத்தில், அந்த உலகத்து நான்: சிறீசு இங்கு வருவதாயும்.,
Blakanda... Blakanda… Blakanda…
இது, Science Fiction மாதிரியான ‘ஜாதி’க்கதை.

2. பூதாகரமாக வளரும் விஞ்ஞான முன்பாய்ச்சல்:
Digital World. Space Exploration. Cloning. Neuroscience. Artificial Intelligence [= Ai + Generatve Pre-Trained Transformer – Gpt].
Machine/ Robot Induced Actions. ‹Astro-Philosophy•*
அர்த்த ஸாஸ்திரம், அர்த்தமில்லாத ஸாஸ்திரம், அஸ்திரங்கள் ,ப்ரம்ம.நாக.சிவ.சாரங்க…et al. என எகிறுகிறபோது, ஆள்.புறா ஆயன காவிய செய்தி, பத்திரிகை, Morse Code. Telegram. Radio. Television என்று கிழிந்து, இப்போ, Multi-Task Smartphone இல் தலைகீழாய் தொக்குகிறது.
இது ஒருவகைக்கு முன் செலும், செலுத்தப்படும் ஏற்றம் மாதிரி தோற்றினும், அதுண்மையல்ல.
அது, அங்காலுமில்லாத இங்காலு மில்லாத, போக்கிடந் தெரியாதவொரு Stagnant And Still Situation மாதிரியுந்தான்.
வளர்ச்சி என்பது எப்போதும் முன்னோக்கி போவதல்ல.

**சிறினோ சிறி சிறிசு**

என் முன்னான, “என் முன்பார்வை’ ஒரு காலத்தில் telephone, cellphone வகையறா வளர்வுண்டு, man-machine சொருகலில், மனித மண்டையுள் (கபாலம்) பதிக்கப்படும் Chip மூலம், Phone – Viber. Whatsapp – என்றிலாமல் ஒரு மனிதன் தான் எதை பேசவேண்டுமென்று நினைப்பதை “நினைத்தாலே”, அவன் பேச விழையும் விஷயத்தை இன்னோராள் எங்கோ தூரத்தில் கிரஹிப்பதாயும்□.” “இன்னோராளின்” பேச்சு, ஏதும் இல்லாமலேயே மற்றவனுக்கு (முதலாமவனுக்கு) புரிவதாயும்: In other words:,அஃதாவது, ஆளுக்காள் literally பேசாமலேயே Long-Distance-Medium• சம்பாஷணை நிகழும் சாத்தியம் வருமென்றும் எதிர்வு கூறினேன்.
வரும்.
இது, தீர்க்கமான தர்ஸனம்.

3. இவ்வருஷத்து (2023) Oscar Gala இன் 11 nominations இன் ஏழை வென்ற Best Movie.-Everything Everywhere All At Once• (Directors: Daniel Kwan & amp

Daniel Scheinert. 2022) இன் கதை படு(ஊ) கிக்கலானது. Multi-Verse எனப்படும் பல சமாந்தர பிரபஞ்சங்களின் கூட்டுரு.பிரியுரு கோணத்தில், labyrinthine (சிக்கல் சுற்று) குழப்பத்து வகை Science Fiction. Fantasy…etc கொண்ட ஒரு 'கூழ்'.
இதே கோணத்தில் நான் 22 வருஷமுன் சிந்தித்திருந்தேன், என்பது, இப்போ ஆச்சர்யமாகவே இருக்கிறது.
படத்தை நான் இன்னும் பார்க்கவில்லை.

இவ்வுலக ஒன்று 1. Uranus ஐ விட்டு விலகி, நெடு(ஊ)ந்தூரம் சொல்லவொண்ணா வேகத்தில் பாய்ந்தது என் விண்கலம்.
Interstellar/Outer Space பிரபஞ்ச வெளியில், கடு(ஊ)கதித்தது அது.
எனக்கு பெயர் சிறீனோ சிறி சிறீசு.

Spacecraft இன் பெயர் சிசிசி திரிசங்கு சொர்க்கம்".
ஆங்கிலத்தில், SiSiSi Trisangu Heaven என்பர்.
French பாஷையில், SiSiSi Trisangu Paradis.
Italian இல், SiSiSi Trisangu Paradiso எனலாம்.

Uranus இற்கும் எனது அளவெட்டி வீட்டிற்கும் தூரம்
3,969,900,000 KM.
முன் வீசுரித்து, பயங்கரமாய் பாய்ந்த, SiSiSi Trisangu Heaven
யுறேனஸை விட்டு, ஒரு 3,333,33 Light Years கடந்திருக்கலாம்.
அஃதாவது,: 460,026,999,973 KM தாண்டியிருக்கலாம்.

SiSiSi Trisangu Heaven இன் வேகம் பற்றி சொல்ல முடியாது.
காரணம் எனக்கே தெரியாது.
அறிய பயம்.
ஏன் எனில், அத்தனை வேகம்.
Auto-Commanding இல் எகிறுவதால், பயத்தால் நான், வேகம் பற்றிய சேதி ஒளிரும் monitor ஐ பார்ப்பதில்லை.
ஆனால், வேகத்தை அறிய வேண்டுமென்று என் மண்டை விழைந்தால், Crème De La Crème போல, AI of the AI ஆக, சுழன்று சுழன்று எனக்கு தகவல் அளிக்கப்படும்.
கிட்டமட்ட, கிட்டத்தட்ட இது, எனது London வாழ் தம்பி சொன்ன குரங்குப்பரியாரி கதை போலத்தான்.
நான் சந்தர்ப்பம் வருகையில், இந்த கு.ப. கதையை சொல்வேன்.
எழுத்தாளர் சுஜாதா, தனது Mexico சலவைக்காரி joke ஐ சொல்வேன், சொல்வேன் என்று சொல்லி கடைசிவரை சொல்லாமல் விட்டது போல, விடேன்!

■ Nota Bene / NB: For some Info:
நோக்கக்கூடிய பிரபஞ்சத்தில் (Observable Universe).
2,000000,00000 : 200 Billion உடுத்தொகுதிகள் உள.

இவை ஒவ்வொன்றிலும், ஆகக்குறைந்தது 1,000,000000 (1 Billion) சூர்யர் [Stars/Suns] உள.

எமது சூர்யன் அதிலொன்று மட்டுமே.
மட்டு மட்டுமே.
ஒண்ணே ஒண்ணு.
Imagine! Wowwssss!
No. well. we can't imagine.

ரகஸ்யம், பாதுகாப்பு, மற்றும் அமசடக்கம், அவையடக்கம் அல்லன கருதி, எனது உச்ச, ஒப்பும் மிகையுமற்ற தொழில் நுட்ப விண்கலமும் செலுத்திய ராஜ்ஜத Rocket உம் எங்கே நிறுத்தப்பட்டிருந்தன என்பதை இப்போதைக்கு சொல்ல முடியாது.

ஆனால், அது வலிகாமம் வடக்கு வலயத்திலிருந்த அளவெட்டி எனும் பிரபல ஊரிற்கு கிட்டவான ஓரிடம், என்பதைச் சொல்லலாம்.

எல்லையற்ற, முடிவிலி: பரப்பிரபஞ்ச வெளியில் என் விண்கலம் பாவியபோது, வெளிப்புறத்து வெளியின் சகலமும் என் கலத்துள் இருந்த, பேருச்ச தொழில்நுட்ப கருவிகளின் உப சாதன, மின்னணுப்பாய்ச்சலின் நுண் காந்த வலை வீச்சத்தூடு வெளிப்போந்த காட்சிகளாக, சுற்றிவரவிருந்த ஒளிப்படங்குகளில் ஒளிர்ந்தன.
அவையின் அருப்பூட்டப்பட்ட, அரியத்தினூடான ஒளிக்கற்றையின் நிறப்பிறழ்வின் வீச்சு, எண்ணிலடங்கா வண்ணங்களிலும் கோலங்களிலும் கோணங்களிலும் விசிறுகை பெற்றமையை விளக்க பிரபஞ்சத்தில் உள்ள யாவுப்பாஷைகளிலும் வசதியில்லா தமையானது பிரபஞ்சத்தின் பர பஞ்சத்தை காட்டியது.

சொர்க்கம் இன்னும் எவ்வளவு தூரமெனை, என் மண்டைக்கபாலத்துள் சொருகப்பட்ட CHIP ஊடு வினவிய, நினைத்தபோது "கிட்டத்தான், என்று ஒரு அசரீரி கலத்துள், காதுள் முணுமுணுத்தது.

அவ்வுலக ஒன்று [1] Uranus ஐ விட்டு விலகி, சொல்லவொண்ணா வேகத்தில் பாய்ந்தது என் விண்கலம்.

இவையெல்லாம் பிள்ளை யார் கோவில்களின் திருவிழாக் களுடனேயே வேகம் பெற்றன.

இரண்டு பிள்ளையார்கள்!
Actually, இது ஏழு பிள்ளையார்கள் சம்பந்தமானதும்.

பிள்ளையார் கதை
முனியொருவரை நக்கலடித்ததற்காக, சாபத்தால் சோழன் திசையுக்கிரம சிங்கனின் மோள் மாருதப்புரவீகவல்லி குஷ்டமும் குதிரை முகமும் பெற்றாளாம். பிராயச்சித்தம் தேட, படை பட்டாளங்களுடன், கீரிமலை வந்து, நீராடி மூழ்க குதிரை முகம் நீங்கப் பெற்றதாம்.
எங்களூரின் கொடிச்சிவாலிக்கிழவி No: 2. மாகியப்பிட்டி பெட்டை ஒருவளை "ஆட்டக்காற, குதிரை மூஞ்சை வேசை," என்று திட்டுவார்.

உண்மையில், பெட்டையின் மூஞ்சி குதிரைத்தனமானதுதான். குணமும். மாருதப்புரவீகவல்லியின் குதிரை முகம் போனதன் பொருட்டு, அவ்விடம் மாவிட்டபுரம் ஆனமை கதை.
ஆனால், சோழவிளவரச அம்மணி, நன்றிக்கடனாக வைத்த

கோவில்களின் மூலவர், துவக்கத்தில், முருகனல்லர்.
அவர் அண்ணன்.

நான்கு மனிதக் கைகளும் ஒரு கரிக்கையான கரி ஆண்யானை. துதிக்கையும் கொண்ட கஜமுக கணபதியாம் பிள்ளையாரே.

ஒரே கோட்டு நீளத்துக்கு வைத்த ஏழு பிள்ளையார் ஆலயங்களில் மூன்று, என்னிடமான அளவெட்டியிலேயே உள.

கொல்லன் கலட்டியில் தொடங்கி, கல்வளையில் முடிவுறும் சப்த, ஓம் சத்த விநாயகர்களில் மூவர் குடி குத்திய அளவெட்டி ஆலயங்களின் பெயர்கள் வருமாறு

1) அழகொல்லை (இது ஆரம்பத்தில் 'ஆலங்கொல்லை' என அழைக்கப்பட்டதான தகவலும் உண்டு. நிஜம் தெரியாது.

2) கும்பிளாவளை (இதற்கும், பெரிய நிஜம் தெரியா சரிதம்
உண்டு. பெயரிலேயே குழப்பம்.
கும்'ப்'ளா வளையா எலி வளையா என்பது போக,
கும்பி'ளா' வளையா, கும்பி'ளா' வழையா, கும்பிழாவ்'ளை'யா, கும்பீ'ழா'வ்'ழை'யா என்ற பெரு கு(ழ.ள)ப்பம்.
தவிரவும், "அளவெட்டி" என்ற இடத்து காரணப் பெயருக்கும் சிக்கலுண்டு. இது, காரண இடுகுறி என்பாருமுளர்.
'ஆளை வெட்டியார்' கதை நீளம். என் விண்கலத்திலும் நீளப்பாயும்.

ஆதலினால், இப்போதைக்கு வேண்டாம்.
(தமிழின் ஆகப்பெரிய குறைபாடு, இந்த கொம்ப்'ள'வு: மவ்வ்'ழ'வுதான். சங்கநாளில் இவை மாறிப் பிரயோகிக்கப்பட்டன. இது பெருமையாம். நெழிவு சுளிவும், நெளிவு சுழிவும் ஏற்கப்பாலனவாக.

ஆஹாஹா! குரங்கு பேசிய முதல் பாஷை தமிழிலுள்ள "ழகரம்": எம்மொழியிலுமே இல்லை யென்பவர்க்கு, பரந்த பாஷையறிவு இல்லை. மூதேவிகளுக்கு Italian இன் GL உம் French இன் Ille உம் French-Italian இன் GN உம் தெரிய chance கிடையாது.

கும்பளாவளைப் பிள்ளையார் நீள்நாள் முன், இன்றுள்ள கருப்பக்கிரஹ ஸ்தானத்தில் இருந்த மாமரத்தின் கீழ் பிரதிஷ்டிக்கப்பட்ட ஒரு கல்லிலிருந்து, ஸ்தாபிதமானதாக கதை உண்டு. மாவடித்திட்டில் கல் வைத்தவர், என் முன் சந்தியினரென அம்மம்மா சொல்லுவார். புளுகினாரா தெரியவில்லை!

3) பெருமாள் கடவை, பெருமாக்கடவை (பெருமாள் வழிபாடு முன்னர் இருந்திருக்க வேண்டும்.

பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்கான கதையாக இந்த Multi-Verse கதை மாறாதிருத்தற் பொருட்டு, பிள்ளையாரை இப்போ கைவிடலாம்.

இந்த பிள்ளையார் கதையை நான் சொல்ல பெரு காரணமுண்டே.
கந்தரோடை, அளவெட்டி பிள்ளையாரப்பாக்களின் சப்பரத் திருவிழா ஒரே நாளில்.
அன்று, சாமி காவாங்கலிந்து கழன்று, சப்பரத்தில் ஏறியபோதுதான், என் விண்கலம், 'சிசிசி திரிசங்கு சொர்க்கம்' விண்ணில் ஏறியது. ஆனால், நான் கந்தரோடை மற்றும் அளவெட்டி மாருதப்புரவீகவல்லி புகழ், விநாயக ஆலயங்களின் தேர்த்திருவிழாக்களின் போது பிரசன்னமாயிருந்தேன்!

சப்பரத்துக்கு மறுநாளே தேர், என்பது தெரிந்ததே.
ஒரு விஷயத்தை, பிரசினத்தை தேர் (choose), பின் அதை தீர்க்கமாக தீர்(த்தம்) solve- என்று மனுஷ்யத்துக்கு புகட்ட வேண்டும் என்பேன்.

தீர்த்தம் (கொடியிறக்கம்), பிரதம பூசாரியை வீட்டில் விடல், பூங்காவனம், சண்டீஸ்வர பூஜை, வயிரவர் மடை, வைரவர் காப்பவிழ்ப்பு, பைரவர் கட்டவிழ்ப்பு ஆயனவற்றையும் Inter-Steller காலப்பயணத்தில் நான் கண்டேன். எல்லா விற்பன்ன, விண்ண, விண்ணியல் astro- physicists இனதும் Time Travelilng இன் மூலக்கோட்பாடு, காலத்தில் பின்னோக்கி செல்வதாகும். ஆனால், எனது உயருச்ச பாண்டித்திய பயணம் இருவழியுமானது.

அஃது ஆவது, என் விண்பாய்ச்சலின் கூறான, காலப்பாய்ச்சல் முன்னேயும் பாயும் பின்னோக்கியும் பாயும்.

அஃது அஃது ஆவது என்னால் 60,00000 வருஷ பின்போய், dinosaur கூட்டத்துள் தப்பியோடவும் 2027 [4 BC] ஆண்டுகள் பின்னால் நகர்ந்து Nazareth ஊர் போய் Jesus Of Nazareth இன் போதனைகளையிட்டு கேள்வி எழுப்பவும், 9876543210000 வருஷமுன் போய்,, தனது தொடர்த்தீ பிளிறும்
கோரவுஷ்ண சக்தியை இழந்து, Red Giant ஆகி, ஆவியான எம் சூர்ய அழிவை 6,00000000 பின்னோக்கி பார்க்கவும் முடியும்!

இன்னொன்றும் உண்டு.
மூன்று பிரம்ம்மாண்ண்டங்கள் எனக்கு வியப்புறுத்துவன.

காலம் வெளி மனம்.

வாஸ்தவத்தில், இதில் இறப்பையும் இணைக்கலாம். மரணம் ஒரு விடை காண முடியா விஷயம்.

ஆடாடென்று வாணாள் பூரா ஆடுகிறான், பாவி. பிறகு
பொசுக்கென்று போய் பிடி சாம்பல்!!
'பிடி சாபம்" என்று சபிக்கப்பட்ட மாதிரி பிடி சாம்பல்.
Isaac Newton. Albert Einstein. Galileo Galilei. Stephen Hawking கூட்டத்துடன், Sigmund Freud ஐயும் இணைக்கலாம். அந்தாளும் பாவம்.

ஆனால், இந்த இறப்பு இருக்கிறதே, அது புரியப்பாலதன்று எவராலும்.
புரியாத போது, புளுகையும் நம்புவது மானுடம். இதனால்தான், சாத்திரிமாருக்கு 'யாவாரம்'.
மரணம் பற்றி தர்மக்கடவுளும்

மஹாபாரதத்து யுதிஷ்திரர் என்கிற தர்மரின் தந்தையுமான தர்மரின் தகப்பன் பாண்டு அல்ல. எம'தர்ம'ராஜனிடம் கேட்போமென்று பார்த்தால், அதற்குள், மிரிகண்டு முனிவரின் மகன் மார்க்கண்டேயர் வந்து, சிவனைக் கொண்டு, யமனைக் கொன்று எல்லாவற்றினையும் குழப்பியடித்து விட்டார்.
சொர்க்கம் இன்னும் எவ்வளவு தூரமென, என் மண்டைக்கபாலத்துள் சொருகப்பட்ட CHIP ஊடு வினவியபோது, "கிட்டத்தான்," என்று ஒரு அசரீரி கலத்துள் காதுள் முணுமுணுத்தது.

முன்னோக்கிப் பாய்ந்ததென் விண்கலம், SiSiSi Trisanku Paradise.

இவ்வுலக இரண்டு 2.
எத்தனையோ Nebular Celestial Giants. Black Holes (கருங்கோறைகள்), நக்ஷ்ஸத்திரத் தொகுதி பிரம்ம்மாண்ண்ண்டங்கள் எனப்பாய்ந்து, சிசிசி திரிசங்கு சொர்க்கம் முன் எகிறியபோது, என் மண்டையுள் ஒரு 'விச்ச்ச்சித்திர' நினைவு ஓடியிருக்க வேண்டும்.
அது பற்றி முதலில் English இல் சொல்லி பிறகு தமிழ்ப்படுத்துகிறேன்.

Religious people may go to any degree to promote their business. There was (fake) news exposed by some FAKES that the first man ever walked on Moon Neil Armstrong (APOLLO 11/ July 20. 1969) heard Adhan (call for prayer) in spaceship. And even he converted to Islam.
Damn Lie.

There were false information throughout that Astronauts experienceed Spiritual Awakening And Signs Of Prividence.
Damn Lie.

Hindu fanatics opposed Moon Landing saying that MAN mustn't put his foot on Lord Shiva's head since he has the Moon Cresent on his head locks.
And—
God's Men (?) says that Universe is filled with Pranava Mantra, Ohm. eternally.
Damn Lie.

I think all these matters should've gone through my mind.

மதவாதிகள் தங்கள் 'யாவாரத்தை' உயர்த்த எந்நிலை வரையும் போவர். 'முத்முதலாக', சந்திரனில் நடந்த நீல் ஆர்ம்ஸ்றோங், (முஸ்லிம்களின்) பிரார்த்தனை அழைப்பான அதன் ஐ விண்கப்பலில் கேட்டாரென்றும் அவர் இஸ்லாத்துக்கு மாறினாரென்றும் பொய்யர்களால் பொய்க்கதை சொல்லப்பட்டது.
படு(ஊ) பொய்.

விண்வெளி ஆட்கள், ஆத்ம நிர்வாண அனுபவங்களிலும் கிருபிக்கும் கடவுள் பற்றிய சமிக்ஞைகளையும் உணர்ந்ததாக பொய்ச்செய்தி உண்டு.
படு(ஊ) பொய்.

சிவன் பிறையை தன் ஜடாமுடியில் சூடியதனால், மனிதன் தன் பாதத்தை சிவன் தலையில் வைக்கக்கூடாதென்று, இந்து தீவிரவாதிகள் சந்திரனில் தரையிறக்கத்தை எதிர்த்தனர்.

சாமியர் ஓம் பிரணவ மந்திரம் சாஸ்வதமாக பிரபஞ்சத்தை நிறைக்கிறது என்பர்.
இந்த விஷயங்கள் எல்லாம் என் மண்டையில் நுழைந்திருக்க வேண்டும்.

அவ்வுலக இரண்டு 2
இவ்வுலக நான் ஆகிய, சிறீசுவின் மண்டையுள் புகுந்த விவகாரங்கள், அவ்வுலக நான் ஆகிய சிறீசுவின் மண்டையில் புக நான் கள் குழம்புண்டோம்.

இந்த பொய் மந்திரங்களின் போலிமை பற்றி, சிறீசுக்களின் Chips களில் மின்பொறி பிறந்திருக்க வேண்டும். அதில் ஏன் காயத்ரி மந்திரம் வந்திற்று என்பது தெரியாது.

விஸ்வாமித்ர முனியாய ராஜரிஷி எழுதியதாக சொல்லப்படும் காயத்ரி (ஸாவித்ரி) மந்திரம் றிக் வேதம், மண்டலம்: 3, 62, 10.) நிறைய ஓச்சப்படும் ஒரு கோஸமாய்ப் போயிற்று.
பகவத் கீதை போல இதுவும் விற்பனைக்கு வசதியானது.
காயத்ரி மந்திரத்தை ஆளுக்காள் தத்தம் வகைக்கு வியாக்கியானிக்கும் வசதியும் வியாதியும் உண்டு.

சுவாமி சிவானந்தா, காயத்ரியை ஈஸ்வரம், என்று சொல்ல, S.ராதாகிருஷ்ணர் ஒளி சூர்யன் என்கிறார்.

அங்கத்தைய சிறீசுவின் சிசிசி திரிசங்கு சொர்க்கம் விண்கலமும்
இங்கத்தைய சிறீசுவின் சிசிசி திரிசங்கு சொர்க்கம் விண்கலமும் சொர்க்கத்தை நோக்கி விரைவதாக இரண்டு சிறீசுகளின் மண்டைகளிலும் நினைவு புகுந்திற்று. ஆனாலோ, இரு விண்கலங்களினதும் Commanding Cockpit இன் சூழ் Monitors இல் நரகந்தான் தெரிந்திற்று!!

அவை பல நரகங்களோ, எனவும் சந்தேகம் வந்தது.
கிங்கிரர்கள் பூதாக்னி பறக்கும் கொடு வெக்கைக்கிடாரங்களில் உயிர் மாந்தரை உருக்கினர். எண்ணெயில் மனிதக்குருதியும் நிணமும் மிதந்தன.
சிறிது சிறிதாக பிரபஞ்சம் பூரா கோரத்தீயில் விழுவதாக விண்கல ஒளிப்படப் படங்குகளில் வெளிச்சம் சிதறுண்டது.
இதென்ன நாஸமென்று புரியவில்லை!

ஓம்பூர் புவா ஸ்வா
தாத் ஸவிதூர் வரேண்யன்

பார்கோ தேவஸ்ய திமாஹி
தியோ யோ நா பிரஸோசயாத்,
என்றது பொய்யெனப் புரிந்திற்று.

இரண்டு சிசிசி திரிசங்கு சொர்க்கம் விண்கலங்களும் மோதின.
இரு சிறீசுக்களும் ஒருவராயினர்.

பிரபஞ்சம் பூரணமாய் எரிந்து, ஒன்றுமே இல்லாததாயிற்று.
Big Bang உம், பிள்ளாயார் கோவில் தேர்த்திருவிழாவும் இனி புதிதாய் வரவேண்டும்.
வராமலும் போகலாம்! அ

கற்சுறா




# உரையாடலை மறுக்கும் பெயர்வழிகள்

முதலாவது இலக்கியச் சந்திப்பாக எனது அனுபவத்தில் பார்க்கக் கிடைத்தது 1992ம் வருடம் பாரீஸ்: லாப்பிளானில் நடைபெற்ற 14வது இலக்கியச் சந்திப்புத்தான். அதுவரை தனியே ஜேர்மனிக்குள் நடைபெற்று வந்த அந்தச் சந்திப்பினை முதன் முதலாக சபாலிங்கம் அவர்கள் ஜேர்மனிக்குள் வெளியில் அதனைக் கொண்டு வந்தார். பாரீசிலிருந்த (கலைச்செல்வன், லக்ஸ்மி உடப்பட) பல்வேறு இலக்கிய ஆர்வலர்கள் இணைந்திருந்து நடத்தி முடித்தாலும் அந்த அரங்கத்தில் சுற்றியிருந்த அத்தனை இலக்கிய ஆர்வலர்களுக்கும் பின்னால் ஒரு கதிரையில் நாடியில் கைவைத்தபடியிருந்த சபாலிங்கம் அவர்கள் எனது நினைவிற்குள் இப்பொழுதும் நிற்கிறார். ஒரு சிறிய பொடியனாய் அந்த நிகழ்வை இரண்டு நாளும் மிகவும் புதிய அனுபவத்துடன் கலந்து கொண்டு வியந்து பார்த்தவன் நான். அந்த அனுபவத்தினூடே நான் இன்றுவரையான இலக்கியச் சந்திப்பு என்ற அந்த சமூகப் பெரும் நகர்வை அணுகிவருகிறேன். அந்த 14வது இலக்கியச் சந்திப்பின் தொடர்ச்சியாகவே அனைத்தையும் கவனித்துவருகிறேன் பங்கு கொண்டு வருகிறேன்.

1992ம் வருடம் முதன் முதல் அதில் கலந்து கொண்ட பொழுது, இலக்கியச் சந்திப்பின் நெறிமுறைகளோ அது எவ்வாறு தொடரப்படுகிறது என்றோ அப்பொழுது நான் அறிந்திருக்கவில்லை. அதன் தொடர் சந்திப்புக்களில் பங்கு கொள்ளக் கிடைத்த காலத்தின் பின்னர்தான் அதனை அறிய முடிந்தது. அதனைத் தொடங்கியவர்கள், அதனோடு முரண்பட்டவர்கள், அதிலிருந்து வெளியேறியவர்கள் என்று பல கதைகளை அறிய நேர்ந்தது. ஆனால் இலக்கியச் சந்திப்பு ஏதோ ஒரு வகையில் தொடர்ந்தும் நடைபெற்றுக் கொண்டேயிருந்தது.

அதற்கான ஒரு நிரந்தர நிர்வாகக்குழு இல்லை என்பதும், நிரந்தரத் தலைமை இல்லை என்பதும் அதற்கான இயங்கு திசையை வெளிக்காட்டி நின்றது என்றாலும் அதற்குள்ளும் ஒரு ‘மறைமுக நிழல் அதிகாரக்குழு இருந்தே வந்தது’ என்ற குற்றச்சாட்டே அதற்கு வெளியில் அதிகமான இடங்களில் முன்வைக்கப்பட்டு வந்தது. இலக்கியச் சந்திப்பின் பலத்தை அது சீர்குலைத்தது என்றாலும் அது இன்னொரு வகையில் பலமாகவே தொடர்ந்து கொண்டிருந்தது. அன்றைய நெருக்கடியான காலகட்டத்தில் இலக்கியச் சந்திப்பினை தொடர்ந்தும் நடைபெற வைப்பதற்கு அந்த நிழற்குழுதான் முன்னின்று உழைத்தது எனவும் இன்று 50 சந்திப்பு வரையாகக் கடந்து வருவதற்கு மறைமுகமாகவேனும் பெரும் உழைப்பினைச் செலுத்தியது எனவும் பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். இதனை நான் பின்னர் பங்கு கொண்ட பல இலக்கியச் சந்திப்புக்களில் நேரடியாகவே உணர்ந்தும் இருக்கிறேன்.

ஒரு நெறிமுறையை அடையாளம் காட்டிக் கொண்டு அதற்கெதிராகவே இயங்கும் ஒரு இடமாக இந்த இலக்கியச் சந்திப்பு இருக்கிறது என்ற குற்றச்சாட்டு அதனைத் துரத்திக் கொண்டேயிருந்தது. இந்த நிலையைக் கேள்விக்குட்படுத்திய தருணங்களிலெல்லாம், தர்க்கரீதியில் அதற்குள் வெளிப்படையான உரையாடல் நிகழவேயில்லை. நண்பர்களாய் உரையாடக் கூடிய சந்தர்ப்பங்கள் அதிகமாக இருந்தும் அது நடைபெறவில்லை என்பது மிகவும் கவலையானது.

நாங்கள் எக்ஸில் இதழ் வெளிக் கொண்டு வந்த காலங்களில் ஸ்ருட்காட் இலக்கியச் சந்திப்பிலும் பேர்லின் இலக்கியச் சந்திப்பிலும் இதனை நேரடியாக நாம்

உணர்ந்து கொண்டோம். அதனை வெளிப்படையாகவே எதிர்த்து முரண்பட்டு நின்றோம். அந்த எதிர்குரலுக்கான பதிலை சிறு உரையாடலாகத் தன்னும் அங்கே நிகழ்த்த முடியாதிருந்தது மிகப்பெரிய பலவீனம் என்றே சொல்லுவேன்.

ஆக, சமூகமாற்றத்திற்கான பொதுவெளியாகக் கருதப்படும் இந்தச் சந்திப்பின் பின்னால் இருந்தது எல்லாம் உண்மையில் என்ன? என்று இப்பொழுதும் மீண்டும் மீண்டும் கேட்கத் தோன்றும் கேள்விகள் இவை.

புலம்பெயர் சூழலில் பாசிசச் சூழலுக்கு எதிராய்ப் பேசக் கூடிய ஒரு இடமாகத் தொடங்கப்பட்டதும் தொடர்ந்து செயற்பட்டு வந்த இடமாகவும் இருந்தது இந்த இலக்கியச் சந்திப்புக் களம் என்றாலும், அதற்குள் இருந்த அதிகாரம் கேள்விக்குட்படுத்தப்பட்ட போதும் ஒரு உரையாடலாக விரிந்த தளத்தில் அது பலம் பெறவில்லை. விரிவடையவில்லை. உரையாடலற்ற ஒரு மறைமுகத்தனத்தின் அதிகாரமே பலரையும் ஒவ்வொரு காலத்திலிருந்தும் விலகிப் போகச் செய்திருக்கிறது. விலகிப் போன பின்னாலும் மவுனமாக இருக்கப் பண்ணியிருக்கிறது என எண்ணுகிறேன். இந்த மவுனம் ஒருபொழுதிலும் உண்மையைப் பேச முனைவதில்லை. மாறாக உண்மையைப் பேச முடியாத தருணத்திலேயே மவுனம் இங்கே பெயர் கொள்கிறது. உரையாடலற்ற அந்த மவுனம் ஒரு இடத்தில் அவர்களையே தரம் இறக்கிவிடும் என்பதே உண்மை. அதுவேதான் நடந்து கொண்டிருக்கிறது.

புலம்பெயர் சூழலில் நடைபெற்று வந்த இலக்கியச் சந்திப்பினை யுத்தம் முடிவுற்ற பின் இலங்கையில் நடத்தக் கொடுக்கப் பலர் முனைந்த பொழுது பல்வேறு வாதப்பிரதிவாதங்கள் முன்வைக்கப்பட்டது. உண்மையில் அங்கே சிறிய அளவின் அடிப்படையில் என்றாலும் ஒரு உரையாடல் இடம் பெற்றது. அதனை வரவேற்க வேண்டும். 'இலங்கைக்கு ஏன் இலக்கியச் சந்திப்பினைக் கொண்டு

**உரையாடலற்ற ஒரு மறைமுகத்தனத்தின் அதிகாரமே பலரையும் ஒவ்வொரு காலத்திலிருந்தும் விலகிப் போகச் செய்திருக்கிறது. விலகிப் போன பின்னாலும் மவுனமாக இருக்கப் பண்ணியிருக்கிறது**

செல்ல வேண்டும்' 'நாம் அதனை அனுமதிக்கப் போவதில்லை.' எனவும்.' அது புகலிட இலக்கியச் சந்திப்பே. அதனை இலங்கையில் நடத்தத் தேவையில்லை' எனவும் 'இன அழிப்பு நடந்த மண்ணிற்கு அதனைக் கொண்டு செல்ல அனுமதிக்க மாட்டோம்' எனவும் ஒரு தரப்பு முரணாய் நின்ற பொழுதும் அந்தக் கருத்தோடு முரண்பட்டு இலங்கைக்கு இலக்கியச் சந்திப்பினைக் கொண்டு சேர்க்க வழி வகுத்தது அந்த இலக்கியச் சந்திப்புக் கொண்டிருந்த நெறிமுறைதான் என நினைக்கிறேன்.. அது கொண்டிருந்த நெறிமுறை பல்வேறு பொழுதுகளில் பலவீனப்பட்ட நெறிமுறையாக இருந்தாலும் அந்த நெறிமுறை அதனைச் சாத்தியப்படுத்தியது. இன்னொரு வகையில் அது பலமானதும் கூட.

ஆனாலும் அதன்பின் இலங்கையில் நடத்தப்பட்ட இலக்கியச் சந்திப்புக்களை மீளவும் புலம் பெயர்ந்து இருந்தவர்களே அதிகமாகப் பின்னிருந்து இயக்கத் தொடங்கினார்கள். எவ்வாறான நிழல் நிர்வாகத்திற்கு எதிராக நாமெல்லாம் குரல் கொடுத்து அதனை நீக்க வேண்டும் என விரும்பினோமோ அதனையே பின்நாட்களில் நம்மவர்களில் சிலர் செய்யத் தொடங்கினார்கள். இதுபற்றி வெளிவந்த எந்த உரையாடல்களையும் தகுந்த முறையில் கருத்தறிந்து உரையாட வழமைபோல அவர்களும் தயாரற்று இருந்தார்கள். இலங்கையில் நடைபெற்ற இலக்கியச் சந்திப்புக்களை

அவர்கள் தமது விடுமுறைக் காலங்களில் மட்டுமே நிகழ்த்துவதும் அதனை ஒரு விடுமுறைக் காலச் செயற்பாடாகவே தொடர்ந்தும் உருவாக்க நினைப்பதுமாகவே நடந்து கொண்டிருப்பது சுத்த அபத்தமல்லாது வேறு என்ன சொல்ல முடியும்?

இதில் மிகப்பெரிய அநீதியாக இருந்தது மலையக இலக்கியச்சந்திப்பின் நடைமுறைகள். புலம்பெயர் சூழலில் இருந்து சென்றவர்கள் அதனை நடத்திய விதம் ஒரு புறமிருக்க, இலக்கியச் சந்திப்பிற்கென இருந்த குறைந்த நெறிமுறைகளையும் மதிக்காது அடுத்த இலக்கியச் சந்திப்பிற்கான தெரிவைச் செய்தார்கள். இதற்கெதிராகச் சண்டையிட்டே 48வது இலக்கியச் சந்திப்பினை ரொரண்டோவில் நடத்துவதற்காக என்னால் எடுக்க வேண்டியிருந்தது. இதில் கவலை என்னவென்றால் அவர்களது அற்பத்தனங்களை எல்லாம் சுட்டிக் காட்டிச் சண்டை செய்ய வேண்டியிருந்தது என்பதுதான்.

48வது இலக்கியச் சந்திப்பினை இங்கு செயற்படுத்தத் தொடங்கிய போது நான் ரொரண்டோவில் ஒரு குழுவை இங்கு தயார்படுத்த வேண்டியிருந்தது. அதுவேதான் இலக்கியச் சந்திப்பின் நெறிமுறையாக நான் கருதுகிறேன். எனது நண்பர்களுடன் இணைந்து அதனைத் தயார் செய்தேன். அது என்னோடு கருத்தொருமித்தவர்களாக இருக்க வேண்டும் என நான் அடம் பிடிக்கவில்லை. எம்மைவிட சமூக இலக்கிய ஆர்வம் கொண்டியங்கும் இளைய தலைமுறையையே அதன் செயற்பாட்டுக் களம் அமைக்க வழி செய்தோம். அவர்களின் வழிகாட்டலிலேயே யாரையெல்லாம் இணைப்பது செயலாற்றுவது என்பதெல்லாம் நடந்தேறியது. அவர்களுடனும் கூட அதிகம் சண்டை செய்தோம். ஆனாலும் அது ஒரு குழு என்ற அடிப்படையில் நமது சண்டைகளும் செயற்பாடுகளும் சந்தோசங்களும் உரையாடல்களும் அதன் கட்டுப்பாடுகளுக்குள் மட்'டுமே நிகழ்ந்து நடந்தது. இன்றும் 48வது இலக்கியச் சந்திப்பு

என்றால் அதுகுறித்த கருத்து எதுவும் தெரிவிக்க வேண்டும் என்றால் அந்தக் காலத்திற்கு அந்தக் குழு பொறுப்பு எடுக்கும் என்ற புரிந்துணர்வு அனைவருக்கும் இருந்தது. இந்த வழிமுறைக்கும் செயற்பாட்டுக்கும் அந்தக் குழுவிற்கு நான் இந்த இடத்தில் நன்றி சொல்ல வேண்டும். அதன் போதாமைகள் குறித்து நான் அதிகம் அவர்களுடன் சண்டை செய்திருக்கிறேன். ஆனாலும் 48வது இலக்கியச் சந்திப்பின் முடிவுக்கும் நிறைவுக்கும் அவர்களது பெரும் உழைப்பு நன்றியுடன் பதியப்பட வேண்டியது. ஏன் சொல்கிறேன் என்றால் அவர்கள் அனைவரும் இலக்கியச் சந்திப்பின் வழமையான நெறிமுறைகளில் பழக்கப்படாதவர்கள். அப்படி யிருந்தும் இயலுமான அளவில் ஒரு அமைப்பிற்குரிய வழியில் அதன் சாத்திப்பாடுகளை ஏற்படுத்தியவர்கள். அவர்களுக்கு மீண்டும் என் நன்றிகள்.

இவ்வாறுதான் நாம் இலக்கியச் சந்திப்பினைக் கடந்து போக வேண்டும் என்று நினைக்கிறோம். ஆனால் 49வது இலக்கியச் சந்திப்பு கிளிநொச்சியில் நடைபெற்றபின்னர் தமயந்தி அவர்களால் அது நோர்வேயில் நடத்துவதற்காக எடுக்கப்பட்டது. அதே நேரம் லண்டனில் நடத்துவதற்காக ராகவனால் கோரப்பட்டு அது லண்டனுக்குக் கொடுக்கப்பட்டது. இந்தக் கொடுக்கல் நிகழ்வு வழமையான சுத்துமாத்து என்பதனை நான் சுட்டிக்காட்டிச் சண்டையிட்ட பின்னர் லண்டனுக்கு அளிக்கப்பட்ட சந்திப்பு நோர்வேயிற்கு ராகவனால் விட்டுக் கொடுக்கப்பட்டது. எடுப்பதும் பின்னர் விட்டுக் கொடுப்பதுமான இந்தச் செயற்பாடு சொற்ப காலமாக இதன் பின்னிருந்து இயக்கும் ஐரோப்பிய இலக்கியச் செயற்பாட்டாளர்களால் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ரொரண்டோவிற்கு இதனை எடுத்த போதும் பாரிசிலிருந்து மலையகச் சந்திப்பிற்கு வக்கேசனுக்குச் சென்றவர்களோடு சண்டையிட்டுத்தான் எடுக்க வேண்டியிருந்தது.

ஆனால் இவ்வாறு சண்டையிட்டு நோர்வேயிற்கு எடுத்த தமயந்தியும் பானுபாரதியும் நோர்வேயில் வாழும் எந்த உறுப்பினர்களையும் இதுவரை அதனுடன் இணைத்ததில்லை. நோர்வேயில் நடத்தப்பட வேண்டிய இலக்கியச் சந்திப்பினை தமயந்தி அவர்கள் விடுமுறைக்காகவோ அல்லது தனிப்பட்ட காரணத்திற்காகவோ இலங்கை சென்ற இடத்தில் இருந்து தான் அதனை இலங்கை: அனலைதீவில் செய்யப் போவதாக அண்மையில் அறிவித்திருந்தார். இது ஒரு வேடிக்கையான அறிவிப்பு என்பதல்ல. மிகுந்த கண்டனத்திற்குரியது. இது பலருக்கு அதிர்ச்சியான செயலாக இருந்தது என்றாலும், இதுவரையான இலக்கியச் சந்திப்பு என்ற ஒரு நடைமுறைக்குள் இருந்த அத்தனை இயல்புகளையும் மறுதலித்து இந்த அறிவிப்பினை அவர் செய்திருக்கிறார் என்றாலும் இதற்கான கண்டனத்தை பெருமளவில் யாரும் செய்யவில்லை. ராகவன் அவர்கள் ஒரு சிறு குறிப்பாக இதனை எழுதியிருந்தாலும் தொடரும் பலரது மவுனம் அதிர்ச்சியளிக்கிறது.

ஏன் நோர்வேயில் நடத்தமுடியாது இலங்கையில் நடத்தமுனைகிறோம் என்ற எந்த வியாக்கியானங்களையும் தமயந்தியும் பானுபாரதியும் இதுவரை சொல்லவில்லை. நோர்வேயில் வாழும் பலர் இதனை நோர்வேயில் நடத்த விரும்பியும் அவர்களால் அதனை எதிர் கொள்ள முடியவில்லை. இதற்கான காரணங்களை அறியும் பொருட்டு நண்பர்களுக்கிடையிலான ஒரு உரையாடலை ஒழுங்கு செய்ய விரும்பிய பொழுதும் தமயந்தியும் பானுபாரதியும் அதனை மறுதலித்திருந்தார்கள். இதுவும் ஒரு வன்முறையான அதிகாரத் திமிரே. உரையாடலை அவர்கள் இப்பொழுதும் விரும்பவில்லை. இது இன்னொரு ஆச்சரியத்திற்குரிய செயல்.

இதற்கு அப்பால், வழமையான ஐரோப்பிய இலக்கிய ஆர்வலர்கள், தாங்கள்தான் இதுவரை இலக்கியச் சந்திப்புக் குறித்த முறை கேடுகளைத் தகர்த்து எறிந்தவர்களாகச் சொல்லி வருபவர்கள் இந்த இடத்தில் காக்கும் மவுனம் நல்ல அறிகுறியல்ல. இதிலும் சிலர் தமயந்தி பானுபாரதி அவர்களிடம் நீங்கள் எதேச்சதிகாரமாக அனலை தீவில் வைப்பது என்றால் கொஞ்சம் பிந்தி வையுங்கள் நாங்கள் வந்து கலந்து கொண்டு அடுத்த இலக்கியச் சந்திப்பினைக் கேட்டு வருகிறோம் என்றும் சொல்லியிருக்கிறார்கள் என அறிகிறேன். உண்மை அதுதானா என அவர்கள் தான் சொல்ல வேண்டும்.

முழத்துக்கு முன்னூறு முறை இலக்கியச் சந்திப்புக் குறித்து முழக்கம் செய்யும் சோபா சக்தி போன்றவர்கள் காக்கும் மவுனம் ஆபத்தான செயல். எங்காவது நடத்தட்டும் இதில் சண்டை செய்ய முடியாது என்று அவர்கள் சொல்லியிருப்பதாகவும் அறிந்தேன். அதுவும் உண்மை என்றால், அவர்கள் இவ்வளவு நாளும் ஏன் சண்டை செய்தார்கள்? அதற்கான அர்த்தம் என்ன? இப்போதிருப்பது போல் அப்போதும் பாரா முகமாய் இருந்திருந்தால் இன்றைய இலக்கியச் சந்திப்பின் மோசமான நிலையைவிட நிச்சயம் நன்றாக இருந்திருக்கும். அற்பத் தனங்களுக்குள் அகப்பட்டு ஒரு தற்குறித் தனத்தில் மூழ்காது இருந்திருக்கும். என்று விளையும் எண்ணப்பாடுகளுக்கு அவர்கள் பதிலளிக்க வேண்டும்.

ஆனால் இப்படிச் சண்டை செய்து சண்டை செய்து நீங்கள் மட்டும் களைத்துப் போனதாகக் கதை சொல்வது வேடிக்கையானது. உங்கள் அனைவருக்கும் தெரியுமோ தெரியாது இலக்கியச் சந்திப்பு என்பது பல பலவீனங்களுடன் வழிநடத்தப்பட்ட பலமான செயற்பாடுதான். ஆனால் இன்று தமயந்தியும் பானுபாரதியும் செயற்படுத்தமுனையும் களம் அவர்களுக்கு ஒரு களங்மான கதையைப் பதிவு செய்தே ஆகும். ஒரு சிறிய உரையாடலைக் கூட மறுக்கும் சூழல் என்பது அவர்களது தற்குறித்தனம் மட்டுமல்ல உங்களது தற்குறித் தனமும் சேர்ந்ததே அது.

# ஒரு பாசிஸ்ட் தேசியத் தலைவரான கதை!

ஜோர்ஜ் இ.

முப்பது வருடங்களுக்கு முன்னால், தாயகம் வெளியிடுவதை நிறுத்தி, நான் வேலை செய்த இடத்தில் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கிய காலம். யாழ்ப்பாணி அரசியலில் எந்த ஆர்வமும் இல்லாமல், தமிழ்ப் பத்திரிகைகள் கூடப் படிப்பதைக் கூட நிறுத்தியிருந்தேன்.

கொஞ்ச நாளின் பின்னால், 'தமிழ்த் தேசிய ஊடகங்களை'க் கண்ணில் காண நேர்ந்த போதெல்லாம், என்னை திகைப்பில் ஆழ்த்தியது இந்த 'தேசியத் தலைவர்'.

இதென்னடா, நாங்கள் கொஞ்சம் கவனக்குறைவாக இருந்தாலேயே, ஊரில் பல அநியாயங்கள் நிகழ்ந்து விடுகின்றன என்று அதிசயிக்க வேண்டியிருந்தது.

அது வரை நாளும், பிரபாகரன் தலைவர் என்ற ஒற்றைச் சொல்லினால் மட்டுமே அறியப்பட்டவராக இருந்தவர். அவரோடு நெருக்கமாக இருந்தவர்கள் தம்பி என்று மட்டுமே அழைத்திருந்தார்கள்.

மாத்தயா கூட பிரதித் தலைவர் என்றே அறியப்பட்டிருந்தார். Deputy என்பதற்கான தமிழாக்கமாக பாலேய்ங்கண்ணை சொல்லிக் கொடுக்க, அதைத் தான் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

ஆனால், தேசியத் தலைவர் என்று பிரபாகரனை அழைத்ததை நான் ஒருபோதும் கண்டதில்லை.

புலி ஆதரவுப்புலிவால்களுக்கு அவர் வெறும் தலைவர் தான்.

அந்தத் 'தலைவர்' என்ற வார்த்தையை அழைப்பதில் அவர்கள் கொண்டிருந்த பெருமையை என்னால் இன்றைக்கும் நினைவு கூட முடியும்.

அப்படி ஒரு பவ்வியம்!

தலைவர் திருப்புகழைப் பாடப் பாட வாய் மணக்கும்!

தேசியம் என்பது புலிவால்களுக்கு எப்போதும் அந்நியமான ஒரு வார்த்தையாகத் தான் இருந்தது.

தாயகம், தேசியம், தன்னாட்சி என்றெல்லாம் பாலேய்ங்கண்ணை நீட்டி முழக்கியதை, என்னைப் போன்ற 'துரோகிகள்' எல்லாம் வாசித்து மனம் திருந்தி, தண்ணீரால் ஞானஸ்நானம் பெற வேண்டும் என்பதில் கொண்டிருந்த அக்கறையை, இந்த புலிவால்கள் தாங்கள் வாசிக்க வேண்டும் என்பதில் கொண்டிருந்ததில்லை.

அவர்களுக்கு 'அண்ணை அடிச்சுப் பறிப்பார்!' தான்.

ஒருவேளை, இதெல்லாம் எங்களுக்குத் தான் விளங்கும் என்று அவர்கள் நினைத்திருக்கக் கூடும்.

தேசியம் என்பதன் தாற்பரியத்தை யாழ்ப்பாணிகள் ஒருபோதும் விளங்கிக் கொண்டதில்லை.

புலிகளால் ஊக்குவிக் கப்பட்டு, வளர்க்கப்பட்ட குடிசைக் கைத்தொழிலான 'அரசியல் ஆய்வு' பெருவளர்ச்சி பெற்று, வன்னியிலும் புலன் பெயர்ந்த நாடுகளிலும் 'புல நாய் வாலர்கள்' கட்டாக்காலிகளாகப் பெருகியிருந்தாலும், அவர்களும் 'தலைவர் அப்படிச் சிந்தித்தார்', 'அவருடைய சிந்தனையைக் கண்டு சர்வதேசம் திணறிக் கொண்டிருக்கிறது' என்று அவருடைய மூளைக்குள் குடியிருந்த மாதிரி, எழுதிக் கொண்டிருந்தார்களே அன்றி, தேசியம் என்ற வார்த்தையைப் பற்றி அவர்கள் பெரிதாக அலட்டிக் கொண்டிருந்ததில்லை.

இதை விட, புழுத்துப் பெருகிய ஊடகங்களின் ஊளையிடலாளர்களும் 'மலரப் போகும் தமிழீழத்தில் மூன்று சர்வதேச விமானநிலையங்கள், ஐந்து துறைமுகங்கள்' என்றெல்லாம் வரைபடங்களோடு, தமிழீழக் கட்டுமானங்கள் பற்றிய கற்பனைக் கோட்டையில் கொடி நாட்டிக் கொண்டிருந்தார்கள்.

அவர்களையும் குறை சொல்ல முடியாது. அவர்கள் என்ன வைத்துக் கொண்டா வஞ்சகம் பண்ணினார்கள்?

தமிழ்ச்செல்வன் சொல்வ தற்குத் தான் அவர்கள் உப்பும் புளியும் விட முடியும்.

சுயமாக எதையாவது எழுதப் போய், இங்கேயுள்ள யாராவது அள்ளி வைத்து, வன்னியில் யாருக்காவது கோபம் வந்து, 'வன்னி வருமாறு விசேட அழைப்பு வந்தால்', மாமனிதர் பட்டம் கூடக் கிடைக்காது என்பது அவர்களுக்கும் தெரியும்.

எனவே, தமிழ்ச்செல்வன் கக்கியதை விழுங்கி, வாந்தி எடுத்துக் கொண்டிருந்தார்கள்.

இதில் எங்கேயும் தேசியமோ, தேசியத் தலைவரோ வந்ததில்லை.

**தங்களுடைய அரசியல் கருத்துரிமையைத் தடை செய்து, வாழ்வதற்கான உரிமையையும் மறுத்து, துரோகிகளாக்கி எந்த நேரமும் வேட்டையாடப்படலாம் என்ற உயிர்ப் பயத்துடன் வாழ்ந்தவர்கள் அவர்களில் பலர்.**

**அவர்கள் எல்லாம் புலிகளையும் பிரபாகரனையும் பாசிஸ்ட்(கள்) என்றே வர்ணித்துக் கொண்டிருந்தார்கள். அதைப் பகிரங்கமாக எழுதிக் கொண்டும் இருந்தார்கள்.**

**மனித உரிமைகள் குறித்து எந்தக் கரிசனையும் இல்லாமல், படுகொலை அரசியல் மட்டுமே நடத்திக் கொண்டிருந்த புலிகளுக்கு அந்த அடையாளம் கச்சிதமாகப் பொருந்தித்தான் இருந்தது.**

அப்போ, இவை எல்லாம் எங்கேயிருந்து வந்தன?

இந்தக் கால கட்டங்களில் மாற்றுக் கருத்துக்கள் கொண்டோரும் ஒரு புறத்தில் இயங்கிக் கொண்டிருந்தார்கள்.

புலிகள் தவிர்ந்த மற்ற இயங்கங்களில் இருந்தவர்கள், புலிகளால் தடை செய்யப்பட்டும், தேடி வேட்டையாடப்பட்டும் இருந்த சூழ்நிலையில் தப்பி கொழும்புக்கும் வெளிநாட்டுக்கும் போனவர்கள் பல்வேறு வெளியீடுகளில் எழுதிக் கொண்டிருந்தார்கள்.

தங்களுடைய அரசியல் கருத்துரிமையைத் தடை செய்து, வாழ்வதற்கான உரிமையையும் மறுத்து, துரோகிகளாக்கி எந்த நேரமும் வேட்டையாடப்படலாம் என்ற உயிர்ப் பயத்துடன் வாழ்ந்தவர்கள் அவர்களில் பலர்.

அவர்கள் எல்லாம் புலிகளையும் பிரபாகரனையும் பாசிஸ்ட்(கள்) என்றே வர்ணித்துக் கொண்டிருந்தார்கள். அதைப் பகிரங்கமாக எழுதிக் கொண்டும் இருந்தார்கள்.

மனித உரிமைகள் குறித்து எந்தக் கரிசனையும் இல்லாமல், படுகொலை அரசியல் மட்டுமே நடத்திக் கொண்டிருந்த புலிகளுக்கு அந்த அடையாளம் கச்சிதமாகப் பொருந்தித்தான் இருந்தது.

ஆனால், இவ்வாறு எழுதிக் கொண்டிருந்த பலர் பல்டி அடித்து தேசியத் தலைவர் என்று எழுதத் தொடங்கியது தான் இங்கே அதிர்ச்சி தரக் கூடியது.

ஏன்?

ஆயுதங்களை மட்டுமே நம்பி, படுகொலை செய்வதை அரசியலாகவும், ஈழம் பெறுவதற்கு தடையாக இருக்கும் துரோகிகளை களை எடுப்பதை நித்திய கடமையாகவும் கொண்டிருந்த புலிகளுக்கு, சர்வதேச அரசியல் என்பது குறித்து எந்த அக்கறையோ, தெளிவோ இருந்ததில்லை.

'தலைவர் அடிச்சுப் பறிச்சு தமிழீழம் பெற்றுத் தருவார்' என்பதே தாரக மந்திரமாக இருந்தது.

மற்ற இயக்கங்கள் அழித்தொழிக்கப்பட்டு, தமிழ்ப் பிரதேசங்கள் முற்றுமுழுதாகப் புலிகளின் கட்டுப்பாட்டில் வந்து, புலிகள் தனிக்காட்டு ராஜாக்களாக இருந்த நிலைமை ஒன்று இருந்தது.

இந்திய இராணுவமும் இலங்கை இராணுவமும் வந்து நகர்ப்புறங்களைக் கைப்பற்றினாலும், புலிகளால் எங்கேயும் எந்த நேரமும் தாக்குதல் நடத்தக் கூடிய வலிமை இருந்தது. வன்னி முழுமையாகப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து, புலிகள் சமாந்தரமான அரசை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்ற கருத்து பரவலாக பிரசாரப்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தது.

உணவுப் பொருட்கள், எரிபொருட்கள், புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள அரச ஊழியர்களுக்கான சம்பளங்கள் எல்லாமே சிங்கள அரசினால் அனுப்பப்பட்டே ஆக வேண்டிய சூழ்நிலையில், அங்குள்ள மக்களை ஆயுத முனையில் அடக்கிக் கொண்டிருந்த புலிகள் நிழல் அரசாங்கத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்ற பிரமை எல்லாருக்குமே இருந்தது. இதை இந்த ஆய்வாள நாய் வாலர்களும், ஊளையிடலாளர்களும் கச்சிதமாகப் 'பரப்புரை' செய்து கொண்டிருந்தார்கள்.

புலிகளை வைத்து பிராந்திய அரசியலை நடத்த முயன்ற வல்லரசுகளுக்கும் அந்தப் படத்தைக் கொண்டிழுப்பதில் பல பயன்கள் இருந்தன.

சமாதானப் பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்பட்ட போது, ஏற்கனவே வாங்கிக் கட்டி முடக்கப்பட்டிருந்த புலிகளுக்கு மூச்செடுக்க அவகாசமும் தேவைப்பட்டிருந்தது.

இதை விட, புலி ஆதரவாளர்களும் திடீரென்று சமாதான நேசர்களாகி விட்டிருந்தார்கள்.

சர்வதேசமும் நோர்வேயும் சிங்கள அரசும் என்ன எண்ணத்தைக் கொண்டிருந்தனவோ தெரியாது.

புலிகளும் புலி ஆதரவாளர்களும், 'தலைவர் திட்டம் வைச்சிருக்கிறார். மோட்டுச் சிங்களவனைப் பேய்க்காட்டி, சாமான் கொண்டு வந்து அடிக்கப் போறார்.' என்று கொடுப்புக்குள் சிரித்தபடி சமாதான ஆர்வலர்கள் ஆகியிருந்தார்கள்.

ஒட்டுமொத்தமாக, புலிகள் தான் எல்லாம், இனி அவங்களை விட வேற எதுவும் இல்லை என்ற முடிவுக்கு எல்லாருமே வந்திருந்தார்கள்.

இவ்வாறானதொரு அத்தி வாரமில்லாத கட்டமைப்பில் புலிகள் நீடிக்க முடியாது, அது அழிவில்தான் முடியும் என்பதில் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தது என்றாலும், இவ்வளவு வேகமாக, இவ்வளவு கேவலமாக, எனது வாழ்நாள் காலத்திலேயே முடியும் என்பதை நான் கூட நினைத்துப் பார்த்ததில்லை.

'இனி இனிமேல் அவங்கள் தான்', புலிகளைத் தவிர்த்து ஒரு தீர்வைக் காண முடியாது என்ற நிலைமையும், நம்பிக்கையும் வந்த போது, நீண்ட காலமாக புலிகளை எதிர்த்தவர்கள் தளம்பத்

தொடங்கினார்கள்.

இவர்களில் பலர் தாங்கள் இறந்து போவதற்கு முன்னால், தாம் பிறந்த மண்ணைத் தரிசித்தே ஆக வேண்டும் என்ற கனவில் இருந்தவர்கள். ஊரில் இருந்த பெற்றோர், குடும்பத்தினரைப் போய் பார்க்க வேண்டும் என்ற எண்ணத்தில் இருந்தவர்கள்.

மேலும் பலர், வெல்ல முடியாத ஒன்றை இப்படியே எதிர்த்துக் கொண்டிருந்தால் பிழைக்க முடியாது என்பதை உணர்ந்து கொண்டவர்கள்.

சமாதானப் பேச்சுவார்த்தை நடந்த வேளையில் கூட, துரோகி ஒழிப்பு, களை எடுப்பு நித்திய கடமைகளில் இருந்து புலிகள் தவறவும் இல்லை. வன்னியின் அநீதியின் கரங்கள் புலன் பெயர் நாடுகள் வரை நீளும் என்ற அச்சம் கொண்டவர்களும் உண்டு.

இன்னும் பலர், குளோசட் யாழ்ப்பாணித் தமிழ்த் தேசியவாதிகள். தங்களைக் கொலை செய்யாவிட்டால், புலிகள் புனிதர்கள் தான் என்ற நினைப்பில், புலிகள் பிழை தான், எண்டாலும் அவங்களை விட்டால் சிங்களவன் அழிச்சுப் போடுவான், தலைமை பிழை, தலைமை கொலை செய்யாட்டி ஓகே என்றெல்லாம் சப்பைக்கட்டு விளக்கங்களோடு இருந்தவர்கள்.

இதை விட கோமாளித்தனமான விளக்கங்களை எனக்குச் சொன்னவர்கள் இருக்கிறார்கள். வெளியில் சொன்னால் எனக்குத் தான் வெட்கம்.

தாயகத்தில் எழுதியவர்கள் சிலர் இப்படித் தான் குட்டிக்கரணம் போட்டார்கள்.

நம்புகிறீர்களோ இல்லையோ, பாலேய்ங் கண்ணைக்குப் பிறகு, புலிகளின் வெளிநாட்டு அமைச்சர்களாகும் கனவில் இருந்த கவிஞர்களும் உண்டு. அவர்கள் அதற்கு வன்னிக்குத் தூது போன கதைகளும் உண்டு.

இப்படி புலிகளை பாசிஸ்ட்டுகள் என்று சொன்னவர்கள் எல்லாம், இனிமேலும் புலிகளைப் பகைத்துக் கொண்டிருந்தால், காரியத்திற்கு ஆகாது என்று, புலிகள் பக்கம் சாயத் தொடங்கினார்கள்.

இங்கே தான் அந்த தேசியத்தலைவர் கதை வருகிறது.

பகிரங்கமாக புலிகளை பாசிஸ்ட்டுகள் என்று மட்டுமல்லாமல், பூனா, சூனா என்றெல்லாம் எழுதியவர்கள் எல்லாம் எந்த முகத்தோடு போய் புலிகளோடு ஒட்டிக் கொள்ள முடியும்?

புலிகள் நம்புவார்களா என்றெல்லாம் நீங்கள் சந்தேகப்பட வேண்டியதில்லை. புலி ஆதரவாளர்கள் ஏற்றுக் கொள்வார்களா என்றெல்லாம் அதிசயப்பட வேண்டியதில்லை.

புலிகளுக்கு ஆதரவு என்பது இன்றைய மார்க்கட் நிலவரம் மாதிரி. இன்றைக்கு நீங்கள் ஆதரித்தால் போதும். நாளைக்கு எதிர்த்தால் உங்களை மண்டையில் போட்டு விட்டு, புலி தன் வேலையைப் பார்த்துக் கொண்டே போய்க் கொண்டிருக்கும்.

புலி ஆதரவாளர்களுக்கு?

இன்றைக்கு அவர்கள் பின்னால் அலையும் தலைவர்கள் எல்லாம் புலிகளால் ஒரு காலத்தில் வேட்டையாடப்பட்டவர்கள் தான். அதெல்லாம் அவர்களுக்குப் பிரச்சனை இல்லை.

சிங்கள அரசு மீது காட்டம், கடுப்பு, இடித்துரைப்பு செய்தாலேயே அவர்களுக்குப் புல்லரிக்கும்.

ஆகவே, புலிகளைப் பாசிஸ்ட்டுகள் என்றவர்கள் எப்படி புலிகளோடு ஒட்டிக் கொள்ள முடியும்?

அதற்கு இவர்கள் வகுத்த வியூகம் தான்...

தற்போது நடைபெறுவது ஒரு 'தேசிய விடுதலைப் போராட்டம்' என்ற கதை.

இந்தக் கதை கொஞ்ச நாட்கள் இந்த மாற்றுப் பத்திரிகைகளில் வியாக்கியானங்களோடு வரத் தொடங்கின. இந்த மாற்றுக் கருத்தாளர்களும் 'திடீர் தேசிய விடுதலைப்' பற்றாளர்களாக மாறிக் கொண்டனர்.

தற்போது நடப்பது 'தமிழர்களின் தேசிய இன விடுதலைப் போராட்டம்' என்ற கதை, தங்களுடைய அரசியல் கருத்துரிமையையும், உயிர்வாழ்வு உரிமையையும் மறுத்த புலிகளுக்கு ஆதரவானதாக,

புலிகள் நடத்தும் போராட்டம் தமிழ் இனத்தின் தேசிய விடுதலைப் போராட்டமாக, புலிகளைப் பாசிஸ்டுகள் என்று என்று நாளது வரை சொன்ன இதே இவர்களால் கட்டமைக்கப்பட்டது.

ஆக, இந்த தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்நின்று வழிநடத்தும் தலைவர், தேசியத் தலைவராக, அவரைப் பாசிஸ்ட்டு என்று சொன்ன அதே பேர்வழிகளால் ஞானஸ்நானம் பெறுகிறார்.

இவ்வளவு நாளும் சும்மா தலைவர் என்ற பவ்வியமாக அழைத்த புலி ஆதரவாளர்களும், 'ஆகா, என்னே அற்புதமான கண்டுபிடிப்பு!' அதற்கு உப்பும் புளியும் விட்டு, மேதகு தேசியத் தலைவராக அவருக்கு முடி சூடினார்கள்.

தலைவருக்கும் என்ன பிரச்சனை?

தம்பியை நாம் தொழுதால் தமிழீழம் கிடைத்து விடும் என்று பேபி சுப்பிரமணியம் காது கேட்கப் பாடியதைக் கேட்டுக் கொடுப்புக்குள் சிரித்துக் கொண்டிருந்தவர்.

அவருக்கு தேசியம் பற்றி என்ன விளக்கம் இருந்தது என்பது முப்பத்து முக்கோடித் தேவர்களுக்கும் தெரிந்திருக்காது.


அட, இப்படியெல்லாம் இவர்கள் சும்மா பெயர் வாங்கினால், நான் சும்மா இருப்பதா என்று யாரோ போட்டிக்கு, 'சூரிய தேவன்' என்று தொடங்க, அதே கும்பல் அதற்கும் கோவிந்தா போட்டதும், அதையெல்லாம் நம்பிய தேசியத் தலைவர் முள்ளிவாய்க்காலில் ஒண்டிப்புலியாய் மரித்ததும் பின்கதைச் சுருக்கங்கள்.

அதன் பின், நட்டுக் கழண்ட தமிழீழம் என்றெல்லாம் கேலிக் கூத்துக்களை அரங்கேற்றியதிலும் இந்த தேசியத் தலைவர் என்று முடிசூடிய மாற்றுக்கருத்தாளர்கள் இருந்ததெல்லாம் சொல்லப்பட வேண்டிய தனிக்கதைகள்.

# மட்டக்களப்புத் தமிழகம் என்னும் நாமம்:

## வரலாற்று தேடல்கள் 7

**எம்.ஆர்.ஸ்டாலின் ஞானம்**
Facebook: M R Stalin Gnanam


இலங்கை தமிழ் தேசியவாதம்
அதன்
ஆரம்பதோற்றம் பற்றியதோர்
ஆய்வு

கலாநிதி முருகர் குணசிங்கம்

Dr. Murugar Gunasingam

எம் வி வெளியீடு
தென் ஆசியவியல் மையம் - சிட்னி
2003



கடந்த ஆண்டு டிசம்பரில் ஆறுமுகநாவலரது இருநூறாவது பிறந்ததினம் இலங்கையில் கொண்டாடப்பட்டது. நாவலர் பிறந்த யாழ்.நல்லூரில் ஐந்து நாள் மாநாடு தொடங்கி பல இடங்களில் அவரது பிறந்த நாள் நிகழ்வுகள் இடம்பெற்றன. மட்டக்களப்பிலும் ஓரிரு இடங்களில் ஆறுமுக நாவலரது பிறந்தநாளை கொண்டாடும் நிகழ்வுகள் ஆங்காங்கே இடம்பெற்றன.

1822 ஆம் ஆண்டில் பிறந்த ஆறுமுகநாவலர் யாழ்ப்பாணத்தில் அக்காலத்திலிருந்த முன்னணி ஆங்கிலப் பாடசாலையான வெஸ்லியன் ஆங்கிலப் பாடசாலையில் (இக்காலத்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி) கற்று ஆங்கிலத்திலும் திறமை பெற்றார். அவரது 19:ஆவது வயதில் (1841) அப்பாடசாலையில் ஆசிரியராகப் பணியேற்ற நாவலர், அப்பாடசாலையின் நிறுவனராயும், அதிபராயுமிருந்த பேர்சிவல் எனும் பாதிரியாருக்குக் கிறித்தவ விவிலியத்தைத் தமிழில் மொழி பெயர்க்கும் வேலைக்கு உதவியாக இருந்து பணியாற்றினார். பேர்சிவல் பாதிரியாருடன் சென்னைப்பட்டணம் சென்று வேதாகமத்தை அச்சிட்டுக் கொண்டு யாழ்ப்பாணம் திரும்பினார்.

காலப்போக்கில் காலனித்துவத்துக்கு எதிராக தமிழர் மத்தியில் உருவான எதிர்ப்புணர்வுகளின் பிரதிநிதியாக ஆறுமுகநாவலர் தன்னை காட்டிக்கொண்டார். ஆங்கில. கிறிஸ்தவ எதிர்ப்பு,தமிழ் வளர்ப்பு என்று 1847 ஆம் ஆண்டில் தொடங்கி பிரச்சாரங்களில் ஈடுபட்டார். ஆறுமுகநாவலர் தலைமையில் இடம்பெற்ற சைவ பிரசங்க உரைகளும், சைவத்தமிழ் பாடசாலைகளின் உருவாக்கமும், தமிழ் நூற்பதிப்புகளும் தமிழர் மத்தியில் நமது மொழி, நமது மதம், நமது பாரம்பரியம், நமது கலாசாரம் என்பதான உணர்வுகளைத் தூண்ட ஆரம்பித்தன.

உண்மையிலேயே நாவலரது பிறந்தநாளை கொண்டாடுபவர்கள் யாராக இருக்க முடியுமென்றால் மச்சம் மாமிசம் போஜனம் பண்ணாத, மதுவருந்தாத, சாதிக்கலப்புத் திருமணம் செய்யாத, பகலிலே வடக்கு முகமாகவும் இரவிலே தெற்கு முகமாகவும் இருந்து கொண்டும் தலையயுங் காதுகளையும் வஸ்திரத்தினாலே சுற்றி மூக்கு நுனியைப் பார்த்துக் கொண்டும் மலசலங் கழித்துவிட்டு சலக்கரையை அடைந்து சலத்துடன் ஒரு சாணுக்கு இப்பால் இருந்து கொண்டு சௌசஞ் செய்பவர்களுமான இருமரபும் துய்யவந்த வேளாளர்களே அதனைச் செய்ய வேண்டியவர்களாகும். இவையெல்லாம் யாழ்ப்பாண சைவ வேளாளருக்காக நாவலரே சைவ வினாவிடை என்னும் நூலில் விதந்துரைத்த வாழ்வியல் முறைகளாகும்.

ஆனால் 'மட்டக்களப்பிலே வாழும் சைவர்கள் (வேளாளர்கள் உட்பட) மது, மச்சம், மாமிசம் புசியாதார் எத்தனைபேருளர்? சாதிக்கலப்பு மட்டக்களப்பிலே சர்வசாதாரணம். அப்படியிருக்க தமிழ் போதிக்கின்றேன், தமிழ் வளர்க்கின்றேன் என்று சொல்லிக்கொண்டு குறித்த ஒரு சாதியாருக்கு மட்டுமே தமிழ்ப்பணி புரிந்த, தாழ்த்தப்பட்ட சாதிக் குழந்தைகளுக்கு கல்வியுரிமையில்லை என்று ஒதுக்கிவைத்த இந்த நாவலருக்கு மட்டக்களப்பில் விழா எதற்கு?

'தாழ்ந்த சாதியாரிடம் போஜனம் பண்ணல் ஆகாது' என்று சைவ வினாவிடையில் போதனை செய்த நாவலருக்கு சிலையெதற்கு? வாய்கட்டி பூசை செய்யும் சங்கமர்கள் மற்றும் குருக்கள்கள் வழிவந்த வீரசைவ வழிபாட்டு மரபார்ந்த முறைமைகளும், கள்ளுப்போத்தலும் கஞ்சா ரொட்டியும் கருவாடும் வைத்து வணங்கப்படும் 'வைரவர் பந்தல்' களுமே மட்டக்களப்பின் வழிபாட்டு பாரம்பரியங்கள் ஆகும். ஆனால் இத்தகைய சனங்களின் சாமிகளையெல்லாம் சிறு தெய்வ வழிபாடுகள் என்றொதுக்கி, அவையெல்லாம் ஆகமங்களுக்கு எதிரானவை என்று பிராமணீயத்தை அறிமுகம்செய்த ஆறுமுக நாவலருக்கும் மட்டக்களப்புக்கும் என்ன சம்பந்தம்?

நாம் விபுலானந்தர் வழிவந்தவர்கள். ஆறுமுக நாவலர் சைவ

**உண்மையிலேயே நாவலரது பிறந்தநாளை கொண்டாடுபவர்கள் யாராக இருக்க முடியுமென்றால் மச்சம் மாமிசம் போஜனம் பண்ணாத, மதுவருந்தாத,சாதிக்கலப்புத் திருமணம் செய்யாத, பகலிலே வடக்கு முகமாகவும் இரவிலே தெற்கு முகமாகவும் இருந்து கொண்டும் தலையயுங் காதுகளையும் வஸ்திரத்தினாலே சுற்றி மூக்கு நுனியைப் பார்த்துக் கொண்டும் மலசலங் கழித்துவிட்டு சலக்கரையை அடைந்து சலத்துடன் ஒரு சாணுக்கு இப்பால் இருந்து கொண்டு சௌசஞ் செய்பவர்களுமான இருமரபும் துய்யவந்த வேளாளர்களே அதனைச் செய்ய வேண்டியவர்களாகும். இவையெல்லாம் யாழ்ப்பாண சைவ வேளாளருக்காக நாவலரே சைவ வினாவிடை என்னும் நூலில் விதந்துரைத்த வாழ்வியல் முறைகளாகும்.**



சித்தாந்தியாகும். விபுலாநந்தரோ வேதாந்தியாக வாழ்ந்தவர். விவேகானந்தரின் ராமகிருஷ்ண மிசனுடைய சேவையை கிழக்கு மாகாணமெங்கும் விஸ்தரித்தவர். சாதி மதம் பாராது கல்விப்பணியை முன்னெடுத்தவர் எங்கள் விபுலாநந்தரராகும். இந்தியாவிலே பேராசிரியராக பணியாற்றிய காலத்தில் கூட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சேவை செய்தமையினால் சாதிமான்களின் கோபத்துக்குள்ளாகி குடிநீர் மறுக்கப்பட்டு உவர் நீருடன் காலத்தைக் கடத்திய பெருந்தகை அவர். சாதியொழிப்புக்காக போராடிய யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸின் தலைவர்களில் ஒருவராய் செயலாற்றியவர் விபுலானந்தர். அவரைக் கொண்டாடுவோம், ஆயிரம் சிலையெடுப்போம். ஆனால் இந்த ஆறுமுகம் பிள்ளைக்கும் மட்டக்களப்புக்கும் என்னய்யா சம்பந்தம்? என்றெல்லாம் மட்டக்களப்பார் கேட்ட வரலாறு இருக்கிறது. 'நாவலர் எதிர்ப்பியக்கம்' என்றே ஒரு இயக்கம் நடத்திய வரலாறு இருக்கிறது.

அப்போது 1973ஆம் ஆண்டு நாவலரது 150ஆவது பிறந்த தினம் இலங்கையில் கொண்டாடப் படுகின்றது. அவரது சிலைகள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் பல இடங்களில் நிறுவப்படுவதற்குரிய ஏற்பாடுகள் நடக்கின்றன. மட்டக்களப்புக்கும்

ஐந்து சிலைகளை கொழும்பிலிருக்கக் கூடிய யாழ்ப்பாண முதலாளிகள் செய்வித்து தானம் செய்கின்றார்களாம் என்று செய்திகள் பரபரப்பாகின. முதலாவது சிலையை வாழைச்சேனையில் நிறுவுவதற்கு அங்கிருக்கக்கூடிய சுருட்டுக்கடை முதலாளிகளால் ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

ஆனால் வெகுண்டெழுந்தார்கள் மட்டக்களப்பில் இயங்கிய சைவ இளைஞர் சங்கங்களின் உறுப்பினர்கள். எழுத்தாளர் ஆரையூர் அமரன் தொடங்கி எஸ். பொன்னுத்துரை வரை எதிர்க்குரல் எழுப்பினர். ஊருக்கு ஊர் கண்ணகி வழிபாட்டில் திளைத்து நிற்கும் மட்டக்களப்புக்கும் 'சமணத்துச் செட்டி வீட்டு பெண்டீருக்கு கோவிலா?' என்று யாழ்ப்பாணத்தில் கண்ணகி வழிபாட்டை வேரோடு சாய்த்த ஆறுமுகநாவலருக்கும் என்ன சம்பந்தம் என்று கேட்டு அன்றைய பத்திரிகைகளான 'கிழக்குத் தபால்' 'தமிழுலகம்' போன்றவற்றில் மட்டக்களப்பு எழுத்தாளர்கள் கேள்வி எழுப்பினார்கள். கிரானில் இருந்து இயங்கிய சைவ முன்னணி இளைஞர்கள் நாவலர் சிலைக்கு எதிரான ஒரு பிரச்சார இயக்கத்தையே நடாத்தினர். இத்தனை எதிர்ப்புகளையும் தாண்டி மட்டக்களப்புக்கு நாவலர் சிலையை கொண்டுவரும் தைரியம் யாருக்கும் இருக்கவில்லை. இந்த சம்பவங்கள் பற்றி 'வரலாற்றில் வாழ்தல்' என்னும் பெருநூலின் இரண்டாம் பாகத்தில் விபரிக்கும் தமிழ் எழுத்துலகின் கொடுமுடியான எஸ்.பொ அவர்கள் 'மட்டக்களப்பில் நாவலர் சிலை நிறுவும் அம்முயற்சிகள் பிசுபிசுத்துப்போயின' என்று முடிக்கின்றார்.




### யாழ்ப்பாண மட்டக்களப்பு வர்த்தகக் கம்பெனி

ஒரு புறம் தமிழில் விற்பன்னர் என்றும் சைவத்தின் காவலர் என்றும் மறுபுறத்தே அநாகரீகமான சாதிமான் என்றும் அறியப்படும் இந்த நாவலருக்கு காலனித்துவத்துடன் கைகோர்த்து கிழக்கிலங்கையின் வளங்களை கொள்ளையடித்த மாபெரும் காப்பரேட் முதலாளி என்னும் மூன்றாவது முகமும் உண்டு என்பதனைப்பலர் அறியார்.

அக்காலங்களில் மட்டக்களப்பில் இருந்து யாழ்ப்பாணத் துறைமுகங் களுக்கு வருடாவருடம் நெல் ஏற்றுமதி செய்யப்பட்டுவந்தது. சுமார் ஒரு லட்ஷம் புசல் நெல் வருடாவருடம் இவ்வாறு யாழ்ப்பாணத்துக்கு விற்பனையாகி வந்தது. இதனை அவதானித்த ஆறுமுகநாவலர் மட்டக்களப்புக்கு சென்று நம்மவர்களே (யாழ்ப்பாணத்தாரே) விவசாயத்தில் ஈடுபட்டால் என்ன? என்கின்ற யோசனையில் ஆழ்ந்தார். கிழக்கிலுள்ள நிலங்களுக்கு வலைவிரிக்க கடும் முயற்சி எடுத்தார்.

இறுதியாக 'யாழ்ப்பாண மட்டக்களப்பு வர்த்தகக் கம்பெனி'யை ஆரம்பித்தார். யாழ்ப்பாணத்தில் வசதிவாய்ப்பாக யார் இருந்தனரோ அந்த உயர் குடிகளிடையே பிரச்சாரம் செய்தார். இது சைவப்பிரச்சரம் அல்ல. தமிழ் வளர்க்கும் பிரச்சாரமுமல்ல. காணி பிடிக்கும் பிரச்சாரம். 1887ஆம் ஆண்டு கம்பெனியைப் பதிவுசெய்தார். தமிழ் பத்திரிகையான இலங்கை நேசனை தனது பிரச்சாரத்துக்குப் பயன்படுத்தினார். தமிழர்களின் வாழ்வு செழிக்க தமிழரால் தமிழருக்காக உருவாக்கப்பட்ட கம்பெனி இதுவென்றும் இதிலே பங்குகளை தமிழர்களே வாங்க வேண்டும் என்றும் பிரச்சாரம் செய்தார்.

'தமிழருக்கான இந்த பொன்னான வாய்ப்பில் பங்குபற்றுங்கள்!

அரிய சந்தர்ப்பம்!அரிய சந்தர்ப்பம்!யாழ்பாணத்தவருக்கு..... நெற்செய்கைக்கான இந்த வாய்ப்பை இப்போதே நீங்கள் பயன்படுத்தாவிடின் பின்னர் நீங்கள் வருந்த நேரிடும்!' என்றவாறாக அப்பிரச்சாரம் இருந்ததாக கலாநிதி. முருகர் குணசிங்கம் எழுதிய 'இலங்கைத் தமிழ் தேசியவாதம் அதன் ஆரம்பத்தோற்றம் பற்றியதோர் ஆய்வு' என்னும் நூலில் குறிப்பிடுகின்றார்.

சுமார் 400 பேரைக்கொண்ட ஆரம்பக்கூட்டம் ஒன்றைக்கூட்டி கம்பெனியின் நோக்கங்களையும் அதனால் ஏற்படும் நன்மைகளையும் விளக்கி ஆயிரக்கணக்கான பங்குகளை விற்பனை செய்த ஆறுமுகநாவலர் தானே 200க்கும் மேற்பட்ட பங்குகளை வாங்கிக்கொண்டார். கம்பெனி பங்குதாரர்களைக் கூட்டிக்கொண்டு மட்டக்களப்புக்கு வந்து தேசாதிபதியைச் சந்தித்தார். கந்தளாய்க்குளத்தின் பள்ளத்தேயிருந்த பூமிகளை குறிவைத்து அவற்றை வாங்குவதற்கு பேரம்பேசினார். 'கந்தளாயின் இருபத்து மூன்றாயிரம் ஏக்கர் நிலத்தில் உடனடியாக பத்தாயிரம் ஏக்கரைத் தருவதற்கு வாக்குறுதியளித்த தேசாதிபதி அடுத்த இரண்டு வருடத்தில் மேலும் பத்தாயிரம் ஏக்கரைத் தருவதற்கும் வாக்குறுதியளித்தார்.' என்கின்றார் முருகர் குணசிங்கம் அவர்கள்.

இவ்வாறாக ஏக்கருக்கு பத்து ரூபாக்கள் விகிதம் பல்லாயிரம் ஏக்கரை கிழக்கு மாகாணத்தில் ஏப்பம் விட்ட பிரம்மச்சரியம் பூண்ட முற்றும் துறந்த சந்நியாசிதான் ஆறுமுகநாவலர் என்றால் அதை நீங்கள் நம்பித்தான் ஆகவேண்டும்.

# விருதுகள் தொடர்கதை

## விருகள் என்னும் அபத்தம் ஏடு இட்டோர் இயல் பற்றி பொதி (பொதிகைச் சித்தர், பொதியவெற்பன்) பேஸ்புக்கில் எழுதிய கருத்துக்களும் அதற்கான பதிலும்

### அபத்தம் ஆர்வலர்களுக்காக...

விருதுகள் என்றும் அபத்தமே! என 'அபத்தம்' மின்னிதழ் 'ஏடு இட்டோர் இயல்' (தலையங்கத்துக்கு மாற்றாக 'எடிட்டோரியலை' தமிழ்ப் படுத்துகிறாளாமாம்?

:இது தமிழ்நாட்டில் 'ஆட்சிமொழிக்காவலர் 'எனப்பட்ட 'அதி மேதாவி' யின் மொழி பெயர்ப்புக் கோளாற்றின் தொடர் நீட்சியே! ஆங்கிலச் சொல்லுக்கே வலிந்து தமிழ்ப் பொருள் புணர்த்திவிடும் 'வலியப்புணரி' யே

அந்த மகானுபாவர். காட்டு:'சேர்மன் 'எனும் ஆங்கிலச் சொல்லுக்கு 'சிறப்பு மன்னிய' என உரைபெயர்த்து 'சேர்மன்' எனவே முன்னிறுத்தி விடுவார்.' பொதி).

கீழே 'கமெண்ட்ஸ்' பகுதியில் காண்க. அதற்கு ஏலவே இன்னொரு அவர்களவர் இட்ட பதிவிற்கான ஓர் எதிர்வினையே போதுமான 'ஆப்பு' ஆகும்

Katsura Bourassa/ கவனத்துக்கு....

விருதே நோயாகவும் மருந்தாகவும்

5.தரக்கட்டுப்பாட்டுத் தணிக்கை அதிகாரி ராஜு கௌதமன் திசைதிருப்பல் திருகுதாளங்கள்

..சீதனம் மீது நாம் இப்போதும், பல தடவைகளிலும் பேசலாம். இந்தக் கொடுமை ஓர் தொடரும் கதையாகவே உள்ளது. சாதியின் கதையும் இதுதான். இந்த இரண்டுக்கும் அருகில் நாங்கள் விருதுகளை நிறுத்தலாம். இவைமீது நான் பல தடவைகள் எழுதியுள்ளேன். இப்போதும் சில குறிப்புகள்... 'சீதனம் , சாதி, விருதுகள் மூன்றையும் எந்தப்புள்ளியில்

பொதுமைப்படுத்த முனைகின்றார் ராஜு கௌதமன்?

சாதி பிறப்பின் அடிப்படையால் நம்மீது திணிக்கப்பட்டது.

தோழர் எஸ்விஆருக்குப் புதுமைப்பித்தன் பெயரிலான விளக்குவிருது முரண்படும் தரப்புகள்:

அ.ராமசாமித் தரப்பாக ராஜு கௌதமன் குறிப்பிடுவது:

..பேராசிரியர் அ.ராமசாமி 'விருதை மறுத்த மாமணிகள்' எனும் தலைப்பில் 2021 இல் இப்படி எழுதியுள்ளார்: '10 ஆண்டுகளுக்கு முன்பு, அமெரிக்காவிலிருந்து வழங்கப்படும் 'விளக்கு விருது' தேர்வுக்குழுவில் நான்கு ஆண்டுகள் இருந்தேன். முதல் வருடம் விருதுக்காகப் பரிசீலனை செய்த பல பெயர்களுக்குப் பின் ஒருமனதாக ஏற்றுக்கொண்ட பெயர் வண்ணநிலவன். அவர் பெயரைப் பரிசீலனை செய்ய முன்வைத்தவருக்கே அவரைத் தொடர்புகொண்டு ஒப்புதல் கேட்கும் பொறுப்பை ஒப்படைத்தோம். அவரும் யாரிடமோ தொலைபேசி எண் பெற்று அவரது ஒப்புதலைப் பெற முயன்றார். ஆனால் வண்ணநிலவன் மறுத்துவிட்டார். அந்த வகையில் அவர் விருது மறுத்த மாமணி.

இரண்டு ஆண்டுகள் கழித்து அதேமாதிரி அனுபவத்தைத் தந்தவர் எஸ்.வி. ராஜதுரை. அவருக்கு விருது வழங்குவது என முடிவு செய்து ஒப்புதல் பெறுவதற்கு உயிரெழுத்து ஆசிரியர் சுதீர் செந்திலிடம் தொலைபேசி எண் கேட்டுத் தொடர்புகொண்டோம். எஸ்.வி. ஆரின் தொலைபேசி எண்ணைத் தருவதற்கே அவரது அனுமதி வேண்டும் எனச் சொல்லி, எதற்காக எண் கேட்கிறீர்கள்? என்று கேட்டார். வேறு வழியில்லாமல் இந்த ஆண்டு விளக்கு விருது அவருக்கு வழங்கலாம் என முடிவு செய்துள்ளோம். அதற்கு அவரது ஒப்புதல் பெறவேண்டும் என்றோம். அவரே இந்தத் தகவலைச் சொல்லி, உங்கள் எண்ணைத் தரலாமா? என்று கேட்டபோது, ' தரவேண்டாம் விருதை நான் ஏற்க மாட்டேன் என்று சொல்லிவிடு' என்று சொல்லிவிட்டார். நடுவர் குழுவில் ஒருவரோடும் பேசாமல் விருதை மறுத்த மாமணி எஸ்.வி ராஜதுரை.'

ஆனால் இவர்கள் மாமணிகள் இல்லை விருதுமாமணிகள் என்பதை விளக்கு விருதுவின் தெரிவுக்குழுவில் இருந்த அ.ராமசாமி மீளவும் எழுதுவது பயன் உள்ளது.

காரணம்: எஸ்.வி.ராஜதுரை இப்போது 'ஆயல்' விருதை வாங்கியுள்ளார். வண்ணநிலவன் ராமகிருஷ்ண ஜெய்தயாள் விருதினையும் இலக்கியச் சிந்தனை விருதையும் மறுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ..

' அ.ராமசாமி கூற்றாக ராகௌ குறிப்பிட்ட மூலத்தை அவர் முன்வைக்க வேண்டும். ஏனெனில் அவர் தரப்பு வேறாக (காண்க 5 ஆம் உட்பகுப்பில்) உள்ளது. ' பொதி

//////

"விளக்கு விருதுத் தொடர்பில் சுதீர் செந்தில்

தன்னிலை விளக்கம்:

///////

'விளக்கு விருது எஸ்.வி. ஆருக்கு அளிப்பது குறித்து என்னிடம் பேசியது சிபிச்செல்வன். பின்னர் இது குறித்து நான் எஸ்.வி ஆரிடம்

பேசி அவரிடம் சம்மதத்தைப் பெற்று சிபிச்செல்வனிடம் கூறினேன். எஸ். வி. ஆரின் அலைபேசி எண்ணையும் கொடுத்தேன்.

பின்னர் இந்த விருது வேறு ஒருவருக்கு வழங்கப்பட்டது. நான் இதுகுறித்து சிபிச்செல்வனிடம் கேட்டபோது சரியான பதில் கிடைக்கவில்லை. நான் சிபிச்செல்வனை கடுமையாக கோபித்துக் கொண்டேன். இது குறித்து எனக்கு இதுநாள் வரைக்கும் வருத்தம் தான். அவர்கள் செய்தது நேர்மையற்ற செயல். அ.ராமசாமி சொல்வது தவறு.' : Sudheer Sendhil

///////////

"'எஸ்.வி.ஆருக்கு மறுதலிக்கப்பட்ட (புதுமைப்பித்தன்) விளக்கு விருது' : இன்குலாப் தரப்பு

///////// 'விளக்கு விருது வழங்கும் தேர்வுக்குழுவில் நானும்

இடம் பெற்றிருந்தேன்.' 'திறனாய்வாளர்களுக்கும் விருது வழங்கும் மரபு இருந்தது கருதி நான் எஸ்.வி.ராஜதுரையைப் பரிந்துரை செய்தேன். அது மறுக்கப்பட்டது. மறுப்பதற்குச் சொல்லப்பட்ட முதன்மையான காரணம் அவர் இனவாதம் பேசும் ஒரு பாசிஸ்ட் என்று கூறப்பட்டது. இந்த நிலைப்பாட்டுக்கு என்ன காரணம்? எஸ்.வி. ஆரின் பார்ப்பனிய எதிர்ப்பைத்தவிர வேறொன்றுமில்லை. என்னுடைய தேர்வுக்கு முதன்மையான காரணம் பலதுறைகளில் சுடரும் எஸ். வி.ராஜதுரையின் நுண்மாண் நுழைபுலந்தான்.'

ஒரு தகுதிமறுப்பாகப் பார்ப்பனிய எதிர்ப்பு இயங்கி வருவதைச் சுட்டிக்காட்டுவது அவசியம் என்று கருதுகிறேன். இருக்கும்நிலை மாற்ற எழுதும் ஒரு படைப்பாளியின் விரிந்த கூர்மையான பார்வையில் பார்ப்பனிய எதிர்ப்பு உறுத்தாமல் போகாது. ஆனால் உறுதிபட எதிர்த்து எழுதினால் விருதுக்கான தேர்வு மட்டுமன்று, படைப்பாளி என்ற தகுதிகூட மறுக்கப்படும் ஒரு மனோபாவந்தான் தமிழ் இலக்கியஉலகை ஆட்சி செய்து கொண்டிருக்கிறது.' இன்குலாப் (Kaakkai Cirakinile யூன்,2012 எட்வின் இரா

//////

"கோபால் ராஜாராம் மறுமொழித்தரப்பு

///

அன்புள்ள Pothi - இன்குலாப் எழுதிய இந்த விவரம் நான் இப்போது தான் படித்தேன். மூன்று வருடங்கள் அவரும் நானும் இணைந்து நடுவர்களாய் இருந்தோம். அவரை சந்தித்த தருணம் அவர் எஸ்.வி. ராஜதுரை பெயரைப் பரிசீலிக்கலாம் என்றார். அபபோது 'விளக்கு'விருதிற்கு அல் புனைவு படைப்பாளிகள் கருதப்படுவதில்லை என்று சுட்டிக் காட்டியபின் அவர் அதனை ஒப்புக்கொண்டார். அது குறித்து மாறுபாடாக எதுவும் என்னிடமோ அல்லது விளக்கு நிர்வாகிகளிடமோ தெரிவிக்கவில்லை. பிறகு ஏன் இவர் இப்படி எழுதினார் என்று எனக்குத் தெரியவில்லை.'- Gopal Rajaram

(பின்னர் ஸ்டாலின் ராஜாங்கத்துக்கு விருதுத் தெரிவுக்கு முதல்நாள் தான் அந்த விதி அதுக்குத்தக மாத்தப்பட்டதாக்கும் கோரா?)

'தன்னிலை விளக்கம் அளிக்க முன்வந்தமைக்கு நன்றி.

இன்குலாப் எழுதியதற்கு ஏன் எனப் பரிசீலிக்க இனிச்சாத்தியமில்லை.' பொதி

#Pothi கோ. ராஜாராமின் மதிப்பீட்டின்படி பார்த்தால் கூட ஸ்டாலின் ராஜாங்கம் புனைவு எழுத்தாளரா? அதற்காகவா இந்த ஆண்டு விருது தரப்பட்டது? கோவை ஞானி புனைவு எழுத்தாளரா? (ஞானி 'கல்லிகை' எழுதியிருக்கிறார் என ஒரு காரணம் சொன்னால் எஸ்.வி.ஆர். சிறுகதைகள் எழுதியிருக்கிறார் என்பதைச் சொல்லமுடியும்). இதில் துயரம் என்னவெனில், இனி இன்குலாப் தனது தரப்பை எழுதமுடியாது..' Yamuna Rajendran

தமிழின் சிறந்த ஓவியர்களில் ஒருவரான TSounthar Sounthar தனது முகநூலில் இன்று தரும் குறிப்பும் விருதின் கேவலத்தைக் காட்டுவது. இந்தக் குறிப்பு பேராசிரியர் எம்.ஏ. நுஃமானிடம் இருந்து வருகின்றது"..

'பரிசுகள் விருதுகள் பாராட்டுகள் எல்லாம் தமிழ்ச்சூழலில் மலினப்படுத்தப்பட்டிருப்பதுபோல் வேறு எங்கும் மலினப்படுத்தப் பட்டிருக்காது என்பது என் எண்ணம். பாராட்டு விழாக்களும் கௌரவிப்புகளும் அவற்றுக்குரிய அர்த்தத்தையும் மதிப்பையும் இழந்துவிட்டன. பொன்னாடைகள் பன்னாடைகளுக்குச் சமனாகி விட்டன. அபத்தமான,அலங்காரமான பட்டங்கள் வழங்கப்படுவதும், அவற்றை நம் படைப்பாளிகள் பலர் ஆவலுடனும், ஆர்ப்பாட்டத்துடனும் சுமந்து திரிவதும் சுயமதிப்பீட்டின் வீழ்ச்சியையே நமக்கு உணர்த்துகின்றன. பரிசுகள், விருதுகளுக்காக நம் படைப்பாளிகள் பலர் படும்பாடுகளும், ஒவ்வொருமுறையும் இவை தொடர்பாக எழும் சர்ச்சைகளும் இவற்றை மதிப்பிறக்கம் செய்து விட்டன.' எம்.ஏ.நுஃமான்

"'இலக்கியத் தோட்ட' விருதுத் தொடர்பில் பேரா. அ.ராமசாமி தன்னிலை விளக்கம்"

////

'விளக்கு விருதைத் திறனாய்வாளர் எம்.எ. நுஃமானுக்கு வழங்கவேண்டும் எனக் கோரிக்கை வைத்துப் பெற்றுத்தந்தோம். அவரும் முதலில் தயங்கினார் பின்னர் ஏற்றுக்கொண்டார். 'ஆயல்' Chinnaswamy Ips விருதினை எஸ்.வி.ஆர். ஏற்றுக்கொண்டார் என்பது எனக்கு ஆச்சரியம் தான். ஏனென்றால் 35 ஆண்டுகளுக்கு முன்னால் ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் விருது மு.ராமசுவாமியின் தோபாவை நிழற்கூத்து நூலுக்கு வழங்கப்பட்டபோது ஏற்றிருக்கக்கூடாது என்று கருதியவர்கள் எஸ்விஆரும் ஒருவர். ஆனால் காலம் மாற்றங்களை

உண்டுபண்ணுகிறது என்பதை மறுக்கமுடியாது' அ. ராமசாமி

'அ. ராமசாமி மகிழ்ச்சி நன்றி. எனில் தங்கள் கூற்றாக ராஜு கௌதமன் முன்வைத்திருப்பது உண்மைக்குப்புறம்பானது என்பது தங்களினதும் Sudheer Sendhil இனதுமான பின்னூட்டங்களால் தெரியலாயிற்று. விருது தருவோரைப் பொறுத்தும் ஏற்போ மறுப்போ அமையுந்தானே? 'எஸ்ஆரெம் பல்கலை விருதினை' மறுதலித்த எஸ்விஆர் 'சின்னக்குத்தூசி அறக்கட்டளை', 'ஆயல்' விருதுகளை ஏற்றார். நேற்று விசிகவின் 'பெரியார் பேரொளி விருது' அவருக்கெனத் தோழர் தொல்.திருமா அவர்களால் (அமுதன் துரையரசன் Yazhan Aathi ) அறிவிக்கப் பட்டுள்ளது. 'தமுஎகச விருதை' தமுஎகச மாநிலக்குழு ஏற்று அத்தொகையை அன்பளிப்பாக ஈரமைப்புகளுக்கு அம்மேடையிலேயே வழங்கினார். விருது பெறுதலே நோயென ராஜு கௌதமன் கருதுவது போன்ற பொதுமைப்படுத்தப்பட்ட பார்வை அபத்தமானதே.' பொதி

//////

..இந்திய உபகண்டத்தில் சில எழுத்தாளர்கள் அரச விருதுகளை எறியும்போது ,தமிழ் எழுத்தாளர்கள் விருதினைத் தமக்குக் கிடைக்கும் உயரிய விருந்தெனக் கருதும் வியாதி உள்ளது...

'விருதைத் தூக்கி எறிந்த தமிழ் எழுத்தாளர் மட்டுமன்று, தூக்கி எறிய நினைத்தாலும் விருதுத்தொகையைத் திருப்பித்தர இயலா வறுமையால் 'செயுநீர செய்கலாது அமைகலாதவாறே' அலமரும் பாவப்பட்ட தமிழ் எழுத்தாளனும் எம்மிடையே உண்டும்ய்யா!' பொதி

///

..இலக்கியத்தின் தரத்தை விருதுகள் ஒருபோதுமே கொடுக்க முடியாது. அனைத்து விருதுகளும் இலக்கியத்தை இலக்கிய வியாபாரம் ஆக்கும் நோக்கையே கொண்டன .ஓர் பிரெஞ்சு பத்திரிகையின் ஆய்வில் சில ஆண்டுகளிற்கு முன் படித்துள்ளேன். விருது கிடைத்த எழுத்தாளர்களை எழுத்தாளர்கள் இல்லை எனச் சொல்லமுடியாது. ஆனால் இவர்களது விருது அங்கீகரிப்பு ஒருவகையில் வேறு எழுத்தாளர்களைத் தாழ்த்துவது என்றும் சொல்லலாம். ..

'யாதொன்றையும் விதந்தோதி அது அதனை அதனதற்கான இடத்தில் வைத்துக் காணமுயலாது தம் முன்முடிவான எந்திரவயமான புரிதல்களால் அதிர்ச்சிமதிப்புத் தீர்ப்புதிர்த்தலே அக்மார்க் இலக்கியத்தரக்கட்டுப்பாட்டுத் தணிக்கை அதிகாரி ராகௌவின் கோளாறே! விருதுக்கு 'லாபிபண்ணி'யும் மறைமுகக் கையூட்டுகளால் குளுப்பாட்டியும் விலைக்கு வாங்குவோரும் வழங்குவோருமே கண்டனத்திற்கு உரியோராவார். அல்லாமல், முகமறியாலே தத்தம் அருகதையால் கண்டுணரப்பட்டு விருதுபெற விழையும் அங்கீகார ஆதங்கம் அதற்கப்பால் வழங்கும் நிறுவன வலதுசாரி நிலைப்பாடுகளால் பெறவிரும்பாத போதும் தத்தம் வறுமை, குடும்பநிறுவனத்தில் மதிக்கப்பெறும் அங்கீகாரம், நலம் விரும்பி நண்பர் வலியுறுத்தல் இவற்றால் ஏற்றாக நேரும் இக்கட்டான நிலவரம் இன்ன பிறவும் இத்தொடர்பில் ஊடாடிக்கிடப்பனவே.

வலதுசாரிச் சந்தர்ப்பவாதம் விருதேற்பில் ஊடாடிக் கிடப்பதென்றால் விருதேற்பையே 'விருதுநக்கி நோய்' எனல் இடதுசாரித் தீவிரவாத வெளிப்பாடே!'

பொதி

////

..உலக இலக்கியத்தில் நிறைய விருதுகள் உள்ளன. ஆனால் பல எழுத்தாளர்கள் இந்த விருதுக்கொடுமைக்கு எதிராக உள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. எது எப்படியோ இலக்கியமூச்சைக் கெடுப்பது விருதுகள்தாம். ..

'எது எப்படியோ மரணப்படுக்கையில் கிடந்த சில எழுத்தாளர்க்கு சாவை ஒத்திவைக்கவேனும், சற்றே உயிர்மூச்சைப் பிடித்துவைக்கும் மருந்தாகவும் விருது இருந்துவந்த வரலாறேதும் அறியார் போலும்!' பொதி

////////

.............. இக்குறிக்கு இடைப்பட்டவை ராஜு கௌதமனார் சுயதர Kauthaman Raju Kauthaman தரப்புகள்.

கனம் ஐயா,

எல்லா இலக்கியவாதிகள் போலவும், கண்டும் காணாதது போலக் கடந்து போகாமல், ஏடு இட்டோர் இயலைப் பொருட்படுத்தி, அது பற்றிய உங்கள் கருத்தை எழுதியமைக்கு நன்றியும் மகிழ்ச்சியும்.
ஆரோக்கியமான கருத்துப் பரிமாற்றங்கள் தானே எங்கள் சிந்தனையைச் செழுமைப்படுத்துகின்றன.

இருப்பினும், சில விடயங்களைத் தெளிவுபடுத்தலாம் என நினைக்கிறேன்.

Editorial ஐத் தமிழ்ப்படுத்திய 'ஏடு இட்டோர் இயலுக்கும்' என் 'அதிமேதாவித்தனத்துக்கும்' எந்த சம்பந்தமும் இல்லை.

முப்பத்து ஐந்து வருடங்களுக்கு முன் தாயகம் வார இதழை ஆரம்பித்த போது, அதில் ஆசிரியர் கருத்துப் பகுதிக்கு பயன்படுத்திய வார்த்தை அது.

பதின்மச் சிறுவயதில் யாழ்ப்பாணத்தில் வெளியான ஈழநாடு பத்திரிகையில் வந்த ஏதோ ஒரு கட்டுரையில் கண்ட 'வாரியார் சொன்னது!' அது. அதை வாசித்த என் அண்ணன் அதைச் சொல்லி என் மனதில் பதிந்திருந்தது.

தற்போதைய சமூக வலைத்தள யுகத்தில் எந்த மொக்கைக் கருத்தையும் சம்பந்தம் இல்லாத பிரபலங்களின் பெயரோடு

இணைத்து மீம் போட்டால், அதை உண்மை என்று நம்பி பகிர்ந்து கொள்வது போல, எதையாவது துணுக்கை எழுதி, 'வாரியார் சொன்னது!' என்று, ஏதாவது வார இதழ்களுக்கு அனுப்பினால் பிரசுரம் ஆகும் காலம் இருந்ததே?

அவ்வாறானதாக, யாராவது குறும்பனின் கைங்கர்யமாகவும் இருக்கலாம்.

அதனால் என்ன? அதை தாயகம் வார இதழுக்குப் பயன்படுத்த விரும்பினேன். பெரும் வரவேற்புப் பெற்றது. அப்போதும் இந்த விளக்கத்தைத் தெரிவித்திருந்தேன்.

இலங்கை அரசியல் குறித்து எழுதியது போல, இலக்கியம் குறித்த ஆழமான கருத்துக்களைச் சொல்ல அந்தப் பெயர் உகந்ததாகவும் பொருத்தமாகவும் இருந்தது.

'தமிழ்ப்படுத்துகிறாளாமாம்?' என்பது எந்த 'அவாளைக்' குறிக்கிறதோ எனக்குத் தெரியாது. ஆனால், அது வாரியார் சொன்னதாகத் தான் நான் நம்பிக் கொண்டிருக்கிறேன்.

மற்றவர்களுடைய எழுத்துக் களை தங்களுடையதாகப் பிரசுரித்துப் பெயர் வாங்கும் எங்கள் இலக்கிய மேதகுக்கள் மாதிரி இல்லாமல்,

I am just giving the credit where it is due!

விருதுகள் ஒரு குறிப்பிட்ட படைப்பின் திறன் கருதியோ, படைப்பாளியின் பங்களிப்புக் கருதியோ வழங்கப்படுவதில் எவருக்கும் ஆட்சேபனை இருக்க முடியாது. அவ்வாறாக ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்படும் விருது எதனையாவது யாராவது அடையாளம் காட்ட முடியுமா?

கொடுப்பவர்களுக்கு உள்ள உள்நோக்கங்கள், 'சாம, பேத, தான, தண்டம்' கடந்து காலில் விழுந்தாவது பெற வேண்டும் என்று வாங்கத் துடிப்போர்கள் எல்லாரையும் கடந்து, வழங்கப்பட்ட விருது சரியாகத் தான் கொடுக்கப்பட்டது என்று ஏற்றுக் கொள்ளப்பட்ட விருது எதையாவது அடையாளம் காட்ட முடியுமா?

ஐயா உங்களுக்கும் சமீபத்தில் விழா எடுத்தார்கள். கவிஞர் இந்திரன் ராஜேந்திரனுக்கும் விழா எடுத்தார்கள்.

இதையெல்லாம், பணம் கொடுத்து வாங்கிய டாக்டர் பட்டத்திற்கு தாங்களே பணம் செலவிட்டு விழா எடுக்கும் பெரியோர்கள் மாதிரி நீங்களே அதை ஒழுங்குபடுத்தியிருப்பீர்கள் என்று யாராவது குற்றம் சாட்ட முடியுமா?

உங்களுடைய பங்க ளிப்பை பெருமைப்படுத்திக் கௌரவிப்பதற்காக உங்களைத் தெரிந்தவர்கள் விழா எடுக்கிறார்கள். நீங்களும் ஏற்றுக் கொள்கிறீர்கள். மற்றவர்களுக்கும் ஆட்சேபனை இல்லை.

பிழை பிடித்துப் பேர் வாங்கும் புலவர்கள் மாதிரி, விருது கொடுத்துப் பேர் வாங்க நினைக்கும் புரவலர்கள் தானே இங்கே அதிகம்? விருது கொடுத்தவுடனேயே கொடுத்த முன்பின் தெரியாதவர்கள் பிரபலமாகி விடுகிறார்கள். அடுத்த விருதுக்காக பலர் நாக்கைத் தொங்கப் போட்டு வாணீர் ஊற்றியபடி அலைகிறார்கள்.

உங்களைக் கூட சமீபத்தில் தமிழக அரசு கலைஞர் நினைவு குறித்து குழு ஒன்றிற்குத் தெரிவு செய்திருக்கிறது. உங்களுடைய திறமையை அங்கீகரித்துத் தான் அது தரப்பட்டதாயினும், 'அதிகாரத்திற்கு விலை போய் விட்டார்' என்று உங்களைக் குற்றம் சாட்ட இலக்கிய உலகத்தில் ஆள் இருக்கத் தானே செய்யும்?

அதே ஆட்களே, தங்களுக்கு அந்தப் பதவி கிடைத்தால், அத்தோடு கனவு இல்லமும் காரும் டிரைவரும் செக்கிரட்டரியும் கிடைக்குமா என்று வாணீர் ஊற்றக் கூடியவர்கள் தானே?

இது தானே பிரச்சனையாக இருக்கிறது.

தரப்படுவதெல்லாம் தகுதிக்கும் தரத்திற்கும் திறமைக்கும் ஆனவையும் அல்ல.

திறமைக்கும் தகுதிக்கும் தரப்படுகின்ற போது கூட, அதைக் கேள்விக்கும் கேலிக்கும் உள்ளாக்கும் நிலையில் தானே இந்த இலக்கிய உலகம் இருக்கிறது.

இதே இலக்கிய உலகம் தனக்குத் துண்டைப் போர்த்தும் போது வெட்கம் இல்லாமல் தலை குனியத்தானே செய்கிறது.

படைப்பாளிக்கு தன்னம் பிக்கையும் தன்மானமும் திமிரும் இருக்க வேண்டியதில்லையா?

எவன் துண்டைப் போர்த்தினாலும் போய் தலை குனிந்து நிற்பதை யாரும் அவமானமாகக் கருதுவதில்லையா?

இந்துத்துவத்திற்கு முட்டுக் கொடுக்கும் ஆசானும் விகடனும் தரும் விருதைப் பெருமையாகக் கருதுவதாயின், இந்துத்துவ எதிர்ப்பு என்பதன் அர்த்தம் என்ன?

நீங்கள் சொல்கிற 'விருதுக்கு 'லாபி பண்ணியும் மறைமுகக் கையூட்டுகளால் குளுப்பாட்டியும் விலைக்கு வாங்குவோரும் வழங்குவோருமே கண்டனத்திற்கு உரியோராவார்' என்ற கருத்தில் எல்லோருமே உடன்படுகிறோம்.

ஆனால், அவ்வாறாக இல்லாமல் உள்ள விதிவிலக்குகள் எவையெனக் கூற முடியுமா?

'அங்கீகார ஆதங்கம்... வறுமை... குடும்ப நிறுவனத்தில் மதிக்கப் பெறும் அங்கீகாரம், நலம் விரும்பி நண்பர் வலியுறுத்தல்...' போன்ற இன்னோரன்ன காரணங்களோடு, 'மரணப்படுக்கையில் கிடந்த சில எழுத்தாளர்க்கு சாவை ஒத்திக்க வைக்கவேனும், சற்றே உயிர்மூச்சைப் பிடித்து வைக்கும் மருந்தாகவும் விருது இருந்த வரலாறு'கள் பற்றி நீங்கள் சொல்லும் போது, இறந்து போன புலி ஆதரவாளரின் சவப்பெட்டிக்கு புலன் பெயர்ந்த நாடுகளில் முன்பின் தெரியாதவர்கள் சுமந்து வந்து புலிக் கொடியைப் போர்த்தி, 'நாட்டுப் பற்றாளர்', 'மாமனிதர்' என்றெல்லாம் பட்டம் கொடுக்கும் கோமாளிக் கூத்துத் தான் நினைவுக்கு வருகிறது.

கொடுப்பவர்கள் யார் என்றே தெரியாது. ஆனால் அதைப் பெருமையாக வரலாறாக்குவதை எப்படிப் பொறுத்துக் கொள்வது?

இப்படியெல்லாம் இந்த இலக்கியப் படைப்பாளிகள் அல்லல் உறாமல், மொத்த விற்பனைக் கழிவு விலையில் ஒட்டுமொத்தமாக துண்டுகளை வாங்கி எல்லாருக்குமே போர்த்து

விட்டால், பல எழுத்தாளர்களின் ஆன்மா சாந்தியடைந்து, அமைதியில் இளைப்பாறுவார்கள் போலத் தான் இருக்கிறது. இல்லாவிட்டால், உயிர் போகாமல் சேடம் இழுத்துக் கொண்டிருந்த அந்த வட்டிக்குப் பணம் கொடுத்த வயோதிப மாது போல, உயிர் போகாமலேயே இழுபட்டு அவலப்பட வேண்டியிருக்கும்.

'வலதுசாரிச் சந்தர்ப்பவாதம் விருதேற்பில் ஊடாடிக் கிடப்பதென்றால், விருதேற்பையே 'விருதுநக்கி நோய்' எனல் இடதுசாரித் தீவிரவாத வெளிப்பாடே!' என்கிறீர்கள்.

ஐயா, கொஞ்சம் ஜாக்கிரதை. நீங்கள் கருத்துச் சொல்வது தமிழ் இலக்கிய உலகத்தில்.

அவர்களே உங்களுக்கு 'நடுநிலை நக்கி!' என்று பட்டமும் விருதும் தந்து, இலவச இணைப்பாக பொன்னாடையும் போர்த்தக் கூடும்.


# ஊர் Ur

## Queer Tamil Collective (QTC) Exhibition

This exhibition reflects on, intervenes, illuminates and re-tells our Queer Tamil stories from multiple perspectives critiquing and disrupting comfortable narratives of Being Queer and Tamil: the ways in which we have become attuned to heteronormative patriarchy, capitalism, social media marketing and visibility.

**June 11, 2023-**
**January 31, 2024**

**Scarborough Musuem**
**1007 Brimley Rd, Toronto, ON M1P 3E8**

**queertamilcollective.com**
**follow us on Instagram: Queer Tamil Collective (QTC)**
**Facebook: Queer Tamil Collective.**
**queertamilcollective@gmail.com**

# சாரு
# ஓர் சிறு பதிவு

நண்பர் தாயகம் ஜோர்ஜ் ‘அபத்தம்‘ ஜூன் இதழில் சாரு நிவேதிதா மீது ஓர் கட்டுரையை எழுதியுள்ளார்.

ஆங்கிலத்திலும் தமிழிலுமான தலைப்பில் உள்ள கட்டுரை இது. (சாரு சர்ச்சைகளால் உருவாகும் Provocateur)

‘சாரு பற்றிச் சொன்னபோது, நண்பர் கலாமோகன் வர்ணித்த வார்த்தை Provocateur என எழுதியுள்ளார்.

‘சாரு Provocateur என நான் நினைக்கின்றேன். ஆனால்

தமிழில் மிகவும் சிறப்பான எழுத்தாளர்களில் ஒருவர்.

இவரது எழுத்துகள் வித்தியாசமானவை. பிரான்ஸில் நான் இவரை இரண்டு தடவைகள் சந்தித்துள்ளேன்.

ஓர் தினம் இவர் எனது வாழ்விடத்தில் தங்கியுள்ளார். அது இனிய சந்திப்பாக இருந்தது.

தமிழ் நாட்டிற்குப் போனபோது எமது குடும்பத்தை இனிய விருந்தோம்பலில் மகிழ்த்தியுள்ளார்.‘ என ஜோர்ஜிடம் கூறி இருந்தேன்.

அது இவரது கட்டுரையில் வரவில்லை. வந்திருப்பதை நான் மிகவும் விரும்பியுள்ளேன்.

எமது உலகில் சில எழுத்தாளர்கள் சீண்டும் (Provocation) எழுத்தாளர்களாக உள்ளனர்.

இவைகளிற்குப் பல காரணங்கள் உள்ளன.

இந்த எழுத்துச் சீண்டல் என்பது ஓர் மிகப் பெரிய பொருள். இதன் மீது எழுதும் எண்ணம் எனக்கு உள்ளது.

க.கலாமோகன்




வாசுகனின் ஓவிய, சிற்பக் கண்காட்சி

சனிக்கிழமைகளில்
மாலை இரண்டு மணி முதல்
இரவு எட்டு மணி வரை

Galerie IMPRESSIONS
17 rue Meslay, 75003 Paris
Métro - République / Temple

01.04 - 22.07.2023




# எரிப்பு அரசியல்

**பேரறுஞர் கல்லாநிதி கியூறியஸ் ஜி**

இந்த வார ராசி பலன் மாதிரி, பேஸ்புக்கிற்கும் இந்த வார சர்ச்சை பரபரப்பு என்று ஒன்று ஓடிக் கொண்டிருக்கும். தங்களுடைய கருத்தைச் சொல்லாவிட்டால், கள்ள மௌனம் சாதிக்கிறார் என்ற பழி சூழ்ந்து விடும் என்பதால், எல்லோரும் முண்டியடித்துக் கொண்டு கருத்துச் சொல்லி... அரசியல், இலக்கிய அறிஞர்கள் குடுமிப் பிடி சண்டை முடிவதற்குள், அடுத்த வார ராசி பலன் வந்து விடும்.

சென்ற வாரப் பலன் யாருக்கு வேண்டும்?

பழையபடி வரிந்து கட்டிக் கொண்டு...!

கொஞ்ச நாள் 'வெந்து தணிந்தது காடு' படம் ஓடிக் கொணடிருந்தது.

தமிழ்த்தேசியத்திற்கு முண்டு கொடுத்தாலும், துரோகிப் பட்டம் கிடைக்காது என்பதற்கு கம்பனி எந்த உத்தரவாதமும் தரமாட்டாது என்று யாழ்ப்பாணிக் கார்ப்பரேட் நிறுவனம் fine print ல் எழுதி வைத்திருப்பதை, யாழ்ப்பாணிகள் கூட வாசிப்பதில்லை.

பட்டை நாமம் சாத்தி, கும்பலில் கோவிந்தா போட்டால் பாதுகாப்பு என்ற நினைப்பு.

துரோகிப் பட்டமும் விருது ரேஞ்சில், யார் யாருக்கு கொடுப்பது என்ற கணக்கு வழக்கில்லாமல், யார் யாருக்கும் கொடுக்கலாம்.

விருது, பட்டம் என்பது தான் முக்கியமே தவிர, யார் தந்தது, விலை கொடுத்து வாங்கியதா என்பது பற்றி எல்லாம் என்ன கவலை?

மேற்படி படம் போராட்டத்திற்கு எதிரானது என்ற குற்றச்சாட்டோடு, 'தமிழினம்' அந்தப் படம் திரையிட 'தடை விதித்திருக்கிறது!'.

“

**தமிழ்த்தேசியத்திற்கு முண்டு கொடுத்தாலும், துரோகிப் பட்டம் கிடைக்காது என்பதற்கு கம்பனி எந்த உத்தரவாதமும் தரமாட்டாது என்று யாழ்ப்பாணிக் கார்ப்பரேட் நிறுவனம் fine print ல் எழுதி வைத்திருப்பதை, யாழ்ப்பாணிகள் கூட வாசிப்பதில்லை.**

**பட்டை நாமம் சாத்தி, கும்பலில் கோவிந்தா போட்டால் பாதுகாப்பு என்ற நினைப்பு.**

**துரோகிப் பட்டமும் விருது ரேஞ்சில், யார் யாருக்கு கொடுப்பது என்ற கணக்கு வழக்கில்லாமல், யார் யாருக்கும் கொடுக்கலாம்.**

யாழ்ப்பாணிக்கு என்ன?

கும்பலில் கோவிந்தா மாதிரி...

துரோகி ஒழிக!

அது யார் எவர் என்பது என்ன பிரச்சனை?

அந்த ஈரம் காய்வதற்கு முன்னால், 'வயல் மாதா!'.

உண்மைக் கதை ஒன்று சிறுகதைத் தொகுப்பில் வந்தது என்று சொல்லி, ஊரவர்கள் 'கொதித்தெழுந்து' புத்தகப் பிரதிகளுக்கு தீ வைத்திருக்கிறார்கள்.

பிறகென்ன?
பேஸ்புக் கொதித்தெழ...

வழமை போல இலக்கிய அரசியலாளர்கள் குடுமிப்பிடிச் சண்டை.

அதுவும் கொஞ்ச நாளைக்கு ஓடும்.

இந்த வாரப் பலன் முடிந்தால் என்ன?

அடுத்த வாரப் பலனை ஆவலோடு வாசிக்கக் காத்திருப்பார்கள் தானே!?

இதை எல்லாம் கருத்துச் சுதந்திரம், மறுப்பு என்று அப்பிள் மண்டையில்

**அந்தந்தக் காலங்களில் யாழ்ப்பாணிக்குத் தோன்றும் தர்க்கத்துக்கும் நடைமுறைச் சாத்தியத்திற்கும் முரணான சகல கருத்துக்களோடும் நீங்கள் உடன்படாவிட்டால், உங்களை ஒரு மனநிலை பிறழ்ந்தவர் என்ற முடிவோடு, 'அவன் விசரன்' என்று சொல்கின்ற அளவுக்கு யாழ்ப்பாணிகள் புத்திசாலிகளாகத் தான் இருந்து வருகிறார்கள்.**

**அதனால் தான், 'தலைவர் திட்டம் வைச்சிருக்கிறார், சர்வதேசம் தன்ரை வேலையைப் பாக்கட்டும்' என்று சொன்ன அதே யாழ்ப்பாணி, 'சர்வதேசம் சதி செய்து போராட்டத்தை அழித்து விட்டது' என்று சொல்லும் அதே யாழ்ப்பாணி, 'சர்வதேசம் தலையிட்டு தீர்வு வாங்கித் தர வேண்டும்' என்று ஜெனிவாவுக்குப் போய்க் கொண்டிருக்கிறான்.**

**இதில் உள்ள தர்க்கத்தை விளங்கிக் கொள்ளவும், அதை விளங்கிக் கொள்ள முடியாதவனை 'துரோகி' என்று சொல்லவும் நீங்கள் யாழ்ப்பாணியாக இருந்தால் மட்டுமே முடியும்.**

---

போட்டு.. ஓ... விழுந்து புதிதாகக் கண்டுபிடித்த மாதிரி மோதுவதைப் பார்க்கும்போது, 'அட, இதைத் தானே முப்பது வருசமாக கத்திக் கொண்டிருக்கிறோம்' என்று சொல்ல வேண்டும் போல இருந்தது.

கருத்தும் அதைக் கொண்டிருப்பதற்கான சுதந்திரமும் யாழ்ப்பாணிகளுக்கு எப்போதும் அன்னியமானதாகவே இருந்து வந்திருக்கிறது.

'ஊரோடு ஒத்தோடுவது' எதற்கும் பாதுகாப்பாக இருக்கும்.

ஏன் என்ற கேள்வி கேட்காமல் தானே வாழ்க்கையே ஓடிக் கொண்டிருக்கிறது.
அதெல்லாம் பிழைக்கத் தெரியாதவனுக்குத் தானே?

துப்பாக்கி வைத்திருந்தால், ஐயா என்ன? தேசியத் தலைவர் தான்!

முப்பது வருசமாக 'அண்ணை அடிச்சுப் பிடிச்சு' 'மலரைப் போகும் தமிழீழத்தில்', தேனும் பாலும் ஓடி, தனி மனித சுதந்திரங்கள் எல்லாம் அரசியலமைப்பில் உத்தரவாதம் தரப்பட்டு, 'அஞ்சு வரியத்தில வல்லரசு' என்ற கனவுக்கு எதிராக கருத்துச் சொன்னவன் எல்லாம் யாழ்ப்பாணிக்குத் துரோகியாகத் தான் இருந்தான்.

அப்பிள் மண்டையில் போட்ட மாதிரி, முள்ளிவாய்க்கால் மண்டையில் போட்ட பின்னால் தான், யாழ்ப்பாணிக்கு கருத்துச் சுதந்திரம் பற்றி ஓடி வெளிச்சிருக்கு.

கருத்துச் சொல்வதற்கான சுதந்திரம் என ஒன்று இருக்கிறது, அது அடிப்படை மனித உரிமை, அதை அரசியல் அமைப்பில் உறுதி செய்ய வேண்டும் என்ற கருத்து, யாழ்ப்பாணிக்கு ஒரு போதும் மண்டையில் உறைத்ததே இல்லை.

அந்தந்தக் காலங்களில் யாழ்ப்பாணிக்குத் தோன்றும் தர்க்கத்துக்கும் நடைமுறைச் சாத்தியத்திற்கும் முரணான சகல கருத்துக்களோடும் நீங்கள் உடன்படாவிட்டால், உங்களை ஒரு மனநிலை பிறழ்ந்தவர் என்ற முடிவோடு, 'அவன் விசரன்' என்று சொல்கின்ற அளவுக்கு யாழ்ப்பாணிகள் புத்திசாலிகளாகத் தான் இருந்து வருகிறார்கள்.

அதனால் தான், 'தலைவர் திட்டம் வைச்சிருக்கிறார், சர்வதேசம் தன்ரை வேலையைப் பாக்கட்டும்' என்று சொன்ன அதே யாழ்ப்பாணி, 'சர்வதேசம் சதி செய்து போராட்டத்தை அழித்து விட்டது' என்று சொல்லும் அதே யாழ்ப்பாணி, 'சர்வதேசம் தலையிட்டு தீர்வு வாங்கித் தர வேண்டும்' என்று ஜெனிவாவுக்குப் போய்க் கொண்டிருக்கிறான்.

இதில் உள்ள தர்க்கத்தை விளங்கிக் கொள்ளவும், அதை விளங்கிக் கொள்ள முடியாதவனை 'துரோகி' என்று சொல்லவும் நீங்கள் யாழ்ப்பாணியாக இருந்தால் மட்டுமே முடியும்.

தர்க்கரீதியான நியாயங்கள் யாழ்ப்பாணிக்கு ஒவ்வாதவை.

அவனுக்கு தினவெடுக்கும்போது பிடித்து விடவும், அரிப்பெடுக்கும்போது சொறிந்து விடவும் உங்களுக்குத் தெரிந்தால் போதும்.

பிழைத்துக் கொள்ளலாம்.

கருத்துக்களும் தர்க்கரீதியான நியாயங்களும் கொண்டு, யாழ்ப்பாணியோடு நீங்கள் உரையாட முடியாது.

'சும்மா அதகடிக்கிறாய்' என்று அப்பாலே போய் விடுவான்.

யுத்தம் முடிந்து நான் எழுதிய 'அழிந்தும் அழிய மறுக்கும் யாழ்ப்பாணம்' உரையில் நான் எழுதியது...

'நாங்கள் எங்கே இருந்து தொடங்க வேண்டும்?

மற்றவர்களுக்கும் கருத்தைக் கொண்டிருப்பதற்கான உரிமை இருக்கிறது என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதிலிருந்து!'.

இந்த அடிப்படையைப் புரிந்து கொள்ளாத, இந்த அடிப்படை மனித உரிமையை ஏற்றுக் கொள்ளாத ஒரு சமூகம், கருத்து ரீதியாக வளர்ச்சியடையும் என்று எதிர்பார்ப்பதைப் போன்ற அபத்தம் வேறு எதுவாக இருக்க முடியும்?

இதனால் தான் இன்றைக்கும் ‘முள்ளி வாய்க்கால் முடிவல்ல! ஆயுதங்களை மௌனித்திருக்கிறோம்!’ என்று கதை சொல்ல முடிகிறது.

தில் இருந்தால், ஆயுதங்களை மௌனிச்சிருக்கிறது, தலைவர் திரும்பி வருமட்டுமோ? அல்லது நீங்கள் திருப்பித் தூக்கும் வரைக்குமோ? என்று கேட்டுப் பாருங்கள்.

இவ்வாறான ஒரு சமூகத்தில், ஊரோடு ஒத்தோடி, கும்பலோடு கோவிந்தா போட்டாலும், துரோகி பட்டம் கிடைக்காது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை என்றால், இதை நீங்கள் எப்படி விளங்கிக் கொள்ளப் போகிறீர்கள்?

முல்லாக்கள் மாதிரி, ஆளாளுக்கு பத்வா போடலாம்.
அதற்கு தமிழ்த்தேசியம், போராட்டம் என்று ஒன்றை ஆதாரம் காட்டலாம். அவ்வளவு தான்.

எல்லோரும் இந்நாட்டின் தேசிக்காய் தலையர்கள் நிலையில் தான் இன்றைக்கு வந்து முடிந்திருக்கிறது.

எந்த ஒரு அயோக்கியனும் யாரையும் ‘உவர் தமிழ்த் தேசியத்திற்கு எதிரானவர்’ என்று புரளியைக் கிளப்ப முடியும். அதை எந்தக் கேட்டுக் கேள்வியும் இன்றி, முற்றுமுழுதாக நம்பும் நிலையில் தான் இந்த சமூகம் இருக்கிறது.

காரணம், அதைக் கேள்விக்குள்ளாக்கக் கூடிய அறிவார்ந்த குழு எதுவும் இந்த சமூகத்திற்குள் இல்லை.

இதை எல்லாம் கேள்விக்குள்ளாக்க வேண்டிய சமூகத் தலைவர்கள் எனப்படும் ‘படித்தவர்கள்’, செல்போன் மீடியாக்காரர்கள், அரசியல் ஆய்வாளர்கள் என எல்லோருமே, சிந்தனை வழிப்பட்டு கருத்துக்களை எதிர்கொள்ளாமல், சில நேரங்களில் ‘துரோகிப் பட்டம்’ கிடைக்கும் என்ற பயத்தில் பகைத்துக் கொள்ளாமல் இருக்க மௌனமாகவும், பெரும்பாலும் இதை வைத்துப் பிழைப்பு நடத்தலாம் என்றால், சத்தம் போட்டு சீன் காட்டி ஆட்சேர்த்தும் தான் இந்தக் கூத்து நடந்து கொண்டிருக்கிறது.

இப்படிக்கொத்த ‘அறிவார்ந்த’ சமூகத்தை வைத்துக் கொண்டு, ஒரு தீர்வைக் காண முடியும் என்று அதே சமூகம் நம்புவது தான் மிகப் பெரும் முரண்நகை.

படம் தடை, புத்தகம் எரிப்பு இரண்டுமே வேறு தளங்களில் ஏற்பட்டவை.

ஒன்று ‘தமிழ்த்தேசியத்தை கொச்சைப்படுத்துகிறது’ என்று தொடங்கியது. மற்றது, ‘மதத்தையும் தனிப்பட்டவர்களையும்’ இழிவு படுத்துகிறது எனத் தொடங்கியது.

ஒன்று முழுத் தமிழ்ச் சமூகத்திற்கானதாகவும், மற்றது ஒரு குறிப்பிட்ட ஊரைச் சேர்ந்த ஒரு மத சமூகத்திற்கானதாகவும் ஆனவை.

படத் தடை என்பதை இன்றைக்கும் தமிழ்த்தேசியர்கள் நியாயப்படுத்துகிறார்கள்.

ஆனால், புத்தக எரிப்பு என்பதில் ‘புத்திஜீவிகளுக்குள்(?)’ பெரும் பிரிவு ஏற்பட்டிருக்கிறது.

மிகவும் அபூர்வமாக, ‘எரிக்கப்பட்டது விலைக்கு வாங்கிய புத்தகங்கள் தானே!?’ என்ற நியாயப்படுத்தல்களும் எழுந்திருக்கின்றன.

எல்லாவற்றையும் தனித்தனியான பிரச்சனையாக அணுகாமல் பொதுமைப்படுத்தி சிலாவி அடிப்பதால் பல பிரச்சனைகள் உள்ளன.

புத்தக எரிப்பு எல்லாம் ஒன்றல்ல.

நூலக எரிப்புக்கும், தமிழ்க் கடைக்குள் புகுந்து பலாத்காரமாக சஞ்சிகைகளை அள்ளி வந்து தெருவில் போட்டு எரிப்பதற்கும், விலைக்கு வாங்கிய தங்கள் புத்தகங்களை எதிர்ப்பதற்கும் வித்தியாசங்கள் உள்ளன.

நூலக எரிப்பு ஒரு சமூகத்திற்கு எதிரான ஆக்கிரமிப்புச் செயல். அதன் அறிவின் மீதான அதிகாரத்தின் வன்முறை.

**புத்தக எரிப்பு எல்லாம் ஒன்றல்ல.**

**நூலக எரிப்புக்கும், தமிழ்க் கடைக்குள் புகுந்து பலாத்காரமாக சஞ்சிகைகளை அள்ளி வந்து தெருவில் போட்டு எரிப்பதற்கும், விலைக்கு வாங்கிய தங்கள் புத்தகங்களை எதிர்ப்பதற்கும் வித்தியாசங்கள் உள்ளன.**

**நூலக எரிப்பு ஒரு சமூகத்திற்கு எதிரான ஆக்கிரமிப்புச் செயல். அதன் அறிவின் மீதான அதிகாரத்தின் வன்முறை.**

அரசியல் பின்னணி தங்களுக்கு இருக்கிறது என்ற நினைப்போடு, நட்டம் கடைக்காரருக்கு என்ற நினைப்பு இல்லாமல், சஞ்சிகைகளை அள்ளி வந்து தெருவில் நெருப்பு வைப்பது காடைத்தனம். ஆனால் அதை ஒரு சமூகம் வெற்றியாகவும் போராட்டத்தின் பெயரால் கட்டாயமாகச் செய்யப்பட வேண்டிய போராட்ட வழிமுறைஎன்று அங்கீகரித்ததாகவும் தான் எங்கள் நிலைமை இருந்தது. அந்த வன்முறையை இந்த ‘படித்த’ சமூகம் கண்டித்ததில்லை.

தாங்கள் வாங்கிய புத்தகத்தை எரிப்பது என்பது வெறும் symbolic act மட்டும் தான். ஆனால், அந்தக் கோபத்தோடு, ‘ஆள் அகப்பட்டால் துவம்சம் தான்’ என்ற நிலை இருந்தால் அது வன்முறை.

கருத்துச் சுதந்திரம் என்பதற்கும் எல்லைகள் இல்லாமல் இல்லை. வெறுமனே licence to insult / slander எதையும் கருத்துச் சுதந்திரம் தருவதில்லை.

கருத்துச் சுதந்திரத்தைத் தந்த அதே சட்டங்கள், மானநஷ்ட வழக்குக்கான வழிகளையும் தந்திருக்கின்றன.

கருத்துச் சுதந்திரம் என்பது கருத்தைச் சொல்வதற்கான சுதந்திரம் மட்டுமல்ல, அதற்கான பொறுப்பையும் சுமத்தித் தான் நிற்கிறது. அந்தக் கருத்து பொய்யாகவோ, திட்டமிட்ட அவதூறாகவோ, இன்னொருவரின் சுதந்திரம் மீதான எல்லை மீறலாகவோ இருந்தால், அதற்கான விலையைச் செலுத்தித் தான் ஆக வேண்டும்.

எல்லாப் படைப்புகளாலும் எல்லாரையும் ஈர்க்க முடிவதில்லை. அதன் மறுபுறத்தில், சில நேரங்களில் சில படைப்புகள் சில பலரைக் கோபமூட்டக் கூடும்.

தங்கள் நம்பிக்கைகளைக் கேலி செய்வது, விமர்சிப்பது மூலமாக தங்கள் உணர்வுகள் புண்படுத்தப்பட்டதாக கூறிக் கொண்டு அந்தப் படைப்புகள் மீதும் அதைப் படைத்தவர் மீதும் ஆத்திரம் கொள்ளக் கூடும்.

பழமைவாதம் மதங்களில் மட்டுமல்லாமல், அரசியலிலும் பெரும் ஆதிக்கம் செலுத்துவதால், அந்தப் போக்கிற்கு எதிரான கருத்துக்களைக் கொண்ட படைப்புகள் மீதான எதிர்ப்புணர்வு பலமாக இருந்து வருகிறது. அமெரிக்காவில் அதிகரித்து வரும் இந்த பழமைவாதம் குடும்பப் பெறுதிகள் (Family values) எனப்படும் கருத்தோடு முரண்படுகிற படைப்புகளை பாடசாலைகளில் தடை செய்யக் கோரி நீதிமன்றம் செல்வதும், நீதிமன்றம் அவற்றுக்கு தடை விதித்து அவற்றை அகற்றுவதும் அடிக்கடி நடைபெறும் ஒன்றாக இருக்கிறது.

ஆதிக்கம் கொண்ட சக்திகள் தங்கள் கருத்துக்களுக்கும், பாரம்பரிய நம்பிக்கைகளுக்கும் முரணான படைப்புகள் மீதும் படைப்பாளிகள் மீதும் வன்முறையை

**கருத்துச் சுதந்திரம் என்பதற்கும் எல்லைகள் இல்லாமல் இல்லை. வெறுமனே** licence to insult / slander **எதையும் கருத்துச் சுதந்திரம் தருவதில்லை.**

**கருத்துச் சுதந்திரத்தைத் தந்த அதே சட்டங்கள், மானநஷ்ட வழக்குக்கான வழிகளையும் தந்திருக்கின்றன.**

**கருத்துச் சுதந்திரம் என்பது கருத்தைச் சொல்வதற்கான சுதந்திரம் மட்டுமல்ல, அதற்கான பொறுப்பையும் சுமத்தித் தான் நிற்கிறது. அந்தக் கருத்து பொய்யாகவோ, திட்டமிட்ட அவதூறாகவோ, இன்னொருவரின் சுதந்திரம் மீதான எல்லை மீறலாகவோ இருந்தால், அதற்கான விலையைச் செலுத்தித் தான் ஆக வேண்டும்.**

மேற்கொள்வதும் ஏவி விடுவதும் காலம் காலமாக நடந்து கொண்டு தான் இருக்கின்றன.

சல்மான் ருஷ்டிக்கு விதித்த பாத்வா, எத்தனை வருடங்களின் பின்னால் அவர் கண்ணைப் பறித்தது?

பெருமாள் முருகன் 'இறந்து விட்டான்' என்று பகிரங்கமாகச் சொல்லும் நிலை ஏன் வந்தது?

அதிகாரத்திற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தக் கூடிய படைப்புகள் மீது அச்சம் கொள்வது அடக்குமுறை அரசாங்கங்கள் மட்டுமில்லை, அதிகார சக்திகளும் தான்.

அது இன, மத, சாதி சமூகங்களாகவும் இருக்கின்றன. தங்கள் நம்பிக்கைகள், பாரம்பரியங்கள் பற்றி எழுதி, உணர்வுகளை புண்படுத்தியதாக, அதை நம்புகின்ற, அதில் எழுதப்பட்டதை வாசித்தே இராத அறியாமைக் கூட்டத்தை இலகுவாக உசுப்பேத்தி, வன்முறையைத் தூண்ட முடியும்.

பிறகென்ன?

A mob doesn't have a mind on its own.

கருத்துச் சுதந்திரத்திற்கான எல்லைகள் என்ன? அதை வரையறுப்பது யார்? என்ற கேள்விகள் வெறும் பொதுமைப்படுத்தல்களால் எதிர்கொள்ளப்பட முடியாதவை.

ஒருவருக்கு முழுமையாக நம்பும் கொள்கை இன்னொருவருக்கு பிற்போக்குத்தனமானதாக இருக்கும். ஒரு நாட்டில் முற்போக்குச் சிந்தனையாக இருப்பது இன்னொரு நாட்டில் மரண தண்டனைக் குற்றமாக இருக்கும்.

இது சிலாவி அடிக்க முடியாத சிக்கலான பிரச்சனை. எங்கோ ஒரு இடத்தில் common ground ஐக் கண்டு, சமரசம் செய்ய வேண்டிய நிலைகள் நிறைய உண்டு.

கருத்துச் சுதந்திரத்திற்கான எதிர்ப்பு வன்முறையாக இருக்கக் கூடாது என்பது பொதுநீதியாக எல்லாரும் ஏற்றுக் கொள்ளக் கூடியது. வேண்டியது.

இதற்கான காரணம், இந்த எதிர்ப்பைக் கையில் எடுப்பது யார் என்ற பிரச்சனை.

அரசு சட்டரீதியாக தடை செய்யும் போது, சட்டரீதியாக எதிர்கொள்ள முடியும். அதே அரசு அடக்குமுறையானதாக இருந்தால் இதெல்லாம் சாத்தியமில்லை.

ஆனால் சட்டத்திற்குப் புறம்பான சக்திகள் அதைக் கையில் எடுக்கும்போது அதற்கான பொறுப்புக் கூறல் பொறுப்பு எவரிடம் என்பது கேள்வியாகி விடும்.

கும்பலின் செயற்பாடுகளுக்கு அதே கும்பலிடம் பொறுப்புக் கேட்க முடியாது. மாட்டுப்படுவது உசுப்பேற்றப்பட்டு கையும் மெய்யுமாகப் பிடிபடுகிறவன் தான்.

இதனால் தான் கருத்துக்களை கருத்துக்களால் மட்டுமே எதிர்கொள்ள வேண்டும்.

இல்லையேல் சட்டத்திற்கு உட்பட்ட முறையில்.

சட்டத்திற்குப் புறம்பான முறையில் என்றால், mob lynching எனப்படும் உசுப்பேற்றப்பட்ட கும்பலின் செயற்பாடுகளில் தான் முடியும்.

கருத்துக்களுக்கான எதிர்ப்புகள் கருத்துக்களால் முடியாமல், பல symbolic செயற்பாடுகளால் கூட வெளிப்படுத்தப்படலாம்.

இந்தியா ருடேயின் இலக்கிய இதழை மலம் துடைத்து திருப்பி அனுப்புவதைக் கூட இலக்கியக் கூட்டம் செய்தது.

புளித்த தோசை மாவை தூக்கி முகத்தில் எறிவது போல, இது இலக்கிய உலகின் ஒரு symbolic gesture தான்.

எரிப்பு இதன் அதிதீவிரவடிவம். தேசியக் கொடியை, அரசியல் அமைப்பை எரிப்பது மாதிரி.

அதனோடு இலவச இணைப்பாக வரும் பஸ் எரிப்பும் கொலைகளும் தான் வன்முறையாக நீட்சி பெறும். இதன் எல்லைகள் சரியாக வரையறுக்கப்படாமல், எதிர்ப்பு கை விலகிப் போய் கும்பல் அதைக் கையேற்கும்போது வரும் வினை இது.

இன்று மதத்தின் பெயரால் நடத்தப்படும் சகலமும் இவ்வாறானவையே.

கருத்துச் சுதந்திரத்தை இலக்கியம் என்ற பெயரில் துஷ்பிரயோகம் செய்ய முடியுமா?

இதில் எழுதுகிறவரின் பொறுப்பு என்ன? என்ற கேள்வி மிகவும் முக்கியமானது.

கருத்துச் சுதந்திரம் உறுதி செய்யப்பட்டது என்றாலும் நாஸி இலக்கியங்கள் தடை செய்யப்பட்டுத் தான் இருக்கின்றன. ஆனால் இதற்கும் blasphemy

**கருத்துக்களுக்கான எதிர்ப்புகள் கருத்துக்களால் முடியாமல், பல symbolic செயற்பாடுகளால் கூட வெளிப்படுத்தப்படலாம்.**

**இந்தியா ருடேயின் இலக்கிய இதழை மலம் துடைத்து திருப்பி அனுப்புவதைக் கூட இலக்கியக் கூட்டம் செய்தது.**

**புளித்த தோசை மாவை தூ க்கி முகத்தில் எறிவது போல, இது இலக்கிய உலகின் ஒரு ஸலஅடுிடைஉ பநளவரசந தான்.**

**எரிப்பு இதன் அதிதீவிரவடிவம். தேசியக் கொடியை, அரசியல் அமைப்பை எரிப்பது மாதிரி.**

என்ற பெயரில் நடக்கும் மரண தண்டனைகளுக்கும் வித்தியாசம் உண்டு. இரண்டுக்குமான அறநெறிகள் முரண்பாடானவை.

இப்படி இந்த அளவீடுகள் அது சார்ந்த சமூகங்களைச் சார்ந்ததே.

யாழ்ப்பாணிகளின் எப்போதுமே நகர்ந்து கொண்டிருக்கும் (Perpetually moving target) அறநெறிகளின்படி, எதையும் அளவிட முடியாது.

ஆனாலும், பொதுநீதியின்படி முன்னோக்கிய சமூகத்தில் சில கருத்துக்களை நாங்கள் கொண்டிருக்க முடியாது. அந்தப் பொறுப்பில் இருந்து விலகும் படைப்பாளியை யாரும் நியாயப்படுத்தத் தேவையில்லை.

ஒரு நாகரீக சமூகத்தில் பால், பால் தேர்வு, தோல் நிறம், மதம் என்பவற்றால் மனிதர்களை அளவீடு செய்வதை நியாயப்படுத்தும் ஒருவரை, அவரது கருத்துச் சுதந்திரம் என்று சமூகம் நியாயப்படுத்த முடியாது.

உயிரோடு இருப்பவர்கள் பற்றி பொதுவெளியில் பகிரக் கூடாத ஒன்றை கருத்துச் சுதந்திரத்தின் அடிப்படையில் வெளியிடுவதில்லை. பாலியல் குற்றங்களில் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காட்டாமல் இருப்பதுகூட இவ்வாறானது தான். அதை மீறுவது பற்றிய சர்ச்சைகள் அடிக்கடி இங்கே கிளம்பிக் கொண்டே இருக்கும்.

தங்களது தனிப்பட்ட பிரச்சனைகளில் பழிவாங்கும் ஒரே நோக்குடன், கொடுக்கல் வாங்கல் முதல் காதல் வரையிலான பிரச்சனைகள் வரை, குடும்பங்களுக்குள் பிரச்சனை ஏற்படுத்தும் அளவுக்குக் கூட, இலக்கியம் படைத்த இலக்கியவாதிகள் பால்பேதம் இல்லாமல் இங்கே ஊருக்குள் தான் உலவிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இலக்கிய வட்டங்களில் அங்கீகரிக்கப்பட்டபடியே தான் இருக்கிறார்கள்.

எவரும் அதன் நியாயம் பற்றிக் கேள்வி எழுப்பியதாகக் காணவில்லை.

ஒரு தடவை பேஸ்புக்கில் எழுதியிருந்தேன்.

நான் என் ஊர் பற்றிய கதைகளை எழுதுவதில்லை. ஊரே பேஸ்புக்கில் இருக்கிறது. அதுவே கலவரமாகி விடும் என்று.

சமூக வலைத்தளங்களின் உடனடி பதில் தாக்குதல் நடத்தக் கூடிய வசதி, கருத்தையே திசை திருப்பி விடக் கூடியது.

ஒரு புறத்தில் எழுதியவருக்கான கருத்துச் சுதந்திரத்தின் நியாயப் படுத்தல்களும், மறுபுறத்தில் எரித்தவர்களுக்கான கருத்துச் சுதந்திரத்தின் நியாயப் படுத்தல்களுமாக இது தற்போது நடக்கிறது.

வழமையைப் போன்று, பேஸ்புக்கின் இவ்வார பரபரப்பாக இது முடிந்து விடும். இதன் முக்கியத்துவத்தை நீர்த்துப் போகச் செய்ய இன்னொரு சர்ச்சை கிளம்பி வரும்.

எல்லோரும் கருத்துச் சொல்வதைத் தவற விடாமல் இருப்பதற்காக

அங்கே ஓடிச் செல்வார்கள்.

ஆனால், யாழ்ப்பாணச் சமூகத்தில் கருத்துச் சுதந்திரம் பற்றி பெரும் உரையாடலும் விவாதமும் நடத்தப்பட வேண்டிய கட்டாயம் ஒன்று இருக்கிறது.

எந்த முன்னோக்கிய நகர்வும் அதில் இருந்து தான் தொடங்க வேண்டும்.

அதற்கு இந்த சமூகம் ஒரு போதும் தயாராக இருந்ததுமில்லை.

பதினொரு பேய்கள் என்று அ. முத்துலிங்கம் எழுதிய சிறுகதை பெரும் சர்ச்சைக்குள்ளானது.

பலத்த எதிர்ப்புகளின் பின்னர், அவரே அதை அழித்து விட்டு தன் வேலையைப் பார்க்கத் தொடங்கி விட்டார்.

விருது கொடுக்க!

அதற்காக அவர் மன்னிப்பைக் கோரியதும் இல்லை. தன் தவறை ஒத்துக் கொண்டதும் இல்லை.

அவர் அவ்வாறான ஒரு கதையை எழுதியதன் நோக்கம் என்னவாக இருக்கும்?

விடுதலைப் போராட்டத்தில் நடந்த ஒரு சம்பவத்தை வரலாற்றுப் பதிவாக்க வேண்டும் என்ற எண்ணமா?

இல்லை.

யாழ்ப்பாணிச் சிந்தனையில் புலிகள் புனிதப்போராட்டம்நடத்துவதாகவும் மற்ற இயக்கங்கள் துரோகம் இழைத்தனவாகவும் இருக்கும் கதையாடலைக் குஷிப்படுத்த, மாற்று இயக்கம் எனப்படும் இன்னொரு இயக்கத்தில் நடந்ததான சம்பவம் ஒன்றைக் கதையாக்குகிறார். மாற்று இயக்கத்தினர் புனிதப் போராட்டம் நடத்தாமல் இவ்வாறான நடவடிக்கைகளில் மட்டும் தான் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள் என்ற யாழ்ப்பாணிக் கதையாடலுக்கு கிளுகிளுப்பு ஏற்படுத்த எழுதிய

**பதினொரு பேய்கள் என்று அ.முத்துலிங்கம் எழுதிய சிறுகதை பெரும் சர்ச்சைக்குள்ளானது.**

**பலத்த எதிர்ப்புகளின் பின்னர், அவரே அதை அழித்து விட்டு தன் வேலையைப் பார்க்கத் தொடங்கி விட்டார்.**

**விருது கொடுக்க!**

**அதற்காக அவர் மன்னிப்பைக் கோரியதும் இல்லை. தன் தவறை ஒத்துக் கொண்டதும் இல்லை.**

**அவர் அவ்வாறான ஒரு கதையை எழுதியதன் நோக்கம் என்ன?**

கதை அது.

அதில் சம்பந்தப்பட்டவர்கள் இப்போதும் இருக்கிறார்கள் என்ற விடயத்தை, அவருக்கு கதை சொன்னவர் சொல்லாமல் இருந்திருப்பாரா?

இது மாற்று இயக்கம் சார்ந்ததாக இருந்ததால் மாற்று இயக்கத்தினரின் எதிர்ப்பு, கருத்து வடிவத்திலேயே இருந்தது.

இதே போன்ற கதைகள் புனிதப் போராட்டத்திலும் நடந்தவை தான்.

அவற்றை அ.முத்துலிங்கம் எழுதியிருப்பாரா?

ஒரு போதும் இல்லை.

அவ்வாறு எழுதியிருந்தாலும், தோட்டம் துவம்சமாகியிருக்கும்.

அது தான் யாழ்ப்பாணி கொண்டிருக்கும் கருத்துச் சுதந்திரம் பற்றிய புரிதல்.

ஒரே கதை.

இயக்கத்தின் பெயர் மாற்றம் மட்டுமே, கொளுத்துவதற்கும் சிரிப்பதற்குமான, அது பற்றிய கருத்தை மாற்றப் போதுமானதாக இருக்கிறது.

அகரமுதல்வன் எழுதிய புலிகளின் போராளியாக இருந்த தமிழினி பற்றி எழுதிய சாகாள் கதை.

இந்தியவம்சாவளியைச்சேர்ந்தவராக, ஒரு பெண்ணாக இருந்து உயிரைக் கொடுத்துப் போராடப் போனவராக இருந்தாலும், தலைவர் உட்பட்ட எல்லா மனிதர்கள் போலவும் தனது உயிரைக் கடைசி நேரத்தில் காப்பாற்ற முயன்ற தமிழினியை, 'ஏன் குப்பி கடிக்கேலை?' என்று, தற்கொலையைக் கொண்டாடும் யாழ்ப்பாணிச் சமூகத்திற்கு அந்தக் கதை மகிழ்வூட்டிய 'கதை'.

யாழ்ப்பாணிகளின் அச்சுறுத்தலால், தமிழ்ச் சட்டத்தரணிகள் கூட உதவி செய்யாமல் சிங்கள சட்டத்தரணி உதவி செய்து விடுதலையான அந்தப் போராளியைக் கேவலப்படுத்த யாழ்ப்பாணிச் சமூகம் போன்ற ஒன்றால் தான் முடியும்.

அதே அகரமுதல்வன் தமிழ்நாட்டில் ஈழத்து இலக்கியத்தின் பிரதிநிதியாகத் தான் கொண்டாடப்பட்டு வலம் வந்து கொண்டிருக்கிறார்.

இப்படியான வக்கிரமான புத்தியோடு, வேலியைப் போட்டு சகல பொட்டுக்கேடுகளை மறைக்கப் பழகிக் கொண்ட யாழ்ப்பாணிச் சமூகம், எந்தப் பிரச்சனையையும் பகிரங்கமாக விவாதிக்கத் தயாராக இருந்ததில்லை.


எரியும் டயர்களுக்குள் உயிரோடு வீசி எறிந்த புனிதப் போராட்டத்தையே கேள்விக்கு ட்படுத்தாத, இன்றைக்கும் அதைத் துரோகிகளுக்கான களையெடுப்பு என்று நியாயப்படுத்துகின்ற இந்த சமூகத்தில் கருத்துச் சுதந்திரம் பற்றி எல்லாம் உரையாடலும் விவாதமும் நடக்கும் என்ற எந்த நம்பிக்கையும் இந்த முப்பத்தைந்து வருட காலத்தில் எனக்கு ஒரு போதும் இருந்ததில்லை.

இனியும் இல்லை!










# உலகெங்கும் அமசோனில்....

| | |
|---|---|
| இந்தியாவில்... | www.amazon.in |
| அமெரிக்காவில்... | www.amazon.com |
| கனடாவில்... | www.amazon.ca |
| இங்கிலாந்தில்... | www.amazon.co.uk |
| ஜேர்மனியில்... | www.amazon.de |
| பிரான்சில்... | www.amazon.fr |
| நெதர்லாந்தில்... | www.amazon.nl |
| அவுஸ்திரேலியாவில்... | www.amazon.com.au |
| இத்தாலியில்... | www.amazon.it |

## ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்
## என்ற வார்த்தையைத்

# தேடுங்கள்...
# கண்டடைவீர்கள்!

தாயகம் சுவடிகள்

# புலன் பெயர்ந்த ஈழத்து இலக்கிய அரசியல்!

*சில வருடங்களுக்கு முன் தாயகம் இணையத்தளத்தில் எழுதியது.*

"மார்ச் மாதத்தில் சென்னையில் கவிஞர் இந்திரனைச் சந்தித்தபோது அவர் கேட்டார். ஈழத்தின் முக்கிய எழுத்தாளர்கள் யார் என்ற போது விமல் குழந்தைவேலு எனத் தொடங்கினேன். அவர் இடைநிறுத்தி அந்தப் பெயரை நான் கேள்விப்பட்டதேயில்லை என்றார்.

'அது எமது இலக்கிய அரசியல்' எனச் சொல்லி விட்டு மேலும் பல விசயங்கள் பேசினோம்."

நான் நேரில் பேசும் போது டொக்டர் என்றும், பேஸ்புக்கில் சோம்பல் காரணமாக டொக் என்றும் மதிப்புடன் அழைக்கின்ற நோயல் நடேசன் தனது பேஸ்புக் பதிவொன்றில் இந்தக் குறிப்பை பதிவிட்டிருந்தார். (தமிழ்நாட்டு நண்பர்கள் டாக்டர் என்றே மேற்கொண்டு வாசிக்க!)

தமிழ்நாட்டுக்கு 'நல்லெண்ணை' இலக்கிய விஜயம் மேற்கொள்ளும் யாழ்ப்பாணப் பூர்வீகத்துப் பூதந்தேவனார்களின் மோடஸ் ஒப்பராண்டி டொக்டருக்கு தெரியாது போலிருக்கிறது.

போனமா? அங்குள்ள பிரபலங்களை 'மரியாதை நிமித்தமான சந்திப்பு மேற்கொண்டு' படைப்புகளைக் கொடுத்து நெருக்கத்தைக் காட்ட படம் எடுத்தமா? கொண்டு போன விஸ்கிப் போத்தல்களை சஞ்சிகைக்காரருக்குக் கொடுத்து, 'புலன் பெயர் இலக்கியத்தின் பிதாமகன் நானே!', 'தன்னந்தனியாக புலிகளையும் இலங்கை அரசாங்கத்தையும் எதிர்த்து வாய் வீசத் தெரிந்தவன் நான் மட்டுமே!' 'நான் தான் புலம் பெயர் இலக்கியத்தின் ஒரே கவிஞன், கதாசிரியன், விமர்சகன், சஞ்சிகை ஆசிரியன்!' என்று பீலா விட்டு நேர்காணல் கொடுத்தமா? விருதுப் பண்டமாற்றுப் பரிமாற்றத்திற்கான பூர்வாங்க வேலைகளைச் செய்தமா? என்ற 'ஈழ இலக்கிய அறம்' இல்லாமல்...

தன்னடக்கத்தோடு, 'நான் மட்டுமில்லை, இங்க வேற ஆக்களும் இருக்கிறாங்கள்?' என்று...!

'உன்னைப் படைத்த ஒரே கடவுள் நான் மட்டுமே, என்னைத் தவிர வேறு கடவுள் உனக்கு இல்லாமல் போகக் கடவதாக!' என்று சினாய் மலையில் பத்துக் கட்டளைகளில் முதலாவதாக மோசஸ்க்கு சொன்ன கடவுள் மாதிரி, நான் தான் ஈழ இலக்கியத்தின் ஒரே படைப்பாளியான கடவுள் , 'எல்லாப் புகழும் என் ஒருவனுக்கே!' என்று சொல்லாமல்...

ஏன் டொக்டர் 'நான் மட்டுமில்லை, உவங்களும் மாங்காய்க்கு கல்லெறிஞ்சவங்கள்' எண்டு?

(சும்மா, தன்னைப் பற்றிப் பேசியே பொழுதைப் போக்காமல், தற்போதைய தனிமைப்படுத்தலைப் பயன்படுத்தி, பொதுப் பரப்பில் இருட்டடிப்பு செய்யப்பட்ட பல்வேறு இலங்கைத் தமிழர்களின் நாவல்கள் பற்றிய அறிமுக விமர்சனக் குறிப்புகளையும் வேறு அவர் வெளியிட்டு வருகிறார்!)

யாழ்ப்பாணப் பாசையில்...

டொக்டர் ஒரு பிழைக்கத் தெரியாத மனிசன்!

என்னைப் போலவே!

நாங்கள் இரண்டு பேருமே, 'எங்கட சனம் கொஞ்சமாவது மூளையைப் பாவிக்காதோ?' என்ற ஏக்கத்தோடு, சொந்தச் செலவில் சூனியம் வைத்துக் கொண்டவர்கள்.

ஊடகம் பற்றி எந்த முன் அனுபவமும் இல்லாமல், அதை வைச்சுப் பிழைக்கலாம் என்ற எண்ணம் இல்லாமல், பத்திரிகை நடத்தியவர்கள்.

நேரில் கதைக்கும் போது

www.thayagam.com
தாயகம்

**இன்று புலன் பெயர்ந்த இலக்கியத்தின் ஏகபிரதிநிதிகளாக தங்களைச் சித்தரித்துக் கொண்டிருப்போரில் பலர், இந்த சஞ்சிகைகளும் பத்திரிகைகளும் இல்லாமல், பிரபஞ்சம் தோன்ற முன்னான சூன்ய பூஜ்ய பெருவெளியில் பிக் பாங்க் தான்தோன்றீஸ்வரர்கள் ஆனதாகத் தான் தமிழ் நாட்டில் தோன்றி அருள் பாலித்துக் கொண்டிருக்கிறார்கள்.**

**இன்றைக்கு உலகம் முழுவதும் பரந்திருக்கும் இலங்கைத் தமிழ்ப் படைப்பாளிகளை பெருமையோடு பிரசுரிக்கும் பிரசுரங்களும், அவர்களைப் பற்றிப் பேசுவதை பெருமையாக கருதும் இலக்கியவாதிகளும், விருது கொடுத்து கௌரவிக்கும் அமைப்புகளும், அவர்களை வைத்து பணம் பண்ணும் பிரசுரிப்பாளர்களுமாக தமிழ்நாடு அமர்க்களப்பட்டுக் கொண்டிருக்கிறது.**

**அன்றைக்கு யாழ்ப்பாண எழுத்தாளர்கள் தமிழ்நாட்டு இலக்கிய காரர்களின் அங்கீகாரத்துக்காக அலைய வேண்டிய நிலை போய்...**

**இன்றைக்கு கனடாவில் கொடுக்கப்படும் ஒரு பம்மாத்து விருதின் அங்கீகாரத்திற்காக தமிழ்நாட்டு இலக்கிய உலகமே வடக்கு நோக்கி தவம் இருப்பதைப் பார்க்க... சிரிப்பு வரவில்லை. பரிதாபமாக இருக்கிறது!**

---

ஒன்றும், ஒலிவாங்கிக்கு முன்னால் வேறு ஒன்றுமாக பேசாமல், இரகசியங்களும் பரகசியங்களும் ஒன்றாகவே இருந்தவர்கள்.

நாங்கள் நம்பிய கருத்துக்களை, நண்பர்களால் கூட ஏற்றுக் கொள்ள முடியாவிட்டாலும், துணிச்சலாக வெளியில் சொல்ல தெரிந்தவர்கள்.

இரண்டு பேருடைய பத்திரிகைகளுமே, வாழ்நாளில் வாசிப்பு அனுபவம் இல்லாத கூட்டத்தால் தடை செய்யப்பட்டு, கடைக் கண்ணாடிகள் உடைக்கப்பட்டு, கடைகளில் இருந்து பத்திரிகைகள் பறிக்கப்பட்டு...

'ஊருக்கு வா! கவனிக்கிறம்' என்று அன்போடு அறிவுறுத்தப்பட்டவர்கள்.

புலிகளுக்கு எதிராக எழுதி பிரபலமாகி, எழுத்தே பிழைப்பாகி, பின்னர் புலிகளின் உத்தியோகபூர்வ 'ஊளையிடலாளனாகவே' ஆகி, 'ஆட்டிலறிக்கு செலவிடப்படும் பணம், இணையத் தளத்திற்கு செலவிடப்பட வேண்டும்' என்று புலிகளுக்கு ஆலோசனை சொல்லி பணம் சம்பாதிக்க வழி தேடி, மாமனிதர் ரேஞ்சுக்கு போன தராக்கி சிவராம் புலி ஆதரவாளர்களின் போஸ்டர் போய் ஜர்னலிஸ்ட் ஆனது போல...

நாங்களும் புலியை வைத்தோ, புலியைச் சார்ந்தோ பிழைத்துக் கொண்டிருக்கலாம். பினாமிச் சொத்துகளுக்கு ஆட்டையைப் போட்டு, கோடீஸ்வரர்கள் ஆகக் கூட ஆகியிருக்கலாம்.

எங்களை துரோகி என்ற ஒற்றைச் சொல்லில் மூடி மறைக்க முயன்ற யாழ்ப்பாணிகளால்...

யாழ்ப்பாணப் பாணியில் பிழைக்கத் தெரியாதவர்கள் என்று சொல்ல முடியுமே தவிர, 'இனத்தின் அழிவில் பணம் பண்ணிய, புகழ் தேடிய அயோக்கியர்கள்' என்று ஒருபோதும் சொல்ல முடியாது.

போராட்டத்திற்கு வாங்கிய தன்னுடைய பணத்தை சுருட்டி கோடீஸ்வரர்கள் ஆனவர்களையே 'தமிழ் உணர்வாளர்கள்', 'தமிழ்த் தேசியச் செயற்பாட்டாளர்கள்' என்று இன்றைக்கும் புகழும் புலன் பெயர்ந்த யாழ்ப்பாணியின் அறம் அவ்வளவு தான்!

யாழ்ப்பாணிக்கு துரோகி 'இன்றைய மார்க்கட் நிலவரம்' தான்.

நேற்று, நாளை எல்லாம் பற்றி கவலை கிடையாது.

யாழ்ப்பாணத்து எழுத்தாளர்களே, தமிழ்நாட்டுக்கு 'புலன் பெயர்ந்த எழுத்தாளர்களாக' இருந்த காலத்தில், தமிழ்நாட்டு வெளியீடுகளில் யாழ்ப்பாணத்திலிருந்து எழுது பவர்கள் ஏதோ வேற்றுக்கிரக மனிதர்களாக சித்தரிக்கப்பட்ட காலத்தில்...

ஐரோப்பிய மாற்றுக் கருத்துச் சஞ்சிகைகளுடன் சேர்ந்து, 'புலம் பெயர்ந்த இலக்கியம்' என்ற ஒன்று உருவாகுவதற்கு களம் அமைத்துக் கொடுத்தவர்கள்.

இன்று புலன் பெயர்ந்த இலக்கியத்தின் ஏகபிரதிநிதிகளாக தங்களைச் சித்தரித்துக் கொண்டிருப்போரில் பலர், இந்த சஞ்சிகைகளும் பத்திரிகைகளும் இல்லாமல், பிரபஞ்சம் தோன்ற முன்னான சூன்ய பூஜ்ய பெருவெளியில் பிக் பாங்க் தான்தோன்றீஸ்வரர்கள் ஆனதாகத் தான் தமிழ் நாட்டில் தோன்றி அருள் பாலித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இன்றைக்கு உலகம் முழுவதும் பரந்திருக்கும் இலங்கைத் தமிழ்ப் படைப்பாளிகளை பெருமையோடு பிரசுரிக்கும் பிரசுரங்களும், அவர்களைப் பற்றிப் பேசுவதை பெருமையாக கருதும் இலக்கியவாதிகளும், விருது கொடுத்து கௌரவிக்கும் அமைப்புகளும், அவர்களை வைத்து பணம் பண்ணும் பிரசுரிப்பாளர்களுமாக தமிழ்நாடு அமர்க்களப்பட்டுக் கொண்டிருக்கிறது.

அன்றைக்கு யாழ்ப்பாண

எழுத்தாளர்கள் தமிழ்நாட்டு இலக்கிய காரர்களின் அங்கீகாரத்துக்காக அலைய வேண்டிய நிலை போய்...

இன்றைக்கு கனடாவில் கொடுக்கப்படும் ஒரு பம்மாத்து விருதின் அங்கீகாரத்திற்காக தமிழ்நாட்டு இலக்கிய உலகமே வடக்கு நோக்கி தவம் இருப்பதைப் பார்க்க... சிரிப்பு வரவில்லை. பரிதாபமாக இருக்கிறது!

ஆனால்...
இந்த புலன் பெயர் இலக்கியவாதிகள் தோன்றுவதற்கு களம் அமைத்துக் கொடுத்தவர்கள் பற்றியோ, அவற்றில் மாற்றுக் கருத்துக்களுடன் புலிகளின் மானிட விரோதப் போக்கிற்கு எதிராக எழுதியவர்களையோ தான் பேச யாருமில்லை.

இந்த வரலாறுகள் எல்லாம் புலன் பெயர்ந்த ஈழத் தமிழர்களுக்குள்ளேயே தெரிந்து விடாதபடிக்கு கொலை மிரட்டல், பத்திரிகை தடை என்றெல்லாம் புலிகள் செய்தார்கள் என்றால்...

இலக்கியவாதிகளோ, தங்களைத் தவிர்ந்த, இவர்கள் பற்றிய வரலாறுகள் ஈழத்திற்கு வெளியே தெரியாமல் இருட்டடிப்பு செய்வதில் மிகவும் கவனமாக நடந்து கொண்டார்கள்.

புலி எதிர்ப்பு என்ற ஒற்றைச் சொல்லோடு!

புலி எதிர்ப்பு இருட்டடிப்பு என்பது தீண்டாமையின் தற்போதைய இன்னொரு வடிவம்!

இந்தப் புலி எதிர்ப்பு என்று இவர்கள் பூசிய சாயத்தைக் கொண்டே, நான் ஒரு தீண்டத்தகாதவனாக இந்த இலக்கியப் பிதாமகர்களால் கருதப்பட்டிருக்கிறேன்.

மாற்றுக் கருத்து, மனித உரிமைகள் என்று ஒரு முகமும், புலிக்கு வாலும் காட்டிய இலக்கியப் பெருந்தகைகளை தோலுரித்து தொங்க விட முடியும்.

இனிமேல் பூமியின் ஆயுள் பரியந்தம் புலிகளை அசைக்க முடியாது என்று நம்பி, பின்பக்க குத்துக்கரணம் அடித்தவர்களை அடையாளம் காட்டி, துவைத்து நார் நாராக கிழிக்கவும் முடியும்.

உயர்வைத் தக்க வைக்க, சமரசங்கள் செய்து முட்டுக் கொடுப்பவர்கள்...

புலிகளின் வெளிநாட்டமைச்சர் பதவிக்கான கனவுகளுடன் வன்னி நோக்கி தவம் இருந்தவர்கள்...

வேண்டாம்!

அதற்கெல்லாம் முகமூடித் தலையாட்டி வேடம் போடும் தேவை எதுவும் இல்லை.

சொந்தப் பெயரிலே அதைச் செய்ய முடியும்.

இந்தக் கூட்டம் கொண்டிருக்கிற பொறாமையுணர்வான 'இவங்களைப் பற்றி கதைச்சா வெளியில தெரிஞ்சிடும், உவங்களைப் பெரியாக்கள் ஆக்கக் கூடாது!' என்ற சிந்தனை கூட எதுவும் இல்லை.

'பொறாமையில சொல்றான்' என்ற சமாளிப்புடனேயே கடந்து போகக் கூடிய 'அறஞர்'கள் இவர்கள்!

அந்த கிழிப்புகள் இந்தப் போலிகளுக்கு உவப்பானதாக இருக்காது என்பதை விட,

இனத்தின் அழிவையே தங்களது அல்ப புகழுக்காக பயன்படுத்தும் அயோக்கியர்களைப் பற்றி எழுத இனி இன்ன தான் இருக்கிறது!?

தமிழ்நாட்டில் தூர நின்று பிரமிக்கின்ற இந்த உலக நாயக இலக்கிய நட்சத்திரங்கள் எல்லாம் நாங்கள் அருகே இருந்து பார்த்தவர்கள் தான்,
warts and all!

நாங்கள் கண்டு கேட்டு இன்புற்ற, இவர்களின் ஈனத் தனங்கள் பற்றி நாகரிகம் கருதித்தான் வாயை மூடிக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது!

தமிழ்நாட்டு வெகுசனப் பிரபல இலக்கியம் அரசியல் பேசியது என்றால்... அது புறநானூறுடன் முடிந்து விட்டது.

அதுவும் தலைவனுக்கு புகழ் பாடுவதிலேயே காலத்தைக் கழித்தது.

மாற்றுக் கருத்து காளமேகங்கள் தனிப்பாடல் திரட்டுகளில் மட்டுமே தலையைக் காட்டுவதுண்டு.

மன்னவனும் நீயோ, வளநாடும் உன்னதோ என்று தமிழ் ஓதியதற்காக மனம் நொந்த புலவர்கள் வயிற்றுப் பசிக்கே பாடினார்கள்.

அவர்களும் பொற்காசு கிடைத்திருந்தால் புகழேந்தியிருப்பார்களே அன்றி ஆட்சி மாற்றம் வேண்டி நின்றிருக்க மாட்டார்கள்.

திராவிடம் அரசுக் கட்டிலேறிய பின்னர்...

இன்றைக்கு அரசியல் பற்றி வாயே திறக்காமல்..

திராவிட அரசியல், தமிழ்த் தேசிய அரசியல் பற்றி எந்த விமர்சனமும் இல்லாமலே இலக்கியம் படைக்கலாம். பிரபலம் ஆகலாம். பணம் சம்பாதிக்கலாம்.

'புறநானூறில் கொத்துப் பரோட்டா' பற்றி ஆராய்ச்சி செய்து டாக்டராகக் கூட ஆகலாம்.

நோகாமல் நொங்கும் குடிக்கலாம். கள்ளும் விற்கலாம்!

மாற்று இலக்கியக் கருத்துக்கள் இஸங்களுடன் கூடிய சிறு வகையினதாக இருந்தாலும், அவை ஆளும் வர்க்கம் பற்றிய கடுமையான விமர்சனங்களை முன் வைத்தாலும், அதற்கு உயிர்ப் பிரச்சனை என்பது பெரிய பிரச்சனையாகவே இருந்ததில்லை.

மிஞ்சிப் போனால், உள்ளே தள்ளி, முட்டிக்கு முட்டி தட்டப்படுவதோடு விசயம் முடிந்து விடும்.

நம்ம தேசிக்காய்த் தலைவரின் 'தட்டுதல்' மாதிரி ஆளை முடித்து விடுவதாக இல்லாமல்!

அரசியலைத் தொடுவதை விட, சாதியைத் தொடுவது உயிர்ப் பிரச்சனையாகும் அளவுக்குத் தான் 'புறம் வைக்கும் நானூறு சாதித்' தமிழர் பெருமை அங்கே இருக்கிறது.

ஆனால்,
தமிழ்நாட்டில் நோகாத நொங்கு இலக்கியம் செய்வோருக்கு ஈழத் தமிழர்களுக்கு கருத்துச் சுதந்திரம் மட்டுமில்லை, இலக்கியமும் உயிர் அச்சுறுத்தலுக்குள்ளானது என்ற உண்மை இன்னமும் தெரிந்திருக்கவில்லை.

'நாங்கள் உயிரைக் குடுத்துப் போராடுறம், உங்களுக்கு கம்பரசம் கேக்குதோ?' என்று வெறும் கம்பரசம் படித்தவர்களே விரட்டப்படும் அளவுக்கு, அரசியலைத் தொடாத இலக்கியம் செய்யவே முடியாத அளவுக்கு நிலை இருந்தது இந்த தமிழக இலக்கியக் கனவான்களுக்கு தெரிந்திருக்க நியாயமில்லை.

இடதுசாரிக் கருத்து உட்பட பல தத்துவார்த்தப் பின்னணியுடைய இலக்கியர்கள், புலி பிராண்ட் தமிழ்த் தேசியத்தின் கருத்துக்களோடு ஒத்தோட வரமாட்டார்கள் என்ற சந்தேகத்திலேயே, விசாரணைக்கு அழைக்கப்பட்டு மிரட்டப்பட்டதும், பார ஊர்திச் சாக்குகளுக்குள் மறைந்து தப்பிக்க வேண்டியதுமான சூழ்நிலை இருந்தது தெரியுமா?

வதைமுகாம்களில் வதைக்கப் பட்டதும், கொலை செய்யப்பட்டதும், தற்கொலைக்குத் தூண்டப்பட்டதுமான சூழ்நிலைகள் இவர்களுக்குத் தெரிந்திருக்காது.

எதை எழுதினாலும்,
போற்றிப் பாடடி, கண்ணே!
தேசிக்காய்த் தலையர் மண்ணே!
என்ற நிலையில் தான் புலி பிராண்ட் விடுதலைப் போராட்டம் அந்த மண்ணுக்குள் இருந்தது.

இப்படியாகத் தான்...

ஈழத்தில் அந்த புறநானூற்று வியாதி தொற்றி, போர் இலக்கியம் பரணி பாடத் தொடங்கியது.

இதனால்...
'சிங்களவர்கள் தமிழ்ப் பெண்களில் மார்பகங்களை அறுக்கிறார்கள்' என்ற தமிழ்த் தேசியச் சித்தரிப்பு மட்டுமே சாண்டில்யனின் கொங்கைகள் போல தமிழ்நாட்டு மனதில் படிந்து போய்க் கிடக்கிறது.

கங்கை கொண்டான், கடாரம் வென்றான் கதைபோல, சிங்களம் கொன்றான் என்ற பெருமிதம் தங்களை இன உணர்வாளர்களாகக் காட்டிக் கொள்ள போதுமானதாக இருக்கிறது.

இலங்கையின் இனப்பிரச்சனையும், அதற்கெதிரான போராட்டம் புலிகளால் சீரழிக்கப்பட்டதும் பற்றிய சரியான புரிதல் இல்லாமல், தமிழகத்தவர்களுக்கு 'ரம்போ'ராட்டம் சினிமாப் பிரமாண்டத்தில் பிரமிக்க வைத்துப் புல்லரிக்க மட்டுமே வைத்திருக்கிறது.

துப்பாக்கிகள் தமிழர்களின் நெற்றிகளிலும் குரல் வளைகளுக்கும் திணிக்கப்படும் வரைக்கும், ஒரு சுதந்திரச் சிந்தனை யாழ்ப்பாணத்தில் எழுச்சி கொண்டிருந்தது. பல விடுதலை இயக்கங்கள் இருந்த நிலையில் இது சாத்தியமாகியிருந்தது.

வெறும் ஆயுதத்தை மட்டும் நம்பியிருக்காமல், மக்களை சிந்தனை எழுச்சிக்குள்ளாக்குவதன் மூலம் போராட்டத்தை முன்நகர்த்தலாம் என்ற சிந்தனை கொண்ட முற்போக்குச் சக்திகள் புலிகள் தவிர்ந்த இயக்கங்களில் இருந்தன.

அந்த இயக்கங்கள் எல்லாம் புலிகளால் உயிரோடு எரியும் டயர்களில் வீசப்பட்டது வரையான முறைகளால் அழிக்கப்பட்ட பின்னர்...

ஊரோடு ஒத்தோடும் யாழ்ப்பாணியச் சிந்தனை, சாகச விளையாட்டுகளின் மீதான மயக்கம், வாயைத் திறந்தால் வெடி விழும் என்ற பயம் என இன்னோரன்ன பல காரணங்களால், இன்றைக்கு புலிகளின் துப்பாக்கிகள் மௌனிக்கப்பட்ட மாதிரி...

அன்றைக்கு சுதந்திர எழுச்சிக் குரல்கள் புலிகளால் மௌனிக்கச் செய்யப்பட்டன.

புறநானூற்றுத் தலைவரின் பொற்காசுகளுக்கும், மாமனிதர் பட்டத்துக்குமாய் இரந்து நின்ற கவிஞர்கள், எழுத்தாளர்கள் போர் இலக்கியம் படைக்க...

ஊடகவியலாளர்கள், அரசியல் ஆய்வாளர்கள் என்ற இன்னொரு கூட்டம் புலிகளால் குடிசைக் கைத்தொழிலாய் உற்பத்தி செய்யப்பட்டது.

சுதந்திரமான சிந்தனை மறுக்கப்பட்டு, ஊரோடு ஒத்தோடுவது பாதுகாப்பானதான நிலையில்...

படைக்கப்பட்ட அந்தப் 'போரிலக்கியம்' தமிழ்நாட்டில் ஏற்படுத்திய பிம்பத்தைத் தான் இன்றும் பலர் கட்டிப் பிடித்துக் கொண்டு விட மறுக்கிறார்கள்.

அது தான் இவர்களுக்கு நவீன புறநாறு!

புனிதப் போராட்டம்!

அந்தப் புறநானூற்றுக் கனவுகள் எல்லாம் தனித்த ஒரேயொரு மூடனில் மட்டுமே முதலீடு செய்யப்பட்டதால் சிதைந்து போக...

விக்கிரமாதித்தன்கள் தங்கள் முயற்சியில் சற்றும் தளர்ந்தும் விடவில்லை.

அந்தக் கனவுத் தொழிற்சாலையில் இருந்து 'முள்ளிவாய்க்கால் முடிவல்ல, எங்கள் விடுதலைக் கனவை அழிக்க முடியாது' என்ற புதுப் பம்மாத்துக் கனவோடு, 'துரோகிகள் இல்லாவிட்டால், தேசிக்காய்த் தலையர் ஈழத்தை

அடிச்சுப் பறிச்சிருப்பார்' என்ற நியாயப்படுத்தலையும் உருவாக்கி, அந்த அழிவின் துயரம், புலி வேர்சன் 2.0 கண்ணீர்க் கதையையும் விற்கலாம் என்ற சந்தைப்படுத்தல் வாய்ப்பும் உருவாக,

இப்போது அது 'போருக்குப் பின்னான' 'இலக்கியமாகி' விட்டது!

இந்தக் கனவுத்தொழிற்சாலையின் உற்பத்திப் பண்டங்களை, தமிழ்த் தேசியத்தை வைத்து தமிழ்நாட்டில் அரசியல் செய்வோர்கள் செய்வதில் நியாயங்கள் இருக்கலாம்.

சுதந்திர சிந்தனையையும் உண்மைக்கான தேடலையும் அவாவி நிற்கும் இலக்கியச் சூழல் எவ்வாறு மயக்கம் கொள்ள முடியும்? விலை போக முடியும்?

யாழ்ப்பாணத்தில் மாற்றுக் கருத்துக் கொண்டவர்கள் வாழ முடியாது, சுதந்திரமாகக் கருத்துத் தெரிவிப்பதற்கான சூழல் இல்லை என்ற நிலையில்...

புலம் பெயர் நாடுகளில் தஞ்சம் புகுந்தவர்கள் சுயாதீனமாக வெளிக்கொணர்ந்த சிறு சஞ்சிகைகள் வருகின்றன.

பிணத்தையும் பிணமாகுதலையும் போற்றிப் பாடும் புலி பிராண்ட் யாழ்ப்பாண ஈழத்தமிழ் தேசியத்தை மறுதலித்து, மனித உரிமைகள் என்ற மானிடம் தழுவிய சிந்தனையைக் கொண்ட பல இதழ்கள், புலிகளால் தடை செய்யப்பட்டு விரட்டப்பட்ட மற்ற இயக்கங்களில் இருந்தவர்களாலும் சுயாதீனச் சிந்தனை கொண்டோர்களாலும் வெளிக் கொணரப்பட்டன.

தமிழகத்தில் இருப்பவர்களுக்கு இயக்கங்கள் பற்றிய புரிதல் எல்லாரையும் விடுதலைப்புலிகள் என்று வர்ணிப்பதிலேயே இருந்தது.

ஆனால், புலிகள் தலைமை விசுவாசத்தையும் தலைமைக்காக உயிரைக் கொடுப்பதையும் மட்டுமே விடுதலைப் போராட்டத்திற்கான தகைமை என்ற கருத்தை வலியுறுத்திய நேரத்தில், சுதந்திரமான கருத்துப் பரிமாற்றம், தலைமை பற்றிய விமர்சனங்கள் பற்றிய அவசியத்தையும் வலியுறுத்தி மற்ற இயக்கங்களில் நடைபெற்ற விவாதங்களும், அதுவே அவற்றின் அழிவுக்கான காரணமாகியதையும் அறிந்திருக்க நியாயமில்லை.

இந்தச் சிந்தனை எழுச்சியின் தொடர்ச்சியாகத் தான் இந்த மாற்றுக் கருத்துச் சஞ்சிகைகள் ஐரோப்பாவிலும் கனடாவிலும் வெளிவந்தன.

புலம் பெயர்ந்த இலக்கியம் என்று சொல்லப்படும் இந்த விருட்சத்திற்கான விதைகள் அந்த விளைநிலைத்தில் தான் தூவப்பட்டன.

அந்த சஞ்சிகைகள் இல்லாமல், புலன் பெயர்ந்த இலக்கியம் என்பது வெற்றிடத்தில் வளர்ந்த ஒன்றல்ல. இந்த எழுத்துக்களை பிரசுரிக்கும் துணிச்சல் தமிழகத்தில் எந்த வெளியீட்டிற்கும் இருந்திருக்காது என்பது தான் உண்மை.

காற்றுப் புகாத இடத்திற்குள்ளும் புகக் கூடிய புலி என்று பெருமிதப்பட்ட புலி, அந்தக் குரலை நசுக்க ஐரோப்பாவில் கொலை வரைக்கும் சென்றது கூட, இந்த தமிழக இலக்கியப் பெருந்தகைகளுக்கு தெரிந்திருக்கவில்லை.

இவ்வாறான சூழ்நிலைக்குள் தான், தமிழ்நாட்டின் நோகாத நொங்கு இலக்கியத்தை போலன்றி, அந்த நொந்த இலக்கியம் வளர்ந்தது.

இன்றைக்கு புலன் பெயர்ந்த இலக்கியத்தைப் புகழ்பவர்களும், அதை வைத்து பிழைப்பு நடத்துபவர்களுமான தமிழ்நாட்டு இலக்கியர்கள் எத்தனை பேர் அந்த இதழ்கள் பற்றிய தேடலில் ஈடுபட்டிருக்கிறீர்கள் என்பதை, அந்த இத்துப் போன கிளிசே யான, 'உங்கள் மனச்சாட்சியைத் தொட்டுச் சொல்லுங்கள்!' என்ற வார்த்தை மூலமாகத் தான் கேட்க வேண்டியிருக்கிறது!

இன்றைக்கும் புலன் பெயர்ந்த எழுத்தாளர்கள் தமிழ்நாட்டு பிரசுராலயங்களையும், அச்சகங் களையும் பயன்படுத்தித் தான் நூல் வெளியிடுகிறார்கள். அதில் அவர்கள் ஏமாற்றப்படும் கதைகள் எல்லாம் நாங்கள் எப்போதும் கேள்விப்படுகின்றவை தான்.

தொப்புள் கொடி உறவு என்பது... வாயும் வயிறும் வேறு என்பதை எப்போதுமே தெளிவாகத் தான் காட்டிக் கொண்டிருக்கிறது.

அந்தப் பிரச்சனை நூல் வெளியிடுகிறவர்களுக்கு மட்டுமல்ல, நூல் புடைவை வாங்குவோருக்கும் இருக்கும் பிரச்சனை!
அதை விடுவோம் இன்னொரு நேரத்திற்கு!

அவ்வாறு வெளிவந்த நூல்கள் தமிழ்நாட்டிலும் எங்கோ, குறைந்த பட்சம் நூலகத் திட்டத்தினால், நூலகங்களிலாவது இருக்கும்.

அவை பற்றி எங்கே தேடி எழுதப்பட்டிருக்கிறது?

வாங்கின விஸ்கிக்கு பங்கம் இல்லாமல், கையில் திணித்ததைப் பற்றி, குஷிப்படுத்துவதற்காகவோ பண்டமாற்று நலன் கருதியோ மட்டுமே எழுதுவதில் அறம் என்ன இருக்கிறது?

கேள்விப்பட்டதேயில்லை' என்று இலகுவாகக் கடந்து போக முடிகிறதென்றால்...

உங்கள் காதுகளில் ஓதியவர்கள் யார்?

அவர்கள் 'சொல்வதெல்லாம் உண்மை' என்று தானே இன்றைக்கும் நம்பிக் கொண்டிருக்கிறீர்கள்?

உங்களின் தேடல் என்பது, கேள்விச் செவியன் மட்டத்தில் தானா இருக்கிறது?

உலக இலக்கியம், பிறமொழி இலக்கியம் என்றெல்லாம் ஆழக்கடலில் முத்துத் தேடுகின்ற உங்களால் காலடியில் கிடக்கும் முத்துக்களைக் கண்டுகொள்ள முடியவில்லை என்பது வியப்பாக இருக்கிறது.

பன்றிகளின் முன்னால் முத்துக்களை எறியாதீர்கள், அவை மிதித்து விட்டு போய் விடும் என்று என்று யேசு சொன்னது உங்களுக்காகத் தானோ?

இதில் இன்னமும் சுவாரஷ்யமான விசயம், எனக்கு நெருக்கமான ஒரு இலக்கிய நண்பர் ஒருவர் சொன்னது...

அவர்களுக்குத் தெரியாது என்று இல்லை. ஆனால் பகிரங்கமாக அது பற்றிப் பேச அவர்கள் தயாராக இல்லை!

இதை விட்ட ஒரு பொய்மை இருக்க முடியுமா?

புலிகள் இருக்கும் வரைக்கும் புலிகளின் அக்கிரமங்களை ஈழம் என்ற கனவுக்குள் மூடிப் புதைத்தவர்களிடம் நான் கேட்டுக் கொண்டதெல்லாம்...

அடக்குமுறையைக் கண்டு நீங்கள் மௌனமாக இருங்கள். மன்னித்து விடலாம். அந்த அராஜகத்துக்கு வக்காலத்து வாங்காதீர்கள்! அது இனத்தை அழிக்கும்.

தெரிந்து கொண்டே, அவற்றைப் பேச மறுப்பதற்கான காரணம் என்ன?

அங்கேயும் அந்த உழுத்துப் போன தமிழ்த் தேசியம் தான்!

ஒரு மாயையைக் கனவாக்கி, அதற்காக உயிரைக் கொடுப்பதை தியாகம் என்று புறநானூறு தொடக்கம் புறம் காட்டிய தலைவன் வரைக்கும் செய்த பில்டப்புகள் தான் இன்றைக்கும் தமிழர்களின் வீர அடையாளமாக இருக்கிறது.

**தியாகம், துரோகம் என்ற இரண்டு கறுப்பு வெள்ளை எல்லைகளால் மட்டுமே நிர்ணயிக்கப்பட்ட தமிழ்த் தேசியம், எந்த நேரமும் துரோகி ஆக்கலாம் என்ற அந்த கண்ணுக்குத் தெரியாத ஒன்றின் மீதான பயம் தான் இன்றைக்கும் பலரை மௌனமாக வைத்துக் கொண்டிருக்கிறது.**

**இலக்கியத்திலும் சரி, அரசியலிலும் சரி, எந்த மூடனும் கெக்கே பிக்கே என்று இளித்துக் கொண்டே, யாரையும் துரோகி என்று விட முடிகிறது!**

**அந்த துரோகிப்படுத்தலுக்கான பயம் தான் இவர்களை உண்மையைப் பேச விட மறுக்கிறது என்றால்... இவர்கள் அடிக்கடி உச்சாடனம் செய்கின்ற அந்த 'இலக்கிய அறம்'?**

---

தியாகம், துரோகம் என்ற இரண்டு கறுப்பு வெள்ளை எல்லைகளால் மட்டுமே நிர்ணயிக்கப்பட்ட தமிழ்த் தேசியம், எந்த நேரமும் துரோகி ஆக்கலாம் என்ற அந்த கண்ணுக்குத் தெரியாத ஒன்றின் மீதான பயம் தான் இன்றைக்கும் பலரை மௌனமாக வைத்துக் கொண்டிருக்கிறது.

இலக்கியத்திலும் சரி, அரசியலிலும் சரி, எந்த மூடனும் கெக்கே பிக்கே என்று இளித்துக் கொண்டே, யாரையும் துரோகி என்று விட முடிகிறது!

அந்த துரோகிப்படுத்தலுக்கான பயம் தான் இவர்களை உண்மையைப் பேச விட மறுக்கிறது என்றால்...

இவர்கள் அடிக்கடி உச்சாடனம் செய்கின்ற அந்த 'இலக்கிய அறம்'?

இந்த தமிழக இலக்கியரின் புலன் பெயர் இலக்கியம் பற்றிய அறியாமைக்கு, அவர்களின் தேடலின்மையோ, ஷேம்லெஸ் செல்ப் புறமோசன் செய்யும் தான்தோன்றீஸ்வரர்களின் அயோக்கியத்தனத்தை மட்டுமே குற்றம் சொல்லவும் முடியாது.

இதில் நம்மவர்களும் கில்டி அஸ் சார்ஜ்ட்?

முதலாவது...
பலருக்கு இருக்கும் தமிழ்நாட்டு அங்கீகாரம் பற்றிய வேட்கை. சிறந்த புலன் பெயர்ந்த இலக்கியம் என்று தமிழ்நாட்டில் எவர் தொகுத்தாலும், அந்த டொப் ரென் 100 லிஸ்டில் வந்து விட வேண்டும் என்ற துடிப்பு பலருக்கும் உண்டு.

அங்குள்ள இலக்கியர்கள் தங்களைப் பற்றி எழுத வேண்டும் என்ற துடிப்புள்ளோர் பலர்.

அதனால் பலருக்கு தெரிய வரலாம், அதிகம் புத்தகங்கள் விற்கலாம், பிரசுரம் பெறலாம், அவற்றில் விருது பெற்ற எழுத்தாளர் என்று பீற்றியும் கொள்ளலாம் (பணம் வருமா? என்ற மில்லியன் டொலர் கேள்வி தவிர்த்து!) என்பது உண்மை தான்.

அந்த அங்கீகாரத்திற்கான வேட்கை யாசகமாகவோ, பண்ட மாற்றாகவோ ஆகும் போது தான் பிரச்சனை வருகிறது. (கொப்பிரைட் மாதிரி கொன்பிளிக்ட் ஒப் இன்ரறஸ்ட் பற்றிய தமிழர்களின் கருத்து யாவரும் அறிந்ததே! அது பற்றி தமிழர்கள் கவலைப்படுவதேயில்லை.)

இந்த முயற்சியில் ஷேம்லெஸ் செல்புறமோசன் செய்வோர் இலகுவாக வெற்றியடைகிறார்கள். அவர்களிடம் மாற்றிக் கொள்ள பண்டங்களும் உள்ளன என்பது இன்னொரு வசதி.

இந்த எதிர்பார்ப்பின் ஒரு பகுதியாகத் தான் இலக்கிய நல்லெண்ணைச் சுற்றுலா வரும் தமிழ்நாட்டு இலக்கியவர்கள் ராஜோபசார விருந்தோம்பலுக்கு உள்ளாகிறார்கள். அவர்களின் மூலமாக ஆன்ம ஈடேற்றம் அடைந்து விடலாம் என்ற கனவு அது!

அவர்களும் தம் பங்குக்கு நக்கி நாவிழந்தபடியே உள்ளார்கள்!

ஆனால்...

மற்ற எழுத்தாளர்கள்?

மானம் பெரிதென்று வாழும் 'மயிரை விட்டான் சிங்கன்' கலைமான்கள்!

நாங்கள் அதெல்லாம் செய்ய மாட்டோம் என்று அடம் பிடிப்பவர்கள் உண்டு. புத்தகத்தை வெளியிட்டு, ஆங்காங்கே வெளியீட்டு விழா நடத்தி, முதல் பிரதி விற்று, வடையும் டீயும் குடித்து, இலக்கியம் பேசுவது மட்டுமே போதும் என்று நினைப்பவர்கள் உண்டு.

குறைந்த பட்சமான புரமோஷன் செய்வதையே ஹறாமாக்கும் சிந்தனை பலருக்கும் உண்டு. இதை தன்மானப் பிரச்சனையாகக் கூட பார்க்கும் நிலை உண்டு. நண்பர்கள் மட்டுமே தங்கள் படைப்புகளைப் பற்றி எழுதினால் போதும் என்ற திருப்தி பலருக்கு உண்டு.

இரண்டாவது, இவர்களுக்கும் இடையில் உள்ள குழு வாதங்கள்

இது மற்றக் குழுக்களில் உள்ளவர்களைப் பற்றி பேசுவதையே தவிர்க்கிறது. சில நேரங்களில் பொறாமை உணர்வும் கூடி, காலை வாரவும் புறக்கணிப்புச் செய்யவும் இது வழிவகுக்கிறது.

தங்களுக்குள்ளேயே புலிகளை விமர்சித்து எழுதுபவர்களை கூட்டமாய் கல்லால் எறிந்து கொல்வதன் மூலம் தங்களை தமிழ்த் தேசியத்தின் அரண்களாகக் காட்டிக் கொள்கின்ற பலரை இந்த விமர்சனக் கூட்டங்களில் கண்டபடி தானே இருக்கிறோம்.

மூன்றாவது பொறாமை உணர்வு,

இவர்களிலும் 'எல்லாப் பெருமையும் என் ஒருவனுக்கே' கூட்டம் உண்டு.

தங்களின் துறையில் மற்றவர்கள் படைப்பதை பொறாமை

**தாங்களே சொல்லி தாங்களே நம்புகின்ற பொய்களை மற்றவர்களும் நம்ப வேண்டும் என்று அடம் பிடிக்கின்ற ஈழத் தமிழ்த் தேசியத்தின் கதை சொல்லலுக்கு எதிராக எதையும் சொல்வது துரோகமாக்கப்படுகிறது.**

உணர்வோடு பார்ப்பது பலரை பேஸ்புக் பதிவுகளுக்கு லைக் போடுவதைக் கூட தடுத்து விடுகிறது.

மிகவும் அபூர்வமாக யாராவது தங்களது துறையில் சாதிப்போரைப் பற்றி பெருமையாக குறிப்பிடும் போது, என்னால் ஆச்சரியம் தாள முடியாமல் அதைப் பாராட்டும்படி செய்து விடுகிறது.

நான்காவது, தமிழ்நாட்டில் கூட ஒவ்வொரு பிரசுரங்கள் மீது ஒவ்வொருவருக்கும் இருக்கும் விமர்சனக் கண்ணோட்டம் காரணமாக, அந்தந்தப் பிரசுரங்களில் எழுவதும், பிரசுரமாவதும் சமூகப் பிரஷ்டம் செய்வதற்கு காரணமாகிறது.

அங்கே இருக்கும் குழு வாதங்களால் நடைபெறும் மோதல்களும் வேறு அந்தச் சுழலுக்குள் இவர்களையும் இழுத்து விடுகிறது.

கடைசியாக, புலி பிராண்ட் தமிழ்த் தேசியத்தின் 'மண்டை கழண்ட கூட்டம்'.

இது ஒரு பெரும் தலையிடி பிடித்த கூட்டம்.

தமிழகத்தில் புலிகள் பற்றிய விமர்சனம் செய்யும் படைப்பு ஒன்று வந்து விட்டால், 'புலிகள் புனிதப் போராட்டம் தான் நடத்தினார்கள்' என்று 'அம்மாவாணை அடிச்சு சத்தியம் செய்து' 'அன்னிய சக்திகளுக்கு விலை போகும் துரோகிகளைத் திட்டி' வாசகர் கடிதம் எழுதும் இலக்கிய ஆர்வலர்கள் முதல், அந்த வெளியீடுகளை வாசிக்காமலேயே தடை செய்வோம், கடைகளில் இருந்து பறித்து தெருவில் வைத்து எரிப்போம், படத்தை பகிஷ்கரிப்போம், கலந்து கொள்ளும் கூட்டத்தைக் குழப்புவோம் என்கிற பைத்தியங்கள் வரை எமக்குள் உண்டு.

'எல்லா இயக்கப் போராளிகளுக்கும்' என்ற அஞ்சலியே இன்றைக்கும் தீண்டத்தகாததாக இருக்கிற சூழல் புலி பிராண்ட் ஈழத் தமிழ்த் தேசியத்தினுடையது.

தாங்களே சொல்லி தாங்களே நம்புகின்ற பொய்களை மற்றவர்களும் நம்ப வேண்டும் என்று அடம் பிடிக்கின்ற ஈழத் தமிழ்த் தேசியத்தின் கதை சொல்லலுக்கு எதிராக எதையும் சொல்வது துரோகமாக்கப்படுகிறது.

இந்த தலையிடியைப் பார்த்தே, பிச்சை வேண்டாம், நாய்களைப் பிடி என்று நொங்கு இலக்கியம் செய்யும் நிலைக்கு தமிழகத்தார் தள்ளப்படும் நிலையும் ஏற்படும்.

இந்த மாற்றுக் கருத்தாளர்களை ஆதரிக்கப் போய், தங்களுடைய படைப்புகளும் எரிக்கப்படும் நிலை ஏற்படும், யாழ்ப்பாணத்தில் விற்க முடியாத நிலை வரலாம் என்ற பயம் கூட இருக்கலாம்.

இவ்வாறான குளறுபடிகளும், எமது மாற்றுக் கருத்து எழுத்தாளர்கள் தமிழகத்தில் பிரபலம் பெற முடியாமைக்கு காரணமாக இருக்கின்ற உண்மையையும் நாங்கள் ஒத்துக் கொண்டே ஆக வேண்டும்.

இந்த புலன் பெயர்ந்த இலக்கிய வளர்ச்சிக் காலத்தில் கண்டு கேட்டு அறியாத ஒருவர், திடீரென்று கிளம்பி, அந்த புலன் பெயர்ந்த இலக்கியத்தை அங்கீகரிக்காமல், தமிழ்நாட்டில் உள்ளவர்களுக்கே விருது கொடுத்து, தனக்கு தமிழ் நாட்டில் அங்கீகாரம் தேட, கனடாவில்

உருவாக்கிய விருது ஒன்றைச் சுற்றிக் கட்டப்பட்ட இலக்கிய மாபியாவின் தரக் கட்டுப்பாட்டு முத்திரை குத்தப் பெற்று அங்கீகாரம் பெற்றவர்களைக் கனம் பண்ணுவதே பாதுகாப்பானதும், விருதை எப்போதாவது பெறுவதற்கான அச்சாரமாகவும் கருதும் போக்கு இருப்பதாகவே படுகிறது.

நான் முன்பு எழுதியது போல,
விஸ்கிக்கும் விமானச்சீட்டுக்கும், விருதுக்குமான கனவுகளே, தமிழ்நாட்டில் புலன் பெயர்ந்த எழுத்தாளர்களை புரமோட் பண்ணுவதற்கான காரணங்களாக அமைகிறது.

இவன் யார் என்றே தெரியவில்லை? எதுக்கு புதுசா இதுக்குள்ள வந்து குதிக்கிறான் என்று இந்த இலக்கியச் செம்மல்கள் தலையைச் சொறியலாம்.

கேள்விப்பட்டதேயில்லை என்று சொல்லும் இலக்கியவாதிகள் வேண்டும் என்றால், புலன் பெயர் இலக்கியத்தின் பிதாமகர்கள் தாங்களே என தங்களிடம் வந்து உரிமை கோருபவர்களிடம் கேட்டுப் பார்க்கலாம்...

இன்னாரைத் தெரியுமா?
அவர் ஏதாவது எழுதியிருக்கிறாரா? என!

இந்த முப்பது வெள்ளிக்காசு ஆசையில் அலையும் யூதாஸ்கள் காட்டிக் கொடுப்பார்களா?

அல்லது பேதுரு போல, ‘அவனை நான் அறியேனே!’ என்று சேவல் கூவ முன் மும்முறை மறுதலிப்பார்களா? என்பதை எங்களுக்குச் சொல்லுங்கள்!

படைப்பாளிகளுக்கும் வாசகனுக்கும் இடையில் தரக் கட்டுப்பாட்டாளர்களும் முகவர்களும் இடைத்தரகர்களும் நந்திகள் போல அனாவசியமானவர்கள் என்று நினைப்பவன் நான்.

புத்தகம் வெளியிட்டாலும், முகவுரை, அணிந்துரை இல்லாமல் வெளியிட வேண்டும், வெளியீட்டு விழா வைத்து முதற் பிரதிகளைத் திணிக்கக் கூடாது என்ற எண்ணம் உள்ளவன் நான்.

என்னுடைய எழுத்துக்கள் இன்னொரு ஆசிரியரைச் சங்கடத்திற்கு உள்ளேயோ, ஆபத்திற்குள்ளேயோ மாட்டி விடக்கூடாது என்பதற்காகவே சொந்த பிரசுரங்களில் எழுதுவதை விரும்புகின்றவன் நான்.

எனது எழுத்துக்கள் ஒரு போதும் அங்கீகாரம் பற்றியதாக இருந்ததில்லை. இந்தச் சமூகம் சீரழியப் போகிறதே என்று எனக்கு ஊட்டி வளர்க்கப்பட்ட சமூக உணர்வினால் எழுந்ததே என் எழுத்து.

தொலைபேசிப் போராளிகள் முதல் கொலைபேசிப் போராளிகள் வரையான பயமுறுத்தல்கள் எல்லாம் கண்டு தான் வந்திருக்கிறேன்.

சஞ்சிகைகளை கைகளில் திணிப்பதை விட, தாங்களாகவே விலை கொடுத்து வாங்கிச் செல்ல வேண்டும் என்றே பத்திரிகை நடத்தியவன்.

கேட்கச் செவியுள்ளவன் கேட்கக் கடவான். அவ்வளவு தான்.

அங்கீகாரம் வேண்டி நின்றால், நான் எழுதியவற்றை புத்தகங்களாக வெளியிட்டு, தமிழ்நாட்டு இலக்கியர்களின் பார்வைக்காக யாரையாவது பிடித்தோ அனுப்பியோ, கனடா வரும் போது கையில் திணித்தோ இருந்திருப்பேன்.

சிலோன் (கல்லடி) விஜயேந்திரன் தான் அச்சிட்ட புத்தகத்தை நான் படித்த கல்லூரி அதிபரான சுவாமியாருக்கு விற்க வந்து அவமானப்பட்டு மனம் நொந்ததை, என் மூத்த அண்ணன் இப்படி அவர் கொண்டு திரிந்து விற்றபோது எங்கோ அவரிடம் இப்படியாக வாங்கி வந்த ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை புத்தகத்தை வாசித்து ‘உங்கட புத்தகத்தை நான் வாசிச்சனான்’ என்று, அருகில் உள்ள தேநீர்க் கடையில் கண்டு அறிமுகப்படுத்திய எட்டாம் வகுப்பேயான என்னிடம், சொல்லி வருந்தியதைக் கண்டு ஒரு படைப்பாளியின் துயரத்தை இன்று வரையும் கண்ணுக்குள் வைத்து நினைவில் கொண்டிருப்பவன் நான்.

பிச்சைக்காரப் புலவனின் நிலையில் படைப்பாளி இருக்கக் கூடாது என்ற எண்ணம் எனக்கு இன்றும் உண்டு.

யாருக்கும் தலைவணங்காத காளமேகத் திமிர் எனக்கு உண்டு.

இந்த அங்கீகாரங்களால் நான் எதுவும் உலக நாயகனாகி விடப் போவதில்லை.

கனடாவில் என் வீட்டிற்கு தேடி வந்து சந்தித்த தமிழகத்து இலக்கியப் பிரபலம் இன்றைக்கும் பேஸ்புக்கில் இருக்கிறார். இதுவரைக்கும் என்னைத் தெரிந்ததாக எங்கேயும் காட்டிக் கொண்டதில்லை.

தமிழகத்தின் பிரபலம் ஒன்று கனடா வந்தபோது, என்னைப் பற்றி அறிந்து கொண்ட போதும், தமிழ்நாடு திரும்பிய போது இங்கே சந்தித்த சகலரையும் பற்றி எழுதிய போதும் என்னைப் பற்றி எழுதவேயில்லை. இவர் சினிமா பற்றி எழுதுவதற்கு எத்தனையோ வருடங்களுக்கு முன்பே உலக சினிமா பற்றிய எழுதியவன் என்பதையும், ஈரானிய இயக்குனர் பற்றி நான் பேசியதையும் அவர் ரசிக்கவில்லை என்பது எனக்குத் தெரிந்திருந்தது. ‘ஒரே உறையில் இரண்டு வாட்கள் இருப்பதை’ அவர் விரும்பாமல் இருந்திருக்கக் கூடும்.

இன்றைக்கும் தாயகம் பற்றி பெருமையாக எழுதும் நண்பர்களும், தாயகத்தில் எழுதியதைப் பெருமையாக கருதும் நண்பர்களும், தாயகத்தில் நான் எழுதிய ஏடிட்டோரியல்கள், கியூறியஸ் கட்டுரைகளைப் புத்தகமாக்க வேண்டும் என்று என்னை வற்புறுத்தும் நண்பர்களும் உண்டு. ‘நீ விடாட்டி சொல்லு, நாங்கள் விடுறம்’ என்று உரிமையோடு

சொல்பவர்கள் அவர்கள்.

ஆனால், என்னுடைய தயக்கத்தையும் கூச்சத்தையும், ஏன் மறுப்பையும் மீறி, என்னை இழுத்துச் சென்று, 'முன்பு தாயகம் என்றொரு பத்திரிகை நடத்தியவர்' என்று அறிமுகப்படுத்தும் நண்பர்களுக்கு முன்னால், அந்த அறிமுகத்தால் தான் கட்டி வைத்திருக்கும் புலன் பெயர் இலக்கியப் பிரம்மா பிம்பம் சிதறி விடுமே என்ற நினைப்பில், அதை விரும்பாத, தாயகத்தில் எழுதியவரை நான் கண்டிருக்கிறேன். இன்று வரைக்கும் தாயகம் என்ற ஒன்று கனடாவில் வந்ததாகவே காட்டிக் கொள்ளாதவர் அவர்.

நான் அடிக்கடி சொல்வது போல...

இந்த விருதுகள், அங்கீகாரங்களை விட...

என்றோ எழுதி, எப்போதோ மறந்து போன ஒன்றை காணும் போதுகளில் நினைவு படுத்தி பெருமை கொள்கின்ற வாசகர்களின் மகிழ்ச்சி தான் நான் வேண்டுகின்ற அங்கீகாரம்.

இன்றைக்கும் என் நண்பர்கள் என் மீது கொண்டிருக்கும் மரியாதையால், என்னைப் பற்றி ஏதாவது எழுதும்போது, சங்கடப்பட்டு, கூச்சம் நிறைபவன் நான்.

ஆகவே,
இதை என்னுடைய ஏக்கம், ஆதங்கம், பொறாமை என்று முத்திரை குத்தி விட்டு அப்பால் போவதைப் பற்றிய எந்தக் கவலையும் இல்லை.

நான் என்னை அறிந்து கொள்ள, உங்கள் அங்கீகாரம் தேவையில்லை.

இது என்னைப் பற்றியதல்ல!

எத்தனையோ சிறந்த எழுத்தாளர்கள், தங்கள் கருத்துக்களாலும், எழுத்து நடையாலும் தமிழை செழுமைப்படுத்துகின்றவர்கள், சமூக நீதிக்கான வேட்கையை தங்கள் படைப்புகளில் கொண்டிருந்தவர்கள், தாயகத்தில் எழுதிய போதெல்லாம் பெருமையோடும் மகிழ்ச்சியோடும் பிரசுரித்தேன். கருத்துக்களால் ஒன்றித்த இவர்களில் பலர் நேரில் காணாமலேயே என்னோடு ஆத்மார்த்தமான நண்பர்கள் ஆனவர்கள்.

கொலைப் பயமுறுத்தல்களுக்கும் மத்தியில் பல்வேறு சிறு சஞ்சிகைகளை ஆர்வம் மீதியால் வெளிக் கொணர்ந்தவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் தான் இந்த விளைநிலத்திற்கு பசளை போட்டு நீர் பாய்ச்சியவர்கள்.

அவர்களில் பலருக்கான அங்கீகாரம் இன்னமும் தமிழ்ப் பரப்பில் கிடைக்கவில்லை. அந்த அங்கீகாரம் கிடைத்தால் ஆர்வத்துடனும் உற்சாகத்துடனும் இன்னமும் படைத்திருக்கக் கூடியவர்கள். தமிழ் இலக்கியத்தை இன்னமும் செழுமைப் படுத்தியிருக்கக் கூடியவர்கள்.

அவர்கள் எல்லாரும் திட்டமிட்டே இருட்டடிப்புச் செய்யப்படுகிறார்கள்.

அவர்கள் வெறுமனே, பாடல் பெற்ற தலம் என்பது போல, பிரசுரம் பெற்ற எழுத்தாளர் என்றில்லாமல்...

தமிழ் இலக்கியத்தை செழுமைப் படுத்தியதற்கான மரியாதையை தமிழ் இலக்கிய உலகம் வழங்க வேண்டும். அதன் மூலம் அவர்களை உற்சாகப்படுத்த வேண்டும்.

புலன் பெயர் எழுத்தாளர்களை ஏமாற்றுவதை தொழிலாக கொண்ட அச்சகத்தார், பிரசுரத்தாரை விட, இலக்கியவாதிகள் பெரிதும் மேலானவர்களாக இருப்பார்கள் என்ற நம்பிக்கை எதுவும் எனக்குக் கிடையாது.

அப்படி இல்லை, நாங்கள் நியாயமாக எல்லா தகுதி வாய்ந்த எழுத்தாளர்கள் பற்றியும் எழுதுகிறோம் என்பவர்கள் இங்கே எனக்குப் பதில் சொல்லத் தேவையில்லை.

உங்கள் பதிவுகளில் எழுதுங்கள். எல்லாருமே வாசிக்கட்டும்.

ஒரு புறத்தில் சுயதம்பட்டக் கூட்டம், மறுபுறத்தில் தமிழ்த் தேசியம் மீதான பயத்தில் தனக்கு என ஒரு அறநெறியைக் கொண்டிராத சமூகம் இலக்கிய அறம் பற்றிப் பீற்றிக் கொள்ளும் கொடுமை தமிழ் இலக்கியப் பரப்பில் அன்றி வேறெங்கு தான் நடக்கும்!?

ஆகவே,

இது உங்களுடைய அங்கீகாரத்தைப் பெறாதது பற்றிய என்னுடைய புலம்பல் புராணம் அல்ல.

நீங்கள் பீற்றிக் கொள்கிற இலக்கிய அறம் பற்றியது!

இறுதியாக...

எஸ்.பொ பாரிஸ் வந்திருந்தபோது, கலாமோகன் வீட்டில் நடந்த சந்திப்பில் பகிர்ந்து கொண்ட கருத்துக்களை, கலாமோகன் 'பாரிஸ் பகிர்வுகள்' என்ற தொடராக தாயகத்தில் எழுதியிருந்தார்.

அதை தனது தொகுப்பில் வெளியிட்ட எஸ்.பொ, அந்த தொகுப்பில் அந்த தொடர் தாயகத்தில் வெளிவந்தது என்பதைக் குறிப்பிடவேயில்லை.

எஸ்.பொ போன்ற, எழுத்தாளரும் பிரசுரிப்பாளருமாக இருந்த ஒருவரிடம், இது தற்செயலான நிகழ்வாக இருந்திருக்க நியாயமில்லை என்பது தான் என் கணிப்பு.

நானும் எனது மனைவியும் ஒரு தந்தை போல நேசித்தவரும், யாழ்ப்பாணியத்தில் ஒரு கலகக்காரனாவே அறியப்பட்ட எஸ்.பொ வே, தனது மகன் புலிகள் இயக்கத்தில் போராளியாக மரணித்தார் என்பதனால் புலி பிராண்ட் தமிழ்த் தேசியத்தில் மூழ்கிப்போய், அதனால் பாதிப்புகள் வரலாம் என்றோ... தாயகத்தை இருட்டடிப்பு செய்தார் என்றால்...

மற்றவர்களை நான் நொந்து தான் என்ன செய்ய?